கவிஞர் வாலியின்



இராமாநுஜ காவியம்

ஒரு மதிப்பீடு

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்



Sri Ramanuja Sahasrabdi
1017 - 2016
1000
Srimathe Ramanujaya Namaha



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

கவிஞர் **வாலி**யின்

இராமாநுஜ காவியம்
ஒரு மதிப்பீடு

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

**இரசனைமுறைத் திறனாய்வினை விளங்கிக்
கொள்ள தமிழ் ஆய்வாளர்கட்கு
துணை நிற்கும் நூல்**

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978 -81-936450-5-5

eBOOK ~ மின் நூல்



கவிஞர் **வாலி**யின்

அவதார புருஷன்

ஒரு மதிப்பீடு

ஆண்டு: 1997

வெளியீடு:

திருவரசு புத்தக நிலையம்
தி நகர், சென்னை

“அந்நூலின் மதிப்பீடாகவே பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் நூல் அமைந்துள்ளது (நூல் சுமார் 272 பக்கங்கள் - மதிப்பீடு 352 பக்கங்கள்)”.

“எந்த அளவில் கவிஞர் வாலி தன் முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறார் என்பதனை நன்கு எடுத்துக்காட்டுகிறார்.”

“இந்நூற்குத் திறனாய்வு அடிப்படையில் பேராசிரியர் ரெட்டியார் 352 பக்க அளவில் மதிப்பீடு செய்துள்ளார் என்பதே சிறப்பினது.”

“ஆக இத்திறனாய்வு மதிப்பீட்டு நூல் பொருத்தமும், தகுதியும் உடையதாகவே அமைந்துள்ளது. தமிழுலகம் அதனை வரவேற்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.”

— **நீதியரசர் எம்.எம்.இஸ்மாயில்**
(நூலுக்கு வழங்கிய **அணிந்துரை**யில்)

ஒரு மதிப்பீடு

கவிஞர் வாலியின்

இராமாநுஜ காவியம்

அருங்கலைக்கோன், ஸ்ரீசடகோபன் பொன்னடி, சேவா ரத்னா, தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு, பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்





1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

கவிஞர் வாலியின்

இராமாநுஜ காவியம்

ஒரு மதிப்பீடு

முதற்பதிப்பு – ஆகஸ்ட் 2018

PRICE: Rs.555.oo

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN: 978-81-936450-5-5

Wrapper Design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

அன்புப் படையல்



அமரர்

ஆ.பெ.இராமசாமி ரெட்டியார்

(பேராசிரியரின் மைத்துனர்)

பெருநிலக்கிழார், பொட்டணம், நாமக்கல் மாவட்டம், தமிழ் நாடு

"புதுக்கவிதைக்கு ஓர் உரைநூல்"

முனைவர் இரா.காமராசு,

பேராசிரியர் (ம) தலைவர்,

நாட்டுப்புறவியல்துறை,

தமிழ்ப் பல்கலைக்கழகம்,

தஞ்சாவூர் – 10.

kamarasuera70@gmail.com

94435 89189.

இராமானுஜர் சமயத்தைச் சனநாயகப்படுத்தியவர். ஆச்சாரங்களைக் கடந்து மனித ஆன்மாவைத் தரிசித்தவர். வெகுமக்கள் உள்ளத்துணர்வுகளை உணர்ந்து தொழிற்பட்டவர். இது அவரின் ஆயிரமாவது ஆண்டு. இன்றும் அவரின் தேவை இந்திய மண்ணுக்கு அவசியம். கவிஞர் வாலி இராமானுஜர் வாழ்க்கையைப் புதுக்கவிதையில் எழுதினார். வாலியின் தமிழ் வசீகரமானது. துள்ளலும் எள்ளலும் அவருக்குக் கைவந்த கவிதை. மரபில் மூழ்கி புதுமையை முத்தாகத் தரும் முருகியல் பலம் அவருக்கு வாய்த்திருந்தது. எளிமை, இனிமை, அழகு இவையனைத்தும் அவரின் வார்த்தைகளை வசீகரித்து வாசகனைச் சொக்க வைப்பவை.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் நூற்றாண்டு காணும் பன்முக ஆளுமையாளர். நூற்றுக்கும் அதிகமான நூல்களைத் தமிழன்னைக்கு அணிவித்து அழகு பார்த்தவர். தமிழை அயல்மொழிப் பரப்பில் அமர்த்திக்கொண்டாடிக் குது கலித்தவர். எளிமை, நேர்மையின் உறைவிடம். பல நல் மாணக்கர்களின் ஆரண் தாய், உயர் ஆசான்.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் தமிழ் இலக்கண, இலக்கிய நெடும் பரப்பு முழுதும் தன் கவனத்தை நிலை நிறுத்தியவர். இலக்கியத் திறனாய்வுத் துறைக்கும் புதுக்குருதிப் பாய்ச்சியவர். பாரதி, பாரதிதாசன், கவிமணி, போன்ற தமிழின் ஆசுகவிகளின் அகம் தொட்டு அவர்களின் கவியாற்றலை மக்களுக்கு உணர்த்தியவர். அந்த வரிசையில் அவரின் இறுதிக்காலப் படையல் பெருங்கவிஞர் வாலியின் "இராடனுஜ காவியம்" குறித்த மதிப்பீடு.

இராமானுஜரை ஏன் கொண்டாட வேண்டும்? வாலியின் வார்த்தைகள்:

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே…
மதப்புரட்சி செய்த
மகான்;

இவர் கைக்குள்
இருந்தது –
சண்டித்தனம் செய்த
சனாதனக் குதிரையின் லகான்!

இருபதாம் நூற்றாண்டின் – இரு
இணையற்ற சிந்தனையாளரோடு
உவமித்து ராமானுஜனை
உரைக்கப் போயின்...

பூணூல்
போட்டிருந்த –
பெரியார் எனலாம்; திருமண் –
ஆறிரண்டு –
அணிந்திருந்த –
அம்பேத்தகர் எனலாம்!

இத்தகு சிறப்பு வாய்ந்த இராமானுஜரின் வாழ்வின் அற்புத நிகழ்வுகளை கவியரசர் வாலி தன் காந்தச் சொற்களால் கவிதையாக்கியுள்ளார். அநேகமாக புதுக்கவிதைக்கு எழுதப்பட்ட முதல் உரை நூல் என பேராசிரியரின் இந்நூலைச் சுட்டலாம்.

நூலினை நுட்பமாக அணுகி நுல்பற்றிய அறிமுகத்தை தோரணவாயில் பகுதியில் தருகின்றார். காவிய மரபுப் படி இக்காவியத்தின் பாட்டுடைத் தலைவனாக – அவதார புருசனாக இராமானுஜர் காட்டப்படுகின்றார்.

அடுத்து, தலைமைக் காவிய மாந்தர்களாக இராமணுஜரும் அவருடைய மனைவி தஞ்சமாம்பாளும் சுட்டப்படுகின்றனர். காப்பியத்தின் வழி இவ்விருவரின் தனியில்புகளை கவிதை வரிகளின் மூலம் பேராசிரியர் மெய்ப்பிக்கின்றார்.

துணைக் காவிய மாந்தர் எனும் பகுப்பில் நாதமுனிகள், திருக்கச்சி நம்பிகள், யாதவப்பிரகாசர், மனக்கால் நம்பிகள் ஆகியோர் பற்றிய காப்பியப் பகுதிகளை ஆராய்கின்றார்.

உடையவரின் ஆசாரிகள் எனும் நான்காம் குப்பில் இராமானுஜருக்கு துணை செய்த திருச்சி நம்பிகள், பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, யமுனைத்துறைவர்,

திருமலையாண்டான், திருமலை நம்பி ஆகிய அறுவர் குறித்தப் பாடல் வரிகள் தரப்படுகின்றன. அடுத்து எதிராஜன் சீடர்கள் குறித்து விளக்கப்படுகின்றது.

கவிஞர் வாலியின் பன்முக அறிவாற்றல் தத்துவக் குறிப்புகள், பல்வேறுவகை, இறை ஈடுபாட்டின்பம் ஆகிய பகுப்புகளில் உரிய சான்றுகளுடன் பேராசிரியரால் மதிப்பிடப் பெறுகின்றன. வாலியின் படைப்பாற்றல், படைப்பின் கலை அழகியல் கூறுகள், திருக்குறள் போன்ற இலக்கியங்களைக் கையாளும் பாங்கு, இராமாயணம் பாரதம் போன்ற புராணங்களின் தாக்கம், தமிழ் வாழ்வியல், நாட்டார் சூழலியல் ஆகியவை வாலியின் படைப்பில் இடம் பெறுவது ஆகியன மிக அழகாகப் பேராசிரியரால் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

ஒவ்வொரு இயலிலும் தேவையான இடங்களில் விளக்கக் குறிப்பு எண் தந்து இறுதியில் விளக்கம் வருவதன் மூலம் பொருத்தமான மதிப்பீட்டு முடிவுகளை நோக்கில் நூலை நகர்த்துகிறர்.

“கவிஞர் வாலி பரந்து விரிந்த வைணவ குலத்தில் வந்தவர். சிந்தனை ஆற்றல் மிக்கவர். இராமனுஜரின் விரிந்த, சாதி சயம வேற்றுமையின்றி மனித குல மேம்பாட்டினை நோக்கும் போக்கினையெல்லாம் சிந்தித்து அவரைப் பகுத்தறிவுப் பகலகனாக் காண்கிறார். உண்மையும் அது தானே”

என்ற வாலி குறித்த வரையறையின் தொடர்ச்சியாகவே பேராசிரியரின் மதிப்பீடு அமைகின்றது.

“தன்
திரு-
முடியை - எம்பார்
மடியிலும்; தன் திரு
அடியை – வடுக நம்பி [21]
மடியிலும்”

இப்படி 21 சான்று எண் கொடுத்துவிட்டு, பின்னர் வடுக நம்பி குறித்து “உடையவருக்குப் பால் காய்ச்சித் தருதல் போன்ற பல பணிகளைச் செய்தவர். ஆந்திரத்திலிருந்து வந்து அரங்கத்தில் வாழ்ந்தவர். ஒரு சமயம் பால் அடுப்பிலிருந்த போழ்து பெருமாள் திரு உலாப் போந்தார். உடையவர் பொருமாளுக்குப் படைக்க பழம் முதலியவற்றைத் தட்டில் கொணருமாறு பணிக்க, அந்தப் பெருமாள் வீடு வீடாய்

பிச்சை வாங்கிக் கொள்கிறது. பால் அடுப்பில் இருந்ததால் வர இயலவில்லை, அவர் போகட்டும் என்று குருபக்தியைக் காட்டும் நிகழ்ச்சி ஒன்றை நினைவு கூறுச்செய்கின்றது. இது போன்ற விளக்கக் குறிப்புகள் படைப்பை உள்வாங்க மேலதிக உதவியாய் அமைவது குறிப்பிடத்தக்கது.

எதிராஜரின் சீடர்கள் வரிசையில் உறங்காவில்லி – பொன்னாச்சி பற்றிய குறிப்பு:

உறையூரை ஆண்ட சிற்றரசுக்கு உடம்பு பிடிக்கும் பணியிலிருந்த உறங்காவில்லி என்பான் அழகெல்லாம் திரண்ட தன் மனைவி பொன்னாச்சியுடன் சித்திரைத் திருவிழா கண்டுகளிக்கத் திருவரங்கம் வருகின்றான். தெருவில் அவள் நடக்க தன் உத்தரீயத்தை நடைபாவாடையாக விரித்துக் கொண்டு வந்ததும் அவளுக்குக் குடை பிடித்துக் கொண்டும் வந்த செயல்கள் பரிகாசத்துக்குரியவையாயின. இருவரையும் திருமடத்திற்கு வரவழைத்தார் உடையவர் பிறர் ஏளனத்திற்குரிய செயல்கள் தவிர்கத்தக்கவை எனக்கூறி அவர்களை அரங்கன் சந்நிதிக்கு இட்டுச் சென்றார்."

கவிஞர் வாலியின் வருணனைத் திறம் குறித்துப் பேராசிரியர் பல சான்றுகளைத் தருகின்றார்:

"பறவை மீது
பறப்பவன்; வெள்ளைப்
பரவை மீது
படுப்பவன்....."

"ராம காதை போல்
ராமானுஜன் காதையும் –
ஈர்க்க வல்லது
எவரது காதையும்!"

"முக்காடிடுகின்ற
முகமதியப் பெண்ணுக்கு –
நிக்கா முடித்தான் –
நாராயண னோடு

அரங்கன்பால் –
அவளுக்கிருந்த
அலுக்க வொண்ணாத

அன்பைக் கண்டு – அவளைத்
துலுக்க நாச்சியாய்த்
துதிக்கிறது நாடு!"

"படிமிசை
பிறப்பெய்தும் எவ்வுயிரும் –
பிறகு 'சவம்' ஆகத்தான்
பிரசவம் ஆகிறது"
"எண்ணெய் உள்ளவரை
எரிகிறது பந்தம்; அதே போல்
இட்டவிதி உள்ளவரை
இருக்கிறது பந்தம்!"

கவிஞர் வாலியின் தடம் பற்றி அவர் உணர்ந்து, அனுபவித்து எழுதிய பகுதிகளைப் பேராசிரியர் எடுத்துக் காட்டி விளக்கும் விதம் பாராட்டுக்குரியது. அதே போல வாலி பயன்படுத்தும் வழக்குச் சொற்கள், இலக்கியச் சொற்கள், புதிய சொல் உருவாக்கங்கள் குறித்தும் பேராசிரியர் பதிவு செய்வது அவரின் கல்விப் புலத் தொடர்பை மெய்ப்பிக்கிறது.

இந்நூல் இராமானுஜருக்கு, வாலிக்கு பேராசிரியர் செய்த நன்றியறிதலாக அமைகின்றது. இரசனைமுறைத் திறனாய்வினினை விளங்கிக் கொள்ள தமிழ் ஆய்வாளருக்கு இந்நூல் துணைநிற்கும்.

பதிப்புரை

கவிஞர் வாலியின் முந்தைய இரு படைப்புகளான, ‘***அவதார புருஷன்***’ மற்றும் ‘***பாண்டவர் பூமி*** ’ என்ற இவ்விரண்டு நூல்களையும் பேராசிரியர் (ந சுப்பு ரெட்டியார்) மதிப்பீடு செய்து அவற்றை முறையே 1997லும், 2002லும் வெளியிட்டார். இவ்விரண்டு நூட்களும் திருவரசு புத்தக நிலையத்தால் வெளியிடப் பெற்றன. கவிஞர் வாலியின் இப்படைப்பு ‘***இராமாநுஜ காவியம்*** ’ பேராசிரியரால் மதிப்பீடு செய்யப்பெற்றது; ஆனால் அது நூலாக வெளியிடப் பெறுவதற்கு முன்பே பேராசிரியர் இயற்கை எய்தினார். அவரது கைமுழுத்துப் பிரதியை மீட்டெடுத்து வெளியிடுவதற்கு முன்பு **இராமாநுஜர்-1000** எழுந்தருளினார். எனவே, பேராசிரியரின் படைப்பான ‘***கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் - ஒரு மதிப்பீடு*** ’ இராமாநுஜரின் 1000 அருளாசிகளுடன் வெளியிடப்பெறுகின்றது.

இந்நூல் மூன்று பின்னிணைப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது. முதலாம் பின்னிணைப்பு (**பயன்பட்ட நூல்கள்**) பேராசிரியரால் சேர்க்கப் பெற்றது. மற்ற இரண்டும்,

- கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியத்தின் **உள்ளடக்கம்**
- திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த **இராமாநுஜ நூற்றந்தாதி**

படிப்போரின் சிந்தனைக்கு விருந்தாக இருக்குமெனக் கருதி சேர்க்கப் பெற்றுள்ளன. பின்னிணைப்பு இரண்டாவதாக உள்ள ‘**உள்ளடக்கம்**’, இம்மதிப்பீட்டை வாசிக்கும் அன்பர்களுக்கு பேருதவியாயிருந்து வழிகாட்டும். பின்னிணைப்பு மூன்றாவதாக அமைந்திருக்கும் ***‘இராமாநுஜ நூற்றந்தாதி’***, திருவரங்கத்து அமுதனார் ‘கார் ஏய் கருணை’யான இராமாநுஜரை இணைந்தும், இசைந்தும், இழைந்தும் போற்றிய பாங்கினை தெளிவுற குறிப்பிடுகின்றது. அமுதனாரோடினைந்து வாசகர்களும் இராமாநுஜரை அமுதமாய்த் துய்ப்பர் என்பது திண்ணம்.

பேராசிரியர் தன் வாழ்நாளில் பல்துறை சார்ந்த 135 நூல்களை தமிழ் நல்லுலகிற்கு படைத்தளித்துள்ளார். அவையனைத்தும் 2008ல் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப் பெற்றன. இஃது அவரது 136ம் நூல். இவ்வொவ்வொரு நூலும் தெரிந்தெடுக்கப்பெற்ற ஒருவருக்கு அன்புப்படையலாக அளிக்கப் பெற்றிருக்கின்றது; மற்றொருவரிடமிருந்து பெறப்பெற்ற அணிந்துரையை தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்குகின்றது. பேராசிரியர் காட்டிய இவ்வழிமுறையை அடியெற்றி அன்னாரது முத்திரை பதிக்கும் பொருட்டாக, அவரது 136வது நூல் பேராசிரியரின் மைத்துனர் அவர்கட்கு அன்புக் காணிக்கையாக சமர்ப்பிக்கப் பெறுகின்றது. மேலும் மற்றொரு சிறப்பாக, பேராசிரியர் முனைவர் இரா காமராசு, துறைத்தலைவர்-நாட்டுப்புறவியல், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் அவர்கள், இந்நூலின்கண் ஆழங்கால்பட்டு இந்நூலுக்கு வெகு சிறப்பானதொரு அணிந்துரை நல்கியுள்ளார்.

இந்நூலின் மதிப்பீட்டு மூலமாக பேராசிரியர், கவிஞர் வாலியின் பல்திறப்பாங்கினை பல்வேறு இயல்கள் வாயிலாகவும், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட மேலோங்கும் திறனாய்வை தமக்கே உரித்த நுணுக்கரிய நுண்ணுணர் மூலமாகவும் வெளிக்கொணர்ந்து சிறப்பிக்கின்றார். கவிஞர் வாலிக்கு இராமாநுஜர்பால் உள்ள பக்தி, மதிப்பு மற்றும் போற்றுதல் முதலிய அருங்குணங்களை பேராசிரியர் இம்மதிப்பீட்டு நூல் வாயிலாக வெகு சிறப்பாக பாராட்டி மகிழ்கின்றார்.

கவிஞர் வாலியார் இராமாநுஜ காவியத்தை தாம் யாத்த அநுபவத்தினைக் கூறுங்கால்,

'எழுத அரிய பெருமான் என்று -
எண்ணாது, எழுதியிருந்தேனே!'
என்று -
ஏந்திழை ஒருத்தி...
காதல் கொண்ட தன்
கரியமாலின் -
திருவுருவத்தை – ஓவியமாய்த்
தீட்ட முயன்று...
அதில் தோற்றுப் போய் -

அங்கலாய்ப்பதாய் -

தன் -
திருவரங்கக் கலம்பகத்தில் -
பிள்ளைப் பெருமாளையங்கார்
பாடினாற் போல்...

எதிராஜர் வரலாற்றை
எளியேனும் எழுதப் புகுந்து -
ஏட்டில் -
எழுத்தில் -

'உட்கார்த்த ஒண்ணாதது - திரு
உடையவர் சீர்த்தி' என்று -
ஓர்ந்தேன்; ஓர்ந்து
சோர்ந்தேன்!

ஆசைவயப்பட்டு – என்னால்
ஆன மட்டும் புனைந்தேன்;
புனைந்த நாளெல்லாம் -
பேரருட் புனலில் நனைந்தேன்!

பிழையிருப்பின் - வைணவப்
பெரியோர்கள் - வசைபாடாது
பொறுத்தருள வேண்டும் - எனப்
பொன்னடி போற்றுகிறேன்
யாண்டும்!

என முடிக்கின்றார்.

திருவாளர் பி.ஸ்ரீ.ஆச்சார்யா [பி.ஸ்ரீ.], தான் எழுதிய *ஸ்ரீ ராமாநுஜர்* எனும் நூலின் பின்னுரையில்,

"சித்திரம் எழுதுவதில் வல்லவள். தலைவனது உருவத்தை எழுதிப் பார்த்தாவது பிரிவுத் துயரத்தை மறந்திருக்கலாமோ என்று நினைக்கிறாள். வரிச்சித்திரம் எழுதி வண்ணம் தீட்டிப் பார்க்கிறாள். ராஜாதி ராஜனும் தேவாதி தேவனுமாகிய பெருமாளின் காதலி இவள்.

ரூபசித்திரத்தை முடிசூட்டிப் பார்க்கிறாள். உலகங்களையெல்லாம் வாழ்விக்கும் மணிமா மகுடத்தைப் பச்சைப் பசுந்துழாய் மாலை அணி செய்கிறது. ஆனால் ‘இந்த முடிமாலையில் துளசி மணம் கமழ வில்லையே!’ என்ற பிரமிக்கிறாள்.

………….

……………

……………..

எழுத அரிய பெருமான் நம் தலைவன் என்பது இப்போது நன்கு புலனாகி விடுகிறது.

‘எழுத அரிய பெருமான்என்று
எண்ணாது, எழுதி இருந்தேனே!’

என்று ஏங்குகிறாள். (இது பிள்ளைப் பெருமாளையங்காரின் திருவரங்கக் கலம்பகத்தில் 3-வது பாட்டில் வருவது.)

இந்தக் காதலியின் நிலைதான் இந்த நூலை எழுதி முடித்த அடியேனது நிலையும்.”

என இயம்புகின்றார்.

இங்கு இரு பெறும் அறிஞர்களும் ஒரே விதமான அநுபவத்தினைப் பெற்றிருப்பதாகக் கூறுவது எண்ணி எண்ணி வியக்கத்தக்கது. பேராசிரியரின் இந்நூலினை பதிப்பிக்குங்கால் பெற்ற அநுபவத்தினை சொற்களால் அளத்தல் அரிது.

பேராசிரியரின் நூற்றாண்டில் **(2015-2016)** நூற்றாண்டுக்குழு, பேராசிரியரின் தமிழ்த்திறத்தையும், அறிவுநுட்பத்தையும் வெளிக்கொணரும் பொருட்டு பன்னிரெண்டு நூட்களை வெளியிட்டது. அவரது நூல்கள் இணையதளத்தில் அனைவருக்கும் பயன்பெறும் வகையில் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளன (http://tinyurl.com/nsr100collections). பேராசிரியரின் படைப்பான ‘***கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் -***

ஒரு மதிப்பீடு ’ எனும் இந்நூல், பேராசிரியரின் நூற்றாண்டிற்குப் பின்பும் (102வது), இராமாநுஜரின் ஆயிரமாண்டிற்குப் பின்பும் (1002வது) வெளிவருவது ஒரு சிறப்பம்சமாக கருதப்பெறுவது இராமாநுஜரின் சொல்லர்க்கரிய அருளாசியேயன்றி வேறென்றுமன்று! இல்லையா?

நூற்றாண்டுக் குழு



உள்ளுறை



உள்ளுறை

















இராமாநுஜர் 1000

கவிஞர் **வாலி**யின்

இராமாநுஜ காவியம் - ஒரு மதிப்பீடு

இயல் ~ 1

தோரணவாயில்



ந சுப்பு ரெட்டியார் 100



இயல் – 1

தோரணவாயில்

திருவரங்கத்து அமுதனார் படைத்த ‘ *இராமாநுஜ நூற்றந் தாதி’* மிக்க பக்தியுடன் படைக்கப் பெற்ற ஒரு நூல். ஆழ்வார் பாசுரங்களைப் போல் பக்தி உணர்வும் சமய உணர்வும் கிளர்ந்தெழக் கூடியதாக இருப்பதால் அதனைப் பிற்கால வைணவ அறிஞர்கள் *‘நாலாயிர திவ்யப் பிரபந்தம்’* என்ற தொகுப்பில் 24-வது நூலாகச் சேர்த்து விட்டனர். மக்களின் வாய் அதனைப் ‘*ராமாநுஜ நூற்றந்தாதி*’ என்று உச்சரித்தாலும் நூலில் *‘இராமாநுஜ நூற்றந்தாதி’* என்று தமிழ் மரபை யொட்டிக் குறிக்கப்பெறுகின்றது. கவிஞர் வாலியின் காவியமும் -‘*ராமாநுஜ காவியமும்*’- அச்சு வடிவத்தில் அமையும் போது தமிழ் மரபையொட்டி *‘இராமாநுஜ காவியம்’* என்று ‘இ’ எழுத்துடன் குறிக்கப் பெற்றிருக்கலாம் என்பது அடியேனின் கருத்து. இந்த அரிய நூலை **வானதி பதிப்பகம்** மிக்க பக்தியுடன் மிக அழகாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளது.

அரும் பெருங்கவிஞர்கள் அனைவரும் இறையருள் பெற்று இறையுணர்வு தூண்ட இறை வணக்கத்துடன் தாம் இயற்றும் காவியத்தைத் தொடங்குபவர்கள். கல்வியிற் சிறந்த கம்ப நாடன்,

‘தழைசெவி சிறுகட் டாழ்கைத்
தந்தசிந் துரமுத் தாரை
மழைமதத் தறுகட் சித்ர
வாரண முகத்து வாழ்வை
இழையிடைக் கலசக் கொங்கை
விமகிரி மடந்தை யீன்ற
குழவியைத் தொழுவன் என்பால்
குறைவற நிற்க என்றே!’[1]

என்ற விநாயகர் துதியுடன் தொடங்குகின்றான். தம் காவியத்தை வில்லிபுத்தூராழ்வாரும்,

ஆக்குமாறு அயனம்
முதல் ஆக்கிய உலகம்
காக்குமாறு செங்கண் நிறை
கருணைஅம் கடலாம்

வீக்குமாறு அரனாம் அவை
வீழ்ந்தநாள் மீளப்
பூக்கும் மாமுதல் எவன் அவன்
பொன்னடி போற்றி[2]

என்று தொடங்குவதையும் காணலாம்.

இந்த மரபையொட்டியே கவிஞர் வாலியும் தம் அருமைக் காவியத்தை வாணிதேவியை நினைந்து தொடங்குகின்றார்.

வானத்தை விடவும் -
வயதான பிறகும் -
விருத்தமொடு விளங்காது
விருத்தமொடு விளங்கும்...

மார்க்கண்டேய
மொழியை;
மூத்த குடியின்
மூன்றாம் விழியை...

முறையாய்க் கல்லாத -
முட்டாள்; இதனைக்
குறையாய்க் கருதாது -
கலைமகள் நட்டாள் -

வித்தை எனும்
வித்தை - என்
புத்தியெனும் செய்யுள்; (ஓய் - வயல்)
உடன் -
பூதத்தில் செய்யுள் ; (= கவிதை)

வெண்பூ மேலமர்ந்து
வீணை தடவும்
பெண்பூ -
செலுத்தினாள் - இச்
சிறியன் மேல்...

தண்பூ தனை வெல்லும்
தன்னிரண்டு
கண்பூ!
அடடா!
அவளது...
கண்பூ பட்டதும் -
பண்பூ பூத்திடும் -
பாமரம் ஆனது -

பாமரம்! (= ஒன்றும் அறியாத மரம்)

பெருங்கவிஞர்கள் யாவரும் அருளாளர் மரபில் வந்தவர்கள். அவர்கள் தம் காவியத்தைத் தொடங்கும் போது மிக்க அவையடக்கத்துடன் தொடங்குவர். கம்ப நாடன் தம் இராமகாதையை,

ஓசை பெற்றுயர் பாற்கடல் நூற்றொரு
பூசை முற்றறவு நக்குபு புக்கென
ஆசை பற்றி அறைய லுற்றேன் மற்று, இக்
காசில் கொற்றத்து அத்து இராமன் கதை யரோ.[3]

என்ற பாடலை அவையடக்கத்துடன் தொடங்குவதைக் காண்கின்றோம்.

வில்லிபுத்தூர் ஆழ்வாரும் தம் காவியமாகிய பாரதத்தைத் தொடங்கும் போது,

மண்ணில் ஆரணம் நிகர்என
வியாதனார் வகுத்த
எண்ணி லாநெடுங் காதையை
யான் அறிந்து இயம்பல
விண்ணில் ஆதவன் விளங்குநீடு
எல்லையை ஊமன்
கண்இ லாதவன் கேட்டலும்
காண்டலும் கடுக்கும்[4]

என்று தொடங்குவதைப் பார்க்கின்றோம்.

கவிஞர் வாலி முதல் வைணவ நகரம் அரங்கத்தில் பிறந்தவர்; சிறந்த வைணவ மரபு வழி வந்தவர். இவற்றிற்கேற்ப, மிக்க அவையடக்கத்துடன்,

நானோ - ஒரு
நிரட்சர குட்சி;
செவ்வானை யளக்க
சிறைவிரித்த சின்னப் பட்சி!

விசும்பின் -
விசாலம் அறிய...

வால் நீண்ட
வலியனுக்கு வந்தது
வேணவா; அதுவும் -
வெகுநாள் அவா!
வலியன் -

வல்லூறு போல் -
வலியன் அல்ல;
மெலியன்!

ஆயினும் -
ஆசை உந்த -
விரித்தது சிறையை; காற்றில் -
விடுத்தது குறையை!

என நவில்கின்றார்.

புத்திரப் பேறு பற்றி: இராமாயணம், பாரதம் - என்ற காவியங்களில் புத்திரப் பேறும், புராணச் செய்தியும் இணைந்த வரலாறுகள் கூறப் பெறுகின்றன.

(1) இராமாயணத்தில்: தேவர்கள் ஒருசமயம் தாம் அரக்கர்களால் துன்புறும் கொடுமையைத் திருமாலிடம் கூற, அவர் தேவர்கட்கு அபயமளித்து தான் தரணியில் தசரதன் மதலையாய் அவதரித்து ஆவன செய்வதாகவும், அவர்கள் பூமியில் வானரங்களாகப் பிறக்குமாறும் கூறினார்.

தசரதன் தனக்குப் பிறகு நாட்டையாள ஒருவரும் இல்லையென்றும் தனக்குப் புத்திரனில்லாக் குறையை எடுத்துக் கூற, அவர் பூர்வகதையை நினைக்கின்றார். ரிசிய சிங்கர் முனிவரைக் கொண்டு புத்திரகாமேஷியாகம் செய்தால் மகப்பேறு உண்டாகும் என்ற கூற, அங்ஙனமே அது செய்ய பெறுகின்றது. ஒரு வருடகாலம் அசுவமேதயாகம் இயற்றி புத்திரோற்பத்திக்குத் தடையாக இருக்கும் பாவங்கள் போக்கப் பெறுகின்றன. பின்னர் அதே யாககுண்டத்தில் புத்திரகாமேஷ்டி வேள்வி இயற்றப் பெறுகின்றது. ஓமாக்கினியினின்றும் பூதம் ஒன்று பொன்மயமான தட்டில் இனிய அமிர்தத்தையொத்த இனிய உணவுப் பிண்டத்தைக் கொடுத்துச் செல்ல, முனிவர் அதனைத் தேவிமூவருக்கும் பகிர்ந்து அளிக்குமாறு செய்ய, அங்ஙனமே செய்யப்பெறுகின்றது. கோசலை வயிற்றில் இராமனும், கைகேயி வயிற்றில் பரதனும், சுமித்திரை வயிற்றில் இலக்குவன், சத்துருக்கன் ஆகியோரும் தோன்றுகின்றனர். இஃதோர் நீண்ட வரலாறு.

(2) பாரதத்திலும் புத்திரன் இல்லாக் குறையும் அதனை நிவர்த்திக்கும் முறையும் செய்யப் பெறுகின்றன. 'அடியைப் பிடிடா பாரத பட்டா' என்பது போல் இங்குச் சொல்லப் பெறும் முறை மிக மிக நீண்டதாக அமைகின்றது. சந்தனு-கங்கை கதை தொடங்கி, சந்தனும்-மச்சகந்தியும் கதை தொடர்ந்து வர, விசித்திர வீரியன், சித்திராங்கதன் மகப் பேறு

இன்றிமாய, அவர்தம் கைம்பெண்களாக மனைவிமார்கள் - வியாச முனிவருடன் தொடர்பு கொண்டு திருதராஷ்டிரன், பாண்டு பிறப்பு சொல்லப் பெறுகின்றது. பாண்டு மனைவி குந்திக்கும், திருதராட்டிரன் மனைவி காந்தாரிக்கும் முறையே பஞ்சபாண்டவர்களும், கௌரவ நூற்றுவரும் பிறந்த விநோதப் பிறப்புகளும், விரிவாக புகலப் பெறுகின்றன. இங்கு 'புத்திர காமேஷ்டி' யாகம் போன்ற ஒரு முறை நவிலப் பெறவில்லை.

<u>இராமாநுஜ காவியத்தில்</u>: இங்கும் புத்திர பேறு இல்லா நிலை ஏற்படுகின்றது. இங்கும் இறைவன் பேசுகின்றான். 'இஷ்டியாகம்' நடைபெறுகின்றது. இங்கு நாராயணனுக்குப் பதில் காந்திமதியின் மணிவயிற்றில்-

மகனாய் -
முளைத்திருப்பது...

'நாரணன் பூங்குடை;
நாரணன் பாதுகை;
நாரணன் இருக்கை;
நாரணன் படுக்கை!'

என -
ஆழ்வார்
அற்புதமாய் பாடிய -
அரவரசன்;
ஆதிசேஷன்!

என்று இராமாநுஜன் பிறப்பு இயம்பப் பெறுகின்றது.

பிள்ளை இல்லாக்குறை இராமாநுஜ காவியத்திலும் பேசப்பெறுகின்றது.

கேசவ சோமயாஜி -
கைத்தலம் பற்றிய...

மாதுஸ்ரீ காந்திமதி - முயல்
மறுஇல்லாத மதி;
முப்பது நாளும் காந்தி வீசும் -
மதி; அந்த -
மதிக்கில்லை அமாவாசையெனும்
திதி!
...
இத் தகு
இசைமிகு...

திவ்விய தம்பதியின் -
திருமாளிகையில்...

தூண் இருந்தது -
தூணைப் பிடித்துச் சுற்ற - ஒரு
துண்டு நிலா இல்லை!

முற்றம் இருந்தது -
முற்றத்து நீரில் அளைய – ஒரு
முயல் குட்டி இல்லை!

கூடம் இருந்தது;
கூடத்து ஊஞ்சலில் குந்த – ஒரு
குருவிக் குஞ்சு இல்லை!

விட்டம் இருந்தது;
விட்டத்து ஏணையில் ஆட - ஒரு
வெண்டைப் பஞ்சு இல்லை!
....
காந்திமதியாக வந்த
காந்திமதி - இன்னும்
காந்தி மதியாகவே இருந்தாள்;
கர்ப்பவதியாக இல்லாமல்!
....
பூதானம்;
கோதானம் ;
வஸ்திரதானம்;
வித்தியாதானம்;

என -
ஏலு மட்டும்...

சகலதானம் செய்தவர்க்கு
சந்தானம் வாய்க்கவில்லை;

பூதூர் பெருமானைப் -
பிரார்த்தித்தும்...
செவிகளை - தெய்வ
சந்நிதானம் சாய்க்கவில்லை!
....
ஒரு
கிரகண காலத்தில்
கீழைக் கடலில் குளிக்க...

தனது -

தர்மபத்தினியோடு -
திருப்பெருமபூதூரிலிருந்து -
திருவல்லிக்கேணி சென்றார்;

அம்புலியை -
அரவம்...

உண்ட பின்னும்; உண்டு ...
உமிழ்ந்த பின்னும்...

திரை கடலில்
தீர்த்தமாடி விட்டு -
திருமேனியில்
திருமண்கள் சாத்திக்கொண்டு...

பார்த்தசாரதிப்
பெருமாள் முன் நின்றார்!

முதல் மூவரில் -
மூன்றா மவர்[5]...

மங்களாசாசனம் செய்த -
மாலவனைத் தொழுதார்; அவனது ...
வடிவழகாம் பொன்வயலை -
விழியேரால் உழுதார்!

பார்த்த சாரதியை;
...
வேயிசையால் கறவைகளை -
ஈர்த்த சாரதியை;
ஈந்திடு சந்ததியை!...

என-
இறைஞ்சினார் -
காந்திமதி நாதர்;
கண்ணபிரான் தாதர்!

இங்கு ‘இஷ்டியாகம்’ வருகிறது - புத்திர காமேஷ்டியாகம் போல் - சோமயாஜி அதனை நிறைவேற்றுகின்றார்.

இதுவலால் - பக்கம்
இல்லாளை இருத்தி...

இறைவன் திருமுன் - ஓர்
இஷ்டியாகம் புரிந்தார்;

அகப்பையில் அவிடியெடுத்து -
அக்கினியில் சொரிந்தார்!

பெரும்புதூர் -
போய்ச் சேர்ந்ததும்...

காந்திமதி - ஆனாள்
கர்ப்பவதி!

இஷ்டியாகம் முடிந்த இரவே...

கேசவ சோமாயாஜியின்
கனவில் வந்து -
காண்டீபன் மைத்துனன்
கூறிப் போனதால்...

ஒரு -
சத்புத்திரன்
ஜனனம் எதிர்பார்த்து -
இருப்புக் கொள்ளாது
இருந்தார் - ஒரு
பொருப்புக் கொப்பான
புகழ் பெற்ற -

அந்தணர் ஆசூரி; அன்றாடம் -
அதை அவர் கண்கள் காட்டின -
ஆனந்த தூறல் தூறி!

இங்கு இறைவன் பேச்சும் காவியத்தில் காணப் பெறுகின்றது. அதில் விரக்தி பிரதிபலிக்கின்றது.

ஆதிசேஷனை அழைத்து -
ஒருநாள்
அனந்த பத்மநாபன் - தன்
விசனம் பேசினான்; வார்த்தையை
விரக்தியில் வீசினான்!
“நீ -
ஆயிரம் சிரசு -
அமைந்த அரவரசு; நீயென்று
அணுக்கமான கேள்;ஆகவே என் -
ஆற்றாமையைக் கேள்!

ஓவ்வொரு முறையும் -
உயிர்களை உய்விக்க...

வானம் விட்டு
வையகம் வருகிறேன்;
வினைகள் நீங்கி
வீடுபெற உதவுகின்ற...

வாழ்க்கை நெறிகளை
வரைந்து காட்டியும்;
வாழ்ந்து காட்டியும்
விளக்கம் தருகிறேன்!

ஏற்றாறில்லை; நான்
எடுத்துரைத்த நெறிகளை -
நோற்றாரில்லை!

அதற்குக் காரணம்...
அவர்களை மீட்கத்தான் - நான்
அவதார மெடுத்து
அவனி வந்திருக்கிறேன்...

என்பதை -
எவரும் எண்ணவில்லை; அதைச்
சாடையாய்ச் சொல்லியும் -
சட்டை பண்ணவில்லை!

காகுத்தனாய் வந்தபோது - ஒரு
காவலனாகவும்...
கண்ணனாய் வந்தபோது - ஒரு
கோவலனாகவும்...

என்னைக் கண்டனர்; வேறென்ன
என்னுள் கண்டனர்?

'அழும்போது
அழுது;
சிரிக்கும்போது
சிரித்து;

விழும்போது
விழும்

மற்றொரு -
மானிடப் பிறவியாய் -
எனை எண்ணினார்' இறையென
எவர் நண்ணினர்?

அவதாரங்கள்
அர்த்தமற்றுப் போயின;
விழலுக் கிறைத்த
வெள்ளமாய் ஆயின!

எனக்குப் பின் -
எத்துணையோ...

ஆசாரியர்களை அனுப்பினேன்
ஆழ்வார்களை அனுப்பினேன்
அவர்கள் -
ஆக்கினர் பாசுரங்கள்!
அவற்றைக் கேட்டும் -
அகலவில்லை பாமரங்கள்!

'ஆதிசேஷா!
அன்பா!

நீ போய்
நிலத்தில் பிற;
கேசவ சோமாயாஜியின்
குலத்தில் பிற;
போகப் போகப்
புரியும் பிற!

அவனி! அதை
அவனியிலிருந்தபடியே
கவனி!

....

பன்னக -
மன்னனே!
அனந்தமான் புகழ் படைத்த -
அனந்தனே!

உன்னால் -
உய்யட்டும் மன்பதை;
உணரட்டும் - நீ
உய்விக்க வந்தவ னென்பதை!'

நாராயணன் நவின்றதும்
நாகராஜன்...

மனமொப்பி -
மகிழ்ச்சி மிகுந்தான்;
காந்திமதி -
கருவில் புகுந்தான்!

....

பீடுமிகும்
பிங்கள ஆண்டில்;

சீர்மல்கும்
சித்திரைத் திங்களில்;

சந்திரன் பூக்கும்
சுக்கில பட்சத்தில்
அரனார்க்குகந்த
ஆதிரையில்;
வானோர் ஏத்தும்
வியாழனில்;

நல்லொளி பரப்பும்
நண்பகலில்;

அளவிலா
அருந் தகவை - நாளை
அடைய இருக்கும் - ஓர்
ஆண் மகவை...

பெருமாட்டி காந்திமதி
பெற்றெடுத்தாள்!
....
கொற்றவி கோசலையிடம் -
கோதண்டராமன் போல்;

கஞ்சன் சோதரி தேவகியிடம் -
கண்ணபிரான் போல;

வான்புகழ் அதிதியிடம் -
வாமனன் போல்;

பைந்தொழ ரோகிணியிடம் -
பலராமன் போல்;

அருள்சால் காந்திமதியிடம் -
ஆதிசேஷன் அவதரித்தான்;
அவதரித்து அழகிய -
அல்லிப்பூ அதழ் விரித்தான்!

கேசவ சோமயாஜி[6]
கண்ணீர்ப் பெருக்குடன்...
தொழுதார் தடக்கைகள்
தலைமேல் தூக்கி -

திருவல்லிக்கேணி யிருக்கும்
திக்கினை போக்கி!
..
இருபதாம் நூற்றாண்டின் - இரு
இணையற்ற சிந்தனையாளரோடு...

உவமித்து இராமானுஜனை
உரைக்கப் போயின்...

பூணூல் -
போட்டிருந்த –
பெரியார் எனலாம்; திருமண் -
ஆறிரண்டு -
அணிந்திருந்த -
அம்பேத்கார் எனலாம் !

இங்ஙனம் இராமாநுஜரின் அவதாரம் சொல்லப் பெறுகின்றது. கவிஞர் வாலி பரந்த விரிந்த வைணவ குலத்தில் வந்தவர். சிந்தனை ஆற்றல் மிக்கவர். இராமாநுஜரின் விரிந்த, சாதி சமய வேற்றுமையின்றி மனித குல மேம்பாட்டினை நோக்கும் போக்கினையெல்லாம் சிந்தித்து அவரைப் பகுத்தறிவுப் பகலவனாகக் காண்கின்றார். உண்மையும் அதுதானே![7]

*** **ஸ்ரீமதே இராமாநுஜாய நம:** ***

<u>குறிப்பு:</u>

1. கம்பராமாயணம் - காப்பு முதலியன: பாடல் 4

2. வில்லிபாரதம் - குருகுலச்சருக்கம் - கடவுள்வாழ்த்து

3. கம்பராமாயணம் - தற்சிறப்புப்பாயிரம் - 4

4. வில்லிபாரதம் - குருகுலச்சருக்கம் - 4

5. இவர் பேயாழ்வார். இவர் பாடிய பாடல்கள்:

பணிந்துயர்ந்த பௌவப் படுதிரைகள் மோத
பணிந்த பணிமணிக ளாலே அணிந்து, அங்கு
அனந்தன் அணைக்கிடக்கும் அம்மான், அடியேன்
மனந்தன் அணைக்கிடக்கும் வந்து. (மூன்.திருவந் -15)

வந்துதைத்த வெண் திரைகள் செம்பவள வெண்முத்தம்,
அந்தி விளக்கும் அணிவிளக்காம், - எந்தை
ஒரு அல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்வன்,
திருவல்லிக் கேணியான் சென்று. (மேலது -16)


என்பவை. வாலியாரின் பிரபந்த அறிவு மெத்தப் பாராட்டத் தக்கது.

6. காந்திமதி, கேசவ சோமயாஜி என்ற திருப் பெயர்கள் வைணவர்கள் மரபில் வழங்கும் பெயர்கள் அல்ல; ஆகவே ஸ்மார்த்தர்கள் உடையவரின் பெற்றோர்கள் என்ற ஒரு பலமான கருத்து உண்டு. இதனை மறுக்க முயல வேண்டியதில்லை. எதிராஜர் ஆதிசேஷன் அவதாரம். ஆதிசேஷனைப் படுக்கையாகக் கொண்ட ஆதிமூலம் மச்சம், கூர்மம், வராகம் வயிற்றில் பிறக்க வில்லையா? என்று மன அமைதி கொள்வோம்.

7. இந்த நூலாசிரியர் பேராசிரியர் ரெட்டியாருக்கு சிறு வயது முதற்கொண்டே பழக்கம். தந்தை பெரியாரிடமும் ஈடுபாடு உடையவர்; வரலாற்றிலும் மிக்க ஈடுபாடு கொண்டவர். சிந்திக்கும் ஆற்றலுடையவர். ஆகவே இந்த இரு பெரியார்களையும் பகுத்தறிவுப் பகலவன்களாகவே காண்கின்றார்.

****





இராமானுஜர் 1000

கவிஞர் வாலியின்

இராமானுஜ காவியம் - ஒரு மதிப்பீடு

இயல் ~ 2

தலைமைக் காவிய மாந்தர்கள்



ந சுப்பு ரெட்டியார் 100

இயல் – 2

தலைமைக் காவிய மாந்தர்கள்

இராமாநுஜ காவியத்தின் தலைமைக் காவிய மாந்தர்கள் இருவர்: 1. எதிராஜன் எனப்படும் இராமாநுஜன் 2. இராமாநுஜனின் துணைவி தஞ்சமாம்பாள்.

இவர்களைப் பற்றிக் கவிஞர் வாலி குறிப்பிடும் போது...

1.<u>இராமாநுஜன்</u>

பாவேந்தன்
பாரதி தாசன்
பாட்டில் வைத்துப்
பரவிய...

எதிராஜன் -
எனப்படும் ராமாநுஜன்தான்...

அற்றை நாளில் -
அதுகாலும்...

தனியார் துறைக்குத்
தாரைவார்த்த முக்தியை -
பொதுத்துறைக்குப்
பெயர்த்து வந்தவன்; உய்வழி -
பேசிய மறைகளைப்
பெட்டியில் மறைக்காது -
தேசிய மயமாக்கி
தேசத்தவர்க்குத் தந்தவன்!

இவன்
இயற்றிய
சமயப் புரட்சி - ஓர்
இமயப் புரட்சி!
அரிசனம்;
அயல்சயம்; இரண்டும் -
சரிசனம் - என
சாதித்தது இவன் தராசு;
உடனே -

உறுமியது வைதிக மிராசு!

வர்ணங்கள் நான்கால்
வரையப் பெற்றிருந்த -
மன்பதை -
என்பதை...

ஒரே வர்ணத்தால் - இவன்
ஓஹோவென வரைந்தான்;
வழக்கம் போல் -
வைதிகன் இரைந்தான்!

இவன் -
கீழ்ச்சாதிமேல் கைபோட்ட
மேல்சாதி; இதனை -
முதன் முதல் செய்த
முப்புரி நூல்சாதி!

தீண்டாமையைத் -
தீண்டியே கொன்றான்;
நிற்க -
நிழலற்ற...
சாயச் -
சுவரற்ற...

தெருக்குலத்தார் தம்மைத்
திருக்குலத்தார் என்றான்!

இதுமட்டுமோ விந்தை?
இன்னும் இயற்றினான்
எந்தை!
....
நரகம் வருமென -
நன்கு தெரிந்தும்...

ஓதற் கரிய
ஒரு மந்திரத்தை - ஊர் உய்ய

ஓதினான் கோபுர
உச்சியில் நின்று!
....
முக்கா டிடுகின்ற -
முகமதியப் பெண்ணுக்கு -
நிக்கா முடித்தான் -
நாராயண னோடு;
அரங்கன்பால் -

அவளுக் கிருந்த ...
அலுக்க வொண்ணாத
அன்பைக் கண்டு - அவளைத்
துலுக்க நாச்சியாய்த்
துதிக்கிறது நாடு!

ஆக -
ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே...
மதப் புரட்சி செய்த
மகான்,
இவன் கைக்குள்
இருந்தது -
சண்டித்தனம் செய்த
சனாதனக் குதிரையின் லகான்!

இருபதாம் நூற்றாண்டின் - இரு
இணையற்ற சிந்தனையாளனோடு...

உவமித்து ராமானுஜனை
உரைக்கப் போயின்...

பூணூல் -
போட்டிருந்த -
பெரியார் எனலாம்; திருமண் -
ஆறிரண்டு -
அணிந்திருந்த -
அம்பேத்கார் எனலாம்!

மேலும்...
....
ஆரும் கண்டு கைகூப்பும்
ஆரணங்கின் அடிவயிற்றில்;
ஆசூரி கேசவ சோமயாஜியின்
அகமுடையாள் மணிவயிற்றில்...

மகனாய் -
முளைத்திருப்பது...

'நாரணன் பூங்குடை;
நாரணன் பாதுகை;
நாரணன் இருக்கை;
நாரணன் படுக்கை;'
என -
ஆழ்வார்
அற்புதமாய்ப் பாடிய -

அரவரசன்;
ஆதிசேஷன்!

அங்ஙனம்
அவனை -

படிமிசை - ஒரு
பத்தினிப் பெண்ணின் -
பன்னீர்க் குடத்தில் போய்ப் -
படுக்கச் சொன்னவன்...

வைகுண்டத்தில் - வெள்ளை
வெள்ளத்தில் - தலைக்கொரு
கைகொடுத்து - பொய்யாய்க்
கண்ணுறங்கும் கரியமால்!

2. தஞ்சமாம்மாள்

தஞ்சமாம்பாள் -
தரணிக்கு வந்தது...

ஒரு
வரலாற்றுக்கு
வாழ்க்கைப்பட;

அல்லது...
அவள் ஆருக்கு
வாழ்க்கைப்பட்டாளோ - அவனை
வரலாறாக ஆக்கி விட!
....
எங்ஙனம்.......................

தஞ்சமாம்பாளைத்
தவிர்த்து விட்டு -
இயற்ற இயலும்
இராமானுஜன் வரலாறு?
அறிந்தோ -
அறியாமலோ...

அவள் குரலும்
அவளது ஆளன் குரலும் - ஒரே
அலைவரிசையில்
அமராது போனதால்தானே...
ஆவி ஏந்திய
ஆசைகளை எற்றிவிட்டுக் -

காவி ஏந்திக்
கர்ச்சித்தது வைணவ ஏறு!

3. இராமாநுஜன் அவதாரம்

ஆரும் கண்டு கைகூப்பும்
ஆரணங்கின் அடிவயிற்றில்;
ஆசூரி கேசவ சோமயாஜியின்
அகமுடையாள் மணிவயிற்றில்...

மகனாய் -
முளைத்திருப்பது...

'நாரணன் பூங்குடை,
நாரணன் பாதுகை,
நாரணன் இருக்கை,
நாரணன் படுக்கை!'

என -
ஆழ்வார்
அற்புதமாய்ப் பாடிய -
அரவரசன்;
ஆதிசேஷன்!

ஆதிசேடனே இராமாநுஜனாக அவதரித்துள்ளான் என்பதை அற்புதமாகக் கூறுகிறது இப்புதுக் கவிதைப்பகுதி.

அங்ஙனம்
அவனை -

படிமிசை - ஒரு
பத்தினிப் பெண்ணின் -
பன்னீர்க் குடத்தில் போய்
படுக்கச் சொன்னவன்...

வைகுண்டத்தில் - வெள்ளை
வெள்ளத்தில் - தலைக்கொரு
கைகொடுத்து - பொய்யாய்க்
கண்ணுறங்கும் கரிய மால்!

ஆதிசேஷனை அழைத்து -
ஒரு நாள்
அனந்த பதுமநாபன் - தன்
விசனம் பேசினான், வார்த்தையை
விரக்தியில் வீசினான்!

“நீ -
ஆயிரம் சிரசு -
அமைத்த அரவரசு - நீயெனது
அணுக்கமான கேள்; ஆகவே என் -
ஆற்றாமையைக் கேள்!
ஓவ்வொரு முறையும் -
உயிர்களை உய்விக்க...

வானம் விட்டு
வையம் வருகிறேன்,
வினைகள் நீங்கி
வீடுபெற உதவுகின்ற...

வாழ்க்கை நெறிகளை
வரைந்து காட்டியும்;
வாழ்ந்து காட்டியும்
விளக்கம் தருகிறேன்!

ஏற்றாறில்லை; நான்
எடுத்துரைத்த நெறிகளை -
நோற்றாரில்லை!

அதற்குக் காரணம்...
அவர்களை மீட்கத்தான் - நான்
அவதார மெடுத்து
வந்திருக்கிறேன்...

என்பதை -
எவரும் எண்ணவில்லை; அதைச்
சாடையாய்ச் சொல்லியும்
சட்டை பண்ணவில்லை!
காகுத்தனாய் வரும்பேறு - ஒரு
காவலனாகவும்...
கண்ணனார் வந்தபோது - ஒரு
கோவலனாகவும்...
என்னைக் கண்டனம் வேறென்ன
எண்ணுள் கண்டனர்?

‘அழும்போது
அழுது
சிரிக்கும் போது
சிரித்து
விழும்போது
விழும்’

மற்றொரு

மானிடப் பிறவியாய் -
எனை எண்ணினர்; இறையென
எவர் நண்ணினர்?

அவதாரங்கள்
அர்த்தமற்றுப் போயின;
விழலுக் கிறைத்த
வெள்ளமாய் ஆயின!

எனக்குப் பின் -
எத்துணையோ...

ஆசாரியர்களை அனுப்பினேன்;
ஆழ்வார்களை அனுப்பினேன்;
அவர்கள் -
ஆக்கினர் பாசுரங்கள்;
அவற்றைக் கேட்டும் -
அகலவில்லை பாமரங்கள்!

ஒவ்வொருவருக்கும் உண்டு
உதிரத்தாய்; நான்
உதிரத்தாயல்ல; இந்த
உலகத் தாய்!

உயிர்க்குலம்
உய்யா திருப்பதா? அது -
உய்யா திருக்கையில் - நானது
செய்யா திருப்பதா?

சகமாயைச்
சகதியில் சேய்;
அதை அலம்பும்
ஆதுரத்தில் ஆய்!
அழுக்கு ஆசை சேய்க்கு
அலம்பும் ஆசை தாய்க்கு
இல்லை ஒத்த ஆசை! இருந்தும் -
இருக்காதோ தாயின் ஒத்தாசை?
ஆதிசேஷா!
அன்பா!

நீ போய்
நிலத்தில் பிற.
கேசவ சோமயாஜியின்
குலத்தில் பிற.
போகப் போகப்
புரியும் பிற!

அவனி! அதை
அவனியிலிருந்தபடியே

கவனி!

எப்படிச் சொன்னால் - அது
ஏற்கும்?
நன்னெறிகளை விரும்பி -
நோற்கும்?

என்று கண்டுபிடித்து
இதம் பேசு; வருணம் -
நான்கையும் ஒன்றாய்க் கொண்டு -
நிதம் பேசு!

சாதி பாராது - தர்ம
சாஸ்திரங்களை
சாதி;
சாதி வருவது
சனன வழியல்ல என
சாதி
சாதி உணர்வினைச்
சேதி; இச்
சகம் உணரட்டும் - நீ
சேதித்த சேதி!

பன்னக -
மன்னனே!
அனந்தமான புகழ் படைத்த -
அனந்தனே!

உன்னால் -
உய்யட்டும் மன்பதை;
உணரட்டும் - நீ
உய்விக்க வந்தவ னென்பதை!”
நாராயணன் நவின்றதும்
நாகராஜன்...

மனமொப்பி -
மகிழ்ச்சி மிகுந்தான்;
காந்திமதி -
கருவினில் புகுந்தான்!
....
பெருமாட்டி காந்திமதி
பெற்றெடுத்தாள்;
பெறற்கரிய பெரிய
பெயரெடுத்தாள்!

கொற்றவி கோசலையாக -
கோதண்ட ராமன் போல்;

கஞ்சன் சோதரி தேவகியிடம் -
கண்ணபிரான் போல்;

பைந்தொடி ரோகிணியிடம் -
பலராமன் போல்;

அருள்சால் காந்திமதியிடம் -
ஆதிசேஷன் அவதரித்தான்;
அவதரித்து அழகிய -
அல்லிப்பூ அதழ் விரித்தான்!

பிள்ளைக்குப் பெயரிடுதல்:

பன்னிரண்டாம் நாள்;
புண்ணியாகவாசனம்!

ஒரு
பாகவத கோஷ்டி -
பிராதக் காலத்திலிருந்து...

பிராசீன பத்ததியல்
படித்துக் கொண்டிருக்கிறது -
பிரபந்த வாசகம்!

நல்லி பெற்ற
நல்ல பிள்ளைக்கு - திரு
நாமம் சூட்டும்
நல்விழா;
....
தாய்மாமன் - பெரிய
திருமலை நம்பி - தனது
தங்கையின் தனயனுக்கு...

சங்கு சக்கரக் குறிகளைச்
சாத்தி;
'நூறும் புகுக!' என
நெஞ்சுருக வாழ்த்தி...

'இலட்சுமணன்;
இராமானுஜன்;
இளையாழ்வான்!' என -

மூன்று திருநாமங்களை
முன் நின்று சூட்டினார்

சேயின் -

செவியண்டை வாய் வைத்து -
மூன்று நாமங்களையும் -
மும்முறை சொல்லிக் காட்டினார்!

தாயின் வளர்ப்பு முறை

'மலடு' எனும்
மூன்றெழுத்துச் சொல்லையே -

உள்ளீடற்ற
ஒரு -
மலட்டுச் சொல்லாக
மாற்றியவன்;

தன்னை
தாயார் ஸ்தானத்திற்கு - ஓர்
ஏணியேல் வந்து
ஏற்றியவன்!

இதற்கு மேலும் -
இராமானுஜன் மேல்...

பித்தேறிக் கிடக்கப்
பெற்றவளுக் கென்ன வேண்டும்?
....
தரையில் விடுவாளா?
தலைமேல் தாங்கினாள் யாண்டும் !
....
கோழி -
கூவியது முதல்; சுவர்க்
கோழி -
கூவுவது வரை...

இராமானுஜனை
இடுப்போடு -
அவள்
வைத்திருப்பவள் அல்ல;
தைத்திருப்பவள்!
....
காந்திமதி - தன்
கைப் பெட்டிக்குள்...

பொத்திப் பொத்தி வளர்த்தாள்
பொக்கிஷத்தை; நாளை

பௌவம் போல் பொங்க இருக்கும்
பௌருஷத்ததை!

....

அப்பா வீடே
அரண்மனை யாச்சு;

அம்மா இடுப்பே
அரியணை யாச்சு;

சீலைத் தலைப்பே
சிறுகுடை யாச்சு;

சூப்பும் விரலே
செங்கோ லாச்சு;

குதலை மொழியே
கட்டளை யாச்சு;
கண்ணீர்த் துளியே
கைவா ளாச்சு;

பசும்பொன் தொட்டில்
பல்லாக் காச்சு;
ஆராட் டொன்றே
பாராட் டாச்சு!

....

பொந்தோ சந்தோ -
போகுமிட மெல்லாம்...

குட்டியைக்
கவ்விக் கொண்டே போகும்
மார்ச்சாலம் (பூனை)
மாதிரி...

அடுப்பங்கரையோ
ஆற்றங்கரையோ
இடுப்புக் குழந்தையை
இறக்கி விடாது -
காரிய மாற்றுவது
காந்திமதிக்கு
விடமுடியாத
வழக்கமாகி விட்டது;

அம்மா பிள்ளை
அன்னியோன்னியம் -
ஆம் பரிகசிப்புக்கும்
அப்பாற் பட்டது!

அட்சராப்பியாசம்

ஒரு
விஜயதசமியில்
வித்தியாரம்ப நாளில்...

அட்சராப்பியாச வைபவம்
அமோகமாக நடந்தது -
ஆசுரி கேசவ சோமயாஜியின்
அரண்மனை அனைய இல்லில்!

அஞ்சு வயது ராமானுஜனின் -
பிஞ்சு விரல்கள் -
எட்டெழுத்தை
எழுதின - ஒரு
வட்டிலில் நிறைய
விரவியிருந்த நெல்லில்;

அந்த -
அம்மாட்சரம் தானே
அறிவு வெளிச்சம் கொளுத்தி
ஆன்மாவிற்கு வழிகாட்டும்...

அல்லல் மிகுந்த -
அறியாமை என்னும் அல்லில்!

பூணூல் கல்யாணம்

ஒரு
பிராமணத் தந்தைக்கும்
ஒரு
பிராமணத் தாய்க்கும்;
பிள்ளையாய்ப்
பிறப்பதால் மட்டுமே - ஒருவன்
பிராமணன் அல்ல; அவனது
சனனம் - ஒரு
சான்றிதழ் ஆகாது - அந்தணச்
சாதியான் என்று சொல்ல!

ஒருவனை -
வேதியனாக்குவது..
அவனை ஏந்திய
கருப்பை அல்ல;
அவன் ஏந்திய தருப்பை!

சம்போகத்தால் ஒருமுறை;
சம்ஸ்காரத்தால் ஒரு முறை
என எந்த பிராமணனும் -
எய்துவான் பிறப்பை இருமுறை!

ஆதலால்தான்
அந்தணனை..

'இருபிறப்பாளன்!' என -
இயம்பும் தென் மொழி;
'துவிசன்!' எனத் -
துலக்கும் வடமொழி!

ஓர் -
ஒற்றைப்படை வயதில் -
இராமானுஜனுக்கு -
இரண்டாம் பிறப்பை வழங்க...
கேசவ சோமாயாஜி
குறித்தார் தேதி;
....
யக்ஞம்;
யக்ஞோபவீத தாரணம்
குமார போஜனம்
மஞ்ச வேஷ்டியில் -
மௌஞ்சி பந்தனம்;
பிரம்மோபதேசம்;
பிரமசாரிப்
பையனுக்குப்
பெண்டுகள் இடும்
பிட்சை;
என -
எல்லா சம்ஸ்காரங்களும்...

மந்திர லோபம்;
சிரியா லோபம்;
தான்யா லோபம்;
திரவியே லோபம்;

இத்தியாதி...
இத்தியாதி...
லோபங்கள் கிஞ்சித்து மின்றி -
லோகமே கொண்டாடும்படி -

சாஸ்திரரோக்தமாக;
சாங்கோபாங்கமாக;
சம்பிரமமாக;
சம்பூர்ணமாக;

நடந்தன;

அத்தியயனம் என்னும் வேதபாராயணம்

அகத்து வாசலில்
ஆளோடியோடு -
அகலமாக
அமைந்திருந்த -

பெரிய திண்ணையே - வேத
பாடசாலையாகிப் போனது;

சாளக
சாகையாக -
அத்தியயனம்
ஆரம்பம் ஆனது!

ஆரணம் என்பது
ஆழங்கான ஆகாத மடு; தனது
அத்தனையே
ஆசாரியனாகக் கொண்டு - அதில்
ஆழங்காற்பட
ஆசைப்பட்டான் வடு!

பிராயம் பதினைந்து
பூர்த்தியாவதற் குள்ளாகவே...

இளையாழ்வான் எனப்படும்
இராமானுஜன் -
இருக்கை முதலாய்க் கொண்டு -
இருக்கின்ற ஈரிரண்டு -
எழுதாக் கிளவிகளையும் -
எடுத்து அடுக்கினான் நாவில்;

வேத வேதாந்த
விசாரங்களில்
வாது புரிந்திட
வரும்...

வித்துவான்களை
வீழ்த்தவல்ல
வார்த்தை வாளிகளை -
வாங்கி நின்றது அவன் நாவில்!

'முன்னூல் அறிந்து
முப்புரிநூல் அணிந்து - இனும்

பன்னூல் அறிவு
புத்தியில் அடைந்து - ஒரு
நன்னூல் நிலத்தில் கால் தோய
நடக்கிறது!' என...

இராமானுஜனை
இனம் கண்டது ஊர்; அவனது
ஏரார்ந்த விழிகள் - எவர்
எதிர்ப்படினும் - அவர் தம்
எண்ணக் கிணற்றில் இறங்கி
எடுத்தது தூர்!

அவ்வூரில் -
அநேகர் சித்தம் ...
அவன்
அருட்பார்வை
அழுக்கெடுத்ததால்
ஆனது சுத்தம்!
....
பிள்ளைப்
பிராயத்திலேயே -
மனிதனை
மனிதனாகப் பார்க்கும்
மகோன்னதம் - அவன்
மனத்தில் இருந்தது; இந்த
மகோன்னதம் - வெறும்
மகோன்னதம் அல்ல; பின்னாளில்
'எம்பெருமானார் தரிசனம்'
எனப் பேர்பெற்ற விருந்தது!

வனப்பில் -
வாலறிவில் - ஒரு
வடு இல்லா -
வடு!

4. தஞ்சமாம்பாள் (திருமணம்)

பெறும்பைப் பருவம்
பெயர்ந்து - பிராயம்
பன்னிரண்டுக்குள்
பாதம் பதிக்கையில்...
அழகு! அழகு! அழகு!
அப்படியோர் அழகு!
ஆரால் கூற ஆகும் - அவளது
அழகுக்கோர் அலகு?
....
வலக்கண்; இடக்கண்

வார்க்கும் தண்ணளியால் - நம்
அலக்கண் இடத்து
அருள் பாலிக்கும்...

ரங்நாயகித் தாயாரோ;
செங்கமலத் தாயாரோ;
பத்மாவதித் தாயாரோ;
பெருந்தேவித் தாயாரோ;

மூலத்தானத்தில்-
மூச்சு முட்டுகிறதென்று...

கர்ப்பக்கிருகத்தை விட்டுக்
கால் நடையைக் கிளம்பி
காற்றாட
....
ஜனங்களோடு
ஜனங்களாய்ப் -
....
பன்னிரண்டு வயதுப்
பெண்ணைப் பார்த்தால் - ஒரு
தெய்வீக அழகாய் - ஆர்க்கும்
தோன்றும் பார்ப்பவர் -
உள்ளங்களில்
ஒருவித -
பயத்தையும் பக்தியையும்
பிரீத்தியையும் ஊன்றும்!

அம்பாளிடம் - தஞ்சம்
அடைத்திருந்த அழகெல்லாம் -
அப் பெண்ணிடத்தும் - தஞ்சம்
அடைந்திருந்ததாலோ என்னவோ...

தஞ்சமாம்பாள் - எனும்
திருநாமத்தை - அவள்
தாங்கி நின்றாள்; துழாய் போல் -
தூய்மையை வாங்கி நின்றாள்!

ஆம்!
அவளுக்கு...
வாய்த்த கணவன் - ஒரு
வரலாறு தான்;
....
அது
அந்த -
வரலாறு
வகுத்த ஆறுதான்!

கங்கை ஆறு;
காவிரி ஆறு;
என்பது
என்றும்...
வரளா ஆறு - அந்த
வரலாறு!

அந்த
ஆற்றில்...
பிரவாகமாக ஓடுவது
பெருங்கருணை; அது -

அதுகாலும்
அழுத்தப் பட்டோர்
அநுபவித்தறியா
அருங்கருணை!

அதில் -
ஆரும் குளிக்கலாம்!
அதை -
ஆறும் குடிக்கலாம்!

இன்னார்க்கு
இன்னது என்று -
பிரத்தியேகப்
படித்துறை இல்லை;

இன்னார்
இறங்கிக் குளித்தால்...

தீர்த்தம்
தீட்டுப்படும்

இன்னார்
எடுத்துக் குடித்தால்...

புனலின்
புனிதம் கெடும்

என்று
எவரும் எவர்மீதும்
வாழ்வழி வீச முடியாது
வார்த்தைக்கல்லை!
....
இருவீட்டாரும் - மன்றல்
இயற்ற முடிவானபின்...
திதி பார்த்து - நடத்தத்

தீர்மானித்தனர் -

திருமண வைபவம்

**அக்காரத் தமிழில்
அருளிச் செய்த
ஆறாம் திருமொழியோடு[1]
ஆரம்ப மானது...
திருப்பூட்டு அணிவிக்கும்
திருக்கல்யாண மகோற்சவம்
கண்படைத்தோர்க் கெல்லாம்
காணக் கிடைத்த மகோன்னதம்!
மாக்கோலம் இட்ட
மணைகளில் ...**

மணமக்கள் இருந்த கோலம்

**வடுவும் வதுவும்
வீற்றிருந்தனர்;
ஏரார்ந்த தாமங்கள்
ஏற்றிருந்தனர்!**

**அஞ்சனம் அப்பிய இருகண்
அவற்றின் நடுவில் திருமண்;**

**அரையினில்
அரக்குக் கரை போட்ட
பட்டால் ஆன
பஞ்சகச்சம்;
பிடரியில்
பிரகாசமாய்
புது நெய்
பூசிய பிச்சம்;**

**புதுக் கடுக்கன்;
புதுக் கணையாழி;
புது உத்தரீயம்;
புது உபவீதம்;
என -
எழுந்தருளியிருந்தான்
இராமானுஜப் பெருந்தகை; யான்
இயம்ப வொண்ணா அருந்தகை!**

**சிரசு முதல்
சேவடி பரியந்தம்
சொர்ணாபரங்கள்
சொலிப்பை வார்க்க;**

ஆடை திருத்துதல் போல்
அருகிருக்கும் தீர்த்தனை
ஓடை மலர்க்கண்
ஓரப் பார்வை பார்க்க;

கூடைப் பூவும்
கூறைப் புடைவையுமாய்
குந்திக் கிடந்த திருமேனி
குப்பென்று வேர்க்க;

நதியலை நெருடிய
நாணலை போல நாணல் கொண்டு...
அமர்ந்திருந்தாள்
அழகொழுகும் -
தஞ்சமாம்பாள் எனும்
தளிர்; நுதலில்
குங்குமம் ஏந்தியிருந்த
குளிர்!
....

<u>மாங்கல்யதாரணம்</u>

தந்தை மடியிருந்த
தஞ்சமாம்பாளின்
திருக்கழுத்தில்
திருமாங்கல்யம் பூட்டினான்...
காந்திமதியம்மையின்
கன்று!

<u>இல்லற வாழ்க்கை:</u>

மாமியார் இதோபதேசத்திற்குப் பின் தலையையாட்டிய தஞ்சமாம்பாள்:

அன்று முதல்
அவளே -
அல்லும் பகலும்
அலுக்காது சலிக்காது...

குடும்பத் தேரைக்
குடைசாயாது ஓட்டினாள்
குறைவைக்காது - கொழுநன்
குதூகலத்தை கூட்டினாள்!

வைகலும் -
வைகறையில்...
வாரணம்
விழிக்கு முன் விழித்து -
வாளியில் நீர் சேந்தி

வாசல் தெளித்து -

எறும்புகள் சாப்பிட
ஏதுவாக -
அரிசி மாவில்
அழகழகாகக் கோலம் போட்டு -
பிறகு
புழைக்கடை வாவியில்...

புருஷனின்
பத்தாறையும் கௌபீணத்தையும் -
அழுக்குப் போக
அடித்துத் துவைத்து -

ஒட்டப் பிழிந்து - உலர
ஓணான் ஓடும் வேலிமேல் போட்டு -

தான்
தலைக்குக் குளித்து - தலை
துவட்டிய - பூந்
துவாலையைக் கூந்தலில் சுற்றி -

குழந்தை நிலா நெற்றியில்
குங்குமம் வைத்துக் கூடவே
சின்ன ஈரக்கால்
ஸ்ரீசூர்ணம் எழுதி -

சாளாக்கிராமம்[2] இருக்கும்
சந்நிதிக்கு[3] முன்னால் -
நெய்விளக் கேற்றி

நாலு தடவை சேவித்து -

ஓர் உத்தரணி -
துளசித் தீர்த்தத்தைத்
தனக்குத் தானே -

அங்கையில் ஊற்றி
அருந்தி விட்டு -

சிக்குப் பலகையை
சுத்தி செய்து - அதை
இழை கோலத்தின்மேல்
இருத்தி விட்டு -

அதன் பின்

அஷ்டாட்சரம் சொல்லியவாறே -
அடுப்பு மூட்டி
அரிசி களைந்து போட்டு -

ஓலைத் தடுக்கில்
உட்கார்ந்தபடி -

காய்கறி நறுக்கி
கீரை ஆய்ந்து -
தண்ணீரில் வேகவைத்துத்
தாளித்துக் கொட்டி -

மள மளவென்று -
மணக்க மணக்க ...

தளிகையை முடித்து
தலைவாழை இலை போட்டு -

கொழுநனுக்கும்
கொழுந்தன் கோவிந்தனுக்கும்...

பரிமாறிப்
பசியாற்றிப் -
பாடசாலைக்குப்
பணிவன்போடு அனுப்பிவிட்டு...

தஞ்சமாம்பாள்
தனது புடவைத் தலைப்பால் -
ஒழுகுகின்ற நெற்றி வேர்வையை
ஒற்றி ஒற்றி எடுத்தவாறு

காந்திமதியைக்
கவனிக்கப் போவாள்;[4]

....
அநேகமாக
அன்றாடம்...

ராச்சாப்பாட்டுக்குப் பிறகு -
ராமானுஜனும் தஞ்சமாம்பாளும் -
மொட்டை மாடியிலோ; நடு -
முற்றத்திலோ; நிலாக்
கீற்றுகள் - தென்னங்
கீற்றுகள் வழியே
கீழிறங்கி விளையாடும்
கிணற் றோரத்திலோ;

ஒருவர் பக்கம்

ஒருவர் அமர்ந்து -
பிரியமாக பேசுவது உண்டு;

இருவரும்
இளவயதினர் என்பதாலும்....
இல்லறம் புகுந்து - திங்கள்
இருபதே ஆயின என்பதாலும்....

அவர்களது
அளவளாவலில் -
வாஞ்சைத் தென்றல்
வீசுவது உண்டு!

மன்றல் முடிந்த
மறு மாதமே...
தந்தை -
திருநாடு அலங்கரிக்க;

வருஷாப்தீகம் வரை - அந்த
வருத்தம் அவியாதிருக்க;
கண்ணைக் கட்டிக்
காட்டில் விட்டாற்போல -

பாதை தெரியாமலும்
பயணம் புரியாமலும் - ஒரு
வாதை வசப்பட்டு - வீடே
விக்கித்து நிற்க;
....
புதிதாய்ப்
பரிணயம் புரிந்த
பதினாறு வயதுப் பையன் - தன்
பத்தினி யோடு...

அமளியில்
ஆனந்திக்க வழியின்றி - வீடே
அமளியில்
ஆடிக் கிடக்க

இராமானுஜன் - தன்
இல்லாளான...

தஞ்சமாம்பாளைத்
தழுவுவது ஏது? நாணத்தில் -
தஞ்சமாம்பாளும்
நழுவுவது ஏது?

காஞ்சிபுரத்திற்குக்
குடிபெயர்ந்த பிற்பாடுதான்...

கணவன் மனைவிக்குக்
கிடைத்தது -
கொஞ்ச நேரம்; அதுவும் (= விளையாட)
கொஞ்ச நேரம் !

சின்னச் சின்ன
சந்தோஷங்களாக...

தஞ்சமாம்பாள்
திருநீற்றமுதை (= சுண்ணாம்பு)
தளிர் வெற்றிலையில்
தடவிக் கொடுக்க -

இளையாழ்வான்
இராமனுஜனின்...

தாம்பூலம் தரித்த
திருவாய் - சிவப்பில்
தாமரைப் பூவைத்
தலைகுனிய வைக்க
அந்த -
அரக்குச் சிவப்பு...

அகமுடையாள் மேல்
அகமுடையானுக் கிருக்கும் -
அதீதமான அன்பை
அப்பட்டமாய் அறிவிக்க -

தனக்கு நிகர்
தானே எனும்...

தருக்கு ஒன்று
தக்கணமே
தலைக்கு ஏறித்
தஞ்சமாம்பாளை ஆட்டுவிக்க

திருக்கச்சியிலிருந்து
திரும்பும் குழிக்கும் -
திருப்புட்குழியிலிருந்து
திருக்கச்சிக்கும் -
நாள்தோறும் நடக்கும்...

தலைவனின்
திருவடிகளைத் -

தஞ்சமாம்பாள்
தயிலம் தடவி நீவிவிட-

தலைவியின்
திருப்பணியில்
தலைவனின்
திருவுள்ளம் நெகிழ்ந்துவிட -

இனி நடக்க
இருப்பதை...

உற்றுப் பார்த்தல் - அவ்வளவு
உசிதமல்ல என்று - அதற்கொரு
முற்றுப் புள்ளி வைத்து - நிலா
முகில் திரைக்குள் செல்ல...

நாமும் - அங்கு
நடந்தவற்றைக் கூறல் -
நயத்தகு
நாகரிகம் அல்ல!

<u>**மணிவாசகங்கள்:**</u>

இல்லற வாழ்க்கையில் சில சமயம் கணவனுக்கு ஆறுதல் கூறும் சந்தர்ப்பங்களும் ஏற்படும். யாதவர் இராமாநுஜரை சினத்துடன் விரட்டியதும்,

வேறு
வழியின்றி -
விசனத்தோடு -
வீடுவந்து சேர்ந்தான் -

விரதமிருந்து
வைணவ தேயம் - வாங்கிவந்த
இராமானுஜன் எனும்
இளைய சீயம்!

தஞ்சமாம்பாள் -
தலைவனைத் தேற்றினாள்;
தெய்வம் நமக்குத் - ;
துணையெனச் சாற்றினாள்!

"வரதராஜன் நிழலில்
வாழ்கிறோம்;
அவன் நினைவில் அனவரதம்
ஆழ்கிறோம்!

தேவராஜன்
திருவுள்ளப்படிதான்...

நல்லது கெட்டது
நடக்கிறது; நம்
கைகளில் வாழ்வுதாழ்வு
கிடக்கிறது?

அறிவு புகட்ட - ஓர்
ஆசாரியனை...

பெருமாள்தான்
பிடித்துக் கொடுத்தார்;

பிடித்துக்கொடுத்த
பெருமாளே ....

பிரகஸ்பதிக்கும் - சிஷ்யப்
பிள்ளையாண்டானுக்கும் உள்ள -
பந்தத்தைப்
பிரித்து எடுத்தார்!

எண்ணெய் உள்ளவரை
எரிகிறது பந்தம்; அதேபோல்
இட்டவிதி உள்ளவரை
இருக்கிறது பந்தம்!

'நதிவழி நாவாய் - போலே
விதிவழி போவாய்!'
என்று -
ஏற்கெனவேயே...

உண்டு
ஒருவசனம்; இதை
உணர்ந்தார்க்கு
உண்டோ விசனம்?

உங்களுக்குத் தெரியாதா -
உலக இயல்?
நம்மொடு பிறந்து -
நம்மொடு பிறங்கும் -
நம் அவயவங்களே -
நமக்கு அயல்!

நடப்பது -
நம் கால்;

ஆனால் -
அது -
நடப்பது - அவன்
நிர்ணயித்த வழியில்;

நோக்குவது -
நம் கண்;
ஆனால் -
அது ...
நோக்குவது - அவன்
நிச்சயித்த காட்சியை;

தொடுவது -
நம் கை;

ஆனால் -
அது...
தொடுவது - அவன்
தீர்மானித்த பொருளை;

தின்பது -
நம்வாய்!

ஆனால் -
அது...

தின்பது - அவன்
திட்டமிட்ட உணவை;

விரும்புவது -
நம் உளம்;

ஆனால் -
அது...

விரும்புவது - அவன்
வகுத்து வைத்த உறவை;

வாழ்வது -
நம் உயிர்;

ஆனால் -
அது...
வாழ்வது - அவன்
வரையறுத்த நாள்வரை!

இப்படி - நம்மொடு
இணைந்து இருக்கின்ற...

அனைத்தும்
அவன் வசம்;
இதில் -
என்னை வேண்டிக்கிடக்கிறது -
பாசம்; நேசம்;
பரவசம்?

யாதவப் பிரகாசத்தோடு
யுத்தம் நடத்தியாச்சு;
எதிர்வாதம் செய்து
எதிராளியைக் கிடத்தியாச்சு!

ஆனால் ஒன்று உங்க
ஆசாரிய ஸ்வாமி...

தற்சமயம் -
தடியினால் அடிபட்ட பாம்பு;

உங்களையே
ஒழித்துக் கட்டும் அளவு -
உள்ளத்தில் அவருக்கு
உருவெடுக்கலாம் வீம்பு?

ஒரே -
ஒருதடவைதான்...

உங்களோடு வந்து
உங்கள் வாத்தியார் ஸ்வாமியை -
சேவித்திருக்கிறேன்; தந்தையாய் -
பாவித்திருக்கிறேன்!

ஆயினும்
அவர்முகத்தில் - ஒரு
கொடூரம் கண்டேன்; மதிப்பைக்
குறைத்துக் கொண்டேன்!

ஆனாலும்
அவரைப் பத்தி
அவ்வளவாக
அச்சமில்லை;

பெருமாளைத் தவிர
பிரபஞ்சத்தில் -
ஒருத்தனும்[5] (= ஒருவனும்)

உச்சமில்லை

ஆபத்து என்று
அழைத்தால்...

வைனதேயன் மேலேறி
வந்து - நமக்குற்ற
ஆபத்தை
ஆழிகொண்டு -
அரிவான்
அரி
அவனது -
அளப்பரிய கருணைக்கு...

விடங்கர்
வாய்மீண்ட-
கரியே
கரி!"

மனைவி மொழிந்த
மணிவாசங்களால் -
மனப்புண் ஆறினான்
மணாளன்;
....
எனினும் - இதில்
என்ன வேடிக்கை என்றால்...

எதிர்வாதம் செய்யும்
எவனையும்
ஏனோதானோ வென்று
எண்ணிவிடாமல்...

யானைபோல்
யாதவப் பிரகாசர் -
கறுவைத்துக்
கருவறுப்பார் என்று...

சர்வ
சாதாரணமாக -
தஞ்சமாம்பாள்
தெரிவித்து...

உண்மையாகும் சூழ்நிலை -
உருவானது;

<u>**காசிப்பயணம் பற்றி**</u>

துலாபாரமாய்த்
தெரிந்தது - அதில்
காசிக்குப்[6] போகும்
கணவன் பற்றிய கவலை!

தலைவனைப் பிரிந்த
தனிமை -
தலைவியைத்
தழல்போல் தகித்தாலும் -

அதைவிட அனலை
அள்ளிக் கொட்டும் விஷயம் ....

நாயகன் மேற்கொண்டிருக்கும்
நீண்ட பயணம்
நல்லபடியாக
நடந்து முடிந்து -

அவன்
ஆபத்து எதுவுமின்றி -
இல்லம் திரும்ப வேண்டுமே
என்பது தான்;

தஞ்கமாம்பாளால்
தாங்கிக் கொள்ள முடியவில்லை
தன்னை - அந்த அவலம்
தின்பதுதான்!

பக்கம் வந்து நின்றான்
பர்த்தா; நாளை -

வலிவும் பொலிவும் மிக்க
விசிட்டாத்வைதம் எனும் -
வைணவத் தத்துவத்தை
வடிவமைக்கப் போகும் கர்த்தா!

"தஞ்சம்!
தெரியும் எனக்கு...

நான் -
திரும்பி வரும் வரை - நீ
தரைமீன் என்று;
கண்ணீர் - உன்
தண்ணீர் ஆக - அதில்

போராடிக் கொண்டிருப்பாய்
போகும் உயிரைப் பிடித்து நின்று!

எனினும் -
என்ன செய்வது?

ஆசாரியனின்
ஆக்ஞையை -
அலட்சியப் படுத்தினால்
அப்புறம் எப்படி உய்வது?

ஏற்கனவேயே
எனக்கும் அவர்க்கும் -
ஏழாம் பொருத்தம்; நான் -
வாரணாசிக்கு
வரமாட்டேன் என்றால் -
வளரும் வருத்தம்!”

என்று -
இராமானுஜன் விளக்கினான்;
எனினும் தஞ்சமாம்பாள் - அதை
ஏற்காது விலக்கினாள்!

தன்பக்கத்து -
தரும நியாயங்களை ...

வலக்கை பற்றி - தான்
வாழ்க்கைப் பட்டவன்முன் -

விரித்தாள் மனையாள்;
வைதேகி அனையாள்!

“ஒருவன்
வெளிச்சத்தில் நடக்கையில்...
அவனது நிழல் - அவன்
அடியொற்றி வரும்;

அவனே
அந்தகாரத்தில் நடக்கையில்...
அவனது நிழல் - அவனை
அறவே பிரிந்து விடும்!

மனைவி -
மட்டும்தான்...

(i) மையிருட்டிலும்
மணவாளனைத் தொடர்ந்து வரும் -

அவனது நிழல்; ஏனெனில் -
அவளுக்கு அவன்தான் நிழல்!

(ii) நதி - தான்
நடந்து போகும் இடமெல்லாம்
கூடவே - கரையைக்
கூட்டிச் செல்கிறது;

(iii) காற்று - தான்
கடந்து போகும் இடமெல்லாம்
கூடவே - கந்தந்தைக்
கூட்டிச் செல்கிறது;

(iv) மழை - தான்
மிதந்து போகும் இடமெல்லாம்
கூடவே - தண்ணீரைக்
கூட்டிச் செல்கிறது;

(v) வினை - தான்
விரைந்து போகும் இடமெல்லாம்
கூடவே விளைவைக்
கூட்டிச் செல்கிறது!

(vi) அவ்வளவு ஏன்? உங்கள்
அண்ணன்[7] - அவர் மனைவியை
அடவி சென்றபோதும் - உடன்
அழைத்துப் போகவில்லையா?

அதனால்
அவள் உயிர் -
பரிதவிக்காமல்
பிழைத்துப் போகவில்லையா?

காசிக்குப் போனாலும் - வாழ்வின்
கடைசிக்குப் போனாலும் -
கூடவருவேன் நான்; நானும் -
கிரௌஞ்சப் பட்சிதான்!”

இவ்வாறு இயம்பிய
இல்லாளை;...
....
இதமான வார்த்தைகள் சொல்லி
இராமானுஜன் தேற்றினான்;

அவனது
அகத்துள் -

அப்பிக் கிடந்த
அச்சத்தை ஆற்றினான்!

“தஞ்சம்! தெரியாதா உன்
நெஞ்சம்?
கொண்டவனோடு அனுசரி
கொஞ்சம்!

தாசரதி அடவி வந்தது
தசரதன் விதி; ஜனகராஜன்
தனையை அடவி வந்தது
தசக்கிரீவன் விதி!

உனக்கும் எனக்கும் அந்த
உவமைகள் பொருந்தா(து);

ஆகவே -
அம்மாவுக்குத் துணையாய் இரு -
அதையும் இதையும் எண்ணி -
அநாவசியமாய் வருந்தாது!

வழித்துணைக்கு
வரதராஜன் உண்டு;

இடையில் ஏதேனும்
இடர் வரின் - அதைச்
சுக்கு நூறாக்குவான்
சுடராழி கொண்டு!”

பின்னர் தாரத்திடம், தாயிடம், திருக்கச்சி நம்பியிடம் விடைபெற்று வாரணாசி புறப்பட்டான் ‘வைணவம் யாண்டும் வாசிக்கும் ஞான ஏடு!’ இவற்றால் கணவன்-மனைவி இல்லப்பாங்கு – அன்பன் தெளிவு - புலப்படுகின்றன.

<u>உடையவரின் துறவு</u>

இதற்குக் காலம் பக்குவப்பட்டது. அதற்குரிய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாய் நடை பெற்றன. வாலியார் வழியில் இதனைச் சிந்திப்போம்.

அறிந்தோ -
அறியாமலோ…

அவள் குரலும்
அவளது ஆலின் குரலும் - ஒரே
அலைவரிசையில்

அமராது போனதால் தானே...

ஆவி ஏந்திய
ஆசைகளை ஏற்றிவிட்டுக் -
காவி ஏந்திக்
கர்ச்சித்தது வைணவ ஏறு!

<u>அடிப்படையாக:</u>

அமர்க்களத்தில் நின்ற -
அர்ச்சுனனுக்கு
தமர்பால் தண்ணளி காட்டிய -
தனஞ்சனுக்கு;

இளகிய மனம்
இல்லாதிருந்திருந்தால்;
நெஞ்சம் - கருணைவழி
நில்லா திருந்திருந்தால்;

பாஞ்சசன்னியத்தை -
பகவான் ஊதிய உடனேயே...
வில்லெடுத்து - அவன்
விளைத்திருக்கலாம் - பகைக்கு
உயிர் வாதை; விளைத்திருப்பின் -
உலகுக்கு ஏது பகவத் கீதை?

அர்ச்சுனனால் -
அல்லவோ...

உதிப்பதும் -
உதிர்வதுமாய்;
உதிர்வதும் -
உதிப்பதுமாய்;

அல்லாடிக் கிடக்கும் -
அனைத்து உயிர்களையும்...

காமம்;
குரோதம்;
மதம்;
மாச்சர்யம்;
மோகம்;
லோபம்;

என -
எஞ்ஞான்றும் படுத்தும்...

நோவாறு அழத்திடவல்ல
நன்மருந்தாய் - கீதையின்
மூவாறு அத்தியாயங்களை
மொழிந்தான் கரியவன்;

ஆதலால்
அர்ச்சுனன்தான் -
அச்சுதனை விட
அதிகமாக...

நமது -
நன்றிக்கு உரியவன்!

தனஞ்சயன் போலவே -
தஞ்சமாம்பாளும்...

நாளும்
நமது -
நெஞ்சார்ந்த
நன்றிக்கு உரிய நல்லாள்;

ஆம்; அரிய வைணவம் -
அம்புவியில் ஆழ வேரோட....

இராமானுஜனாய் இருந்த
இராமானுஜனை - இசைமிகு
இராமானுஜ முனியாக்கியது
இராமானுஜனின் இல்லாள்!

தெரிந்தோ
தெரியாமலோ;
புரிந்தோ-
புரியாமலோ;

தஞ்சமாம்பாள் - இத்
தரணிக்குப் - பரம
உபகாரம் புரிந்த -
உத்தமி;

எதிராய் விளங்கியும்; ஒரு -
புதிராய் விளங்கியும்; ஓர் -
எதிராஜனாகத் தன் புருஷனை -
ஏற்றம் பெற வைத்த பத்தினி!

திருக்கச்சி நம்பி தான் வைசியன் என்றும் உடையவர் வேதியன் என்றும் கூறி,

சாதிவழி நிற்பதுதான்
நீதி வழி; சனாதனமாய் -
அனுசரிக்கபடும் - இதுவே
ஆதி வழி!

காக்க வேண்டும் - நாம்
குலம் கோத்திரம்; நம்மால்
மலினப் படுத்தப் படலாமா -
மனு தர்ம சாத்திரம்?

உரிய காலத்தில்
உரிய ஆசானை -
உனக்குப் பெருமாளே
உணர்த்துவார்;

சீடன் என்ன
சாதியோ?
அதே சாதியில் - ஓர்
ஆசானைத் தேர்ந்து...

அவரே -
அவனோடு புணர்த்துவார்!"

இதற்குமேல் கச்சிநம்பியை உடையவர் வற்புறுத்த விரும்பவில்லை.

அவரைத் - தன் (= கச்சி நம்பியை)
அகத்திற்கு
அமுது செய்ய
அழைத்து -

அவர்
அருள் கூர்ந்து உண்ட-
அன்னத்தின் மீதத்தை
ஆசாரிய சேஷமாக...

தான் புசிப்பது - எனத்
திட்ட மிட்டான்;
அ∴தே போல் -
அவன்...

திருக்கச்சி நம்பியின் -
திருவுள்ளம் நெகிழப்பேசி
ஒருநாள் - அவரது
ஒப்புதலையும் பெற்று -

சன்பம்
சாபல்லியம்

அடைந்து விட்டதாக எண்ணி -
ஆனந்தப்பட்டான்!

“தஞ்சம்!
திருக்கச்சி நம்பிகள்...

இன்று நம்
இல்லத்தில் - என்
இறைஞ்சுதலுக்கு
இரங்கி...

வருகிறார் -
உணவு அருந்த;

சீக்கிரம்
சிறப்பாகத்
தளிகை செய்து வை - அது
தேவாமுதத்துக்குப் பொருந்த!”
என்று சொல்லி விட்டு -
இராமானுஜன்...

கோயிலுக்குக்
கைங்கரியம் செய்யப் போனான்;
குதூகலக் குளத்தில் - மனம்
குளித்தவன் ஆனான்!

“நம் வீட்டு
நடுக்கூடத்தில் உட்கார்த்தி -
திருக்கச்சி நம்பிக்குத்
தளிகை பண்ணிப் போடுவதா?

சூத்திரர் ஒருவருக்குச்
சோறு போட்ட பாவத்தைக் கழுவ -
காசிக்கும்
கங்கைக்கும் ஓடுவதா?”

தஞ்சமாம்பாளுக்கு
தகித்தது நெஞ்சு;
நெஞ்சு நிறைய
நிரம்பி வழிந்தது -
சாதி உணர்வெனும்
சர்ப்பம் துப்பிய நஞ்சு!

கோயில் திருப்பணியை விரைவாக முடித்து விட்டு, அவரை விருந்துக்கு அழைத்துப் போக அவர் இருக்கும் கூடத்திற்குச் சென்றான். அங்கு அவரைக் காணவில்லை. வழிமேல் விழிவைத்து நின்றான். நேரம்

நீண்டு விட்டதால் இறுக்கமான உணர்வுடன் இல்லம் அடைந்தான். தீர்த்தமாடிவிட்டு நெடிய கூந்தலை உலர்த்திக் கொண்டு நிற்கும் இல்லாளைக் கண்டு, ஏடா கூடாமாய் ஏதோ நேர்ந்ததாய் ஓர்ந்து துணைவியை வினவுகிறான்.

முன்னரே நடை பெற்றது இவை:

(1) திடீரென்று
திருக்கச்சி நம்பிகள் வந்து -
தட்டுவார் கதவை என்று
தஞ்சமாம்பாள்...

எதிர்பார்க்காததால்
எதிர் நின்ற நம்பியை -

வியப்பும்
வெறுப்பும் -
விழிகளில்
வழிய -

ஒப்புக்கு
வரவேற்று...

"அவர் சொன்னார் - நீங்கள்
அமுதுண்ண வரப்போவதாக;
உங்களை - அதிதியாக
உபசரிக்கும் பாக்கியத்தை
எங்களுக்கு -
இன்று நீங்கள் தரப் போவதாக!

கோயிலுக்குப் போனவரைக்
காணவில்லை இன்னும்;

என் -
வீட்டுக்காரர்
வரும்வரை...

இந்தத் திண்ணையில் - சற்று
இளைப்பாறினால் -

வேர்க்க
விறுவிறுக்க
வந்திருக்கும் - உங்கள்
வேர்வையை...

காலை நேரத்துக் -

காற்று மெல்ல மெல்லத் தின்னும்!”

என்று - முகத்தில்
எவ்வுணர்வும் இன்றி...

பட்டும் படாமலும் -
பேசினாள் தஞ்சம்;
கீழ்ச்சாதிக்காரரான
கச்சி நம்பியோடு -
உரையாடுவதைக் கூட-
ஒப்பவில்லை அவள் நெஞ்சம்!

மகான் திருக்கச்சி நம்பி -
மெல்லிய புன்னகையை -
இதழ்க்கடையில் -

“அம்மணி!
அடியேனுக்கு -
அவர்வரும் வரை - காத்திருக்க
அவகாசமில்லை;

ஆனவரை - எனக்கு
அமுது படைத்து -
அனுப்பி வையுங்கள்; உங்கள் -
அன்புக்கு ஆகாரமா எல்லை?”

என்று சொல்லி - திண்ணையில்
எழுந்தருள...

‘அம்மாடி!
ஆகாரம் பிழைத்தது!’ என்று -

தஞ்சமாம்பாள் -
திருக்கச்சி நம்பிக்குத்
திண்ணையிலேயே இலை போட்டுத்
தளிகையைப் பரிமாற...

அவசர
அவசரமாக - நான்குவாய்
அன்னத்தை
அள்ளிப் போட்டுக் கொண்டு...

திருக்கச்சி நம்பி
தஞ்சமாம்பாளிடம் -
விடை பெற்றுக் கொண்டு
வீதி வழி போனார்;

ஓர்
அந்தணர் வீட்டில் - தன்னால்
அபிப்பிராய பேதம்
அரும்பிவிடக் கூடாதென்று -
அவசரம் காட்டி...
நயத்தகு -
நாகரிக மிக்க மனிதர் ஆனார்!
....

“தஞ்சம்!
தீர்த்தமாடி விட்டு
நிற்கும்படி - என்ன
நேர்ந்தது?

துக்கமான
தகவல் ஏதும் -
சொந்த பந்தங்களிடமிருந்து
செவிக்கு வந்தா சேர்ந்தது?

திருக்கச்சி நம்பி - வந்து
திரும்பிப் போனாரா?

எதிர் கொள்ளாமல் - நான்
எங்கேயோ போய்விட்டேனென -
புதிர் கொண்டு - மனம்
புழுக்கமாய் ஆனாரா?”

வினா மேல்
வினாவாக -
இராமானுஜன்
இல்லாளை வினவ...

கணவன் சஞ்சலத்தைக்
கருத்தில் கொள்ளாது -

சர்வ
சாதாரணமாக - தஞ்சம்
சொன்னாள் பதில்; அவள்
சலிப்புத் தெரிந்தது அதில்!

“நம்பி வந்தார்;
நாழிகையாகிறது என்று...

இதோ -
இந்தத் திண்ணையில் -
இலையைப் போடச் சொல்லி
இரண்டே வாய் -

சாப்பிட்டேன் என்கிற மாதிரி
சாப்பிட்டுவிட்டு...
ஓட்டமும் நடையுமாய் -
ஓடிப் போனார்;

அந்தணர் வீட்டு
ஆசானத்திற்குத் - தன்னால்
அபக்கியாதி வருமோ என்று
ஆடிப் போனார்!

சாதி கருதி - அவர்
சாப்பிட்ட இலையைக் -
கோலால் எடுத்துக்
குப்பைத் தொட்டியில் எறிந்து...

சாப்பிட்ட இடத்தை -
சாணம் போட்டு மெழுகினேன்;
தீட்டுத்
தொலைய -
நானும்
நாலு செம்பு விட்டு முழுகினேன்!"

.... - இன்னைம்
தெரிவித்ததும் ...

"இருக்கிறதா மீதி உணவு?" என -
இராமானுஜன் வினவினான்;
வெகுளியை அடக்கிக் கொண்டு -
உள்ளத்துள் முனகினான்!

"அநாச்சாரம்!
அநாச்சாரம்!
அவர் சாப்பிட்ட
ஆகாரத்தை - நாம்
ஆராவது - சாப்பிட
ஆகுமா?
....
மிச்சம் -
மீதியிருந்ததை -
பிச்சைக்காரர்களுக்குப்
போட்டேன்;

சோறு
சமைத்த
வெண்கலப் பானையை -
புளிபோட்டு

விளக்காமல்...

சமையலறைக்குள்
சேர்க்க மாட்டேன்!

துளசித்
தீர்த்தம் -
தெளித்தால்தான்
தீட்டுப் போகும்
அப்படியே உபயோகித்தால் -
ஆசாரம் என்ன ஆகும்?"

தஞ்சமாம்பாள் -
தூக்கியெறிந்து பேசினாள்;
வார்த்தைக்கு
வார்த்தை - திருக்கச்சி
நம்பிமேல்
நெருப்பள்ளி வீசினாள்!

"அடி பாவி!
ஆசாரம் ஆசாரம் என்று -
அறிவு கெட்டாயே;
பாகவத சேஷத்தைப்
பிச்சைக்காரர்க்குப் போட்டுப் -
பாழ்படுத்தி விட்டாயே!

முகான் நம்பி -
மாணாக்கனாக -
என்னை
ஏற்க மறுத்து விட்டாலும்...
அவரை - என்
ஆசாரியனாக - என்
அந்தரங்கத்தில்
அமர்த்தி -

அத்திவரதனுக்கு
ஆலவட்டம் வீசும் - அந்த
உத்தமரின் உத்திஷ்டத்தை
உண்ண எண்ணினேன்;

அதற்காகத்தான்
அவரை - நம்
அகத்திற்கு
அமுதுண்ண வரப் பண்ணினேன்!
நாசம் செய்தாய் - என்
நோக்கத்தை;
நீயறிய மாட்டாய்

நம்பிகள் -
எனக்குள்
ஏற்படுத்திய தாக்கத்தை!

திருக்கச்சி நம்பி - ஒரு
தீர்த்தர்; அவரை
தூஷிப்போர் எவரும்
தூர்த்தர்!

அன்றாடம் இல்லை
அத்திகிரி அருளாளனோடு -
வார்த்தையாடும் - அந்த
வைணவச் செம்மல்...

சாதிகளை -
சாத்திரங்களைக் - கடந்த
சோதியன்;

வேதியர்க்கெல்லாம் மேலான
வேதியன்; திருக்
கச்சி நம்பியா -
கீழ்ச் சாதியன்?

உண்மையை - நீயே
ஓர்ந்து கொள்க உன் ஆய்வால்
உன்னை நிமிர்த்த - என்
ஒருவனால் ஆகாது; நீ நாய்வால்!

கோபித்தபடி - ராமானுஜன்
கோயில் நோக்கிப் போனான்;

பரம பாகவதர் ஒருவரின் -
போனகம் செய்த சேடம்
புசிக்கும் பேறு - தெருப்
பிச்சைக்காரர்க்குக் கிட்ட ...

அவர்கள்
ஆற்றி புண்ணியம் கூட - தான்
ஆற்றவில்லையே - எனும்
ஆற்றாமையில் -
அலைப்புண்டு - மேனி
அசக்தனாக ஆனான்!

கோயில் பிரகாரத்தில் - பூக்
குடலையும் கையுமாக...

நேர்வந்த - திருக்கச்சி
நம்பிகளின் திருவடிகளில்
சாஷ்டாங்கமாக விழுந்தான்;
சேவித்து எழுந்தான்!

“மகா புருஷரே! தங்கள்
மகத்துவம் தெரியாமல்...

அடியேனின்
அகமுடையாள் புரிந்த -
அபசாரத்தை
அருள வேண்டும் பொறுத்து;
கண்வலி
கண்டார் -
கூசத்தானே செய்வர் - ஒளி
கூட்டும் கதிரை வெறுத்து!”

இளையாழ்வான் -
இன்னணம் சொன்னதும்...

“உபசாரம் செய்தாளேயன்றி -
அபசாரம் செய்தாளல்ல -
உன் உத்தம பத்தினி; என்
உண்ணா எழாது அப்படிச்
சொல்ல!”

என்று எடுத்துரைத்தார் கச்சி -
இராமானுஜனின்
இல்லாளை மெச்சி!
....

(2) துயைம் உபதேசம் பெற்ற பிறகு -

பெரியவர்
பெரிய நம்பி; அவரது -
வாழ்க்கைத் துணைவி
விஜயாம்பாள்;

இவர்களோடு -
இராமானுஜன்...

வந்து சேர்ந்தான்
வரதன் வாழ் காஞ்சீபுரம்;
வந்த நேரம் - நல்ல நேரமாய்
வாய்த்ததனால் - அவன்
வீட்டில் தஞ்சமாம்பாளால்

விளையவில்லை களேபரம்!

....

குருவையும் -
குருபத்தினியையும் -
குடியிருக்கச் செய்தான்; ஒரு -
குறைவின்றி அன்பைப் பெய்தான்!

பெரிய நம்பி - தன்
பிரியமான சீடனுக்கு
பிரபந்தங்களிலிருந்து -
பாடம் எடுத்தார்;

....

பெரிய நம்பியிடம்
பிரபந்த காலட்சேபம்
பண்ணிக் கொண்டிருந்த - ஒரு
பிற்பகல் வேளையில்...

வைணவர் ஒருவர் - ராமானுஜன்
வீட்டிற்கு வந்து -
'வயிறு பசிக்கிறது!' என
உணவு வேண்டி நின்றார்;

அவருக்கு - சிறிது
அன்னம் இடுமாறு –
இராமானுஜன் தன்
இல்லாளிடம் சொல்ல..
'தீர்ந்து விட்டது அன்னம்' எனத்
தஞ்சமாம்பாள் சொல்ல...

வந்த வைணவர்
வந்த வழியே சென்றார்!

அய்யம் வந்து - ராமானுஜன்
அடுப்பங்கரையில் பார்க்க...

அடுக்கு நிறைய -
அன்னம் இருக்கக் கண்டான்;
வந்த -
வைணவரின்
சாதி கருதி - தஞ்சமாம்பாள்
சோறில்லை எனச்
சொன்னதறிந்து ...

மனைவிபால் -
மாளா வெறுப்புக் கொண்டான்!

இத்தகு நிகழ்வுகள்
இராமானுஜனை...

மெல்ல -
மெல்ல -

துறவத்தை நோக்கித்
துரத்தத் தொடங்கின;

வெகுளியும் -
விரக்தியும் - அந்த
உத்தமன் உள்ளத்தில்
உண்டாகி உண்டாகி அடங்கின!
……………………..

(3) **ஒரு**
காலைப் பொழுதில் -
கொல்லைப்புறக் கேணியில்

பெரிய நம்பியின்
பெண்டாட்டி விஜயாம்பாள் -
தண்ணீர் இறைத்துத்
தன் குடத்தை இடுப்பில் வைக்க...

அதிலிருந்து சிறிது நீர்
அருகிலிருந்த -

தஞ்சமாம்பாள் குடத்தில்
தெறித்து விழ -
விஜயாம்பாளை
வைது தீர்த்து விட்டாள் -

தஞ்சமாம்பாள்
தன் விழியில் தழல் எழ!

"அடியே! நீ
அந்தணச்சியா யிருந்தாலும்...

உன்குலமும் என்குலமும்
ஒன்றோ? நீ சற்று -
மாற்றுக்குறைந்த குலம்; இதை -
மறப்பது நன்றோ?

தெறித்தது - உன் குடத்துத்
தண்ணீர்; அதனால் -
தீட்டானது - என் குடத்துத்

தண்ணீர்!

ஆசாரிய பத்தினி - எனும்
அகந்தையோ உனக்கு?
உன்னிலும்
உயர்வானது - எங்கள்
அகத்து
ஆசார அனுஷ்டானம் - எனக்கு!”

உமிழ்ந்தாள் நஞ்சம்; பிறகு -
உள்ளே போய்விட்டாள் தஞ்சம்!

வெளியே போய்
வீடு திரும்பிய - தன்
புருஷன்
பெரிய நம்பியிடம்...

விஜயாம்பாள்
விவரம் சொல்ல -
வாடிப் போனது - அவரது
வதனமும் மெல்ல!

இராமானுஜன் - வீட்டில்
இல்லாத சமயத்தில்...

பெரியநம்பி - தன்
பாரியையுடன் -
புறப்பட்டு விட்டார்
பூலோக வைகுண்டத்திற்கு; (திருஅரங்கத்திற்கு)

இல்லம் திரும்பிய
இராமானுஜன்...
நம்பி மனைவிக்கு
நேர்ந்ததை அறிந்து -
கத்தினான்; அது
கேட்டது ஏழு அண்டத்திற்கு!

“அடியார்களிடம்
ஆபசாரப் படவே - என் வீட்டுப்
படியேறி வந்த - மா
பாவியே!

ஆயிரம் பாடுபட்டு
அழைத்து வந்த ஆசாரியனை - நீ
வாய்க் கொழுப்பால்
விரட்டி விட்டபின்...

எங்ஙனம் - பரமபதம்
எய்தும் என் ஆவியே?

நீ என் மனையா? இல்லை
நான் முன் செய்த வினையா?
வாழ்க்கைத்துணை - என்று நான்
வரித்தது ஒரு பேய் தனையா?

சாதி சாதி சாதி என்று -
சாதிச் செருக்கால்...

திருக்கச்சி நம்பியைத்
திண்ணையில் வைத்தாய்;

சோறிருந்தும் -
சோறு இல்லையென்று -
பசியோடு வந்த
பாகவதனிடம் பொய்த்தாய்;

கொடுமையிலும்
கொடுமை; எனது
குருபத்தினியை - வார்த்தைக்
குத்தூசியால் தைத்தாய்;
என்ன சொல்லி -
என்ன?
கரும்பென்று கடித்தேன்;
காஞ்சிரங்காயாய்க் கைத்தாய்!"

மனைவியைத் - தன்
மனத்திலிருந்து -
இராமானுஜன் - முக்கால் வாசி
இறக்கிவைத்து விட்டான்;
முழுவாசியையும் இறக்கி வைக்க
முளைத்த ஒரு வாய்ப்பை
பயன்படுத்தி - துறவறம்
பூண்டிடத் திட்டமிட்டான்!

வாய்ப்பு வந்தது:

மாமனாரிடமிருந்து
மாப்பிள்ளை ராமானுஜனுக்கு
மடல் வந்தது - அவனது
மைத்துனன் திருமணம் என்று;

'இது நல்ல வாய்ப்பு!' என -
இளையாழ்வான் நினைத்து...

தான் பிறகு வருவதாக -
தஞ்சமாம்பாளிடம் சொல்லி -
அவளை வில் வண்டியில் ஏற்றி -
அனுப்பினான் வாசலில் நின்று!

அதன் பின் -
அவசர அவசரமாக -
அத்தி வரதன் சந்நிதியில்
அவனாகவே...
துவராடை பூண்டு -
துறவியானான்;

அர்ச்சகர் மேல் -
ஆவேசமாய் வந்து...
"இன்று முதல் - இவன்
இராமானுச முனி!" எனப்
பெருமாளே -
பட்டம் அளிக்க;

"எதிரிகளுக்கு ராஜனே!
எதிராஜனே!" என்று
திருக்கச்சி நம்பி - தன்
திருவாயால் விளிக்க;[8]

'உடம்பு; உள்ளம்; வாக்கு!' என -
உரைக்கப் பெறும் -
முன்னடியும் கட்டுப்படுத்திய -
முக்கோல் பகவனாகிப் போனான்![9]

வைணவ சாம்ராஜ்யத்தின் சிம்மசனாதிபதி:

கிருகஸ்தாஸ்ரமத்தை விட்டு
காஷாயம் தரித்து கொண்டார் -
எனும் சேதியை
ஏந்தி வந்து -
காற்று - எல்லோர்
காதிலும் தேனாய்க் கொட்டியது.
....
எப்பாடு பட்டாவது -
எதிராஜரை...

அரங்கத்திற்கு
அழைத்து வந்து -
ஆசாரிய பீடத்தில்
அமர்த்த வேண்டி -

நாளும் போதும் - பெரிய
நம்பியை நச்சரித்தனர்!

....

ரங்கராஜன் ஊருக்கு - ஸ்ரீ
ராமானுஜரை...
அழைத்து வரும் பொறுப்பை - ஊர்
அரையரிடம் ஒப்படைத்தது;

புகழ்சால் - திருவரங்கப்
பெருமாளரையரும் - 'இஃது -
அரங்கன் ஆணை!'-என
அதனை ஏற்றதும்...

மட்டற்ற -
மகிழ்ச்சியில் -
மகான் பெரிய நம்பியின் - திரு
மார்பு விம்மிப் புடைத்தது!

....

திருவரங்கப் பொருமாளரையார்...

வண்ணநகர் காஞ்சிக்கு
விரைந்து சென்றார்;
அரையர்க்குரிய
அங்கிகளை -
அழகுறப் பாதாதி கேசம்
அணிந்து -
கைத்தாளமும்
கையுமாகக் -
கஞ்சிவரதனின்
கொலுமுன் நின்றார்!

ஸ்ரீராமானுஜர்
சீடர் குழாம் சூழ
சந்நிதியில் நின்று
சேவித் திருக்கையில்...

அரையர்
அமுதொழுகும் சாரீரத்தில் -

பசுந்தமிழ்ப்
பாசுரங்களைப் -
பல்வகைப் பண்களில்
பாட ஆரம்பித்தார்;

இன்சுவைப் பாடல்களின் -
இறைச்சிப் பொருளை உள் வாங்கி
அதற்கொப்ப – சதிர்

ஆட ஆரம்பித்தார்!

இராமானுஜரும்; இதர -
சேவார்த்திகளும் ...

விழிகள் செருக;
உள்ளம் உருக;
முற்பகல் வினையெலாம்
முற்றும் கருக...
தமிழ்ப் பாட்டிலும்
தமிழ்க் கூத்திலும் -
தமையிழந்து போயினர்; தூரிகை -
தீட்டிய படமென்று ஆயினர்!

"அரையரே! யாம் -
ஆனந்தித்தோம்; நும் -
ஆடலையும் பாடலையும் -
அனுபவித்தோம்!" என்று ...

அர்ச்சகர்மேல் -
ஆவேசமாய் வந்த -
வரதராஜன் - அரையரிடம்
"வேண்டுவதைக் கோரும்!"
என்றான்;
திருவரங்கத் தரையர்
துளியும் தாமதியாது -
தேவராஜப் பெருமாளைத்
தாள் பணிந்து தொழுது...

"இராமானுஜ முனியை -
எமக்குத் தாரும்" என்றார்!

வழங்கினான்
வரதன்; சொன்ன -
வாக்கைக் காக்கும்
விரதன்!

திருவரங்கத் தரையரோடு -
திருவரங்கம் புறப்பட்டார்...
எதிரிகளின் ராஜர்
எதிராஜர் - திருக்
கச்சி நம்பி விடைதர! சீடர் -
குழாம் சூழ்ந்து புடைவர!

காஞ்சி -
கண்ணீர் விட்டது;

ஸ்ரீரங்கம் -
சந்தோஷப் பட்டது!

திருவரங்கத்
திருநகரில்

வடதிருக்காவேரியின்
வளமார்ந்த தென்கரையில் -

ஊரே
ஒட்டுமொத்தமாக நின்று -

ஏதிராஜரை
எதிர் கொண்டது;
எதிராஜருக்குள்
எட்டெழுத்தானே -

எழுந்தருளியிருப்பதாய்
எல்லோர் கண்ணும் கண்டது!
....
பூரண கும்பங்களோடு -
புரோகிதர் முகமன் கூற; ஊர் -

பிரஜைகளின் பார்வைகளில்
புது வெளிச்சம் ஏற;

வெகு -
விமரிசையாக நடந்தது...

பெரும்பூதூர் வள்ளலின்
பட்டணப் பிரவேசம்;
பெற்றது திருவரங்கம் - ஒரு
புதிய பிரகாசம்!
....
பிரணவாகாரமாய்ப்
பிறங்கும் -
விமானத்தை
வணங்கி...

அதனுள்
அரவணையில் -
அறிதுயிலில் இருக்கும்
அரங்கனை சேவித்து நின்றார்;
ஆன மட்டும் - விழிகளால்
அரங்கத்தமுதைத் தின்றார்!

பெரிய கோயில் -

பட்டர் ஸ்வாமிகளும்...

பரிவட்டம் கட்டி -
பெருமாள் மாலையைச் சாத்தி -

சிரசிலும் - இரு
செய்ய திருத் தோளிலும் -
சடகோபம் -
சாதித்து -
ஸ்ரீபாத தீர்த்தமும் தந்து -
ஸ்ரீரங்கநாதர் சார்பாக -
ஸ்ரீராமானுஜரை -
சிறப்பித்தார்;

ஸ்ரீரங்கநாதரும் -
ஸ்ரீராமானுஜருக்கு -
பட்டர் மூலம் - சில ஆணைகள்
பிறப்பித்தார்!

“இராமானுஜா!
இனி இப் பெரியகோயிலை...
நீ - ஏற்று
நிர்வகி; இதுகாறும் -

நான் கொண்ட பொறுப்பை -
நீ வகி!

என்னுடையவை
எல்லாம் - இனி

உனக்குடையவை - என நான்
உகந்து தந்ததால்...

உன்னை -
‘உடையவர்’ என்று -
ஊர் விளிக்கும்; என்
உள்ளமும் களிக்கும்!”

இன்னணம் - அரங்கன்
இட்ட ஆணையை...

சிரமேற்கொண்டு - வெகு
சிரத்தையாக -
ஸ்ரீராமானுஜர் - கோயிலை
சீர்திருத்தம் செய்தார்;

பழைய

**பணியாட்களாயினும்
புதிய
பணியாட்களாயினும் -**

**கண்டிப்பும் கனிவும் -
கலந்து பெய்தார்!**

**பள்ளிகொண்ட-
பெருமாளுக்கு...**

**நித்யோத்ஸவம்;
பட்சத்து உத்ஸவம்;
மாத உத்ஸவம்;
வருஷோத்ஸ்வம்;
ஆகியவை -
அட்டியின்றி நடக்க
ஆணைபுரிந்தார்; உள்ளம் -
ஆகாயமாய் விரிந்தார்!**

**நிர்வாகங்களை
நன்கு செய்கையில் -
தனது
தமிழ்ப் பற்றையும் காட்டினார்;**

**பாகவத நம்பிமார்;
கோயில் கணக்கன்;
சடகோபதாசன்;
திருப்பதியார்;
திருப்பணி செய்வார்;
உள்ளூரார்;
விண்ணப்பம் செய்வார்;
திருக்கரகக் கையார்;**

**என்றெல்லாம்
எம்பெருமான் கைங்கரியத்தில் -
ஈடுபடுவோருக்கு
இன்தமிழ்ப் பேரைச் சூட்டினார்!**

....

**ஸ்ரீராமானுஜர்
ஸ்ரீவைஷ்ணவ சாமராஜ்யத்தின் -
சிம்மாசனாதிபதி ஆனார்; நம்பி[10] -
சிந்தை குளிர்ந்து போனார்!**

<u>மேல் கோட்டையில் தெய்வத்திருப்பணி:</u>

மேற்கோட்டையில் உடையவரின் தெய்வத்திருப்பணி சொல்லற்கரியது. பெரிய நம்பியின் திருவுள்ளத்தை நன்கு அறிந்தார்.

தான் -
தினமும்
திருவாராதனம் செய்யும் -
தேவராஜப் பெருமாளின் -

சேவடிகளை - உடையவர்
சிந்தித்தார்
விழிகளை மெல்ல மூடி -
வந்திந்தார்!

"பெருமானே!
பேரருளாளா!
பெருந்தேவி நாச்சியார் -
பிரியமுடன் தழுவும் தோளா!

ஒன்று நீ நினைக்க - அதை
ஒழித்து -
மற்றொன்றை —
மானூடம் நினைக்குமோ?
அங்ஙனம் நினைப்பினும் -
அது நடக்குமோ?

அரங்கம் விட்டு
அகலா திருக்க -
அடியேன்
ஆசைப்படலாம்!

வெள்ளை உடுத்தி - நான்
வெளியேற வேண்டும் -
என்பதுதான்
என் அய்யா! உன் உள்ளமாயின்...

அஃதை
அடியேன் -
எங்ஙனம்
எதிர்த் திடலாம்?
இப்போது - என்
இதயம் தெளிந்து விட்டது;

உலகு
உன் சித்தப்படிதான் -
ஆடும்; ஓடும்; எனும்
அரிய உண்மை...
என் -

எண்ணத்திற்குக்
கொஞ்சம் -

குழம்பிய பின்தான் பட்டது!”

உடையவர் -
உள்ளம் தெளிவு பெற்றார்;
இருந்த இடத்திலேயே
இருந்தபடி...

அரவுமேல்
அரங்கன் -
துயில் கொள்ளும்
திருக்கோயில் நோக்கி -

கூப்பினார்
கரத்தை;
சிந்தையில் - அரங்கன்
சேவடி பதித்து -
சற்றே குனிந்தார்
சிரத்தை!

பிறகு - கொல்லைப்
புறத்துக் கொடியில்...

காய்ந்து கொண்டிருந்த
கூரேசரின் -
வெள்ளையை எடுத்து
உடுத்திக்கொண்டு...
தொண்டர்களைத்
தொடர;
விழிகளில் - மெல்லிய
வருத்தம் படர;

மெல்ல நடந்தார் - உடையவர்
மேற்குத் திசை நோக்கி;

நகர் எல்லையைவிட்டு
நகர்ந்தபின்...
குதிரைகளின்
குளம்புச் சத்தம் கேட்க -
உடன் வந்த -
உடையவர் அடியார்களை -

அது -
அச்சத்தில் போட்டது தூக்கி!
....
குளம்புச் சத்தம் கேட்க -
குதிரைகளில் வருவது -

அரசன்
அனுப்பிய
ஆள்கள் - என
அறிந்து...
....
திருமாலை தியானித்து...
பிடியளவு
புழுதிமண் எடுத்து - அப்
புல்லர் வரும்
பாதையில் எறிந்தார்!

புரவி வீரர்கள்
போக்கறியாது -
'பொக்'கென நின்றனர்;

தம்மை மறந்து
தம்பித்தவர் - நினைவு
திரும்பிய பின்
தாம் வந்த வழியே...

....
திரும்பிச் சென்றனர்;
....
உடையவரும் - அவர்
உடன் வந்தோரும்

நெடுநாள்
நடந்து நடந்து -
நீலகிரி சாரல் சேர்ந்தனர்!
....
பரிச்சயம் இல்லாத - ஒரு
பாதசாரி -
பாதம் பதிக்க - வெகுவாய்
பயப்படும் வேடச்சேரி!

வழியில் இரண்டு இடங்களில் இரண்டு வேடுவர் கூட்டம் உபசரிக்க அவர்கள் பக்தியுடன் வழங்கிய தேனும் தினைமாவையும் உடையவர் உவந்து உண்டார். சில நாட்கள் அங்கு தங்கினார்.

யதுகிரியில்

பெருமாளே -
....
ஒருநாள்
உடையவர் கனவில் வந்து...

‘யதுகிரிக்கு உன் வரவை
யாம் எதிர்பார்த்து நிற்கிறோம்; ...
....
அவரது செவிகளால்
அருள் கூர்ந்து சாதித்தார்

எம்பெருமானார்
ஏகமாய் மகிழ்ந்தார்;
....
திருமாலின் -
தண்ணளி எண்ணி நெகிழ்ந்தார்!

விட்டலதேவன் தன் நன்றிக் கடனாகச் செய்த பயணவசதிகளால் மிகவும் சௌரியமாக ‘யதுகிரி’ எனப்படும் -

புதர்கள் அடர்ந்த
பர்வதத்தின் மீது;

இவ்விடம் அவ்விடம் இன்றி -
எவ்விடத்திலும் -

மணம் வீசும் துளசிச் செடிகள் -
மண்டிக்கிடப்பது கண்டு...
துளவ மாலை
தொடுத்து -
அன்றாடம்
அருள்மிகு வடபத்திரசாயிக்கு...

வழங்கிய
வில்லிபுத்தூரார் நினைவு
வந்தது -
உடையவருக்கு அப்போது!

திடீரென்று -
துளசிச் செடிகளின் நடுவே...

பேரொளி ஒன்று
புறப்பட-
பாஷ்யக்காரர் - மெல்லப்
புற்று மண்ணை நீக்கிப் பார்க்க -

திருமால் விக்கிரகம் ஒன்று -
தென்பட்டது கண்ணில்; ஆம்!
திருநாராயணன் தான் -
தோன்றினான் அன்னணம்
மண்ணில்!

அழகிய விக்கிரகத்தை
அங்கையில் அள்ளி எடுத்தார்;
ராமானுஜருக்கு
ரோமாஞ்சனம் ஏற்பட-
பரவசநிலை எய்தி
ஆனந்த பாஷ்யம் பெய்து -

விக்கிரகத்தின்
வண்ணத்திருவடிகளை
விரல்களால் - மெல்ல
வருடி வருடி...
பாதக்கமலங்களுக்குப் -
பிரியமாய் முத்தம் கொடுத்தார்!
....
விஷ்ணுவர்த்தனன்
வெண்புரவி ஏறி...

யதுகிரிக்கு வந்து
யதிராஜரை சேவித்தான்;
அவரைப் பொறுத்தவரையில் -
தான்
அரசனல்ல - ஓர்
அடிமை என்றே - தன்
அந்தரங்கத்தில் பாவித்தான்!

இராமானுஜர்
இயம்பினார்

"திருநாராயணருக்கு - இங்கு
திருக்கோயில் கட்டுக;
இந்த
இறைப்பணியில் -
மக்கள் அனைவரும்
முனைந்து செயல்பட-
வேண்டி -
வீதிவீதியாய் முரசு கொட்டுக!"

எதிராஜர் ஆணையை ஏற்று -
எழுப்பினான் கோயில் -
விஷ்ணு வர்த்தனன் எனும்
வேந்து;
....
எதிராஜருக்கு -
ஏற்பட்டது - கவலை ஒன்று;
ஓர் -
உற்சவ மூர்த்தி இல்லையே என்று!
....

டில்லியில் ‘ராமப்பிரியர்’ துருக்கராஜாவின் அரண்மனையில் இருப்பதாக சொப்பனத்தில் பெருமாள் சாதித்ததும் உடையவர் டில்லி புறப்பட்டார்.

…………………………..
இராமானுஜர்
இந்திரப் பிரஸ்தத்தைத் -
தொட்டார்; மன்னனுக்குத்
தகவல் விட்டார்!

பாஷியக்காரரை -
பாதுஷா…

அரண்மனைக்கு
அழைத்து - அவர்
அமர்ந்திட - பிரத்தியேக
ஆசனம் இட்டான்;
…………………..
‘அய்ய! உமக்கு -
ஆவதென்ன எம்மால்?’
என -
எதிராஜரிடம் -
கூறுமாறு
கேட்டுக் கொண்டான்!

“ராஜனே!
ராமப்பிரியர் எனும் -
உற்சவ மூர்த்தி
உன்வசம் உள்ளது; அதை -
உள்ளம் வைத்து - எனக்கு
உதவினால் நல்லது!”
…………………………
அரசன் -
அவருக்குத்
தன் விக்கிரக சாலையைத்
திறந்து காட்டினான்;
……………………..
தேடிவந்த விக்கிரகம்
தென்படாமல்…

உடையவர் - தன்
விடுதி திரும்பினார்;
……………………
அரசகுமாரியின்
அந்தப் புரத்திற்கு -

அரசன்
அழைத்துப் போனான்;

....

ஜல் ஜல் என -
சலங்கை சத்தம் கேட்க -

....

ராமப்பிரியர் - வெகு
ரம்மியமாக நடைபயின்று -

அரசகுமாரியின்
அந்தப்புரத்திலிருந்து வந்து -

....

எதிராஜர் மடிமேல் -
உட்கார்ந்தார்;
உடையவர் துயர் தீர்ந்தார்!

'என் செல்லப் பிள்ளையே!'
என்று...
ராமப் பிரியரை[11] -
ராமானுஜர் -
ஆரத் தழுவினார்; கண்ணிரால்
அப்பெருமாளைக் கழுவினார்!

அந்நேரம்-
அரசகுமாரி -
அந்தப் புரத்தில் இல்லாதது
அனுகூலம் ஆக...

உற்சவ மூர்த்தியை
உடையரிடம் தந்து -

ஊருக்கு அனுப்பிவைத்தான்
ஊராளும் அரசு;

....

அந்தப்புரம் திரும்பிய -
அரசகுமாரி...

ராதைபோல் - கொஞ்சிய
ராமப்பிரியரைக் காணாது -

தனது -
தந்தையிடம் ஓடி -
'எங்கே ராமப்பிரியர்?'
என விசாரிக்க...

மகளுக்கு - நடந்தவற்றை

மன்னன் விவரிக்க...

....
புரவியில் ஏறி - ராமப்
பிரியரைத் தேடிப் போனாள்;

....
பயணிக்கும்
பல்லக்குகளை -

நெருங்கி - தடுத்து
நிறுத்தினாள்;

'பிரியரைப்
பிரிந்து வாழ்தல் அரிது'
என -
எதிராஜரிடம் -
நீண்ட உரையை -
நெக்குருக நிகழ்த்தினாள்!

....
வியந்து -
வேந்தன் மகள் பால -
நந்தகுமாரனை -
நேசித்த
நப்பின்னையின் சாயல்கண்டு -
நெஞ்சு இளகியவர் ஆனார்!

"ராஜகுமாரியே! நீயும் -
ராமப்பிரியனோடு -
பல்லக்கில் - ஒன்றாகப்
பயணிக்கலாம்!" எனப்
பரிவோடு மொழிந்தார்; ...

....
மன்னன் மகள்
மட்டற்ற மகிழ்வு கொண்டாள்;

....
சிவிகையில் அமர்ந்து - தன்
சீவன் உய்யக் கண்டாள்!
சிறிது தூரம் -
சிவிகை சென்றதுமே -

ஏவலர்கள் - அதன்
எடை குறைவதை உணர்ந்து -
எதிராஜரிடம் சொல்ல - அவருள்
எழுந்ததோர் எண்ணம் மெல்ல!

தன் -
தண்டிகை விட்டு இறங்கி...

……………………..
பயணித்த
பல்லக்கின் -
பட்டுச் சீலையை நீக்கிப்
பார்த்தார்;
ராமப்பிரியர் மட்டும் இருக்க -
ராஜகுமாரியைக் காணாது -
வியப்பில் - விழிகள்
வேர்த்தார்!

ராமப்பிரியரோடு
ராஜகுமாரி -
ஒன்றிவிட்டதை
ஓர்ந்து -
பெரிதும்
பரவசப்பட்டார்![12]

"தேவி! உன்
திருவுருவத்தை -
விக்கிரகமாக
வடித்து -

பெருமாள் திருவடி நிழலிலேயே -
பீ பீ நாச்சியாராகப்
பிறங்குமாறு -
பிரதிஷ்டை செய்வேன்!"

என -
எக்களித்து -
உணர்ச்சி வசமாகி -
உரக்கக் கூச்சலிட்டார்!
…………………………
சீயர் - தன்
'செல்வப் பிள்ளை'யை…

திருநாராயணபுரம்
திருக்கோயிலில் -
உற்சவ மூர்த்தியாய்
உட்கார்த்திப் பார்த்தார்; தன் -
அபிலாஷை நிறைவேறிய
ஆனந்தத்தில் ஆர்தார்!
……………………….
பன்னிரண்டு ஆண்டுகள்
பாஷ்யக்காரர்[13] -
திரு நாராயணபுரத்தில் (=மேல் கோட்டை)
தங்கியிருந்து…

ஸ்ரீபாஷ்யத்தைச்
சாதித்தார்;

……………..
திருநாராயணபுரத்தில்
தன் பெயரால்…

'யதிராஜ மடம்' என -
யாண்டும் விளங்குமாறு -
எழுப்பினார் - ஓர்
எழிலார்ந்த மடம்;

பலரும் - அங்கு
பயின்று -
பிடிக்கலாயினர் - வைணப்
பொற்றேரின் வடம்!

வைணவ இலக்கியத் தொண்டு

ஆளவந்தாரை நேரில் கண்டு பேச வாய்ப்பில்லாது போயிற்று. காவிரிக்கரையில் உள்ள கரம்பன் கரையில் அவர் தம் திருமேனியைத் தான் காணமுடிந்தது.

வலக்கரம் தன்னில்
விரல்கள் மூன்று மட்டும் -
மடங்கிக் கிடக்க;
மற்றிரண்டு நீண்டிருக்க
……………………..
மூன்று விருப்பங்களைத்தான்
மூன்று விரல்கள் சுட்டுவதாய் -
தோன்றுகிறது…

என்று முடிவுக்கு வந்தனர். பேச்சுகளின் மூன்று விருப்பங்கள் இன்னவை என்று அறிந்து ஒரு முடிவுக்கு வந்தனர். இந்த மூன்று விருப்பங்களையும் தான் நிறைவேற்றுவதாகத் தெரிவித்தான் இராமாநுஜன்.

"காவிரிக் கரையில் திருக் -
கரம்பன் துறையில்;
திரளாய் நிற்கும்
திருவரங்கத்தார் நடுவில் -
திடமான குரலில் - தன்
தீர்மானத்தைத் தெரிவித்தான்;

ஆகாயத்தை -
அம்புவியை -

அப்புவை -

அக்கினியை -
அலையும் காற்றை -
அறுதியான சாட்சியாக வைத்து...

ஒரு -
வாக்குமூலத்தை அறிவித்தான்!

"வேதங்களைத் தொகுத்த -
வியாச பகவானையும்; விஷ்ணு -
புராணத்தை யாத்த -
பராசரரையும்;

மனிதகுலம் -
மறவாதிருக்கச் செய்வேன்;
இருவர் புகழையும் -
இன்னிசைப் பாவில் நெய்வேன்!"

இவ்வாறு
இராமாநுஜன் -
உரக்கச் சூளுரைத்ததும் -
ஒருவிரல் நிமிர்ந்தது!

"பராங்குசரின் - திவ்விய
பாசுரங்களை...
பாரெங்கும் -
பரப்புவேன்; திருவாய் மொழியால் -
நாட்டார் செவிகளை -
நிரப்புவேன்!

இப்படி -
இராமானுஜன்
இயம்பியதும் -
இன்னொரு விரல் நிமிர்ந்தது!

"பகவான் வியாசரின்
பிரம்மசூத்திரத்திற்கு...
விசிஷ்டாத்துவைத்தின்
வழியில் -
விரிவுரை ஒன்று ஆக்குவேன்;
வைணவ நெறியை ஊக்குவேன்!"

இவ்வாறு -
இராமானுஜன்
மொழிந்ததும் -
மூன்றாம் விரலும் நிமிர்ந்தது!

முதல் விருப்பத்தை விஷ்ணு புராணத்திற்கு சகஸ்ரநாம உரை எழுதுவதை பராசரபட்டராலும், திருவாய்மொழிக்கு வியாக்கியானம் எழுதுவதை முதலியாண்டான் மகன் ‘பிள்ளான்’ என்பவராலும் (ஆறாயிரப்படி) நிறைவேற்றுவித்தார்.

ஸ்ரீபாஷ்யம்:

கால்கள் இன்றிக்
காலம் ஓடியது;
ஆண்டு தோறும் -
ஆர்க்கும் கூடுதல் போல் -
அருள்மிகு உடையவர்க்கும் -
அகவை கூடியது!

வந்து
வணங்குவார்...

கவலைக் கடலைக்
கடியும் எதிராஜர்[14] - தானே
கவலைக் கடல் வீழ்ந்தார்; சதா -
கடுஞ்சிந்தனையில் ஆழ்ந்தார்!

‘வருகிறதே - அடடா!
விருத்தாப்பிம்பம்; அதற்குள் -
வரைய ஏலுமோ - அந்த
விரிவான் காப்பியம்?

என -
ஏகாந்தத்தில் -

அல்லும் பகலும்
கவன்றார் அதுபற்றி;
....
....
உடையவருக்கு - அது
உண்டாக்கியது மனச்சீக்கை!
....
- அதைச்
செவ்வனே
செய்யாவிடில் - அவர்
சேமித்து வைத்திருக்கும்
சகல பாண்டித்யம் தூள்!

ஏனெனில் -

ஏற்கனவேயே...

பல
பெரியோர்
பண்ணி வைத்துளர்
பாஷ்யம் - (=பேருரை)
தாம்
தழுவிய சாத்திரத்திற்கு -
அனுகூலமாய்
அந்த சூத்திரத்திற்கு!

ஆளவந்தார் ஸ்வாமி
அவாவியதோ -
ஆக்கப் பெறுகின்ற
அந்த பாஷ்யம்...

விசிஷ்டாத்வைதப்
பேருரையாக -
விளங்க வேண்டும் என்றுதான்;
....

போதாயன பாஷ்யம், திரமிட பாஷ்யம், குஹாதேவாசாரி பாஷ்யம், ஆசாரிய பாருசி பாஷ்யம், பகவத் ஸ்ரீவத்ஸாங்கமிச்ரர் பாஷ்யம் எனப் பல இருந்தாலும், போதாயன பாஷயத்தைப் பார்க்க விழைந்தார் உடையவர். தாம் எழுதத் தொடங்குமுன் அதனைக் கட்டாயம் பார்க்க வேண்டும். அந்த போதாயனர் வேதங்களை வகுத்துத் தந்த வியாசரின் நேர் சீடர்; அந்த வகையில் அவர் விசேடர்.

புகழ்பெற்ற - அந்த
போதாயன பாஷ்யத்தைக் -
காண வேண்டுமானால் -
காஷ்மீரம் போக வேண்டும்;

அந்த தேசத்து
அரசர் பிரானின் -
கடாட்சத்தால்தான்
காரியம் ஆக வேண்டும்!
....
அரங்கன்
அனுமதி -
மானசீகமாகக் கிடைத்த - ஒரு
மகோன்னதமான நாளில்...

கூரத்தாழ்வானைக் - கூடக்
கூட்டிக் கொண்டு -
பல கூண்டு வண்டிகளையும்

பூட்டிக் கொண்டு -
ஏவலுக்கும் காவலுக்கும்
ஏராளமான பேர் உடன்வர -
ஏதிகளின் ராஜா எதிராஜர்
ஏறினார் பல்லக்கு; ஒரு
வைணவர் கூட்டமே
விரைந்தது வட திக்கு!

....

எதிராஜரை
எதிர்கொண்டழைத்தான் -
காஷ்மீர் வேந்து; உரிய
கவுரவம் ஈந்து!

....

பின் -
பவ்வியமாக...

“துதிக்கத் தகுந்த
துறவரசே!
தேவரீர் வருகையில்
தமியேன் தன்யனானேன்;
தொட்டுத் தொடரும்
தீவினை யாவும் தீர்ந்து போனேன்!

என்ன விஷயமாய் - இங்கு
எழுந்தருளியுள்ளீர்கள் -
என்று
எளியேன் அறியலாமா?
ஆன்றோர்க்கு உதவ என்றும்
அவாவுறும் என் அந்தராத்மா!”

என்று
எதிராஜரிடம்
வினவினான் கொற்றவன்; பதில்
விரித்தார் நற்றவர்!

“வேந்தே!
வேத வியாசரின்
பிரும்ம சூத்திரத்திற்கு
பாஷ்யம் எழுத உத்தேசம்;

அதன் பொருட்டு
அடியேனுக்கு - நீர்
உதவினால் - உம்மால்
உயிர்வுறும் இத்தேசம்!

மகரிஷி போதாயனரின்
மகா பாஷ்யம் இங்கு உள்ளது;

அடியேன் -
அதை -
ஒருமுறை படிக்க
உபகரித்தால் நல்லது!

சரஸ்வதி பீடாதிபதிகளின்
சம்மதத்தைப் பெற்றால்தான்
அது சாத்தியம்; ஏனெனில் -
அது அவர்கள் பாத்தியம்!”

இராமானுஜரின்
இந்த வேண்டுகோளை...

அரசன் சொல்லியும்
அங்குள்ள பண்டிதர்கள் -
ஏற்க மறுத்தனர்; அவர்கள்
எதிராஜரையே வெறுத்தனர்!
....
அரசன் அவர்களுக்கு -
அறிவுரை கூறினான்;

“நெடுந் தொலைவிலிருந்து
நம்மை நம்பி -
இங்கு வந்திருப்பவர் - இந்த
இராமானுஜ நம்பி!
நீங்கள் மறுப்பது
நியாய மல்ல;
அனுமதியுங்கள் -
அந்த கிரந்தத்தை - இவர்
ஒருமுறை - இங்கிருந்து
வாசித்துச் செல்ல!”

என்று - அந்த
ஏந்தல் -
பண்டிதர்களிடம்
பரிவோடு கோரினான்!

“அரசே!
அதைப் படிக்க -
சரஸ்வதியின்
சம்மதத்தைக் கேட்டு -

ஓர்
ஓலையை -
இவர்
எழுதித் தந்தால்...

அதை
அப்படியே -
சரஸ்வதி
சன்னிதானத்தில் வைத்து -
தாளிடுவோம்
திருக் கதவம்;

காலையில் -
கதவைத் திறந்தால் -
கலைமகள்
காட்டுவாள் திருவுள்ளம்!"

இவ்வாறு - பண்டிதர்
இயம்ப;
அரசனும் -
அந்த யோசனைக்கு இசைய...

ஓர்
ஓலையில் -
கலைமகளுக்குத் - தம்
கோரிக்கையை...

எதிராஜர்
எழுதித் தந்தார்;

பண்டிதர்கள் - அதைப்
பெற்று -
சன்னிதானத்தில் வைத்து
சாத்தியபின் -

உடையவர் - தன்
விடுதிக்குத் திரும்பி வந்தார்!

சரஸ்வதி பீடமுள்ள
சந்நிதானத்தின் -
கதவைக்
காலையில் திறந்து பார்த்தால்...

எதிராஜர்
எழுதிய ஓலை -
கலைமகளின்
காலில் இல்லாமல் -அவள்
தலைமுடி மேல்
தென்படுட்டது;
பண்டிதர்களை - அவர்களது
புத்தியே சுட்டது!

கிரந்தச் சுவடிகளை -
கூரேசன் -
ஒருமுறை
உட்கார்ந்து படித்தார்;
செவிமடுத்து -
சீயர் கண்ணீர் வடித்தார்!

அரசன்
அதிசயித்து -

“இராமானுஜரே!
இந்தக் கிரந்தம் -
இனி உமதெனக் கொள்க;
எடுத்துச் செல்க!” என்றான்;

எம்பெருமானாரின்
எழிலார்ந்த -
முகவிலாசத்தில் -
முற்றும் மயங்கி நின்றான்!

போதாயனர் பாஷ்யத்தை -
பத்திரமாக எடுத்துக் கொண்டு...

ஸ்ரீராமானுஜர் -
ஸ்ரீநகர் எல்லை தாண்டி -

உடன் வந்த
உற்ற சீடர்களோடு -
இரவில் - ஓர்
இடத்தில் கண்ணுறங்குகையில்...

பண்டிதர் கூட்டம் - அதைப்
பறித்துச் சென்றது; காட்டில்
வீசிய கூதல் - அதைக் கண்டு
வீசாது வருந்தி நின்றது!
....
பல மாதங்கள் -
பல காதங்கள் -
படாத பாடுபட்டுப் -
பயணித்து...

காஷ்மீரம் சேர்ந்து - அங்கு
கண்டெடுத்த
காவியப் புதையல் - இன்னணம்
களவு போனதே என்று -

ஏகமாய்க் கலங்கினார்

எதிராசர்;
'தேவையில்லை கலக்கம்' என்று -
தேற்றினார் அவரைக் கூரேசர்!

"சுவாமி!
சிறியேன் - அந்த
போதாயன பாஷ்யத்தைப்
படித்தேனல்லவா ஒருமுறை;

வரிக்கு வரி -
வார்த்தைக்கு வார்த்தை - அதை
உள்வாங்கி
வைத்துள்ளது என் உளச்சிறை!

எம்பெருமானாருக்கு
ஏற்கனவேயே தெரியும் -
எளியேன் - ஓர்
ஏகசந்தக்கிராகி என்று;
ஒருமுறை கேட்டால் - அதை
ஒப்பிக்கும் அளவு...

கேட்டது
கேட்டபடி - என்
கருத்தில் வாழும்
கால் ஊன்றி நின்று!"

இவ்வாறு கூரத்தாழ்வான்
இயம்பிதும் - அவரை
இராமானுசர்
இறுகத் தழுவினார்;

உள்ளத்தில்
உண்டான
உவகைப் பெருக்கே - ஓர்
உந்து சக்தியாக...

பகலிரவு
பாராது - தன்
பரிவாரத்தோடு - ஒல்லையாய்ப்
பொன்னரங்கம் திரும்பி...

ஆளவந்தார் ஸ்வாமிக்கு
அளித்த வாக்குப்படி -
ஸ்ரீபாஷ்யத்தை
ஸ்ரீ ராமானுஜமுனி எழுதினார்!

ஓர்
ஒப்பற்ற கிரந்தத்தை
வைணவம் பெற்று;
வையம் பயனுற்றது!

இதனால் 'இராமாநுஜர்' என்ற இயற்பெயர் ஒருவாறு மறையத் தொடங்கியது, 'பாஷியக்காரர்' என்ற பெயரே நினைவில் தாண்டவமாடியது. திருமலையில் ஸ்ரீராமாநுஜர் சந்நிதி - 'பாஷியக்காரர் சந்நிதி' என்றே எழுதப் பெற்றுள்ளது!

அதை (= ஸ்ரீபாஷ்யத்தை)
ஆக்கிமுடித்த கையோடு...

'வேதாந்த தீபம்';
வேதாந்த சாரம்;
'வேதாந்த ஸங்கிரகம்';
மற்றும் 'கீதாபாஷ்யம்;'

ஆகிய -
அற்புதமான நூல்களையும்...
யதிராஜர்
யாத்தார்;

விழுமிய கருத்துகளை - தன்
விசாலமான அறிவுச்சரட்டில் -
கோலமணி மாலையாகக் -
கோத்தார்!

எதிராசரின் திருத்தலப் பயணம்:

பொதுவாக சமய ஆர்வலர்களும் சமய அடியார்களும் திருத்தலப் பயணங்களை மேற்கொண்டு மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றை வழிபட விரும்புவர். அத்தலத்தின் மீது அருட்பெரியவர்கள் அருளிச் செய்த பாடல்களைப் பாடிமகிழ்வர்[15]. இவற்றால் பெறும் அநுபவங்களை விவரித்து விளக்க முடியாது.

இராமாநுஜர் கீர்த்திமிகு கிரந்தங்களை வடமொழியில் எழுதி முடித்தபின் திவ்விய தேசப் பயணங்களை மேற்கொண்டார். இப்பயணங்களில் வைணவ தரிசனத்தைச் செல்லும் இடங்கள் தோறும் பரப்பினார்.

ஸ்ரீராமானுஜர் -
ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தை -

ஊர்
ஊராகச் சென்று -
உத்தாரணம் செய்ய
உத்தேசம் கொண்டார்; தன் -
அடியார்களின் அவாவும்
அ.்.தே எனக் கண்டார்!

சோழநாடு

முதலில் சோழநாடு - என
முடிவாகியது;
பெருமாள் தாயாரிடம்
பிரார்த்தித்துக் கொண்டு
பெருங்கூட்டம் - எம்
பெருமானாரோடு புறப்பட...

வீதிமட்டுமல்ல -
வானும் புழுதி வடிவாகியது!
தொடர்ந்து வரும் -
தொண்டர் குலம்...

நான் மறையையும்;
நாலாயிரத்தையும்;
நாராயணனின் -சஹஸ்ர
நாமங்களையும்;

வாய்விட்டு
ஓத - பல்வகை
வாந்தியங்கள்
வழங்கு ஓசை வான் மோத -

'தண்டிகை ஏறி - நம்
துறவரசு வருகிறான்; இது -
பண்டிகை நாள்!' என...

நகரத்தார்
நெகிழ்ந்து – ஊர்
எல்லையில்
எதிர்கொண்டு -

முகமன் கூறி
முதல் தாம்பூலம் தர...

சோழ
சாம்ராஜ்யத்தில் -
வைணவ தரிசனம்
வேர் பிடித்தது;

உடையவர் திருவடியே - நமை
உய்விக்கும் திருவடி - என
ஓர்ந்து அதை
ஊர் பிடித்தது!

திருக்குடந்தை;
திருநெறையூர்;
திருச்சேறை;
திருக்கண்ணமங்கை;

என -
ஏகப்பட்ட...

திருப்பதிகளை
திருப்பதியாக சேவித்துக் கொண்டு -
திருக்கோயில்களின்
திருமண்டபங்களில் - இதர
சித்தாந்த வித்வான்களோடு
சொற்போர் நடத்தி வெற்றி
கண்டு......

<u>பாண்டிநாடு</u>

பாண்டிய மண்ணில்
பாதம் பதித்தார் -
தமிழ் தேயம் - கைகூப்பித்
தொழும் வைணவச் சீயம்!

கன்னல் நிகர்த்த
கன்னித் தமிழை நிதம்பாடி -
தென்னல் நடக்கும்
திருமாலிருஞ் சோலையில்...

கொலுவமர்ந்து
கோயில் கொண்டிருக்கும் -
கள்ளழகரை; கொள்ளை அழகு
கொள்ளழகரை;

தண்டனிட்டுத்
தொழுதபின்...

ஸ்ரீராமானுஜர்
ஸ்ரீவில்லிபுத்தூர் சேர்ந்தார்;
சூடிக் கொடுத்த
சுடர்க் கொடியாம் -
பாவை பாடிய
பாவையின்...

நிறைவேறா ஆசை ஒன்றை -
நினைவு கூர்ந்தார்!

வடபத்ரசாயியின்
வலக்கரம் பற்றி -
வாழ்க்கைப் பட
விழைந்த ஆண்டாள் -

தனது
திருமணத்தின் போது...

அண்டாக்கள் நூறில்
அக்கார அடிசில் செய்து -
சீராக - அதனை
சீதரனுக்கு அர்ப்பணிக்க -

கொண்டிருந்த - ஆசை
கூடாமல் போனது; அவள் -
சந்நிதியில் நின்று -
சேவிக்கையில் -
எதிராஜருக்கு - அந்த
எண்ணம் வந்து...

விழி
வெள்ள மானது!
உடனே -
உடையவர்...

தன்
தங்கைக்கு - ஒரு
தமையின் தருகின்ற
திருமணச் சீராக...

நூறு அண்டாக்களில்
நெய் ஒழுக ஒழுக -
அக்கார அடிசில்
ஆக்கி -
வடபத்ரசாயிக்கு
வழங்கினார் -

தித்திக்கத்
தித்திக்கத்; இளைய
சகோதரியின் அபிலாஷை
சித்திக்க!

அக்கணமே - ஸ்ரீ
ஆண்டாள் -

அவரது
அகக்கண்முன் தோன்றி[16]...

'எம் அண்ணாவே!'
என்று -
வாஞ்சையோடு விளித்தாள்;
விளித்துக் களித்தாள்!

இந்த நிகழ்வை ஒட்டித்தான் -
இன்றளவும்...

வில்லிபுத்தூர் ஆண்டாளின்
வாழித் திருநாமத்தில் -

'பெரும்பூதூர் மாமுனிக்குப்
பின்னானாள் வாழியே!' என்று -
அனுசந்தானம் செய்வர்; செய்து
அடியார்கள் உய்வர்!

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து
ஸ்ரீராமானுஜர்...

தமது
தொண்டர் குழாத்தோடு - மேலும்
தெற்கு நோக்கிப் பயணித்து -
பின்
திருநகரி போய்ச் சேர்ந்தார்;

'இதுவோ திருநகரி!
ஈதோ பொருநை!
இதுவோ பரமபதத்து எல்லை!
இதுவோ தான் -
வேதம் தமிழ் செய்து -
மெய்ப்பொருட்கு முப்பொருளால் -
ஓதும் சடகோபன் ஊர்!'[17]

என்று
ஏத்தி ஏத்தி -
தன்
தாபம் முற்றும் தீர்ந்தார்!

மாறன் என்றும்;
வருளா பரணன் என்றும்;
குருகைப் பிரான் என்றும்;
குருகூர் நம்பி என்றும்;
பராங்குசன் என்றும்;
பிரபந்த திலகன் என்றும்;

சடகோபன் என்றும்;
சேவிக்கப் பெறுபவரும்...

ஆசாரியர்களுக்கெல்லாம்
ஆசாரியர் என்று -
பரம வைணவர்களால்
பாவிக்கப் பெறுபவரும்...

இன்னும் -
இவைபோல் -
நவிலவொணக் கீர்த்தியுடைய -
நம்மாழ்வார் வாழ்ந்த ஊர்...

திருநகரி; ஆழ்வார் -
திருநகரி; அவ்வூரை -
தரிசித்தாலே வரும் - ஆர்க்கும்
தமிழ் லகரி!

புளிநிழல்
போயமர்ந்த -

மாறன் என்னும்
மெய்ஞ்ஞானப் பூ - முனம்
நாளும் - தமிழ்
நறவம் பிலிற்றியதால்...

அவ்
அழகிய ஊரில்...
மண் சுமக்கும் புழுதியிலும்
பண் மணக்கும்;
கா சுமக்கும் பூவினிலும்
பா மணக்கும்;

நிலமெலாம் தமிழ் நாற்று;
நதியெலாம் தமிழ் ஊற்று;
நகரெலாம் தமிழ் காற்று;
நாவெலாம் தமிழ் கூற்று!
....
ஒரு நாள் -
உடையவர்...

திருநகரியில் - நீராடும்
துறையின் சங்கணித்துறையில் -
குளிரக் குளிரக்
குடைந் தாடினார்; பின் -
கரை யேறிக்
காவி யுடுத்தி -

திருமேனியில்
திருமண் காப்பு சூடினார்!
....
பிறகு - ஒரு
பகல் பொழுதில்...
ஆழ்வார் திருநகரியை விட்டு -
அடியார்களுடன் - தனது
சிவகையில் ஏறிச்
செல்ல லானார்...

'கண்ணி நுண் சிறுத்தாம்' பை -
கவனம் செய்து
மன்பதைக்கு அருளிய -
மதுரகவியாழ்வாரின் ஊரான -

திருக்கோளூர் நோக்கி; ஆழ்வார் -
திருவடிகளை நெஞ்சில் தேக்கி
....
திருக்கோளூர் வாசம் - சில -
தினங்களில் முடிய -
....
திருப்பதிசாரம் எனப்படும்
திருவண்பரிசாரம் சென்றார்;
....
அவ்வூரைக் கண்டதுமே
அங்கம் புளகித்து நின்றார்![18]

பிறகு - ஸ்ரீ
பெரும்புதூர் வள்ளல் -

திருக்குறுங்குடி;
திருவாட்டாறு; முதலிய -
தலங்களுக்குப் போய்ப் - பின்

<u>மலைநாடு</u>

திருவனந்தபுரம் புகுந்தார்;

பத்மநாபஸ்வாமி கோயிலில் -
பூஜை முறையில் ...

சில திருத்தங்கள்
செய்ய முயன்றும் - நம்பூரி
அந்தணர்கள்
அஃதை விரும்பாததால் -

உடையவர் - சற்றே
உளம் வருந்தினாலும் -
உரகசயனனை சேவித்து -
உணர்ச்சிகள் மிகுந்தார்!

வடநாடு

பின்பு -
பல்லக்கில் உட்கார்ந்து -
மேலைக் கடலோரமாக -
மெல்ல ஊர்ந்து -

....
வடமதுரை; துவாரகை;
வாரணாசி; பிரயாகை;
குருட்சேட்த்திரம்; கயா;
கோசலம்; மிதிலை;
பத்ரி; ஹரித்வாரம்; எனும் -
பலப்பல...

இடங்களில்
இராமானுஜர் -
சஞ்சாரம்
செய்து...

மாதக் கணக்கில் - தன்
மெய் வருந்த வைணவத்தின்
மகத்துவத்தை -
மாந்தர்க்கு விளம்பினார்;
....
திருமாலின் - கருளத்
துவசத்தை...

விசிஷ்டாத்வைதத்தின்
வெற்றிப் பதாகையாக -
ஊர் ஊராகச் சென்று
வான்தொடப் பறக்க விட்டார்;

மன்பதைக்கும் - விஷ்ணு
மதத்திற்கும் பாலம் இட்டார்![19]

சீடர்களின் மறைவு

வைணவ சித்தாந்தம்
வையமிசை - கூரேசரால்
உத்தாரணம் செய்யப்பட்டதில்
உடையவருக்கு...

ஆனந்தமோ -

ஆனந்தம்;
அளப்பரிய -
ஆனந்தம்!

கூரேசர் எனப்படும்
கூரத்தாழ்வார்...

அரவுமேல்
அறிதுயில் கொள்ளும் -

அரங்கனின்
அடிமலர்களில் யாசித்து...

ஒருநாள்
ஒப்பரிய -
பரமபதத்தைப்
பெற்றார்;

தன்
திருத்தொண்டர் -
திடீரென்று
திருநாடு அலங்கரித்ததில்...

இராமானுஜர்
இடிந்து போனார்;
அகவை நூற்றிருபது - ஏறத்தாழ
ஆகிவிட்ட நிலையில்...

அதிகம்
அழக் கூட-
ஆகாத
அசக்தர் ஆனார்!

ஆழ்வாரின் -
அணுக்கத் தொண்டரான...

உறங்காவில்லி தாசர் -
உன்மத்தம் பிடித்தாற்போல -
ஊருக்குள்
உலாவந்தார்;
பேராசனான கூரேசரின்
பிரிவைத் தாளாமல் -
நித்த நித்தம்
நெஞ்சு வெந்தார்!
ஒருநாள் - அத்தகு
வில்லிதாசரும்...

எம்பெருமானார்
எதிராஜரின் -
திருவடி நிலைகளைத்
தம் முடிமேல் வைத்தபடி -

பரம பதம்
போனார்;
நித்திய சூரிகளின்
நிரலில் ஒருவராய் ஆனார்!

'துணை காணேன்; ஊரும் -
துஞ்சிற்று; உலகமும் -
துயின்றது...
தேரும் போயிற்று;
திசைகளும் மறைந்தன;
செய்வதொன்று அறியேனே!'[20] என -
தீந்தமிழில்
திருமங்கை மன்னன் -

பாடியருளிய
பாசுரத்தைப் -
பாடியவாறே
'பொக்'கென விழுந்து...

உயிர்
உகுத்தாள் -
'பொன்னாச்சி' எனும்
புண்ணியவதி;
புடவை கட்டி உலவும்
பக்தி நதி!

இராமானுஜர் முன் நின்று -
இருவரையும்...

பொன்னிக் கரையில் - ஒரு சேரப்
பள்ளி படுத்தி - அந்திமக்
கிரியைகளைப் புரிந்தார்;
கண்ணீரைச் சொரிந்தார்!

பரமபதம்
புகும் நோக்கம் -
பாஷ்யக்காரரையும்
பற்றிக் கொண்டது;
ஓரளவு - இதை
ஓர்ந்த -
சீடர் கூட்டம் -அவரைச்
சுற்றிக் கொண்டது!

தம் பிரிவைத்
தாளாது - தம்
திருத் தொண்டர்
தவிப்பர் என்பது...
உடையவர் -
உணர்ந்திருந்ததால் -
கிடுகிடுவென்று -
காரியங்களைச் செய்தார்;

<u>உடையவரின் திவ்வியத் திருமேனிகள்</u>

இன்று நாம் காண்பனவான திரு மேனிகள்

(1) **<u>'தமர் உகந்த திருமேனி'</u>** திரு நாராயணபுரம் (= மேல் கோட்டை) விட்டுத் திருவரங்கம் செல்லத் தீர்மானித்தபோது உண்டானது இது.

பாகவதர்கள் -
பிரார்த்தித்துக் கொண்டபடி...
உடைவர் - தன்
உருவத்தை - ஒரு
விக்கிரகமாக வடிக்கச்
செய்தார்;
அதில் தனது -
அருளை முற்றும் பெய்தார்!

'தமர் உகந்த திருமேனி' எனும் -
திருநாமத்தோடு - இன்றளவும்
திருநாராயணபுரத்தில் - அது
திகழ்கிறது அதற்கு -
நித்திய பூஜை - அங்கு
நேர்த்தியாய் நிகழ்கிறது!

(2) **<u>'தான் உகந்த திருமேனி'</u>**
சீடர்கள் ஒருவர் பின் ஒருவராக மூவர் பிரிவும் -

பரமபதம்
புகும் நோக்கம் -
பாஷியக்காரரையும்
பற்றிக் கொண்டது;

ஓரளவு - இதை
ஓர்ந்த -
சீடர் கூட்டம் - அவரைச்
சுற்றிக் கொண்டது!

தம் பிரிவைத்
தாளாது - தம்
திருத்தொண்டர்
தவிப்பர் என்பது...
உடையவர்
உணர்ந்திருந்ததால் -
கிடுகிடுவென்று - சில
காரியங்களைச் செய்தார்;

தன்னைப் போலவே
தத்ரூபமாய் - ஒரு
விக்கிரகத்தைச்
வடிக்கச் சொல்லி...

அதை ஆரத் தழுவி -
அதனுள் - தன்
அருட்சக்தியைப் பெய்தார்!

'தான் உகந்த -
திருமேனி!'

என
ஏற்றம் பெற்ற -

அந்த விக்ரகத்தை - தன்
அவதார ஸ்தலமான - ஸ்ரீ
பெரும்பூதூரில் -
பிரதிட்டை செய்யுமாறு...

முதலியாண்டாரின்
மைந்தர் -
கந்தாடையாண்டானிடம்
கூறினார்;

இன்னணம்-
இராமானுஜப் பெருந்தகை...

தம்
தொண்டர் குழாத்திற்குத் -
தொட்டனைத்து ஊறும்
தண்ணிளிக் கேணியாய் ஊறினார்!

(3) <u>'தானான திருமேனி'</u>

எதிராஜர் - தான்
ஏற்றிருந்த -
சர்வ

சக்தியையும்...

பெரும்பூதூர் விக்கிரகத்தில்
புகுத்திவிட்டு - திவ்வியத்
திருமேனி நாட்பட நாட்படத்
தளர்வு பட்டு -

தன்
திரு -
முடியை - எம்பார்
மடியிலும்; தன் திரு
அடியை - வடுக நம்பி[21]
மடியிலும்;

வைத்தபடி ஒருநாள்
வைகுந்தம் ஏகினார் - திரு
மாலின் படுக்கையாய்
மறுபடி ஆகினார்!

அரங்கன் -
அவரைத் -
திருப்பள்ளி படுத்த -
தனது -
வசந்த மண்டபத்தையே
வழங்க;
'வாழி! எம் பெருமானார்!' என
வையம் முழங்க;

ஸ்ரீரங்கத்தில்
ஸ்ரீவைஷ்ணவர்கள்...

அருளார்ந்த
அந்த இடத்திலேயே -
எதிராஜருக்கு - ஒரு சந்நிதி
எழுப்பினர் அன்று;
'<u>தானான திருமேனி</u>'யாய் - அது
திகழ்கிறது இன்று!

*** **ஸ்ரீமதே இராமாநுஜாய நம:** ***

<u>குறிப்பு:</u>

1. நாச்சியார் திருமொழி (6): 'திருமணக் கனவை உரைத்தல்': 'வாரணம் ஆயிரம் சூழி... தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி! நான்' (6:1)

2. இமயமலையில் - சாளிக் கிராமம் என்ற இடத்தில் எடுக்கப் பெற்ற ஒரு கல்; இதுதான் வைணவர்கட்கு அன்றாடம் வழிபடும் பெருமாள். இவர் செம்பிலுள்ள நீரில் இருப்பார். இவரைப் பட்டினி போடுவதில்லை. வெளியூருக்குப் போக நேர்ந்தால் இவரை பக்கத்து அக்கத்து வீட்டில் வழிபாடு தவறாதிருக்க வைத்துப் போகும் வழக்கம் உண்டு வைணவர்களிடம்.

3. சந்நிதி – சரியான சொல், இதிலிருந்து பிறந்தது ‘சந்நிதானம்’ என்ற சொல். சன்னதி, சன்னிதி, என்று தமிழ் நாட்டுக் கோயில்களில் காணப் பெறுவது தவறு; மிகவும் வருந்தத் தக்கது. ‘சன்னிதானம்’ என்பதும் தவறு.

4. ஒரு வைதிக அய்யங்கார் அகத்தில் அன்றாடம் வழக்கமாக நடைபெறும் இல்லத்தரசியின் செயல்கள். வாலியார் அய்யங்கார் மரபில் வந்தவராதலால் மிகவும் ஈடுபாட்டுடன் காட்டியுள்ளார். வைணவரல்லாதவர் இவ்வளவு ஈடுபாட்டுடன் வரைந்திருக்க முடியாது.

5. சாதாரணமாக அய்யங்கார் இல்லங்களில் பேச்சு வழக்கில் அடிபடும் சொல்.

6. ஏற்கனவே யாதவனை ‘எடை’ போட்டவளாதலால் காசிப் பயணம் அவள் மனத்தைக் ‘குறுகுறு’ வென்று துளைத்திருக்க வேண்டும்!

7. இராமன் (இவன் இராம + அநுஜன்)

8. இராமானுஜனின் மனம் நிறைவு பெற்றிருக்க வேண்டும்; துறவறம் தந்த ஆசான் என்று.

9. இவனது வரலாறு உரைக்கும் நூல் ஒன்று “வாழ்த்தி வரவேற்றுப் போற்றியது வைணவ உலகம்” என்று பதிவு செய்துள்ளது.

10. பெரிய நம்பி

11. விக்கிரகம் நடக்காது. நடந்ததாக கூறுவது கற்பனை. காவியங்கள் கற்பனை கலந்தே இருக்கும். புராணங்களில் இந்நிலையை காணலாம்.

12. சாதாரண வரலாற்றை காவியத்திற்கேற்ப கற்பனை நயம் செறிய இங்ஙனம் எழுதி வாலியாரும் பரவசப்படுகிறார்.

13. பின்னர்தான் பாஷியம் வரைந்தார். ஆகவே ‘பாஷியக்காரர்’ என்பதற்குப் பதிலாக வேறு சொல் கையாளுவது உசிதம்.

14. <u>எதிராஜர்</u> - ஆங்கிலத்தில் Ethirajan என்று எழுதப் பெற்று மீண்டும் தமிழுருவம் பெறும் போது <u>‘எத்திராஜர்’</u> என்றாயிற்று. எதிராஜர் மகளிர் கல்லூரியின் தெருவின் முகப்பில் “எத்திராஜர் மகளிர் கல்லூரி” என்ற வாசகம் அமைந்துள்ளது. அக்கல்லூரிப் பேராசிரியர் ஒருவருக்கு உரியவரை அண்மி திருத்துமாறு வேண்டியும் நடைபெறவில்லை. இங்ஙனம் தமிழ்நாட்டிலேயே பல சொற்கள், (எ-டு: ‘வாணிகம்’ என்றிருக்க வேண்டியது

‘வணிகம்’ என்று - தொலைக் காட்சிகளில்) போலி நாணயங்கள் போல் புழங்கிவருவது வெட்கக்கேடு!

15. அடியேன் 1948-இல் ஒரு முறையும். அதற்குப் பின்னர் பலமுறைகளிலும் திருத்தலப்பயணங்களை மேற்கொண்டதுண்டு. ஆழ்வார் பெருமக்கள் மங்களாசாசனம் செய்த திவ்விய தேசங்களில் 108-களில் 102-ஐ சேவித்து முடித்து 6 திருத்தலப் பயணநூல்களை வெளியிட்டுள்ளேன். சோழநாட்டுத் திருப்பதிகள் 2 பகுதிகள், பாண்டிநாட்டுத் திருப்பதிகள், தொண்டைநாட்டுத் திருப்பதிகள், மலைநாட்டுத் திருப்பதிகள், வடநாட்டு திருப்பதிகள் என்பவவை அவை. ஆழ்வார் பெருமக்களின் பாசுரங்களை ஆங்கெல்லாம் பாடி அநுபவித்து அநுபூதி நிலையை எட்டமுயன்றுள்ளேன். இந்தப் பயணங்களில் ஆங்காங்கு நேர்படும் பாடல் பெற்ற சைவத்திருத்தலங்கள், வைப்புத்தலங்கள் இவற்றையும் விடாமல் சேவித்து மகிழ்ந்ததுண்டு.

16. திருமாலிருஞ்சோலையில் அக்கார அடிசிலைப் படைத்தபின் உடையவர் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருள, ஆண்டாள் தன் அர்ச்சை சமாதியைக் கடந்து ஏழடி முன்வந்து வரவேற்றார். இதனை நினைவு கூறும் வகையில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சந்நிதியில் அவள் விக்கிரகம் ஏழடி நடந்த நிலையில் காட்டப் பெற்றுள்ளது. (ஆண்டாள் வாழ்ந்த காலம் வேறு; இராமாநுஜர் வாழ்ந்த காலம் வேறு என்பவற்றை நினைவில் கொண்டு இதனை உணர வேண்டும்.)

17. மரபுக் கவிதையில் அமைந்த பழைய வெண்பா புதுக்கவிதையில் ஐக்கியமாயிருப்பது அற்புதம்!


18. நம்மாழ்வாரின் தாயார் உடையநங்கை பிறந்து வளர்ந்த ஊர்.

19. தொண்டைநாடு - தனியாக எழுதப் பெறவில்லை. காஞ்சியைச் சேர்ந்தவராதலால் விட்டனர் போலும்! இங்கும் வரதராசர் சந்நிதி, திருப்புட்குழி - இவற்றைத் தவிர வேறு எதுவும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை.

20. பெரி.திரு 8.5:2

21. உடையவருக்குப் பால் காய்ச்சித் தருதல் போன்ற பல பணிகளைச் செய்தவர். ஆந்திரத்திலிருந்து போந்து அரங்கத்தில் வாழ்ந்தவர். ஒரு சமயம் பால் அடுப்பிலிருந்த போழ்து பெருமாள் திரு உலாப் போந்தார். உடையவர் பெருமாளுக்குப் படைக்க பழம் முதலியவற்றைத் தட்டில் கொணருமாறு பணிக்க, ‘அந்தப் பெருமாள் வீடு வீடாய் பிச்சை வாங்கிக் கொள்கிறது; பால் அடுப்பில் இருப்பதால் வர இயலவில்லை. அவர் போகட்டும்’ என்று குருபக்தியைக் காட்டும் நிகழ்ச்சி ஒன்றை நினைவு கூறச் செய்கின்றது.

****



இராமானுஜர் 1000

கவிஞர் **வாலி**யின்

இராமானுஜ காவியம் - ஒரு மதிப்பீடு

இயல் ~ 3

துணைக் காவிய மாந்தர்கள்



ந சுப்பு ரெட்டியார் 100

இயல் – 3

துணைக் காவிய மாந்தர்கள்

காவியத்தில் நேரடியாகப் பங்கு கொள்ளாமல் ஏதோ ஒரு வகையில் பங்கு கொண்ட பெரியார்கள் இப்பகுதியில் அடக்கப் பெறுகின்றனர்.

1. நாத முனிகள்

திருமலை நம்பியின்
திருவுள்ளத்தில்

பாசுரங்களை மீட்டுப்
பாருக்குத் தந்த -
நாத முனிகளின் -
நினைவு எழுந்தது!

நாதமுனி எனும் -
நல்லாசான்தான்...

வைணவம் -
வணங்கும் -
குருபரம் பரையின் -
குடுமி; பின்னால்
வரும்பரம்பரைக்கு - ஞானத்தை
வைத்துப் போன தருமி!
காட்டு மன்னார் கோயிலில் -
கண்மலர்ந்த பெருமகன்;

வீர நாராயணபுரம் - என
விளிக்கப் பெறும் -
அவ் -
அழகிய ஊருக்கு - தன்
பிறப்பால்
பீடுகள் சேர்த்த திருமகன்.[1]

பாட்டும் பைந்தமிழும்
பழுதறக் கற்றவன்;
சுருங்கச் -
சொல்லப் போனால்...

தமிழுக்கே -
தன்னை விற்றவன்!

ஒருசமயம் -
'ஓராயிரத்துள் இப்பத்தும்'!
என -
எவரோ பாடிய -

ஒரு சொற்றொடரைக் கேட்டு -
தண்டமிழில் சொக்கி -
அனைத்துப் பாசுரங்களையும் -
அடைய வேண்டி...

திருக்குருகூர் எனும் - ஆழ்வார்
திருநகரிக்குச் சென்று -

தவமிருந்து பெற்றான் -
தமிழ்ச் செல்வத்தை;
பக்திப் பயிர் -
படிமிசை தழைக்க -
நம்மாழ்வார் -
நட்ட நல்வித்தை!

பழஞ் சுவடிகள்
பதித்து வைத்திருந்த -
பாசுரங்களைப் பெற - நாதமுனி
பட்டானே பாடு...

அது என்ன -
அவ்வளவு இலேசா?

அந்த வகையில் - அவன்
அந்நாளைய உ.வே.சா!
ஆச்சரியம்;
ஆனால் உண்மை!
ஆதித் திராவிடர்களைப் போல் -
ஆழ்வார்களின் தமிழுலகம் -
ஆகாதென மறுக்கப்பட்டது -
ஆலயப் பிரவேசம்;

ஆதி நாட்களில் -
அந்தஅளவு இருந்தது -
வைதிகர்களின் -
வடமொழி விசுவாசம்!
....
எந்த சாதிக்காரனும்
ஏறலாம் மோட்சம்;
ஆம்!

ஆறிரு -
ஆழ்வார் பாடல் சொன்னது -
அதற்கான சூட்சம்!

பரமபதத்திற்கான
பயணச் சீட்டு - எனப்
பகர்ந்தது -
பன்னிருவர் பாசுரம்!

இவையெலாம்
ஏயதா யில்லை...
....
வயதான வைதிகம்
வழிமொழிய வில்லை;
விசாலமாக - அதன்
விழி விரியவில்லை!
பழமை விரும்பிகள் -
பிரபந்தங்களை...

'சதுர்மறைப் பொருளைச்
சொல்லும் பாட்டல்ல;
குலாச்சாரத்தைத்
கொல்லும் பாட்டு!' என...

தூஷித்து - அவற்றிற்குத்
தீ வைக்கத் தலைப்பட்டனர்;
....
கன்னித் தமிழ் -
கண்டு; அதைக்
காஞ்சிரமாய்க் -
கண்டு...

உண்மைக்கு
ஒருகாத தூரம் நின்று -
வெண்மைக்கு விலைப்பட்டனர்!

'ஆழ்வார்கள் அருளிய தமிழ் -
அமிழ்து! அமிழ்து! என இமிழ்;
அவ் வமுதில் யாண்டும் அமிழ்;

தமிழ் எதிர்ப்பெல்லாம் -
தண்ணீர்க் குமிழ்;
ஆரெதிர்த் தாலும்
அஞ்சாமல் -
அவர் முகத்தில்
அன்போடு உமிழ்!'

என -
எவரும்...

அந்நாளில்
ஆர்த்து எழவில்லை;
தமிழர் எழாததால் -
தமிழும் எழவில்லை!

நாலாயிரம்
நந்தனார் ஆனது;
வைதிக நந்தி
வழிமறித்து நின்றது!

நாயகன் எங்கள்
நாதமுனி வந்தான்;
நந்தி நானூறடி
நகர்ந்து சென்றது!

வாயிலில் நின்ற
வண்ணத் தமிழைக்
கோயிலின் உள்ளே
கூட்டிச் சென்று...

போக்கினான் -
பார்ப்பனர் மேலிருந்த பழி;
போக்கி - தமிழர்ச்சனைக்குப்
போட்டனன் பிள்ளையார் சுழி!

2. திருக்கச்சி நம்பிகள்

பூவிருந்தவல்லி வைசிய குல சிகாமணியாக வரும் புனிதர். இராமாநுஜரின் குழந்தைப் பருவம் முதல் அவருடன் தொடர்பு கொண்டவர்.

வளநகர் காஞ்சிவாழ் -
வரதராஜன் என்னும்...

வீழாத செல்வத்திற்கு
வாழ்நாளெல்லாம்
விசிறியாகி
விசிறி வீசினார்.

....
கச்சி நம்பி - அந்தக்
கச்சி நம்பி - கைங்கரியத்தில்
உச்சி நம்பி - என்று

ஊர் நவிலுமாறு...

வரதராஜன் திருவடிகளில்
வியர்வையைப் பெய்தார்!

'நெற்றியில்
நாமக்குறி;
உளத்தில்
வைணப நெறி;

விழியினில் -
வரதன் வெறி;

என்றிருந்தால்
என்றைக்கும்
புகவேண்டா(ம்)
பிறவிப் பொறி!'

இன்னணம்
இசைத்த வண்ணம் -
திரிந்து கிடந்த
திருக் கச்சி நம்பி...

பிரியப்பட்டு - வெகு
பிரயாசைப்பட்டு -
பூவிருந்த வல்லியில் - ஒரு
பூந்தோட்டம் போட்டார்;

அதிகாலையில்
அதழ்கள்
அவிழும்
அழகு மலர்களோடு...

அளியும் வளியும் வந்து
அசடு வழிய நின்று
அரட்டை அடிக்க
அனுமதிக்க மாட்டார்!

'புஷ்பங்கள்
பெருமாளுக்கு உரியவை;
மோத்தல்
மொய்த்தல்
அபசாரத்திலும்
அபசாரம் என்று -

வண்டுக்கும் வாடைக்கும்
விவரமாய்ப் புரிய வை!'

என்று
எச்சரிப்பார் -
தோட்டத்துக் கூலியை;
……………………….
தினப்படி
தினப்படி
திருக்கச்சி நம்பி
திருக் குடலைகளோடு வந்து…
ஆண்டாளின்
அப்பாவைப்போல் - (= பெரியாழ்வார்)

செடிக்கும் வலிக்காமல்
கொடிக்கும் வலிக்காமல்
கொய்து கொய்து
குடலைகளை நிரப்பிக் கொண்டு

காஞ்சீபுரத்திற்குக்
கால் நடையாய்ச் செல்வார்;

வண்டுவந்து
வாய் வைக்காமல்
கொண்டு வந்த
குடலைப் பூக்களை…

பெருமாளுக்குச் சாத்தி -
பிரபந்தங்களைச் சொல்வார்!
………………………………..
'அம்மா!
அப்பா சொன்னபடி…

ஆலயப் பணிதான்
ஆனந்தம் ; அதுதான்
ஆன்ம ஞானத்திற்கு
ஆரம்பம்!'

என்று காஞ்சீபுரம்
சென்றார்; கச்சி நம்பி -
அன்று முதல் அங்கேயே
நின்றார்!

ஈரைந்தாம் நூற்றாண்டின்
இறுதிக்கு - இன்னும்
ஓரைந்து ஆண்டுகள் உளபோது
உதித்தவர் திருக்கச்சி;

பதினோராம் நூற்றாண்டின்
பதினேழாம் ஆண்டில் - காந்தி

மதியென்னும் மங்கை நல்லாள்
மடிவந்தவர் இராமானுஜர்!

இராமானுஜரை விட
இருபத்திரண்டு வயது -
பெரியவர் நம்பி; மிக
அரியவர் நம்பி!'

பின்னாளில் -
புரட்சிக் கருத்துகளோடு -
புறப்பட்டுப் -
பொலிய இருக்கிறது...
இராமானுஜர் என்னும்
இந்து சக்தி; அதற்கு -
உத்தமர் திருக்கச்சிதான்
உந்து சக்தி!
....
எல்லோரையும் -

இளங்கன்றான
இராமானுஜன் வசீகரித்தான்;
இராமானுஜனை -
இன்னொருவர் வசீகரித்தார்!

ஒருநாள் - அவரை
வெயில் தாளும் வேளையில் -
தெருவில் சந்தித்து
தெண்டனிட்டான்;

'இவர் ஓர் -
இறைமைச் தோன்றல்;
இதம்தரும் -
இவரோடு தென்றல்!'
என -
எண்ணி...
அவசர
அவசரமாக
அக்கணமே - தன்னை
அவருள் நட்டான்!

அவனது
அப்பாவிற்கு
அணுக்கமான ஆப்தரான
அவர்...
அஞ்சை அவிக்கும்
ஆறை அறிந்து – பிறவி

ஏழைத் தவிர்க்க
எட்டைத் துதிப்பவர்;
பகவானுக்கு மேலாக -
பாகவதர்களை மதிப்பவர்!

....

அப்பா மூலமாகவும் -
அநேகர் மூலமாகவும் -

அவரை - 'ஓர்
அருள்மிகு அறிவன்!'
என இராமானுஜன்
ஏற்கெனவே அறிவன்!

....

அந்த
அடியாரின்
அடியின் கீழ்
அடிப்பொடியாயிருந்து...

ஏவல் செய்ய இராமானுஜன் -
ஏங்கினான்; தனது
ஆசாரியனாகவே உள்ளத்தில் -
அவரை வாங்கினான்!

....

முமுட்சுவான - அம்
முக்தர்...
முதல் வருணம்
முழந்தாளிட்டு வணங்கிய -
மூன்றாம் வருணம்!

....

காசி யத்திரையினின்றும் தப்பி வந்த இளையாழ்வார் தாயையும் தாரத்தையும் சந்தித்த பிறகு -

மறுநாளே...
திருக்கச்சி நம்பியைத்
திருக்கோயிலில் சந்தித்து
விளக்கினான் - முழு
விருத்தாந்தத்தையும்!

வரதராஜனும் - அவன்
வலமார்பில் வாழும் தாயாரும் -
வேடன் வேடச்சியாய் வந்து
விளைவித்த சித்தையும்!

செய்திகள் கேட்டு - நம்பி
சிலிர்த்துப் போனார்;

இராமனுஜனை -
இறப்பிலிருந்து மீட்ட...

வரதனின் திருவடியை
வாயால் மனத்தால் தொழுது -
சில
விநாடிகள் - தனது
வசமிழந்தவர் ஆனார்!
....
சற்றுப் பொறுத்து
சகஜநிலைக்குத் திரும்பி...

தன் கருத்தைத்
தெரிவித்தார்; ...
....
"இராமானுஜா!
இனி நீ ...

தினம் -
தினம் -
தேவராஜப் பெருமானின்
திருமஞ்சனப் பணியைச் செய்;

அவனுக்கு -
அங்கைநீர்
அள்ளி வந்து தந்தாயே -
அந்த ...

சாலைக் கிணற்றிலிருந்து
சலமெடுத்து வந்து - அதில்
தாயார் பெருமாளைத்
திவ்யமாய்த் தீர்த்தமாட வை!"
திருக்கச்சி நம்பியின்
திருவுளப்படி -
தீர்த்த கைங்கரியத்தை
தினப்படி செய்யலானான்...
இராமானுஜன்
....
அம்மா! இனி
ஆரிடம் நான் போய் நிற்பது?
....
இன்னணம் -
இராமானுஜன்...

தாய் காந்திமதியிடம்

தெரிவித்தான்; ...

....
தேவராஜப் பெருமாள்
தலையில் போட்டுவிட்டு...

கச்சி நம்பியிடம் சென்று - உன்
கல்வியைப் பூர்த்தி செய்; உந்தை -
கேசவ சோமயாஜியின் -
கீர்த்திக்குக் கீர்த்தி செய்!"

....
நம்பியாரைச் சந்தித்து -
நடந்தவற்றைச் சொல்லி...

"நட்டாற்றில் விடப்பட்டு
நிற்கின்றேன்;
தாங்கள் அனுமதித்தால்
தங்கள் கீழ் அமர்ந்து -
நற்கதியை
நல்கும் - அக்
கல்வியைக்
கற்கின்றேன்!

....
தங்களைவிட - ஒரு
திருமாலடியாரை...

'பார்ப்பது -
பெரிதும் அரிது!' என - எனைப்
பெற்றவள் - தங்களைப்
போற்றினாள்; தங்களது -
சீடானாயிருந்து கற்குமாறு
சாற்றினாள்!'
என்று -
எண்சாண் உடம்பு நிலந்தோய...

தெண்டனிட்டான் -
திருக்கச்சி நம்பியைத்

....
நம்பி - நெஞ்சு
நெகிழ்ந்து நின்றார்;
"தேவராஜப் பெருமாளுக்கு -
தினம் தினம் புரிந்துவரும் -
திருமஞ்சனப் பணியையே
தொடர்க!" என்றார்.

....

அன்று தொட்டு
அந்தக் கைங்கரியத்தை -
ஆசாரியனின்
ஆணையே போல் -

இராமானுஜன்
இடையறாது புரிந்து வந்தான்;
…………………………………..
இராமானுஜனின் இதயத்தில்…

ஓர்
அமைதியின்மை
அரும்பி யிருந்தது;
………………….
அவனுக்கு
ஆசிரியப் பிரானாய் இருக்க -
அவன்
அடிபணிந்து வேண்டியும்…

திருக்கச்சி நம்பி - அதற்குத்
திருவுள்ளம் இசைந்தாரில்லை;
…………………………..
இராமானுஜனை - ஒரு சீடனின்
இடத்தில் வைத்துப் பார்க்க
இஷ்டப்படவில்லை; கொம்பு -
இடந்தராது படருமோ முல்லை?

இராமானுஜனோ -
இளைத்தான் -
விவரம் புரியாது; அதற்கான -
வியாஜ்யம் தெரியாது!

……………………….
திருக்கச்சி நம்பியின்
திருவுள்ளம் நலம் செய்யும் -
திருநாளை - எண்ணிக் கிடந்தான்;
தினமும் அவரை நாடி நடந்தான்!

உடையவர் பிறிதொருநாள் தன் துணைவியிடம் மொழிந்தது.

யதி -
யாதவரிடம்…
நான் -
கற்ற கல்வி
முற்றுப் பெறவில்லை;
அங்ஙனம்
அரைக் கிணறு தாண்டிய

அவலம் - என்
அகம் விட்டு அகலவில்லை!

திருக்கச்சி நம்பியைத்
தேர்ந்தேன் குருவாக; எனை
அழற்றும் -
அறுபகை வெப்பம் ஆற - குளிர்
நிழற்றும் -
நிகரிலா ஞானத் தருவாக!

என்ன காரணமோ?
எனக்கு ஆசாரியனாக இருக்க...
பரம
பாகவதோத்தமரான -
திருக்கச்சி நம்பிகள்
தயக்கம் காட்டுகிறார்;
நல்ல பதில் சொல்லாமல்
நாள்களை ஓட்டுகிறார்;
....
விடாது
வேண்டுகிறேன்;
பெரும்பொழுதை - அவரோடு
போக்கிப் போக்கி - அந்தத்
தூயவர் திருவுளம் இரங்கத்
தூண்டுகிறேன்!

பாதரட்சை போல் - அவர்
போகுமிடமெல்லாம் போகிறேன்;

அவர் மீதுள்ள
அவாப் பெருக்கால் ...

நான் எனும்
நான் அழிந்து -
அனேக நேரங்களில்
அவராகவே ஆகிறேன்!
....
அத்திவரதன் சந்நிதியில்
அவனாகவே...

துவராடை பூண்டு -
துறவி யானான்;

அர்ச்சகர் மேல் -
ஆவேசம் வந்து...

"இன்று முதல் - இவன்
இராமானுஜ முனி!" எனப் -
பெருமாளே -
பட்டம் அளிக்க;

"எதிகளுக்கு ராஜனே!
எதிராஜனே!" என்று -
திருக்கச்சி நம்பி - தன்
திருவாயால் விளிக்க;
....
முக்கோல் பகவனாகிப் போனான்!

3.<u>யாதவப் பிரகாசர்</u>

இவரது பங்கு இராமாநுஜன் வாழ்க்கையில் நிறைய உண்டு. ஞானம் வழங்கியது ஏதும் இல்லையெனினும் வேறு வகையில் தாக்கம் உண்டு.

அவரை -
அறவே -
பிடிக்காதவன் கூட - அவரைப்
படிக்காதவன் என்று பேசான்;

தொண்டை மண்டலம் பூராவும் -
துவசம் கட்டிக் கொண்டு...

சல்லடை போட்டுச்
சலித்துப் பார்த்தாலும் கூட -

சலித்துச் சலித்துச்
சலித்துப் போகுமே தவிர -

அகப்பட வாய்ப்பில்லை -
அவ்வளவு விழுக்காடு -
ஆரணங்களில் -
ஆழங்கால்பட்ட ஓர் ஆசான்!
....
யதிகளுக்கெல்லாம் யதி - என
யாதவப் பிரகாசரை...

மதிக்கிறது;
துதிக்கிறது; நற்
கதியடைய - அவர் நாமத்தை
கதிக்கிறது;

தொண்டை மண்டலமும் -

அண்டை மண்டலமும்!
....
காலடி நோவக்
காலடியால் அளந்த
காலடி முனிவனின்
காலடி ஈதென்று -

பாத பூஜை
புரிந்து...

அத்வைதிகள்
ஆராதிக்கும் - ஓர்
அரிய ஞானி: ஆராலும்
அறிய ஆகாத பெரிய ஞானி;

யாங்கணும் பேர்விளங்கும் -
யாதவப் பிரகாசர் என்னும்...

பேரறிவுப் பரவை;
பெருங்கருணைப் பவ்வம்;

'மகான்!
மத மாச்சரியங்களில் -
புகான்!'
என -
எல்லோராலும் ஏற்றிருக்கும்...

அன்பு ஆழி;
அருள் வாரி;
....

ஒருநாள் யாதவப் பிரகாசர் தம் சீடர்களுடன் பேசுகிறார்:

என்னுடன் வசிக்கிறீர்கள்;
என்னிடம் வாசிக்கிறீர்கள்;
என்னை விசுவாசிக்கிறீர்கள்;
எனவே வசீகரிக்கிறீர்கள்!

உங்கள் குருபக்திதான்
உச்சம்; உங்கள் மேல் -
ஒருவரும் கூற வொண்ணாது
ஒச்சம்; நீங்கள் தான் -
எதிர்காலத்தில் எனது
எச்சம்; எனக்கில்லை -
அத்துவைதம் பற்றியோர்
அச்சம்!

<u>யதியாதவரின் சதி</u>

இந்த
இராமானுசன் -
எவ்வகையில் உங்களைவிட
ஏற்றம் பெற்றவன்? இந்தப் -

பாடசாலையின்
பிரசாதத்தை
உண்டு உண்டு - உடல்
ஊற்றம் பெற்றவன்!

வளர்க்கிறான் என்னிடம் -
வம்பு; என்னதான்
வளர்ச்சி
வாய்த்தாலும்...

வாழைப்பூ
வழங்கக்கூடுமோ -
தாழைப்பூ -
தருகின்ற வம்பு?"
....
இந்த
இராமானுசனை -
இப்படியே
இயங்க விடுதல் ...
அறிவுடைமை
ஆகாது; இவன் -
எனக்கு
....
இராமானுசனை -
இங்குள்ளோர் அறிவீர்!

நான் -
நேற்று வைத்த
நாற்று ; அந்த
நாற்றுதான் இன்றெனக்குக் -
கூற்று !
நம்
தத்துவம் தப்பாது - இவன்
தலையெடுத்தால்; நம்
தத்துவம் தாழாது - இவன்
தலையெழுத்தால்!

இன்னமும்
இராமானுஜனை
விட்டு வைப்பது உசிதமல்ல;

வாங்க வேண்டும் உயிரை
மெல்ல!”

இப்படி
ஏகப்பட்ட பிரசங்களோடு...
....
பிரகடனப்படுத்தினார்;
....
எதிர்க்கடை விரித்து
என்னை
எள்ளுவா னாயின்....

பிறகு - என்
பிரேதம் வேகாது!

தன் கொள்கையை - இவன்
தம்பட்டம் அடித்தால்
என் கொள்கையை - நாளை
எவன் சீந்து வான்?

துறக்கம் தரும் - எனது
தூய தேனை விட்டுக்
கிறக்கம் தரும் - அவனது
கண்களையல்லவா மாந்துவான்?

தேன் மருந்துப் பண்டம் ;
கள் விருந்துப் பண்டம் ;
நான் -
கூவி விற்க நேரும் ; அவன் -
கூவாமலே கூட்டம் சேரும்!

மயக்கத்தை வருவிப்பவனை
மன்பதை விழையும் ; உற்ற -
மயக்கத்தை விடுவிப்பவனை
மன்பதை விலக்கும்!
....
சில நாள்கள் -
சென்றபின்...

காசியாத்திரைக்கு - அவனையும்
கூட்டிச் சென்று - அலை புரளும்
கங்கை தண்ணீருக்கு -
அவனைக்
காலை உணவாய்த் தருவது!
....
ஆசிரியப்பிரான்

ஆன...

பிரகாசர்மேல் - அவனுக்கு (= கோவிந்தன்)
பிரம்மாண்டமான கோபம்;
அதன் கூடவே
அவர்மேல் இருந்தது
அவனுக்கு - இனம்
அறியாத ஒரு பச்சாதாபம்!
....
கூட்டிக்
கழித்துப் பார்த்தால் -
யாதவப் பிரகாசர்
யாதவப் பிரகாசர்தான்; அக் -
கல்விச் சூரியனைக்
கிரகணமாய்க் கவ்வுவது -
'தான்' 'தான்' 'தான்' எனும்
தான் தோன்றித் தனம்தான்!
(கோவிந்தன் மதிப்பீட்டில்)
....
இராமானுஜனும்
இதர சீடரும் புடைசூழ -
இளவரசி முன்போய் நின்றார்;
'இவன் யார் தெரியுமா?' என்றார்!

பிரம்ம ராட்ஷஸ் -
பிரகாசரைப் பார்த்து
பயங்கரமாய் சிரித்தது;
பிறகு விரித்தது!

"அடேய்!
அதிகம் படித்தவனே!
அதிகம் படித்ததனால் -
அகந்தை பிடித்தவனே!
உனக்கு
உன் கதையும் தெரியாது
எதிர் நிற்கும்
என் கதையும் தெரியாது!

சொல்கிறேன் இரண்டையும் -
செவிமடு;
அதன் பிறகாவது - உன்
அறிவை - உதவாத
அகந்தையைத் தவிர்த்து
அடக்கத்தின்பால் செலவிடு;
அடைந்திருக்கும்
ஆன்மஞானம் எனும் -

அரிய செல்வத்தை
ஆக்க வழிகளில் செலவிடு!

கர்வியே!
கடந்த ஜன்மத்தில்...

மதுராந்தகத்தின்
மாபெரும் ஏரிக்கரையில் -
மண்டிக் கிடந்த
மண் புற்றில் -

ஓர்-
உடும்பாய்
இருந்தவன் நீ;

அன்றாடம் -
அனல் ஓம்பும்...

அந்தணர் சிலர்
அந்த ஏரியில் தீர்த்தமாடி -
அமுது செய்தபின்
அவர்களது...

உத்திஷ்டத்தை
உண்டதால்தான் - இப்போது
ஊர் மெச்சும்
ஓர் அருந்தவன் நீ !

பிரகாசனே!
போன பிறப்பில்...

நான் -
நல்ல -
பிராமண குலத்தில்
பிறந்தும் -

வேட்ட -
வேள்விகளில் -
வேதமந்திரங்களை -
வெகுவாக விடுத்தேன்;

மந்திரலோபம் - எனும்
மகாப் பாவத்தை...

பொறுப்பற்றுப் -
புரிந்ததனால் -
பிரம்ம ராஷஸாகப்

பிறவி எடுத்தேன்!'

4. மணக்கால் நம்பி

இவருக்கு காவியத்தில் நேரடித் தொடர்பு இல்லையெனினும் ஆளவந்தார் ஸ்வாமி மூலம் தொடர்பு பெறுகின்றார்.

யாகங்களை வேட்ட
யாமுனர் - ஆளவந்தாரானபின்
போகங்களை வேட்டார்;
யாமுனர் என்ன?
யார்தான் -
பொன்னும் பொருளும் வந்தபின்
புத்திமாற மாட்டார்?[2]

அரண்மனை;
அரியணை:

குடை;
குஞ்சரம்;

பல்லக்கு
பதாகை

கனகக் கட்டில்;
காவற் சோலை;

'பராக்' சொல்ல -
படிக்கம் சுமக்க - (வெற்றிலை எச்சில் துப்பும் கலம்)
ஆலவட்டம் வீச -
அரைத்த சந்தனம் பூச -

ஏகப்பட்ட
எடுபிடிகள்;
……………..
இப்படி -
இராஜ போகமாக…

ஆளவந்தார் வாழ்க்கை
அமைந்தது;

'இவ்வாறு -
இலௌகீக சுகங்களில்
நாதமுனியின் பேரர்

நாளும் கிடக்கிறாரே!' என்று -

ஒரே
ஓர் உள்ளம் -
கவன்று
குமைந்தது!

அங்ஙனம் -
அரற்றிய

மகானுபாவரின் திருநாமம்
மணக்கால் நம்பி[3] நாலாயிரப்
பாசுரப் பூக்கள்
பிலிற்றுகின்ற - தமிழ்
மறைத்தேனை
மாந்தித் திரியும் தும்பி!
ஆளவந்தாரின்
அருமைப் பாட்டனாரின் -
சீடருக்குச்
சீடர் இவர்;
இவருக்கு உவமையாக
இல்லை ஒரு தவர்!

வைணவ -
உலகத்தின்...

பேரரசாய்ப்
பிறங்கவேண்டிய சீவன் - ஒரு
சிற்றரசாய்ச்
சிறுபூமியை ஆள்கிறதே...

என்று
ஏங்கினார் நம்பி;

ஆளவந்தாரை -
ஆற்றுப்படுத்தலாம் எனில்...

அரண்மனைவாசியை
அணுக முடியாது -
வாடி -
வதங்கினார் வெம்பி!
பிறகு - சற்றுப்
பிரயத்தனம் செய்து...

மாளிகை
மடைப் பள்ளியில்

பணிபுரியும் - ஒரு
பரிசாரகர் மூலம்...

அரசர்
ஆளவந்தார்
ஆசையாய்
அமுது செய்வது -
தூதுவளைக் கீரை - எனத்
தெரிந்து கொண்டு...

அதை
அன்றாடம் -

பறித்து வந்து
பரிசாரகரிடம் கொடுத்தார்;

அங்ஙனம் -
ஆறு மாதங்கள் செய்தும்...

ஆளவந்தாரை
அணுகவொண்ணாது -
நெஞ்சு வெந்து
நம்பிக்கையை விடுத்தார்!

கீரை
கொணர்வதை -
நம்பி
நிறுத்த ; அது
வேண்டும் என - ஆளவந்தாரின்
உள்நா வற்புறுத்த;

'நான்கு
நாட்களாக -
ஏன் தூதுவளை
இல்லை?' என்று -

அடுக்களைப் பணியாளை -
அழைத்துக் கேட்க ...

'வழக்கமாக - கீரையொடு
வருபவர் வரவில்லை!' என்று
பரிசாரகன்
பதிலிறுத்தான் -
பார்வையில்
பயம் பூக்க!

‘அவர் வந்தால் - என்னிடம்
அழைத்து வா!’ என்றார் -
ஆளவந்தார்; வைணவத்தை
ஆளவந்தார்!

சில நாள்கள் -
சென்ற பின்...

மீண்டும் ஒருமுறை
முயலலாமே என - கீரையோடு
மணக்கால் நம்பி
மாளிகை வந்தார்;
தூதுவளை -
தூது சொல...

அரசர்
ஆளவந்தார் -
அவருக்கு
அன்போடு தரிசனம் தந்தார்!

ஆரென்று - தம்மை
அறிமுகப்படுத்திக் கொண்டு...

மணக்கால் நம்பி
மெல்ல மெல்ல -
ஆளவந்தாரை
ஆற்றுப்படுத்தினார்;

நாட்பட -
நாட்பட...

ஆளவந்தாரும்
அவரது உள்ளத்திற்கு -
ஆன்ம ஞானமெனும்
ஆடையை உடுத்தினார்!
துறவு பூண்டு -
திருவரங்கம் போந்தார்;

முக்கோல் பகவராகி
முன்னின்று பாடுபட்டு
தக்கார் ஏத்தும் - வைணவ
தரிசனத்திற்கு...

வற்றாத -
வலிவும் பொலிவும் ஈந்தார்!

*** ஸ்ரீமதே இராமாநுஜாய நம: ***

குறிப்பு:


1. மேல் காட்டிலிருந்து வந்த அடியார் ஒருவர்.

2. மதுரை யாதவக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய தமிழ்க் குடிமகனைப் போன்று தூய்மையான உள்ளத்துடன் தமிழ்ப்பணியாற்றிய மற்றொருவரைக் காண்டல் அரிது. அவர் அரசியலுக்கு வந்தார்; அரசியல் போகங்கள் மனத்தைக் கெடுத்தன. இப்போது முகவரி தெரியாத ஆளாகப் போய்விட்டார். அவர்தம் பரிதாப நிலையைக் கண்டு உண்மைத் தமிழ்ப் பற்றாளர்கள் கவலைப்படுகின்றனர்; இரக்கப்படுகின்றனர்!

3. திருச்சி மாவட்டம் இலால்குடிக்கு அருகிலுள்ள ‘மணக்கால்’ என்ற ஊரைச் சேர்ந்தவர். ஊர்ப் பெயரால் வழங்கப் பெறும் ஓர் உத்தம புருஷர்.

****





இராமாநுஜர் 1000

கவிஞர் வாலியின்

இராமாநுஜ காவியம் - ஒரு மதிப்பீடு

இயல் ~ 4

உடையவரின் ஆசாரியர்கள்



ந சுப்பு ரெட்டியார் 100

இயல் – 4

உடையவரின் ஆசாரியர்கள்[1]

உடையவரின் ஆசிரியர்கள் அறுவர் என்பது வைணவ உலகம் நன்கு அறிந்த செய்தி. அதனை வாலியாரின் இராமாநுஜ காவியத்தில் தவறாமல் சுட்டியுரைத்து விளக்கப் பெறுவதைக் காண முடிகின்றது. அப் பெருமக்கள்:

1. திருக்கச்சி நம்பி

ஒருநாள் - அவரை
வெயில் தாழும் வேளையில்
தெருவில் சந்தித்து
தெண்டனிட்டான்.
…………………………
ஆசாரியனாகவே உள்ளத்தில் -
அவரை வாங்கினான்!
…………………………..
“அய்யனே! என்
ஆழ்மனத்தில்…

நெடுநாளாக - சில
நினைவுகள் உண்டு;

அவை குறித்து - எனக்கு
அறிவிக்க வேண்டும் - தாங்கள்
அத்திவரதனோடு பேசி -
அவன் திருவுள்ளம் கண்டு!”
……………………………

அன்றிரவே – திருக்கச்சி
அத்திவரதனோடு பேசி -
அவன் திருவுள்ளத்தை -
ஆறு வார்த்தைகளாக…
மறுநாள் ராமானுஜனிடம்
மொழிந்தார்;
வரதராஜப் பெருமாள் - திரு
வாய் மலர்ந்து அருளிய
வாசகங்கள் ஆறையும் - தேன்
விருஷ்டியாக…

கச்சி நம்பி - அவன்
காதுகளில் பொழிந்தார்!

2. பெரிய நம்பி

ஆளவந்தார்
அவாவியபடி -
ஆண்டகை ராமானுஜனை
அழைத்து வந்து -

ஸ்ரீரங்கத்தில் -
ஸ்ரீ வைணவ சாம்ராஜியத்தின் -

அடுத்த
அதிபதியாய் -
ஆசாரிய பீடத்தில்
அமர்த்த வேண்டி...

வாழ்க்கைத் துணைவி
விஜயாம்பாளுடன்
பெரிய நம்பிகள்
புறப்பட்டார் -

திருவரங்கம் விட்டு -
திருக்காஞ்சி நோக்கி!

அதேநாளில் -
அதே நேரத்தில்...

பெரிய நம்பிகளைப்
பேராசனாய் ஏற்று - அவர்
பொன்னடி நீழல் வேண்டிப்
புறப்பட்டான் ராமானுஜன் -

திருக்காஞ்சி விட்டு
திருவரங்கம் நோக்கி!

ஆசாரியன்
அருமந்த சீடனை நோக்கி;
அருமந்த சீடன்
ஆசாரியனை நோக்கி;

இன்னணம்
இருவரும் பயணிக்க -
கரியமால்தான்

கிரியா ஊக்கி!

மகிழமரங்கள் மலிந்த
மதுராந்தகத்தில்...

பெரிய நம்பிகளும் -
பெருந்தகை ராமானுஜனும் -
எதிர்பாராமல்
எதிர் எதிர் சந்தித்ததும்...

‘எண்ணியது எண்ணியவாறு - என்
எதிர்வந்து - எனைப் புனிதம்
பண்ணியதே!’ என்று -
இராமானுஜன் -
இறும்பூதெய்தி...

குருவடிகளில்; பெரிய நம்பி -
திருவடிகளில்;
தனது ஆகம்
தரை தோயத்
தண்டனிட்டான்; ஆனந்தத் -
தீர்த்தம்[2] விழிவழி விட்டான்!

அன்பு கொண்டு - ராமானுஜனை
ஆரத்தழுவினார் நம்பி;
அவரது
அத்தகு தழுவலில் -

அமைதி கண்டான்
அவலக் கடலில் -
அலைப்புற்று
ஆடிக்கிடந்த அம்பி!

இங்கேயே
இப்பொழுதே - தனக்கு
இதோபதேசம் செய்ய வேண்டி -
இராமானுஜன்...

நம்பிகளிடம் கேட்டான் -
நயந்து;

முழு ஞாயிறு அனைய
மூதறிஞர் நம்பி பார்த்தார் -
எழு ஞாயிறு[3] அனையவனின்
ஏக்கறவை வியந்து!

“ராமானுஜரே! ஏன் -
ரொம்ப அவசரப்படுகிறீர்?
என்னைக் கண்டதும்
ஏன் இன்னணம்...

காதலாகிக்
கருத்தழிந்து -
கண்ணீரைக்
கசிய விடுகிறீர்?

புண்யகோடி விமானத்தின்கீழ் -
பொலிவுற வீற்றிருக்கும்...

அத்திகிரி
அருளாளன் சந்நிதியில்[4] -
உமக்கு
உபதேசம் செய்கிறேன்; வாரும்!

ஆக்கப் பொறுத்தவர்
ஆறப் பொறுக்க வேண்டும் - என
ஒரு வசனம் உள்ளது; அ·.தை -
ஓரும்!”

என்றார் பெரிய நம்பி;
ஏற்கவில்லை அரிய நம்பி!

“ஸ்வாமி!
ஸ்வாமி ஆளவந்தார் விஷயமாக -

அடியேன் - போதிய
அவசரம் காட்டியும் -
நான் போகுமுன் - அவர்
வான்போக வில்லையா?

காலமெல்லாம் - நானென்ன -
கொழுகொம்பில்லாத முல்லையா?

தேவரீர் -
தமியேனுக்கு -
திருக்காஞ்சியில் -
தேவராஜன் சந்நிதியில்...

உய்யும் வழியை
உபதேசிக்கத் -
திருவுளம் கொண்டிருப்பது
தண்ணளி ஆகாது;

பொன்னகர் காஞ்சிக்குப்
போய்ச் சேரும்வரை...

என்னுயிர் -
எனதோ எமனுடையதோ?
இ∴தை -
அறுதியிட்டுக் கூற -
ஆளுளதோ அம்புவிமீது?

காடு போவதற்குள் - ஒருவன்
கற்றறிய வேண்டாமா -
வீடு போவதற்கான - ஓர்
உபாயத்தை?

அரைநொடியில் வரலாம்; நூறு
ஆண்டுகள் ஆகியும் வரலாம்;
ஆரறிவார் முன்னதாக - அந்த
அந்தகன் வரும் அபாயத்தை?

நெருநல்; இன்று;
நாளை;
என்றெல்லாம் பார்த்தா - மறலி
ஏந்துகிறான் வாளை?

ஆதலால்
அடியேனுக்குத் -
தட்சணமே
தேவரீர் அருள வேண்டும்...

பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து -
பவித்ர மந்திரோபதேசத்தை;

சீடனாய்
சுவிகரித்து - தேவரீருடைய
செய்ய கடாட்சத்தால்
சுத்தி செய்ய வேண்டும்...

மும்மல அழுக்குகள் -
மொய்த்த என்பாதாதி கேசத்தை!”

இன்னணம்
இளையாழ்வான் பிரார்த்தித்து...
திரும்பவும் - பெரிய நம்பி
திருவடிகளில் விழ -
அவர்
அவன் -

முடி பிடித்து எடுத்து
முதுகை தட்டிக் கொடுக்க ...

ஓர்ந்தான் - தன்னுள்
ஓர் புத்துணர்வு எழ

மதுராந்தகம் கோயிலில் - ஒரு
மகிழமரத் தடியில் ...

இராமானுஜனை
இருத்தி - பெரியநம்பி
அஞ்சு சம்ஸ்காரங்களை -
ஆற்றினார்;

'மந்திர ரத்தினம்' - என
மதிக்கப் பெறும்
திவ்யத்தை - அவன்
திருச்செவியில் சாற்றினார்!

"இராமானுஜரே! நீர் -
இப்போது உபதேசம் பெற்றது...
அடியேனிடம்
அல்ல;

அடியேன் இப்பணியை
ஆற்றினேன் - என்
ஆகத்துள் இருந்து
ஆளவந்தார் ஸ்வாமி சொல்ல!"

உணர்வு பொங்க - நம்பி
உரைத்தார் இவ்வாறு;

ஆக - இளைய
ஆழ்வானைத் - தன்
சீடனாக ஏற்று - அவன்
செல்லக் காட்டினார்...

உய்ய -
உதவுகிற ஒரு செவ்வாறு!

3.திருக்கோட்டியூர்நம்பி

திருவரங்கத்திலிருந்து கோட்டியூர் கால்நடையாக வந்த இளையாழ்வார்

அவ்வூரிலுள்ளாரை உசாவி கோட்டியூர் நம்பியின் திருமாளிகை இருக்கும் இடம் அறிந்து அங்கு சென்றார்.

காய்ந்த தென்னங்
கீற்றுகள் - அழகுற
வேய்ந்த அச்சிறு
வீட்டின் முகப்பில்...

பந்தல் ஒன்று
போட்டிருந்தது;

பலாப் -
பலகைமேல் அமர்ந்தபடி...

கோட்டியூர் நம்பிகள்
காலட்சேபம் சாதிக்க - சீடர்
கூட்டமொன்று - அதைக்
கூர்ந்து கேட்டிருந்தது!

எட்ட நின்று - ஒரு கணம்
எதிராஜர்...

திருக்கோட்டி நம்பியின்
திருமேனியை நோட்டம் விட்டார்;
பட்டுக்கரை போட்ட
பத்தாறு அணிந்து -
பன்னிரு புண்டரங்கள்
பளிச்செனப் புனைந்து -

சதுர்மறையே - ஒரு
சரீரம் தாங்கி -
சிறுகுடில் வாசலில்
சம்மண மிட்டபடி -

வித்தியார்த்திகளுக்கு
வித்தியாயி தானம்
வழங்குதல் கண்டு...

பெரும்பூதூர்
பிறந்த -
வள்ளல் - தம்மிரண்டு
விழிகளால் தண்டம் இட்டார்!
....
நேராகச் சென்று - கோட்டியூர்
நம்பிகளின்...

செங்கமலச்
சேவடிகளில் - உடையவர்
சாஷ்டாங்கமாக விழுந்தார்;
சேவித்து எழுந்தார்!

விழிகளாலேயே 'யா'ரென்று -
வினவினார் கோட்டியூர் நம்பி;

பவ்வியமும்
பரவசமும் கலந்து -
பதில் சொன்னார்
பண்புகள் கொண்டாடும் நம்பி!

"அடியேன் - தேவரீர்
அடிமலர்க் கீழமர்ந்து...

த்வயம்;
திருமந்திரம்;
இவற்றின் -
இறைச்சிப் பொருள்களை -

உபதேசமாகப் பெற்று
உய்ய வேண்டி...

பெரியவர்
பெரிய நம்பி அனுப்பி - இங்கு
வந்து நிற்கிறேன்; திருவருள் -
வாய்க்குமாயின் கற்கிறேன்!"

உடையவரின்
விண்ணப்பத்தை - ஒரே நொடியில்
திருக்கோட்டியூர் நம்பி
தள்ளுபடி செய்தார்!

"இப்போது சௌகரியப்படாது;
இன்னொரு சமயம் பார்ப்போம்!"

இன்னணம்
இயம்பி விட்டு -
திருக்கோட்டியூர் நம்பி - தம்
திருமாளிகை புகுந்தார்;
உத்தமர் இராமானுஜர் -
உளவருத்தம் மிகுந்தார்!

இருப்பினும்
இளைக்கவில்லை;

தான் கொண்ட
திட -
சங்கற்பத்தில்
சளைக்கவில்லை!

திரும்பினார்
திருவரங்கம்;

சில நாட்கள்
சென்று -
திருக்கோட்டியூர் நம்பியின்
திருமாளிகை முன் -
வந்து நின்று வேண்டினார்
வைணவச் சிங்கம்!

“இன்னொரு சமயம் பார்ப்போம் -
இன்னொரு சமயம் பார்ப்போம்!”

இப்படியே சொல்லி - ஸ்ரீ
இராமானுஜ முனியை -
திரும்பத்
திரும்பத்
திருவரங்கம்
திரும்பச் செய்தார்...
....
திருக்கோட்டியூர் நம்பி!

ஒருமுறையல்ல;
இருமுறையல்ல;
பங்கயப்
பாதம் நோகப் -
பதினெட்டு முறை
போய்ப் போய்த் திரும்பினார்...
உடையவர்!...
....
ஓருநாள்
ஒரு பாகவதர் -
திருக்கோட்டியூரிலிருந்து
திருவரங்கம் வர...

ஏக்கமுற்றிருந்த
எதிராஜர் - ஆழ்வார்
பாசுரம் ஒன்றை - அந்த
பாகவதரிடம் உரைத்தார் -
தன்
தூதாக; திரு

கோஷ்டி நம்பி -
கேட்கத் தோதாக!

“பொன்னாழிக் கையார்க்கு -
பூந்துழாய் முடியார்க்கு - இங்கு
என்னாவி ஈடழித்தல் -
தகவல் என்று இயம்பீரே!”

இராமானுஜ முனி -
இசைத்த பாசுரத்தை -
திருக்கோட்டி நம்பியிடம் -
தொண்டர் போய்த் தெரிவிக்க...

அவரும் -
அன்பின் அகம் இளகி -

“ஒரு மாதம்
உண்ணா நோன்பிருந்து - பின்
உபதேசம் பெற - எதிராஜரை
வரச் சொல்!” என அறிவிக்க...
....
உடையவரின்
உண்ணா நோன்பு -
நிறைவுற்றதை
நம்பி அறிந்ததும்...
“உடையவரை -
உபதேசம் பெற வரச்சொல் -
தனியாக -
தண்டு பவித்திரத்தோடு!”

என்று -
எதிர்நின்ற சீடனிடம் -
கோஷ்டி நம்பி
கூறினார்;
கூரேசர்; முதலியாண்டான்;
கூடவர -
உடையவர் - தமக்கு
உபதேசிக்குமாறு...

நம்பியை வணங்கி
நயந்து கோரினார்!
....
பிறகு - வலப்
பக்கத்தில் -
உடையவரை

உட்கார்த்தி வைத்துக் கொண்டு...

“உமக்கு நான்
உபதேசிப்பதை - நீர்
பிறர்க்குச் சொன்னால்
பாழ்நரகம் போவீர்!”

என்று -
எச்சரித்து...

செவியில் திருமந்திரத்தைச்
செப்பினார்; குருவாக்கை -
உடையவரும் காக்க -
ஒப்பினார்!

ஆனால் -
அனை அனைய எதிராஜர் -
கொடுத்த வாக்கை மீறினார்;
கோயில் கோபுரம் ஏறினர்!
....
உடனே - கோபுர
உச்சியில் ஏறிநின்று
ஊரவரைக் கூட்டி
உபதேசம் பண்ணினார்!

“பகவான்
பரம காருண்யம் மிக்கவன்;
எளிவந்த தன்மைக்கு
எடுத்துக் காட்டு -
அவன்தான்;
அவனேதான் எனத் தக்கவன்!

சாதி;
சமயம்;
சாத்திரம்;
சடங்கு;

எதையும் அவன்
எதிர்பார்ப்ப தில்லை ;
உங்கள் நாவில்
உட்கார்த்துங்கள் -
ஏற்றமிகு அவனது
எட்டெழுத்துச் சொல்லை!
அந்தத் திருமந்திரத்தை
அன்றாடம் சொல்லுங்கள்
ஓம் நமோ நாராயணாய - எனும்

ஒப்பரிய மந்திரத்தை - தினம்
ஓதி ஓதி ஓதி ஓதி -
ஓயா வினைகளை வெல்லுங்கள்!

சரண் புகுந்தார்க்கு - அவன்
அரண்;
வேறு சடங்குகள்
வேண்டாம்; அவற்றில்
முன்னுக்குப் பின் இருக்கும்
முரண்!

நாராயணா என்னாத
நாவென்ன நாவே? [6]
நாராயண என்பீரேல்
நலம் காக்க நேர்வரும் தேவே!

கூவிக்
கூப்பிடுகையில்...

தும்பிக்கு வந்தவன் ;
துருவனுக்கு வந்தவன் ;
நம்பிக் கூவுங்கள் -
நமக்கும் வருவான்!"

என்று - எதிராஜர்
எல்ல இனத்தார்க்கமும் -
பொதுவுடைமை ஆக்கினார்
புண்ணிய நாமத்தை ; திருக்
கோட்டியூர் மாந்தர்க்குக்
கூட்டினார் சேமத்தை ;

ஆசிரியரின் அடங்கா சினம்

"வாக்குத் தவறினீர் ;
வீழ்வீர் நரகத்தில் !
என்று
எரிந்தார் கோட்டையூர் நம்பி ;
படபடவெனப் -
பொரிந்தார் கோபத்தில் வெம்பி !

சீடரின் சாந்தமான பதில்

"ஆசிரியப் பிரானே!
அடியேன் அறிவேன் -
ஆசாரியரிடம்
அபசாரப் பட்டதால்...

நிச்சயம்
நரகம் புகுவேன் என்று;
திருமந்திரத்தை
தினம் ஓதி...

பல்லுயிர்
பரமபதம்
பெற்றுப்
போவரேல்
நானொருவன்
நரகம் புகுதல் நன்று!

உன்னினேன் இப்படி;
உரைத்தேன் அப்படி;
தமியேன் நடக்கவில்லை -
தேவரீர் சொற்படி!"

கோட்டியூர் நம்பியின் ஆசி

இவ்வாறு - ஸ்ரீ
இராமானுநுஜர் சொன்னதும்...

கோட்டியூர் நம்பி - மனம்
குளிர்ந்து போனார் ;

ஊர் வாழ
நீர் வார்த்து - மாயும்
கார் நிகர்த்த ராமானுஜரின்
கருணையைக் கண்டு...
சிந்தை -
சில்லிட்டவும் ஆனார்!

"எதிராஜரே !
எவர் உமக்கு நிகர்?
உலகம் உள்ளளவும்
உமது உதார குணத்தை -
தேசத்திற்குச் சுட்டும் - இந்தத்
திருக் கோட்டியூர் நகர் !

ஏராளமான கருணை -
எம்பெருமானிடம்தான் உண்டு ;
ஏத்தும் உம்மையும் - இப்புவி
'எம் பெருமானார்' என்று!"

அருமைச் சீடரை -

ஆரத் தழுவி...

திருவரங்கம் திரும்பத் -
தந்தார் விடை ; புதுப்
பொலிவோடும் - வலிவோடும் -
பூரணத் திருப்தியோடும் -
பொன்னரங்கம் நோக்கி - சீயர்
போட்டார் நடை!

4. யமுனைத்துறைவர்

(அ) நாத முனி -
ஈன்ற திருக்குமாரர்
ஈசுவர முனி ;

ஈசுவர முனி
ஈன்ற திருக்குமாரர் -

யாமுனர் எனப்படும்
யமுனைத் துறைவர் ;
இன்றளவும் வைஷ்ணவர்க்கு -
இன்னோர் இறைவர்!
....
ஞாலம் நம்ப மறுக்கும்
ஞானம்...

கசடறக்
கற்பிக்கப்பட்டிருந்தது -
யாமுனர்க்கு - அவரிருந்த
யாயின் கருவிலே;

ஆயகலை
அனைத்திற்கும் -
அதிதேவதையான
அயக்கிரீவர்...

அம்புலி இறங்கினா ரெனலாம் -
அவர் உருவிலே!
....
உலகியலை
உத்தேசித்து...
மறைகளை;
மறைக்குள் மறைவாயிருக்கும்
நிறைகளை;

சாத்திரங்களை;

சாத்திரஞ் சாற்றுகின்ற
சூத்திரங்களை;
வைணவத்தின்
வைபவங்களை;

பிரபந்தங்களின்
பிரபாவங்களை ;

மறையவர்கோன் எனப்படும்
மகாபாஷ்ய பட்டரிடம்...

ஒரு
வித்தியார்த்தியாகி - யாமுனர்
வாசிக்க லானார் ;
பிறவியிலேயே
பிராக்கினாகப்
பிறங்குகின்ற
பிள்ளைக்கு...

புகட்டவோ
போதிக்கவோ - தன்வசனம்
யாது உளது என - ஆசாரியர்
யோசிக்க லானார்!
....
விச்சிராந்தியாக
வீற்றிருந்தது - நல்ல
யாய்; அத்தன் பெற்றெடுத்த
யாமுனர் நாக்கில்
வீரநாராயணபுரமே -
விரல் வைத்தது மூக்கில்!

ஆறிரண்டு அகவையில் -
அமோகமான பிரக்கியாதி ;
வாதியாய் - யாமுனர்
வாதிட்டு நின்றால் - அந்த
வட்டாரத்தில் இல்லை - அவரை
வெல்லவல்ல பிரதிவாதி !
....
அந்த நாளில் -
அன்ன வயல்கள் நிறைந்த
அந்தப் பிரதேசத்தை - ஓர்
அரசன் ஆண்டு வந்தான்;

வடமொழியிலும் -
தென்மொழியிலும் -

புலமை சார்ந்த
புலவோர்க்கு;
புகலாயிருப்பவன் - எனும்
புகழைப் பூண்டுவந்தான்!

ஒருவன் மாட்டு
ஒப்பரும் மேதமையிருந்தால் -
உடனே
உவந்து...
பரிசில் வழங்கும்
குரிசில்!

அரசன் போலவே -
அரசி ;
புலை வறுமை
புலவரை வாட்டாது - உதவுவாள்
உலை அரிசி!

அன்னணம் -
அறிவை ஆராதித்த ஆட்சியில்...

ராஜ புரோகிதனாகவும் -
ராஜ பண்டிதனாகவும் -
ராஜ சபையில் வீற்றிருந்தான்
ராஜனால் வணங்கப்பெற்ற...

வித்வஜன கோலாகலன் - எனும்
வித்துவான்; அவனது
வித்துவத்திற்கு உவமை
விரிந்த வான்!

அவனை -
அவ்வூரார்...
ஆக்கியாழ்வான் என்றும்
அழைப்பது உண்டு ; ஊர் -
எழுந்து நிற்கும் - அவன்
எதிர்வரக் கண்டு!

உடல் எடுத்து
உலவும் - நூற்
கடல் எனும்படி
கல்வியிலிருந்தும்...

'செருக்கும் தருக்கும் - புகழைச்
சுருக்கும் ; கருக்கும்!' எனும் -
ஆன்றோர் சொல்லை -

ஆக்கியாழ்வான் ஏற்கவில்லை !

வித்தையில் - மண்டை
வீங்கிப் - போய்க் கிடந்தான் ;
வீதியில் நடக்கையில்
வானம் பார்த்து நடந்தான்!

இருக்கும் புலவர்க்கு - தானே
இறை என்றான் ; அவர்கள்
இறுக்க வேண்டும் - தனக்கு
இறை என்றான் ; அங்ஙனம்
இறை இறுக்காது போனால் -
சிறை என்றான்!

யாரிடம் -
யமுனைத் துறைவர்...

வேதம்
வாசித்து வருகிறாரோ - அந்த
வந்தது ஓலை -
'கப்பம் - ஏன்
கட்டவில்லை' என்று;

பாஷ்ய பட்டர்
பொறி கலங்கினார் -
கப்பம் கட்டக்
கைப்பொருள் இல்லாமல் நின்று!

விழி -
வழி -

அருவி சோர ;
ஆசாரியர் மனம் -
வெருவி சோர;
அதுகண்டு -
ஆற்றமாட்டாமல்...

வெகுண்டார் யாமுனர்;
வாங்கினார் ஓலையை;

அதைக் கிழித்துப்போட்டு
அதிகப் படுத்தினார் -
ஆக்கியாழ்வானின்
அடிவயிற்றுச் சூலையை!

ஆளை அனுப்பினான். விவரம் தெரிந்து வர. பதில் விடுத்தார் யாமுனர்

கவிதையில். தான் கவித்துவம் கைவரப் பெற்றவன் அல்ல என்றும், ஆனால் ஆற்றல் உடையவன் என்றும், அரியணை நிகர்ந்த ஆண்டகை ஆகி கரியினை நிகர்ந்தவன் கர்வத்தைக் கொல்வல்லவன் என்றும் குறிப்பிட்டிருந்தான். விடலைப் பையன் விடுத்த ஓலையைக் கண்டு வேந்தே வியந்தான். அரசவைக்கு வருமாறு பணித்து ஓலை அனுப்பினான். அதனையும் கிழித்து எறிந்தான். வெகுண்டான் வேந்தன். தண்டியை அனுப்பி மரியாதையோடு தருவிப்பதுதான் முறை என்று அரசமாதேவி சொல்ல அவ்வாறே அனுப்பப் பெற்றது.

பல்லக்கு ஏறி
பவனி வந்தது -
பன்னிரண்டு வயது அறிவு;
அடடா!
பார்வையில்தான் என்ன செறிவு!

'பாருங்கள் வேந்தே! அந்தப் -
பிள்ளையின் விலாசத்தை' என்று -

அரசி -
வேந்தனிடம் - சுட்டினாள்!

"உங்கள் ஆக்கியாழ்வான் - இந்த
உன்னதப் பிள்ளையை வென்றால் ...

நான் -
பட்டத்தரசியல்ல; உமது
பணிப்பெண் ஆவேன்;
நீங்கள்
நடக்கும் இடமெல்லாம் - நான்
அடைப்பம் சுமந்து - உங்கள்
அடியொற்றிப் போவேன்!"

மன்னன்
மெலிதாய்ச் சிரித்தான்;
பந்தயத்தில் - தன்
பங்கு என்னவென விரித்தான்!

"ஆக்கியாழ்வானை - உனது
அறிவுக் கொழுந்து வென்றால்...

பாதி ராஜ்ஜியத்தை - அந்தப்
பிள்ளைக்குத் தருவேன்; தந்து -
மீதி ராஜ்ஜியத்தை - நான்
மன்னாயிருந்து ஆண்டு

வருவேன்!"

பந்தயம் தொடங்கியது, சிறுவன் வென்றால் ஆக்கியாழ்வான் அடிமையாவான் என்பது நிபந்தனை. ஆக்கி சொன்னது:

நீர் -
'உண்டு' என்பதை - நான்
இல்லை' என்று மறுதலிப்பேன்;
நீர் -
'இல்லை' என்பதை - நான்
'உண்டு' என்று மூதரிப்பேன்!"

என்பதாகும்.

சிறுவன் சொன்னது இது:

அடியேன்
அறிவிக்கும்
மூன்று விஷயங்களை - நீர்
மறுக்க வேண்டும் ;

மூன்றையும் மறுக்க - உம்மால்
முடியாது போயின்...

இனி
இச் சிறுவனுக்கு - நீர்
இறை
இறுக்க வேண்டும்!

(1) ஒன்று...
உமது -
அன்னையார் ஒரு மலடியல்ல!"

(2) இரண்டு...
உமது -
அரசர் ஒரு தார்மிகன்!
(3) மூன்று...
உமது -
அரசியார் ஒரு பதிவிரதை!"
....
வித்வஜன கோலாகலன் - என
விளங்கும்...
....
ஆக்கியாழ்வான் -
ஆணவ முடிச்சு அவிழ்ந்தான்;

‘தோற்றேன்!’ எனத் -
தலை கவிழ்ந்தான்!

“நீர்
நவின்ற
மூன்றையும் மறுக்க -
முடியுமோ உம்மால்?”

என -
யாமுனரை…

அரசனும்
அரசியும் கேட்க -
‘முடியும்!’ என்றார் யாமுனர் -
முகத்தில் முறுவல் பூக்க!
……………………..

(1) உலகியல்
வழக்கின்படி
ஒரு மரமும் தோப்பல்ல ;
ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல!

‘பெற்ற ஒன்று -
பிழைத்திருக்குமோ?
பிழைத்திருந்து
பின்னாளில் -அது
உற்ற தாய்க்கென
உழைத்திருக்குமோ?’

என்று -
எந்தத் தாயும்…

மனக்கவலையிலேயே - சதா
மூழ்கிப் போவாள்; ஆதலால் -
மகவு பெற்றும் - அவள்
மலடியே யாவாள்!
ஒரே
ஒரு மகனாக -
ஆக்கியாழ்வானைப் பெற்ற
அவரது அன்னையார்…

‘மலடியல்ல!’ என்று -
மொழிந்தேனே நான் - அந்த
முதல் வாக்கியம் - தவறென்று
மறுக்கப்படுகிறது!

(2) மக்கள் செய்யும் பாவம் -
மன்னனைச் சாரும் என்பது -
மறைமொழி ; மூத்தோர் சொன்ன -
நிறைமொழி!
'அரசன் ஒரு தார்மிகன்!' என -
அடியேன் சொன்னது...

தர்ம சாஸ்திரப்படி
தவறானதாகும்;
குடிகளின் பாவங்களிலே -
கொற்றவனுக்கும் பங்கு போகும்!

எனவே -
என்னுடைய -
இரண்டாவது வாக்கியமும் -
இங்கு மறுக்கப்படுகிறது!

(3) வேதவாக்கியப்படி
வைதீக முறையில்
விவாகம் புரிந்து கொண்ட - ஒரு
வனிதை யானவள்...

முதல்நாள் - சோமனின்
மனைவியாகிறாள்;

இரண்டாம் நாள் - கந்தர்வனின்
இல்லா ளாகிறாள்;

மூன்றாம் நாள் - அக்கினியின்
முறைப்பெண் ணாகிறாள்;

நான்காம் -
நாளில் தான்...

திருக்கரம் பற்றித்
தீவலம் வந்த
நாயகனுக்கு - அவன்
நாயகி யாகிறாள்!

மணம்
முடித்த பின் -
முதல்
மூன்று நாள்கள்...
தேவதைகள் மூவரோடு
தொடர்பு உண்டவதால் -
வேத நெறிப்படி

விவாகம் செய்து கொண்ட -

பாவையர்க் கெல்லாம் -
பாதிவ்ரத்யத்தில் குறையுண்டு;
நான் சொல்லும் கருத்துக்கு -
நற்சாட்சியாக மறையுண்டு!

அதன் -
அடிப்படையில் பார்த்தால்...

சாஸ்திரோக்தமான
சடங்குகளுடன் -
அரசனை மணம்புரிந்த
அரசியாரை...

'ஒரு பதிவிரதை!' என்று
உரைத்தேனே நான் - அந்த
மூன்றாவது வாக்கியமும்
மறுக்கப்படுகிறது!"

யாமுனர் விளக்கம் கேட்டு -
யாவரும் வியப்பெய்த...

பணிப்பெண்ணாகாது - தனைப்
பட்டமகிஷியாகவே இருத்திய
புத்திசாலிப் பிள்ளையைத் - தன்
பக்கலில் அழைத்து -

உற்சாகம் பொங்க - அரசி
உச்சி முகர்ந்தாள்;

'அய்யா! என்னை நீர்
ஆளவந்தீரோ?' என -
ஆனந்தக் கண்ணீர்
அரும்பிடப் பகர்ந்தாள்!
அரசிக்கு -
அளித்த வாக்குப்படி...

அரசனும்
அரை ராஜ்ஜியத்தை -
அறிவார்ந்த யாமுனருக்கு
அளித்தான்;

அவனும்
அவரை -

'ஆளவந்தாரே!' என
அன்பொழுக விளித்தான்!

அன்று முதல் யாமுனர்
"ஆளவந்தார்" ஆனார்;
அந்தணச் சிறுவனாய்
அத்தியயனம் செய்தவர் -
ஆளுகை புரியும்
அரசராகிப் போனார்!
…………………………..
இராஜ போகமாக…

ஆளவந்தார் வாழ்க்கை
அமைந்தது;

இவ்வாறு –
இலௌகீக சுகங்களில்
நாதமுனியின் பேரர்
நாளும் கிடக்கிறாரே!' என்று -

ஒரே
ஓர் உள்ளம் -
கவன்று
குமைந்தது!

அங்ஙனம் -
அரற்றிய…

மகானுபாவரின் திருநாமம்
மணக்கால் நம்பி; நாலாயிரப்
பாசுரப் பூக்கள்
பிலிற்றுகின்ற –தமிழ்
மறைத்தேனை
மாந்தித் திரியும் தும்பி!

ஆளவந்தாரின்
அருமைப் பாட்டனாரின் -
சீடருக்குச்
சீடர் இவர்;
இல்லை ஒரு தவர்!

தூதுவளைக் கீரையைக் கருவியாகக் கொண்டு ஆளவந்தாரின் தரிசனம் பெற்று தம்மை இன்னாரென அறிமுகப்படுத்திக் கொண்டு,

மணக்கால் நம்பி
மெல்ல மெல்ல -
ஆளவந்தாரை

ஆற்றுப் படுத்தினார்;
நாட்பட -
நாட்பட ...

ஆளவந்தாரும்
அவரது உள்ளத்திற்கு -
ஆன்ம ஞானமெனும்
ஆடையை உடுத்தினார்!

துறவு பூண்டு -
திருவரங்கம் போந்தார்;

முக்கோல் பகவராகி
முன்னின்று பாடுபட்டு
தக்கோர் ஏத்தும் - வைணவ
தரிசனத்திற்கு...

வற்றாத
வலிவும் பொலிவும் ஈந்தார்!

(ஆ) ஸ்ரீரங்கத்தில்
ஸ்ரீவைஷ்ணவ தரிசனமே -

ஸ்தூல சரீரத்தை
ஸ்வீகரித்துக் கொண்டு -
ஸ்தோத்தரிக்கத் தக்க
ஸ்வரூபமாய்...

எழுந்தருளினாற் போல் -
எழுந்தருளியிருக்கும் -

முக்கோல் சுமந்த
முனி;
முன்னால் அணிந்த
முன்னூல்;

பொருளரசு -
பொய்யெனப் புறந்தள்ளிய
அருளரசு;

பல்லுயிர்
பிறப்பொழிக்க - இதம் சொன்ன
நல்லுயிர்;

ஆளவந்தார் எனும்
அந்தணர் வேந்து -

எப்பொழுதும் இராமனுஜனின்
எண்ணமா யிருந்தார்;

'இராமனுஜன் -
இங்கு வரவேண்டும்;
இராமனுஜன் -
இங்கு வரவேண்டும்!' என்று...

ரங்கநாதனிடமும் -
ரங்கநாயகியிடமும் -

அனேக மாதங்களுக்கு முன்பு -
ஆளவந்தார்...

காஞ்சியில் ராமானுஜனைக்
கண்டிருக்கிறார்;
கண்ட மாத்திரத்தில்
காதலாகி -

வழுவறு - ஞான
வாரியென ஓர்ந்து
விழி வாயால் - வேண மட்டும்
வாரிவாரி உண்டிருக்கிறார்!

விண்ணிலிருந்து - ஒரு
பெண்ணில் இறங்கி - பிறகு
பெண்ணிலிருந்து - இம்
மண்ணில் இறங்கிய...

மாதவம் - என்று
மயங்கியிருக்கிறார்;
பக்கம் அழைத்துப்
பரிவோடு அணைத்துப்
பேசத் தவித்தவர் - பிறகு
பேசத் தயங்கியிருக்கிறார்!

யதி
யாதவப் பிரகாசரோடு -
வீதியில் இராமானுஜன்
வந்து கொண்டிருந்ததால்...
சந்திக்க - அது
சந்தர்ப்பம் அல்ல என்று -
ஆளவந்தார்
அவ்விடம் விட்டு அகன்றார்;

இந்த
இராமானுஜனை -
எப்படியாவது
என்றேனும் ஒருநாள்...

திருவரங்கத்திற்குத் - தான்
தருவிக்க வேண்டுமென்று -
திருக்கச்சி நம்பியின்
திருச்செவிகளில் புகன்றார்!

இப்போது -
இராமானுஜன்...

திருப்புட்குழியின்
தொடர்பு இன்றி -
தனித்திருக்கும்
தகவலை அறிந்ததும்...

ஆளவந்தார்
ஆனந்தப் பட்டார்;
தன் பிரார்த்தனைக்குத்
தாயாரும் பெருமாளும் -
காது கொடுத்ததை எண்ணிக்
கண்ணீர் விட்டார்!

ஆளவந்தாரின்
அருளார்ந்த திருமேனியை...

விருத்தாப்பியம்
விழுங்கியது போக -

ராஜ பிளவை[8] - எனும்
ரோகமும் -
சிறுகச் சிறுகச்
சாப்பிட்டு வந்தது!
அது -
அவர் முனம் செய்த -
கர்மவினை
கூப்பிட்டு வந்தது!

இன்னணம்
இருவழிகளில் வந்து
இறவு – தன்னை
இறுக்குவதை எண்ணியே...

அந்தணர்

அரசாக - தனக்கு
அடுத்தபடியாய்
ஆண்டகை ராமானுஜனை -

அரியாசனத்தில் அமர்த்த
ஆளவந்தார் அவாவி நின்றார்;

பிரிய சீடர் -
பெரிய நம்பியிடம்...

"காஞ்சி சென்று -
ராமானுஜனைக்
கூட்டி வருக!" என்றார்!

இளையாழ்வானோடு - பேச
இருப்பதை யெல்லாம்...

அங்கிருந்த தனது
அடியார்களிடம் -
ஆளவந்தார் விரித்தார்
அரங்க நாதர் சிரித்தார்!

(இ) "யாமுனர் என்றும்;
யாமுனாசாரியார் என்றும்;

பூர்வாசிரமத்தில் -
புகழ்சால் தனவானாக;
புரை எதுவும் -
புந்தியில் இல்லா கனவானாக;

அறியப் பெற்ற
அடியேனுடைய (= பெரிய நம்பிகள்)
ஆசிரியப் பிரான் -
ஆளவந்தார் ஸ்வாமிகள் தான்...

வரதராஜன் துதியெனும் - இவ்
வண்ணமக் கவிதையை வனைந்தவர்;

நாராயண
நாமமெனும் -
நன்மழையில்
நாளும் பொழுதும் நனைந்தவர்!"

எட்டுள்
இருப்பவனை - செய்யுள்கள்
எட்டுள்

....
“வைணவ சித்தாந்தத்திற்கு -
வாய்த்த காப்புச் சுவர்!

அத்தகு
ஆளவந்தார் ஸ்வாமி - முனம்
அரங்கம் விட்டு - இவ்
அத்தியூர் வந்த காலை...

தமியனுக்குக் கிட்டவில்லை (= இராமாநுஜனுக்கு)
தரிசிக்கும் பேறு;
என் செய்ய?
என் ஊழ் அவ்வாறு!

எனினும் -
என்றேனும் ஒருநாள்
ஏற்படலாம் எனக்கு - அவரை
எதிரில் காணும் பாக்கியம்;

உண்மையில் - என்
உள் மனத்தில் - அப்படி
ஒலித்தபடி உளது -
ஓர் அசரீரி வாக்கியம்!

அது ஒருபுறம் இருக்கட்டும்;
ஆளவந்தார் ஸ்வாமிக்கு...

திருமேனி பாங்கில்லை - என்று
தெரிய வந்தது; அது
தெரிய வந்த நாள்முதல் - அத்
தகவல் வருத்தம் தந்தது!

ஸ்வாமிக்கு
ஸ்வஸ்தமாகி விட்டதா?

கோயில்
கொண்டிருக்கும்

திவ்ய
தம்பதியின்
திருநோக்கு - ஸ்வாமி
திருமேனியில் பட்டதா?”

இன்னணம் - விசனமொடு
இராமானுஜன் வினவ...

விளக்கினார் பெரியநம்பி

....

'ஸ்வாமி ஆளவந்தாரின் ஸ்திதி -
ஸ்வாரஸ்யமாக இல்லை;

ரங்கநாயகியும் -
ரங்கநாதனும் -
ரட்சித்தால்தான் தீரும் -
ராஜபிளவையின் தொல்லை!

ஷணந்தோறும்
ஷீரசாகரனைத் தொழும் -
ஸ்வாமி
ஷேம மடையாமல் - திருமேனி
ஷீணிந்து வருவதால் தான்...

உம்மை அழைத்துப்போக - நான்
ஓடோடி வர நேர்ந்தது;
பெரிய
பிரயாசைப் படாது - உம்மைப்
பார்த்துவிட்டதால் - எனக்கும்
பாதிவேலை தீர்ந்தது!"

பெரிய நம்பியின்
பேச்சு பிடிபடாமல்...

இராமானுஜன் நின்றான் -
இருவிழிகள் விழித்தபடி;
கச்சிநம்பி வந்து நின்றார் -
கிட்டத்தில் சிரித்தபடி!

....

"அவர் – உன்னை
அழைத்து வரச் சொல்லி
ஆள் விடுத்திருக்கிறார்; நோயில்
அங்கே படுத்திருக்கிறார்!

....

அவரது
அந்தராத்மா -
அவாவுகிறது - உன்னை
அருகில் வைத்துப் பார்க்க;

அன்னணம் உன்னை
அருகில் பார்த்தால் -
அது உதவலாம்
அவரது நோயினைத் தீர்க்க!

என் மனத்திற்கு -
என்ன படுகிறது என்றால்...

திருவரங்க விஜயம் - ஒரு
திருப்புமுனை யாகலாம்
உனக்கும்; வைணவம்
தனக்கும்!

அப்பா! ராமானுஜா!
அரங்கனின் ஊருக்கு...

புறப்படு -
பெரியநம்பியோடு; உன்னை
அழைத்திருப்பது - துவர்
ஆடைகட்டிய ஞானவீடு!"

....
இராமானுஜன் மகிழ்ந்தான் -
இதயம் நெகிழ்ந்தான்!'

....
நேர் நிற்கும் -
நம்பிகள் இருவரையும் - மேனி
நிலந்தோய - சாஷ்டாங்கமாய்
நமஸ்கரித்தான் -

'பின்னாளில்
பெரும்புகழ் சூழ்வான்!' என -
இந்நாளிலேயே கோடிகாட்டும்
இளைய ஆழ்வான்!
....

எல்லா விவரங்களையும் பெரியநம்பி இராமாநுஜனுக்கு ஆதியோடந்தமாய் விவரித்தார்.

இரண்டு மூன்று நாள்களில் -
இருவரும்...

திருவரங்க எல்லையைத்
தொட்டனர்;
தொட்ட மாத்திரம் - ஒரு
தகவல் செவியில் விழ -
துணுக்குற்றுத் -
துடிதுடித்து விட்டனர்!

'ஆளவந்தார் ஸ்வாமி - திருநாடு
அங்கரித்து விட்டார்!'

இந்தத் தகவல்தான்
இராமனுஜனையும் -
பெரிய நம்பியையும்
பெரியதாய்...

திடுக்கிட வைத்தது; நெஞ்சம்
நடுக்கிட வைத்தது!
....
நான்கு
நாள்கள்...

கல்லும் முள்ளும்
நடந்து வந்து;
நெடுமூச்சு வாங்க
நடந்து வந்து;

காவிரி ஊரின் எல்லையில் -
கால் வைக்கையில்...

இப்படி ஆகிவிட்டதே - என்று
இடிந்து போனார் பெரிய நம்பி;

அன்னையைப் பிரிந்த
ஆறு மாத சிசுபோல் -
அழுது அரற்றினார்
அன்புடைமனம் பெரிதும் வெம்பி!

நான்முகன் - தன் தலையில்
நல்லெழுத்தாய் எழுதவிலையே -

என்று
ஏகப்பட்ட -
சுயபச்சாதாபம் கொண்டு
சோகாப்பின் வயப்பட்டான் -
தகவுமிக்க குணாளன்;
தஞ்சமாம்பாள் மணாளன்!
....
ஊர் அழுதது; காவிரி -
நீர் அழுதது; கோயில்
தேர் அழுதது; கோதைத் தமிழ்ச் -
சீர் அழுதது;
....
சாரி சாரியாக
சாரி சாரியாக -

ஊர்

ஊர்ந்தது...

காவிரிக் கரையில் உள்ள
கரம்பன் கரை நோக்கி;
கவலையையும் கண்ணீரையும் -
கண்கள் இரண்டில் தூக்கி!
திருமஞ்சனம் செய்யப் பெற்ற
திருமேனி;
பட்டாடை அணியப் பெற்ற
பெருமேனி;
துளபங்களாலும் -
தூய மலர்களாலும் -
தொடுக்கப் பெற்ற -
தாமங்கள் ...

சூடிக் கொண்டு கிடந்த
செய்ய குருமேனி;

நலிந்து மெலிந்து -
நிலங் கிடக்க...

ஆரணம் ஓத -
அழகிய சங்கம் ஊத -
அந்திம சடங்குகள்
ஆரம்பித்து நடக்க...
....
ஜனசமுத்திரம் நடுவே -
ஜனன சமுத்திரம் கடந்த
மகான் -
மல்லாந்திருப்பதைக் கண்டு...

பிரதான சீடர்
பெரிய நம்பியும்
அண்ணல் இராமனுஜன் எனும் -
அரிய நம்பியும்;

திருமேனிகள்
தரை தோய -
தண்டம் சமர்ப்பித்தினர்;
....
விழிகள் நான்கையும்
வண்டுகளாக்கி மொய்த்தனர்!

ஆளவந்தாரின் மூன்று அபிலாசைகளையும் பூர்த்தி செய்வதாகச் சொன்னதும்

அடுத்த -
ஆசாரியன்...
'இவனே! இவனே!' என்று
இராமானுஜனை -
ஏத்தியது ஊர்; அவை -
எறிந்து குதித்தது காவிரி நீர்!

5. திருமாலையாண்டான்

திருக்கோட்டியூர் நம்பி திருவரங்கம் வந்த போது -

வந்தவர்
உடனடியாக -
'மாலாதரர்' என்று -
மக்களால் அழைக்கப்பெறும்[9] ...

திருமாலையாண்டானை அழைத்து
திரு உடையவருக்குத் -
திருவாய்மொழி கற்பிக்கும்
திருப்பணியைத் தந்தார்!

திருமாலையாண்டானின் ஊர் -
திருமாலிருஞ் சோலை;

ஆளவந்தாரிடம்
அவரும் சீடரா யிருந்தவர் -
பெரியவர்
பெரிய நம்பியும்; திருக்
கோட்டியூர் நம்பியும்
குருகுலவாசம் செய்த காலை!
"இராமானுஜரே!
இலைமறை காய்போல்...

முதல் வாசிப்பில் - நம்
மூளைக்கு வசப்படாத -
மறைபொருள் திருவாய் மொழியில்
மிக உண்டு;

அவற்றை - நீர்
அறிய வேண்டும் - இந்தத்
திருமாலையாண்டானைத்
துணையாய்க் கொண்டு!"

கோட்டியூர் நம்பி -

கூறியபடி...

திருமாலையாண்டானிடம்
தினம் தினம் - திரு உடையவர்
திருவாய் மொழியை - நா
திதிக்கத் திதிக்கத் கற்றார்;
சடகோபர் தமிழுக்குத் - தன்
சிந்தனையை விற்றார்!

திருமடத்தில் தினம்
திருவாய்மொழி ஒலித்தது;

"கலியும் கெடும்;
கண்டு கொண்மின்!" என -
நம்மாழ்வார் - முனம்
நவின்றது பலித்தது!

6. திருமலை நம்பி

ஓராண்டுகாலம் -
உடையவர் -
திருப்பதியில் -
தங்கியிருந்து...
....
ஆதிகவி[10]
அருளிய -
ராமாயணத்தின்
ரகஸ்யார்த்தங்களை...

பிரதி தினமும்
பாடமாகக் கேட்டார்;
சுலோகங்கள்
சுட்டிய விழுமங்களை -
செவிவழி வாங்கி
சிந்தைக்குள் போட்டார்!

இராமாநுஜரின் ஆசிரியர்களை நோக்கும்போது திருக்கச்சிநம்பிகளிடம் வைணவ சித்தாந்தத்தின் சாரத்தையே கற்றார் என்பதை அறிய முடிகிறது.

பெரிய நம்பிகளிடம் கற்றது கோனார் பசுவைத் தடவிக் கொடுத்துப் பாலைக் கறப்பது போல இளையாழ்வார் நயமாக நயந்து பேசி துவயமந்திரத்தைத் தெளிவாகக் கற்றுக் கொண்டார் என்பதைக் காண முடிகிறது.

திருக்கோட்டியூர் நம்பியிடம் கற்றதை நோக்கும்போது கோனார் பசுவின் பாலைக் கறப்பது போல மிக்க சிரமத்துடன் கற்றார் என்பதை அறிகிறோம்; என்றாலும் இறுதியில் அவர்தம் பாராட்டையும் ஆசியையும் பெறுகின்றார்.

யமுனைத்துறைவர் என்கின்ற ஆளவந்தாரிடம் கற்றது ஒன்றுமில்லை என்றே சொல்லி விடலாம். அவர்தம் அருட்பார்வையும் ஆசியும் பெற்றமையே பெரும் பேறாகக் கொள்ளலாம்.

திருமாலையாண்டானிடம் திருவாய் மொழியை நன்கு கற்றார்; தெளிவையும் பெற்றார். தமிழ் வேதத்தின் சாரத்தை மனம் உகக்கும் வண்ணம் கற்றார்![11]

திருப்பதியில் தங்கி ஓராண்டுக்காலம் தம் தாய்மாமன் திருமலைநம்பியிடம் வான்மீகி படைத்த இராமாயணத்தைச் சுலோகங்கள் தவறாமல் கற்றது பெரும்பேறு.

இத்தனை அநுபவங்களும் உடையவர் படைத்த வடமொழி நூல்களில் அடிநாதமாக அமைந்திருப்பதை அவர்தம் நூல்களை ஊன்றி ஆழ்ந்து கற்று அநுபவிப்பவர்களே அறிவார்கள்.

*** **ஸ்ரீமதே இராமாநுஜாய நம:** ***

குறிப்பு:

1. யாதவப் பிரகாசர் இராமாநுஜருக்கு ஆசிரியராக அமைந்திருந்தும் அவரிடம் கற்றது ஒன்றுமில்லை - தர்க்கம் செய்து சண்டையிட்டது தவிர. ஆதனால் அவரை இப்பட்டியலில் சேர்க்கவில்லை.

2. <u>தீர்த்தம்</u>: அதிகமாக வைணவர்கள் வாக்கில் வழங்கும் சொல். திருக்கோயில்களில் பிரசாதம் போல் வழங்கப் பெறுவது. ‘குடி நீர் கொணர்க’ என்று சொல்ல வேண்டிய போது கூட ‘தீர்த்தம் கொண்டு வா’ என்று கூறுவது வழக்கம். நீராடி வருவதைக் கூட ‘தீர்த்தமாடி’ என்று வழங்குவர். இங்கு ‘ஆனந்த தீர்த்தம்’ (ஆனந்தக் கண்ணீர் என்பதற்குப் பதிலாக) வழங்கியிருப்பது சற்று ‘விநோதமான வழக்கு’? ஸ்மார்த்தர்கள் இவ் அழகிய சொல்லை ‘தேர்த்தம்’, ‘தூத்தம்’.... என்றெல்லாம் சிதைத்து வழங்குவர்.

3. இத்தூய சொல்தான் தி.மு.க.வால் ‘உதயசூரியன்’ என மக்கள் வாக்காக வழங்கப் பெறுகின்றது.

4. <u>சந்நிதி:</u> இதுதான் சரியான சொல்; வாலியாரே சில இடங்களில் ‘சன்னதி’ ‘சன்னிதி’ என்று தவறாக வழங்கியுள்ளார். தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் இந்த மூன்று சொற்களும் காணப் பெறுகின்றன. கோயில் நிர்வாகம் தவறுகளைத் திருத்திச் சரியாக வழங்கும் நாள் என்றோ?

5. ஏற்கனவே பெரிய நம்பிகளிடம் பெற்றாய் விட்டது. வரலாற்று நூல்களிலும் இப்படித்தான் உள்ளது. மீண்டும் அதையே இவரிடம் கற்பது புதிர்!

6. சிலம்பின் தொடரை நினைக்கச் செய்கிறது.

7. **காரேய் கருணை இராமா**
   நுச! இக் கடலிடத்தில்
   ஆரே யறிபவர் நின்னரு
   ளின் தன்மை? (இரா.நூற்:25)

   என்ற அடிகளை நினைவுகூறச் செய்கிறது

8. இங்ஙனம் வைணவ ஆசாரியர் தாக்குண்டிருப்பது போல திருவண்ணாமலையில் இரமண முனிவர் புற்று நோயால் பீடிக்கப் பெற்றிருப்பதை நினைக்கலாம். இவற்றையெண்ணும் போது யாராக இருப்பினும் அவனவன் செய்த வினையை அவனவன் அநுபவித்தே தீரவேண்டும் என்பது தெய்வ சங்கல்பம் என்பதை உன்னி உன்னி அசைபோட வேண்டும்.

9. கற்றோர் முதல் கல்லாதார் வரை ‘அழைக்கப்பெறும்’,என்ற சொற்றொடரை அநாயாசமாகக் கையாளுகின்றனர் இது ‘is called’ என்ற ஆங்கிலத் தொடர் வழி அமைந்தது. ‘வழங்கப் பெறும்’ என்ற தொடரே தமிழ் மரபுக்கு ஏற்றது; நெடுங்காலமாக வழங்கப் பெற்று வழக்கில் உள்ளது. அதை வழங்குவதே சரி. (ஒரு சமயம் பன்மொழிப் புலவர் வே.வேங்கடராஜுலுரெட்டியார் - 1941 முதல் பழகிய பெரியார் - அடியேனிடம் சொன்னது).

10. வான்மீக முனிவர்

11. உடையவருக்குத் தமிழ் தெரியாது என்று சிலர் நினைப்பது, சொல்வது தவறு. அவர் தமிழில் நூல் ஒன்றும் செய்யவில்லை என்பதால் இத் தவறு நிலவுகிறது.

****



இராமாநுஜர் 1000

கவிஞர் **வாலி**யின்

இராமாநுஜ காவியம் - ஒரு மதிப்பீடு

இயல் ~ 5

எதிராஜரின் சிடர்கள்



ந சுப்பு ரெட்டியார் 100

இயல் – 5

எதிராஜரின் சீடர்கள்

எதிராஜின் சீடர்கள் பலர் என்பதை வைணவ உலகம் நன்கு அறியும். கவிஞர் வாலியின் உடையவர் பற்றிய காவியத்தில் இவர்கள் சுட்டி உரைக்கப் பெற்று விளக்கப் பெற்றுள்ளனர். அப் பெருமக்களை ஈண்டுக் காண்போம்.

(1) முதலியாண்டான்

இராமநுஜரின் சகோதரி ‘பூமி’க்கும் புருஷ மங்கலத்தைச் சேர்ந்த அனந்ததீட்சிதர் என்ற அவள் கணவருக்கும் பிறந்தவர் ‘தாசரதி’. இந்த – தாசரதி தம்மை இராமாநுஜரின் மடத்தில் இணைத்துக் கொண்டார்.

> **நல்ல -**
> **நாளொன்னு பார்த்து -**
> **ஸ்ரீராமாநுஜர் - தமது**
> **சகோதரி மகனுக்கு -**
> **பஞ்ச சமஸ்காரங்களைப்**
> **புரிந்து ...**
>
> **மருமகனுக்கு –**
> **‘முதலியாண்டான்’ எனும் -**
> **தாஸ்ய நாமத்தை அளித்தார்!**
>
> **முதலியாண்டான் -**
> **முதல் சீடர் ஆனார்;**
>
> **எதிர்காலத்தில்**
> **எதிராஜரின் -**
> **திருவடிப் பாதுகையென்றும்;**
> **திரிதாண்டம் என்றும்;**
>
> **தேசம்**
> **பேசும்படி - இந்த**
> **முதல் சீடர் -**
> **முதல் தர சீடராகிப் போனார்.**

(2) கூரேசன்

இராமாநுரின் இரண்டாவது சீடர்...

> **...காஞ்சியிலிருந்து –**
> **கைதட்டிக்**

கூப்பிடு தூரத்தில் இருந்த -

கூரம் - ஒரு
குக்கிராமம்; அந்தக்
கூரத்திற்கு - தன்
கூர்த்த மதியால் - புகழ்
கூட்டியவருக்கு -
'கூரேசன்' என்று திருநாமம்!
....
அம்மி மிதித்து
அருந்ததி பார்த்த
ஆயிழையாள் -
'ஆண்டாள்' என்று
அழைக்கப் பெற்ற
அன்புசால் பெண்டு!
....
ஏந்தல் கூரேசரும்
அவரது
அருமை மனைவி ஆண்டாளும் -
இருந்த பொருள் அனைத்தையும் -
இரப்பார்க்கு ஈந்துவிட்டு...

ஸ்ரீஇராமானுஜரின் -
சேவடியை ஆசிரயிக்க -
கூரம் விட்டு -
காஞ்சிக்கு நடந்தனர் -
....
ஸ்ரீராமனுஜரின்
ஸ்ரீமடம் சேர்ந்தனர்;
தொல்வினை -
தீர்ந்தனர்!

பரம
பாகவதரான -
பெருமகனார் கூரேசரைப் -
பக்கம் அழைத்து -

கன்றைக் காக்கும்
கறவை போல்; தன் -
பார்ப்பைக் காக்கும்
பறவை போல்;

அளப்பரிய அருளை
அவர்பால் சொரிந்து -
பஞ்ச சம்ஸ்காரங்களைப்
பாங்குடன் புரிந்து -

கூரேசரை - தாஸ்ய நாமத்தால்
'கூரத்தாழ்வானே!' எனக் -
கூவினார்; மந்திராட்சதைகள் -
தூவினார்!

(3) யாதவப் பிரகாசர்

மூதாட்டி ஒருவர் - எதிராஜரின்
மூதுரைகளைச் செவிமடுத்து -
ஊன் உருக;
உள்ளம் உருக;

கண்கள் வழிக்
கண்ணீர் இழியக்
கேட்டிருந்தார்;
கேட்டு அசை போட்டிருந்தார்!

நிறையக் கற்றிந்தும்;
நீள்புகழ் பெற்றிருந்தும்;
தன்னுள்
தான் -

மறையைக் கற்றிடாத - தன்
மகனை எண்ணி - அந்த
மூதாட்டி வாடினாள்; அவன்
முக்திக்கான வழியை நாடினாள்!

தன்
வீடு சென்றாள்;
தனயனிடம்
வாதாடி நின்றாள்!

"மகனே! நான்
மரணிக்கும் முன்னர்...
உன்னை ராமானுஜரிடம்
ஒப்படைக்க வேண்டும்;

அவரது
அருளிருந்தால்தான் - உன்
ஆன்மா
அவக் கடலைத் தாண்டும்!

கல்விமேல்
கல்வி யென்று - நீ
கற்று - என்ன
கண்டாய்?

அமையற்று-
அலைப் புற்று -

வருவாருமின்றி –
வாழ்த்துவாருமின்றி -
விழுந்து கிடக்கிறாய் -
வெட்டுண்ட வாழைத் தண்டாய்!

புறப்படு;
போவோம் எதிராஜர் மடம்!

இன்னும் - தனியே
இங்கிருந்து - மனம்
இடிந்து கிடப்பது போல் -
இன்னொன்று இல்லை மடம்!”

முதலில் -
மகன் ஒப்பவில்லை; எனினும் -
மாதா சொல்லுக்கு - எந்த
மறுமொழியும் செப்பவில்லை!

விடவில்லை - அவனை;
வயிற்றில் சுமந்த அன்னை;

பிடிவாதம்
பிடித்து -
பெரும்பாடு பட்டு – தன்
பிள்ளையாண்டானை...

கைத்தலம் பற்றிக்
கூட்டிப்போய் -
சாஷ்டாங்கமாக
சேவிக்க வைத்தாள் -
ஸ்ரீமடத்தில் இருந்த -
ஸ்ரீராமானுஜன் தன்னை!

எதிராஜன் - திக்கென
எழுந்து நின்றார்;
புருவங்கள்
பொட்டுக்கு ஏற -
வியப்பின்
உச்சிக்கே சென்றார்!
தன்
தாயோடு வந்து -
‘தாசன்’ என்று - அவர்
திருவடியில் சேவித்தவர்...

யதி
யாதவப் பிரகாசர்! அதுதான் -
விதி!

யாதவரை -
எதிராஜர் சீடனாய் ஏற்றார்

யதிராஜரை
யாதவர் குருவாய் ஏற்றார்;

வேர் -
விழுதானது;
விழுது -
வேரானது!
....
தாயொத்த கருணையொடு
யாதவப் பிரகாசருக்கு -
யதிராஜர் -
யக்ஞோபவீதம் அணிவித்து -

பஞ்ச சம்ஸ்காரங்கள்
பண்ணிவைத்து - பின்பு
ஓரெட்டெழுத்தை -
உட்செவியில் அறிவித்து -

"கோவிந்த ஜீயர்!' எனக்
குவலயம் கூப்பிடுமாறு - ஒரு
தாஸ்ய நாமமும்
தந்தார்;

தந்து - அவரது
திருத்தோளில் சாத்தினார் -
துளவுகளால் தொடுத்த -
தண்தார்!

ஆசாரியர் இராமானுஜரின் -
ஆக்ஞைப்படி...

கோவிந்த ஜீயராகி - முக்
கோல் தாங்கி நின்ற யாதவர்

வைணவக் கொள்கைகளை
விரித்து - ஒரு நூலை

'யதிதர்ம சமுச்சயம்' என
யாத்தார்;

அகவை எண்பதில் -
அம்புவி வாழ்வை நீத்தார்!

(4) உறங்காவில்லி - பொன்னாச்சி

உறையூரை ஆண்ட சிற்றரசுக்கு உடம்பு பிடிக்கும் பணியிலிருந்த உறங்காவில்லி என்பான் அழகெல்லாம் திரண்ட தன் மனைவி பொன்னாச்சிடன் சித்திரைத் திருவிழா கண்டுகளிக்கத் திருவரங்கம் வருகின்றான். தெருவில் அவள் நடக்க தன் உத்தரீயத்தை நடைபாவாடையாக விரித்துக் கொண்டு வந்ததும் அவளுக்குக் குடை பிடித்துக் கொண்டும் வந்த செயல்கள் பரிகாசத்துக்குரியவையாயின. இருவரையும் திருமடத்திற்கு வரவழைத்தார் உடையவர். பிறர் ஏளனத்திற்குரிய செயல்கள் தவிர்க்கத்தக்கவை என கூறி அவர்களை அரங்கன் சந்நிதிக்கு இட்டுச் சென்றார்.

"கட்செவி மேல்
கிடக்கின்ற -
கரியமாலின்
கண்ணழகைப் பார்!" என்றார்!

உறங்காவில்லி -
உற்று நோக்கினான்...
....
அழகிய மணவாளனின் -
அரவிந்த நயனங்களை;
....
அந்த நிமிடமே
அகம் நெகிழ்ந்து
அரங்கத்து அரசின்
ஆளாகி...

"ஆகா! இவையன்றோ-
அழகிய கண்கள்; உய்ய -
உபகரித்து - என்னை
அபகரித்த கண்கள்!" என்று -

ஆர்த்தான்; விழிவழி -
ஆனந்தப் புனல் வார்த்தான்;

உறையூர் மல்லன்
உறங்காவில்லி...
புருஷனைப் போலவே
பாம்பணையான் பக்தையானாள் -
பொன்னாச்சி என்னும்
புனிதவல்லி!

இருவருக்கும் - ஸ்ரீ
இராமானுஜர்...
பஞ்ச சம்ஸ்காரங்கள்
புரிந்து -
பரம
பாகவதர்களாக ஆக்கினார்;

வைணவம்
வையம் தழுவ -
குறுக்கே நிற்கும் - சாதிக்
கோகளை நீக்கினார்!
....
வேடர் குலத்து
வில்லியைத் - தன்
சீடர் குலத்துள்
சேர்த்து வைத்தார்...

அன்னையைப் போல்
அன்புக்கு -
உருகும் உள்ளம்
உடையவர் - என
உலகம் சொல்லும்
உடையவர்!
உறங்காவில்லி - பிள்ளை
உறங்காவில்லிதாசர்' என்று -

தாஸ்ய நாமம் -
தரப் பெற்றார்;
வைணவ சித்தாந்தத்தை -
வைகலும் கற்றார்!

விசிட்டாத்துவைதத்தின் -
விசாலமான கண்ணோட்டத்தில்...
மேல் வகுப்பு
கீழ் வகுப்பு - எனும்
நால் வகுப்பும்
நாரணன் நீழலில் - திரு
மால் வகுப்பு - என
மாற்றம் கண்டது; பிரபந்த
நூல் வகுப்பு - என
நூலோர் சொல் ஏற்றம் கண்டது!

எதிராஜர் திருமடம் -
'ஏகாம்பாள்' என -
பொன்னாச்சியை விளித்துப்
போற்றியது;

அது -
அவளது...

நிலாக் கொழுந்து
நெற்றியில் -
ஸ்ரீசூர்ணத்தைக் குழைத்து
சின்ன ஈர்க்கால் தீற்றியது!

(5) வில்லியின் மருமக்கள் இருவர்

அரசன்
அகளங்கனிடம் -
தன்னைப் போலவே
தொண்டு புரிந்து வந்த...

'வண்டவில்லி;
செண்டவில்லி;'

எனும் - தனது
இரு மருமக்களையும் -
உறங்காவில்லிதாசர்
உடையவரின் சீடராக்கினார்;

இருவரையும் -
இளையாழ்வார் ஏற்று...

'வண்டலங்கார தாசர்;
செண்டலங்கார தாசர்' என -

தாஸ்ய நாமங்கள்
தந்து -
வைணவ நெறியை
விடாது பற்றிட ஊக்கினார்!

(6) அரசன் அகளங்கன்

தன் பணியாட்கள் உடையவரின் சீடர்களான செய்தியை அரசன் அகளங்கன்

ஸ்ரீரங்கம் சென்று
ஸ்ரீராமானுஜரின் -
திருவடிகளில்
தண்டனிட்டு -

சேர்ந்தான் - வைணவச்
செவ்வாறு!

குடைநிழ லமர்ந்து -
குஞ்சரம் ஊரும்[1]...
அரச போகமும்
அரண்மனை வாழ்வும் -
அகளங்கனுக்கு
அலுத்தது முகந்து; ஓர் -
ஏழை போல்
எதிர் நின்றவனை -
ஏற்றார்
எதிராஜர் உகந்து!
பஞ்ச சம்ஸ்காரங்கள்
புரிந்து...

அரசன்
அகளங்கனை -
'அகளங்க நாட்டாழ்வான்' என -
ஆக்கி -

திருக்கோவில் சேவகர்க்குத்
தலைமை அதிகாரியாக -
நியமித்தார் உடையவர்;
நெடுங்கருணை மடையவர்!

கிரீடத்தையும்; பட்டுக்
கலிங்கத்தையும்;
கழற்றி எறிந்து விட்டு - ஒரு
காவலனே...

ஸ்ரீராமானுஜரின்
ஸ்ரீமடத்தில் - ஒரு
சேவகனாய்
சரண் புகுந்த சேதியை...
தேசமெங்கும்
தெரிவித்தது - புஷ்பங்களின்
வாசமெங்கும்
வாரி யிறைக்கும் -

பொன்னி நதிக்கரைப்
பூங்காற்று;
வானம் முட்டி
வளர லானது – பூலோக
வைகுந்தத்தில் - எதிராஜர்
வைத்த வைணவ நாற்று!

(7) கொங்குப் பிராட்டி

இப் பெருமாட்டி விடுத்த இரண்டு வினாக்களுக்கும் உடையவர் விளக்கம் தந்ததும்

இவ்வாறு
இராமாநுஜர் சொன்னதும் -
அவரது
அடிமலர் தொழுது...

"சுவாமி! தாங்கள்
சுட்டிய -

சத்தியப் பெரு வெள்ளத்தில்
சிறியவள் நீராட வரலாமா?"

என -
ஏக்கமொடு கேட்டாள் பெண்மணி;
"வாரும் மடத்திற்கு!" என்றார் -
வைணவத்தின் கண்மணி!

அவ் -
அம்மையார் -
மறுநாள் - ஸ்ரீ
மடம் சென்று...

உடையவரிடம்
விண்ணப்பித்து நிற்க - அப்
பெண்மணிக்கு - அவர்
பஞ்ச சம்ஸ்காரம் செய்து -

ஸ்ரீவைஷ்ணவியாக்கி -
'ஸ்ரீமதி கொங்குப் பிராட்டி' எனும்
தாஸ்ய நாமமும் -
தந்தார்;

பிறகு - அம்மாது
பஞ்சகாலம் தீர்ந்து -
ஊர் செல்ல வேண்டி - விடைபெற
உடையவரிடம் வந்தார்!

அப்போது - அவ்
அம்மையார்...

"தினம் சேவிக்க

தேவரீரின்
திவ்விய பாதுகைகளைத்
தந்தருள வேண்டும்!” எனக் -
கேட்டுப் பெற்று - தன் ஊரான
கொள்ளைக்களம் சென்றார்;

(8) அனந்தாழ்வான்[2]

உடையவர் -
ஒரு நாள்...
தன் சீடர்களுக்குத்
திருவாய் மொழி சாதிக்கையில் -

‘சிந்து பூமகிழும்
திருவேங்கடம்’
என்ற அடியை (=‘வரியை’பிழை)
எடுத்தோதிவிட்டு -

“திருமலையில்
திருவேங்கடமுடையானுக்கு -
நந்தவனம் அமைக்க
நம்முள் யாரேனும் உளரோ?” என -
அடியாரைக் கேட்க -
“அடியேன் அதைச் செய்ய
அருள வேணும்!” என
அனந்தாழ் வான் யாசித்தார்;
உடையவர் - அதற்கு
ஒப்புதல் தெரிவிக்க...

அனந்தாழ்வான்
அடுத்த நாளே
திருமலை சென்று - பின்
திருநந்தவனம்[3] அமைத்து -

வண்ணமலர்களால்
வேங்கடவனைப் பூசித்தார்!
....
உடையவரின்
உள்ளக் கிடக்கைக்கு ஏற்ப...

அனந்தாழ்வான் - தனது
அகமுடையாளுடன்
அல்லும் பகலும் -
அனவரதமும் பாடுபட்டு...

ஏழுமலையில்
எழுப்பிய -

நறவமும்;
நறுமணமும்;
நாளும் நல்கிய -
நந்தவனத்திற்கு...

'இராமானுஜன்'
என்று பெயரிட்டார்;
அடுத்தபடியாக -
ஆம்பல்; அரவிந்தம்;
ஆகிய நீர்ப்பூக்கள்
அரும்ப...

அழகிய தடாகம் ஒன்று - (=Tank)
அமைக்கப் பிரியப்பட்டார்

அனந்தாழ்வான்
அன்றாடம் அதிகாலையில்...

முதல் வேலையாக -
மண் வெட்டியைப்[4] பிடிப்பார்;
அந்திவரை -
அகழ்ந்து முடிப்பார்!

கரம் வலிக்கக்
கல்லுவார் நிலத்தை;
கல்லியும்
கண்டாரில்லை சலத்தை!

தடாகப் பணி
தாமதமாவதை ஓர்ந்து...

வெட்டிய மண்ணை
வெளியே கொண்டு போய்க் -
கொட்டும் வேலையைக்
கொடுத்தார் -

தன்னுடைய
தாரத்திற்கு;

அவளால் - கூடையில்
அள்ளிய மண்ணைக் -
கொண்டுபோய்க்
கொட்டிவிட்டு...

வரமுடிய வில்லை -
உரிய நேரத்திற்கு!

“பெருமாள் காரியம்;
பேந்தப் பேந்த நிற்காமல்...

வேக வேகமாக
வேலை நடக்க வேண்டி -
வேங்கடவனுக்கு - நெற்றி
வேர்வையை அர்ப்பணி!”

என்று அனந்தாழ்வான்
எடுத்துச் சொல்லியும்...

அவளால்
அங்ஙனம் - பணி
ஆற்ற ஒல்லுமோ?
அவளோ பூர்ண கர்ப்பிணி!

பிள்ளைத்தாய்ச்சி
படாதபாடு படுவதைப் -
பார்த்தான் ஒருவன்;
பன்னிரு வயதுச் சிறுவன்!

“அம்மா!
அந்தக் கூடையைக் கொடு;
உனக்கு நான்
உதவுகிறேன்;

நீ சற்று
நிழலில் ஓய்வு எடு!” என்று -

அச்சிறுவன்
அவள் பதிலை எதிர்பாராது...
ஒவ்வொரு முறையும்
உடனுக்குடன் -
கூடை மண்ணைத் தான் வாங்கிக்
கொண்டு போய் கொட்டினான்;
மறுத்துப் பேசிய
மாதரசியை - வெண்
முல்லையனைய - சிறு
முறுவலால் கட்டினான்!
மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க -
மெல்லப் பணியாற்றிய மனைவி ...

விரைவாக - எப்படி

வேலையை முடிக்கிறாள் - என
அதிசயித்த
அனந்தாழ்வான் -

ஒரு சிறுவன் -
உதவுவதை அறிந்ததும் -

“ஆசாரிய கைங்கரியத்தை
அடுத்தவரிடம் கொடுக்கலாமா?”
என்று - தன்
இல்லாளைக் கடிந்துவிட்டு...

அச்சிறுவனைத் தேட -
அவன் ஓட -

கோபத்தில் - தன்
கையிலிருந்த மண்வெட்டியை -
வேகமாக -
வீச...

அது
அவன்
மோவாயைப் பேர்க்க; பேர்ந்த -
மோவாய் குருதி வார்க்க; -

ஓடி ஒளிந்தான் பையன்;
ஒரு தாய்க்கு உதவிய கையன்!

அடுத்த நாள் -
அர்ச்சகர் அலறி -
கூட்டினார் ஊரை;
காட்டினார்...

கோவிந்தன் மோவாயில்
குருதி கசிவதை;
அனந்தாழ்வான் - சட்டென
அறிந்து கொண்டார்...

சூழ்கொண்ட - தன்
சம்சாரத்துக்கு - ஒரு
சிறுவனாய் வந்து உதவிய
செங்கண் மாலின் கனிவதை!

ஒப்பினார் தப்பை;
உகுத்தார் கண்ணீர்;
பச்சைக் கற்பூரத்தைப்

பொடிசெய்து -
அப்பினார் மோவாயில்;
அடங்கியது புண்ணீர்!

பொற்பூறும் திருமுகத்துப்
பெருமாளின் மோவாயில் -
பச்சைக்
கற்பூரம் அப்புவதைக்
காணலாம் இன்றும்; கடவுளின் -
சௌலப்பியத்தை - அது
சாற்றும் என்றும்!

<u>(9) வரதாழ்வான்</u>

உடையவர் தொண்டர் குழாத்துடன் திருவரங்கம் விட்டுத் திருவேங்கடம் நோக்கிப் புறப்படுகிறார். வழியில் திரு வெள்ளறைப் பெருமாளையும் திருகோவிலூர்ப் பெருமாளையும் தரிசித்துவிட்டுத் திருக்காஞ்சிக்குப் போகையில்:

வழியில்
'வரதாழ்வான்' எனும் -
சீடர் வாழும்
சிற்றூருக்குச் சென்றார்;

சீடர் வீட்டுச்
சாத்திய கதவைத் -
தானே
தட்டி நின்றார்!

வரதாழ்வான்
உஞ்சவிருத்திக்குச் -
சென்றிருந்த
சமய மாதலால்...
அகத்தி இருந்த
அவரது மனைவி -

தாளிட்ட கதவைச் - சற்றே
திறந்து பார்த்து -
உடையவரைக் கண்டதும்
உடல் வியர்த்து -

கதவுக்குப் பின்
கூச்சமொடு மறைந்தாள்;
ஒன்றும் பேச
வாய்வராமல் உறைந்தாள்!

சரியான ஆடையின்றி - அவள்

சங்கடப்படுகின்றாள் என்பதை -
உடையவர்
ஊகித்து அறிந்தார்; உடனே -

தனது
தலைப் பரிவட்டத்தை -
உருவி - அதை
உள்ளே எறிந்தார்!

கிழிந்த ஆடையின்
காரணமாக -
வெளியே வர
வெட்கிக் கிடந்தவள்...

எதிராஜர்
எறிந்த பரிவட்டத்தைக் -
கட்டிக் கொண்டு வந்து
கதவைத் திறந்தாள்;
வாராமல்
வந்த தெய்வமென -
உடையவருக்கு தண்டனிட்டு
ஒரு விநாடி தன்னை மறந்தாள்!

சில நொடியில் -
சுய நினைவு வரப்பெற்று...

உடையவரை
ஊன் உருக
உயிர் உருக
உள்ளே அழைத்து -

பிய்ந்த
பாக்குப் பாயை விரித்து -
அமரச் சொன்னாள்
அருந்ததி அன்னாள்!

இராமானுஜர் - அந்த
இல்லத்தை நோட்டம் விட்டார்;
வரதாழ்வான் போன்ற
வைணவப் பெருமகனை -
வறுமை வாட்டுதல் கண்டு
வெகுவாக வருத்தப் பட்டார்!

சுண்ணம் போய் -
சுவர்களில் விரிசல்; வைக்கப் -
போதிய இடமின்றி; பண்டம்

பாத்திரங்களின் நெரிசல்;

ஓடுகளின் ஓட்டைகள் வழியே -
ஒழுகியது சூரிய வெளிச்சம்;

வெய்யிலில்
வாடிக் கிடந்தது -
வரதாழ்வானுக்கு
வாழ்க்கைப்பட்ட அனிச்சம்!

'ஸ்வாமி!
ஸ்நானம் முடித்துக் கொண்டு
தேவரீர் வருவதற்குள்
தயாராகி விடும் தளிகை!'

வரதாழ்வான் மனைவி -
விண்ணப்பிக்க...

உள்ளூர் குளத்திற்கு
உடையவர் சீடரோடு சென்றார் -
நீராட; கண்களில்
நீரோட!

உபாதானத்தில் -
உண்ணுகின்ற வீட்டில்...

உடையவர்க்கும்;
உடன் வந்த வைணவர்க்கும்;
உணவு சமைக்க - ஏது
உப்பு? புளி? அரிசி?

வார்த்தையைத் தந்து விட்டு -
வாடினாள் இல்லத்து அரசி!
அவளுக்கு - சட்டென்னு
அந்த ஊர் வணிகன் ஒருவன்...

காமங்கொண்டு - தன்மேல்
கண் வைத்திருப்பது -
கவனம் வர அவனைக்
காண்பதற்குச் சென்றாள்;

வீட்டு
விருந்துக்கு
வேண்டிய பொருள்களை - அவ்
வணிகன் வழங்கினால்...

அன்றிரவே -
ஆசையைத் தீர்க்க
அவன் வீட்டுக்கு -
அவள் 'வருவேன்' என்றாள்!

அடுத்த -
அரை நொடியில்...
வரதாழ்வான்
வீடு தேடி -
வந்தது மளிகை; ஒல்லையாய் -
வஞ்சி முடித்தனள் தளிகை!

உபாதானம் வாங்கிக் கொண்டு -
வீடு திரும்பிய வரதாழ்வான்...

உடையவரைக் கண்டு
உள்ளம் களித்தார்; குருவின் -
காலடியில் தண்டனிட்டுக்
கண்புனலில் குளித்தார்!

அதன்பின் -
அடுக்களைக்குச் சென்று...

உணவு வகைகளைக் கண்டு
வியந்து நின்றார்; தன்
இல்லாளிடம்; வசதியே -
இல்லாளிடம்...

"இவை – எங்ஙனம்
இங்கு வந்தன?" என்றார்!

ஒன்றையும்
ஒளிக்காமல்;
உள்ளதை
உள்ளபடி...

உரைத்தாள் பத்தினி; ஓர் -
உரைக்குள் அடங்கா உத்தமி!

"உன்னால் -
உயர்ந்தேன் இன்று!' என -
வரதாழ்வான் சொன்னார் -
மனைவி
வலக்கரம் பற்றி நின்று!

விருந்து முடிந்த பின் -

வரதாழ்வானும் மனைவியும்...

மளிகை கிடைத்த
மர்மத்தை - ராமானுஜ
முனியிடம் கூறினர்;
மன்னிக்கக் கோரினர்!

“அடடா! திருமால் -
அடியவர் தம்...

குடற்பசி தீர்க்க - இந்த
குணவதி - ஒரு காமுகனின்
உடற்பசி தீர்க்க - மனம்
ஒப்பினளோ?”

என்று - மனத்துள்
எதிராஜர் எண்ணி...

பெருமாள் தீர்த்தத்தையும்;
பாகவத பிரசாதத்தையும்;
வரதாழ்வானிடம் தந்து - “அவ்
வணிகனிடம் கொடு!” என்றார்;

பின் - விழிகள் மூடி
பகவானை தியானித்து நின்றார்!

இரவு வந்தது; தன்
இல்லாளை அழைத்துக் கொண்டு...

வரதாழ்வான் போனார்
வணிகன் வீட்டுக்கு;
வழிமேல் விழி வைத்து -
வணிகன் நின்றிருந்தான்
வாசலிலேயே - வயோதிகத்திலும்
வாலிப விளையாட்டுக்கு!
....
வணிகரே! உம்மால் -
வைணவப் பெரியோர்க்கு -

தமியேன் -
ததியாராதனை செய்து - அவர்தம்
திருவருளைப் பெற்றேன்; உமது
தேவையைக் கேள்வியுற்றேன்!

நள்ளிரவு என்பதால் -

நான் என்...

தாரத்திற்குத்
துணை வந்தேன்; என்
தாரம் தந்த வாக்கு
தவறக் கூடாதென்பதால் -

இதோ!
இவளை
இன்றிரவு - உமது
இன்பத்திற்கென்று தந்தேன்!"

வரதாழ்வான் - மலர்ந்த
வதனத்தோடு -
வணிகனுக்குத் தனது
வாய்நிறைய நன்றி சொல்லி...

"எங்கள் ஆசாரியர்
எம்பெருமானார்...

பாகவத சேஷமான
பிரசாதத்தையும்;
பச்சைக் கற்பூரம் மணக்கும்
பெருமாள் தீர்த்தத்தையும்;

உமக்குத் தர - எனக்கு
உத்தரவு இட்டிருக்கிறார்;
உமது
உதார குணம் பற்றி - எமது
குருநாதரும்
கேள்விப் பட்டிருக்கிறார்!"

என்று - தான்
எடுத்துவந்த...

தேவப் பெருமாள்
தீர்த்தத்தை -
வணிகனின்
வலக்கையில் வார்க்க;

அ.்.தை
அருந்தியவுடன் -
அவன் மேனி புளகித்து
ஆதி அந்தம் வேர்க்க;

பிறகு

பாகவத சேஷத்தை -
வரதாழ்வான்
வணிகனுக்கு உண்ணக் கொடுக்க;

அதை உண்டதும்
அவன் உடலெங்கும் -
புதுக்குருதி
புனல் போல் ஊற்றெடுக்க;

வணிகனின்
விழிகளுக்கு...

வரதாழ்வான் -
விஷ்ணுவாகவும்;
வரதாழ்வான் பத்தினி -
விஷ்ணு பத்தினியாகவும்...

தென்பட; அவனைத்
தின்ற காமம் நீறுபட;
மொத்தத்தில் - அவனது
மனோபாவம் மாறுபட;

தம்பதியின்
திருவடிகளில்...

வணிகன்
விழுந்தான்;

“பெருமாள் தீர்த்தம்
போக்கியது என் பழவினை;
பெற்ற தாயினும்
பெரியவள் -
இனி -
இவ் வணிகனுக்குப் பிறன்மனை!”

எனச் சொல்லி
எழுந்தான்!

வரதாழ்வானோடு சென்று - அவ்
வணிகர் பெருமகன்...

சேவித்தான்
சீயரை;
மன்பதை என்னும்
மந்தையை -
ஆற்றுப்படுத்தும்

ஆயரை!

அவர் -
அவனது -

நாக்கில் அமர்த்தினார் -
நாராயண நாமம்;
அன்று முதல் அவனுக்கு -
ஆரம்பமானது சேமம்!

<u>(10) கோவிந்தன்</u>

இரண்டு காரணங்கள்

(i) ஒருநாள் -
ஓடோடி வந்து...
ஸ்ரீவைணவர்கள் சிலர்
ஸ்ரீராமானுஜரிடம் -
தந்தனர்
தகவல் ஒன்று;

ஒரு -
தாசி வீட்டு வாசலில் -
தன்னை மறந்து -
நெடுநேரமாய் - கோவிந்தன்
நிற்கின்றான் என்று;

உடையவர் -
உறங்கவில்லை அன்று!

'வந்ததே -
வரக்கூடாத நிந்தனை!' என -
விசனப்பட்டு -
விசாரித்தார் கோவிந்தனை...

மடத்தில் - பலர்
முன்னிலையிலேயே -
உடையவர்; அவன்பால்
உடையா அன்பு உடையவர்!

'கோவிந்தா! நீ -
கோவில் தேவதாசியின் -

வீட்டு
வாசலில்
வெகுநேரம் நின்றதை - இந்த
வைஷ்ணவர் கண்டாராம்;

உன்போன்ற
உத்தமன் -
அன்னணம் நிற்பது கண்டு
அலமந்து...

காண்பது
கனவா நனவா என்று - தன்
கையால் - தன்னையே
கிள்ளிக் கொண்டாராம்!

உண்மை என்ன?
உரை! ஊன்
பண்பில் புகலாமா -
புரை!

கோவிந்தன் - சிறு
குழவிபோல் சிரித்தான்;
உடையவரின்
உசாவலுக்க -
விநயமாய்
விடையை விரித்தான்!

"ஆசாரியனே!
அடியேனைப் பற்றி...

வைஷ்ணவர் சொன்னது -
வாஸ்தவம்;

தேவ -
தாசியின் வீட்டு வாசலில் -
தமியேனை நிற்க வைத்தது -
தேவரீரின் திவ்விய வைபவம்! -
அந்த வீட்டுக்குள்ளிருந்து -
அற்புதமான

கானம் ஒன்று - என்
காதில் வந்து விழுந்தது;
அதைக் கேட்டதும் - என்
ஆன்மா சிலிர்த் தெழுந்தது!

சாகித்தியமும் -
சங்கீதமும் -
கரம் கோத்துக் கொண்டு -
கள்ளைப் பிழிந்தன;

உண்டு மயங்கியதும் - என்

உலக நினைவுகள் ஒழிந்தன;
....
உய்யும்
வகைக்கு -
வேறென்ன
வேண்டும் -
ஒரு சீடனுக்கு? என்னொத்த -
ஒரு மூடனுக்கு?"

கோவிந்தன் இப்படிக்
கூறி முடித்ததும்...
....
கோவிந்தன்
கூற்றை -
ஆமோதித்தார்
அவர்மேல் புகார் சொன்னவர்;
'என்ன குருபக்தி!
என்ன குருபக்தி!
எல்லியும் பகலும் -
என்னைப் பற்றியே சிந்தனையா?'

என தனக்குள்
எண்ணி...
கோவிந்தனைக்
கிட்ட அழைத்துப்
புல்லினார் - முக்கோல்
பிடித்திருக்கும் மன்னவர்!

(ii) கோவிந்தன் பற்றி - அவன்தாய்
குற்றப்பத்திரிகை வாசித்தாள்;
பாரியாள்
பெரிய மனுஷி ஆன பின்னும் -
சாந்திக் கல்யாணத்திற்கு
சம்மதிக்காமல்...

தினம்
தன்மகன் -
சாக்குப் போக்கு
சொல்லி வருகிறான் என்றும்;

அது விஷயமாக
அவனுக்கு -
ஆசாரியன்
ஆக்ஞாபிக்க வேண்டுமென்றும்;

யாரும் அறியா வண்ணம் -

யதிராஜரிடம் யாசித்தாள்!

உடையவரும் - அந்த
உத்தமத் தாயின் -
கோரிக்கையை ஏற்று
கோவிந்தனிடம் ஏகாந்தமாய்...

"கோவிந்தா!
கூடு உன் மனைவியை;
என் ஆணை இது;
ஏற்று முடி வினையை!"

என்று
எடுத்துச் சொல்ல -
'சரி' என்று - அவனும்
சிரம் தாழ்த்தினான் மெல்ல!

தாயார் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து பள்ளியறைக்கு அனுப்பினார் மாட்டுப் பெண்ணை (நாட்டுப் பொண்ணை). கோவிந்தன் அவளைப் பக்கத்தில் அமர்த்தி அன்றிரவு முழுவதும் பகவானுடைய பிரபாவங்களைப் பேசினான்; தாரத்தை விரலால் தொடவும் கூசினானன்.

கோவிந்தன் தாயார் மூலம் செய்தி உடையவர் செவிக்கு எட்ட:

"கோவிந்தா!
குருவாக்கைக் கடந்தாயா?
புருஷனாய் நடவாமல் - ஒரு
பவுராணிகனாய் நடந்தாயா?"

உடையவர் இன்னணம்
உசாவ -

கோவிந்தன் - பதில்
கூறினான் - இரு
விழிகளில் - ஒருவகை
வெருவல் உலாவ!

ஸ்வாமி!
ஷமிக்க வேண்டும் என்னை;

தேவரீர் ஆணையைத்
தமியேன் நிறைவேற்றத் -
தேவையான இரு விஷயங்கள்
தனியறையில் வாய்க்காது...

இல்லாளோடு பேசியே கழித்தேன் -
இராப் பொழுது தன்னை!"

மெல்ல - கோவிந்தன்
முனக...

"என்ன -
இரு விஷயங்கள்?"
என -
எதிராஜர் வினவ...

"இருட்டு; தனிமை;
இரண்டும் அங்கில்லை!" என்று -
கோவிந்தன் -
கூற...

"புகுந்தது தனியறை
பொழுதோ நள்ளிரவு ;
உள்ளதை -
உரை!
என்னிடம்
ஏன் ஒளிவு மறைவு?" என்று -

சீயர் -
சீற...

"தனியறைதான் ; ஆனால் -
தனிமை யில்லை ;
இராப் பொழுதுதான் ; ஆனால் -
இருட்டு இல்லை!" என்று -

தன் கருத்தை - கோவிந்தன்
தெரிவிக்க...

"பேசுவதைப்
புரியும்படி பேசு!" என்று -
ஆசாரியர் - சற்று
அழுத்தமாய் அறிவிக்க...

கோவிந்தன் பேசினான் ; ஞானக் கொழுந்தாய் சுடர் வீசினான்!

ஆசாரியனே!
அடியேன் அறிவித்து...
தேவரீர் தெரிந்து கொள்ள - இத்
தரணிமிசை ஏதும் இல்லை!

எங்கள் எம்பெருமானார் -
எல்லா ஞானத்திற்கும் எல்லை!

அடியேன் இருந்தது - தனி
அறைதான்;

ஆனால் - என்
அருகிலேயே
அமர்ந்திருக்கின்றானே -
அந்தர்யாமி இறைவன்!

ஆதனால் - தனிமை
அற்றது!

நேரம் -
நள்ளிரவுதான்;

ஆனால் - என்
அருகிருக்கும் -
அந்தர்யாமி பிலிற்றினானே -
ஆயிரம் பொன்னிலவுதான்!

அந்தச் சோதி - இருட்டை
அடியோடு செற்றது!

இருட்டு ; தனிமை ; இவை -
இரண்டும் இன்றி...

எளியேன் -
என் செய்வது?
எம் பெருமானார் சொல்காத்து -
என்னணம் உய்வது?"

இவ்வாறு கோவிந்தன்
இயம்பியதும்...

"திரிகரண சுத்தியாய்;
திருமால் பத்தியாய்;
ஆசாரியான் திருவடியிலேயே -
அமர்ந்த புத்தியாய்;

இருக்கும் உனக்கு
இல்லறம் உகந்ததல்ல;
கொண்டவளோடு - என்னைக்
குடித்தனம் நடத்தச் சொல்ல!

துவாரடை ; திரிதண்டம் தாங்கி -
துறவியாய் இங்கு வீற்றிருக்க;
எம்பெருமானார்
எனும் -
என் பெயரையே - நீயும்
ஏற்றிடுக!”
என்று -
எதிராஜர் மொழிய...

“துறவறம் ஏற்கிறேன் ;
தவம் நோற்கிறேன் ;
தேவரீர் நாமத்தை - நான்
தாங்குவது நன்றாமோ?
குப்பைமேடு -
குன்றின் பேர் கொண்டால்
குன்றாமோ?”

என்றான் கோவிந்தன் - அன்பு
ஏய் விழியில் நீர் வழிய!

“அப்படியானால்
அதைச் சுருக்கி –
‘எம்பார்!’ எனக் கொள் ; நானே -
என்றும் இருப்பேன் உன் உள்!”

உடையவர் இவ்வாறு
உரைக்கையில்...

(11) <u>கோவிந்தன் துணைவி</u>

ஓடோடி வந்து - அவரது
வாரிச அடிகளில் விழுந்து -
கோவிந்தன் மனைவியும் -
கோரினாள் காவியாடை;
அதனைத் தந்து - ‘சிறிய
ஆண்டாள்!’ என்கின்ற -

தாஸ்ய நாமமும் - அவளுக்குத்
தந்து, ரட்சித்தார்...
எதிராஜர் -
என்றும் காருண்ய ஓடை!

(12) <u>அமுதனார்</u> [முழுப் பெயர் ‘திருவரங்கத்து அமுதனார்’]

‘இராமானுச நூற்றந்தாதி’

இசைத்து...
உடையவர் புகழை
உச்சத்தில் வைத்தார்;
அந்த
அந்தாதி -
வண்ணத் தமிழில் - இன்றளவும்
வாடாத வாசத்தார்![5]
……………………..
அற்றை நாளில் - திரு
அரங்கன் திருக்கோயில்
அதிபராக இருந்தவர் -
அமுதமானார் எனும் அத்துவைதி ;
பின்பு - பரம
பாகவதோத்தமராக - அவர்

பரிணமிக்க நேர்ந்தது - ஊர்
பேசிய ஓர் அதிசயச் செய்தி!

அமுதனாரின் -
அன்னையார்...

இப்புவிமிசை
இருந்த நாள்களில் -
இராமானுஜரின்
இதோபதேசங்களை...

வெகுவாக
விரும்பிக் கேட்பாராம்;
கேட்டுக் கேட்டுக்
கண்ணீர் மல்கி -
கேட்டதையே - மீண்டும்
கேட்க வேட்பாராம்!

ஆதலால்
அமுதனார் -
தனது
தாயாரின் சிராத்தத்திற்கு...

‘போக்தா’ வாக - அதாவது
பிதிர் ஸ்தானத்தை ஏற்பவராக -
வைணவர் ஒருவர் -
வாய்ப்பா ராகில் ...

அன்னையாரின்
ஆன்மா சாந்தியடையும் -

என
எண்ணினார்;
இதற்கு உதவுமாறு - அவர்
இராமானுஜரை நண்ணினார்!

உடையவர்
உடனே -
கூரேசனைக்
கூப்பிட்டு..
"போக்தாவாய் - நீர்
போய் வாரும்;
அதனால் -

அமுதனாருக்கும் -
நமக்கும் -
நன்மை சேரும்!" என்றார்;

குருவின் ஆணையைக்
கூரேசன் ஏற்று -
அமுதனார்
அகத்திற்குச் சென்றார்!

'போக்தா'வாகப்
புசித்த பின்பு...

தட்சிணையைப் பெற்று -
திருப்தி தெரிவிக்க வேண்டும் -
'திருப்தோஸ்மி' என்று; கூரேசன் -
தெரிவிக்கவில்லை அன்று!

அமுதனார்

அள்ளி அள்ளி -
தட்சிணை தந்தும்...

கடைசிவரை-
கூரத்தாழ்வான் -
திருப்தி எனும் சொல்லை
தெரிவிக்கவே இல்லை!

அமுதனார்
ஆடிப் போனார்;
அன்னார்
ஆன்மா
அமைதியுறாதே - என
ஆனனம் வாடிப் போனார்!

"எது கொடுத்தால்
எளியேன் பால் இரங்கி -
தேவரீர்
'திருப்தோஸ்மி' என்பீர்?" என்று -

வெகு
விநாயமாகக் கோரினார்;
'கோயில் திறவுகோல்!' என்று -
கூரேசன் கூறினார்!

அமுதனார் ஓர்ந்தார் - திரு
அரங்கனின் லீலை;
அன்னையாரின்
ஆத்மசாந்தியை முன்னிட்டு
கூரேசனிடம் தந்தார் - திருக்
கோயிலின் திறவுகோலை!

'திருப்தோஸ்மி' என்று -
தெரிவித்தார் கூரேசன்;
புன்னகைத்தான்
பன்னகத்தின் மேல் -
படுத்திருக்கும்
பரம்பொருளான சருவேசன்!

அமுதனார்
அகமகிழ்ந்து போனார்;
ஸ்ரீ ராமனுஜரின்
ஸ்ரீ மடத்து சீடர் ஆனார்!

<u>(13) காஷ்மீரத்து அரசன்</u>

இராமாநுசர் தமது திவ்விய தேச யாத்திரையை மேற்கொண்டபோது

இரண்டாம் முறையாக -
இராமனுஜர் -
காஷ்மீரம் போனார்; வேந்தனின்
கவுரவ விருந்தினர் ஆனார்!

ராஜா -
ராஜோபசாரம் செய்தான்;

எதிராஜரின்
எழிலார்ந்த -
பாத பங்கயங்களில்
புஷ்பமாரி பெய்தான்!

பிறகு - எம்

பெருமானார்
சரஸ்வதி பீடம் சென்றார்;
சேவித்து நின்றார்!

பாமடந்தை
பிரசன்ன மானாள்;

ஸ்ரீ ராமானுஜருக்கு -
ஸ்ரீ பாஷ்யக்காரர் எனும் -
விருது வழங்கி -
வாழ்த்திப் போனாள்!

அரசன்
அவருடைய சீடனாகி -
அன்றாடம் - சீயரின்
அருளுரைகளைக் கேட்டான்;

வீடு பெற உதவும்
விழுமிய கருத்துக்களை
வாங்கி வாங்கி - உள்ள
வங்கியில் வைப்பாய்ப் போட்டான்!

(14) நல்லான் சக்கரவர்த்தி
இவரைப்பற்றி

அவர்
அடிநாளிலிருந்தே...

மயர்வறு
மதிநலம் பெற்று -
உயர்ந்தவர்
உடையவர் திருவடி பற்றி!

எம்பெருமானாரின்
ஏரார்ந்த தரிசனத்தை;
....
ஊர்
ஊராய்;
பட்டி
பட்டியாய்;

வாய்வலிக்க
விளம்பியவர்;
அதன் பொருட்டே
அரங்கம் விட்டு - ஓர்
அதிகாலையில்
ஆவேசித்துக் கிளம்பியவர்!

சாதி
சமய
வெப்பத்தால்
வெந்து கிடக்கும் -
மன்பதை
மறுபடியும் தழைக்க;
பட்டொழிந்து
போகாது பிழைக்க;

எதிராஜ மேகமல்லால் - வேறு
எவர் வந்து பெய்யக் கூடும் -
சம திருஷ்டி - எனும்
சகலருக்குமான ஒரு விருஷ்டி?
என - நல்லான்
எண்டிசை கேட்க -
சொல்லிப போனார்; தான்
சொன்ன -
சொல்லுக்குத் தானே சான்றா
யானார்!

மதுரை
மாநரில் -
வைகை
வெள்ளத்தில்...

சண்டாளனின்
சவமொன்று -
மிதந்து வந்து
மெல்லக் கரை ஒதுங்குகையில்...

பிரேதத்தின் -
பணை அனைய -
திருத்தோள்களிலும் - திருமண்
இட்ட தழும்புகள் தெரிய...

அக்கணமே - நல்லான்
ஆற்றில் பாய்ந்து -
சண்டாளன்
சவத்தைக் கரை சேர்த்தார்;
ஒரு
வைணவனுக்குரிய...

சகல
சமஸ்காரங்களையும் செய்து -
தானே அதற்குத்

தணல் மூட்டி -

'அநாதைப் பிணம்' என்னும் -
அபவாதத்தைத் தீர்த்தார்;

ஊரில் உள்ள
உயர்சாதிக்காரர்கள் -
சண்டாளனுக்கு
சமஸ்காரம் செய்த - நல்லான்
சக்கரவர்த்தியை
சாதிப் பிரட்டம் செய்தனர்;
'வேதியன் கெட்டான்!' என -
வசைமாரி பெய்தனர்!

பகவான் - ஒரு
பிராமணர் மீது ஆவேசித்து...

'இந்த
இளகிய நெஞ்சினன் -
எல்லோர்க்கும் பொல்லான்;
எனக்கு நல்லான்! என்று -

சொல்லிச்
செல்ல...

சாதாரண - திருமலை
சக்கரவர்த்தி - அன்றுமுதல்
நல்லான் சக்கரவர்த்தி - என
நாமம் பெற்றார்;
நாட்டவர்
நல்லானிடம் -
உடையவர் சித்தாந்தத்தை
வழுவறக் கற்றார்!

<u>(15)விஷ்ணுவர்த்தனன்</u>

மைசூர் சீமைக்குள் அடங்கிய தொண்டனூர் அரசன் விட்டல தேவராயன் - இவன் சமணமதத்தைச் சார்ந்தவன்.

விட்டல தேவராயன்
வாழ்க்கையில் -
எதிராஜரால்
ஏற்பட்டது ஒரு திருப்பம்;
சமண
சமயத்தைச் சேர்ந்த -
வேந்தனுக்கு வந்தது
வைணவத்தின் பால் விருப்பம்

....
ஓவ்வொருநாளும்
உபாதானத்திற்காக -
வேந்தன்
விட்டல தேவனின் -
வண்ண மாளிகைக்குச் செல்வது
வழக்கம்; அந்த
வழக்கத்தின் காரணமாக
வேந்தனின் தர்மபத்தினி -
சாந்தல தேவியுடன்
சிறிதளவு பழக்கம்!

பேரரசிக்கு ஒரு
பெண்; அப்பெண் -
சித்த சுவாதீன மற்று
சதா சர்வகாலம் -
அலகை பற்றினாற்போல்
அலறிக் கொண்டிருந்தாள் -

அளப்பரிய -
அவலத்தில் -
ஆழ்ந்திருந்தது
அரசியின் கண்!

மன்னனுக்கும் - அதுபற்றி
மாளாக் கவலை! அவனது
விழி
விளிம்பிலும்
கசிந்து கொண்டிருந்தது
கண்ணீர்த் திவலை!

தொண்டனூர் நம்பி - அரசமா
தேவியாரிடம்...

“அம்மா! எங்கள்
ஆசாரியர் -

எதிராஜர் - இவ்வூரில்
எழுந்தருளி யுள்ளார்;

அவரை -
அரசர்பிரான்
அரண்மனைக்கு அழைத்தால்
அவ் அழைப்பை...
சமண மன்னனாயிற்றே - என்று
சீயர் பெருமான் தள்ளார்!

இணையில்லாத் தண்ணளிமிக்க -
இராமானுஜரின்...

திருஷ்டியும் -
திருவடியும் -
தங்கள்
தன்யை மீது பட்டால் -
நோய் நீங்கிப் போகும்!

தனையை மீது பட்டால் -
நலமாடும்; பீடித்த
நோய் நீங்கிப் போகும்!”

என்று -
எடுத்து மொழிந்தார்;
தொண்டனூர் நம்பியே - ஒரு
தயாசாகரமாய் வழிந்தார்!

அரசி -
அரசனிடம் சொல்ல -
ஆழ்ந்தான்
அவன் யோசனையில் மெல்ல!

சமண குருக்களால்
சரிபடுத்த முடியாத - தன்
மகளின் மனநோயை - வைணவ
மகான் ஒருவர் நீக்குவதா?

சமணத்தைவிட
சக்தி வாய்ந்தது -
வைணவம் என்று
வையம் பேசும்படியான -

ஒரு கருத்தை - மனம்
ஒப்பி நாமே ஊக்குவதா?

இன்னணம் -
இரண்டொரு நாள்கள் -
எண்ணினான் வேந்து -
எண்ணினத்தில் அலை போந்து!

ஏற்கெனவே - அவன்
எண்ணத்தில்...

சைன
சமய -

மார்க்க குருமாரிடம் - ஒரு
மனத்தாங்கல் உண்டு;
அவர்கள் -
அவனோடு அமர்ந்து -
அமுதுண்ண மாட்டார்கள் -
அவன்
அங்கஹீனன் எனக் கண்டு!

தில்லி பாதுஷா - விட்டல
தேவனோடு...

முன்பு ஒருமுறை - பகை
மூண்டு - தேவனை
செருவில் வென்றான்; வென்று -
சிறைப்பிடித்துச் சென்றான்!

விட்டல தேவனின்
விரல் ஒன்றை மட்டும் -
அரிந்தெடுத்து
அவமானப் படுத்தி விட்டு...

அவனைத் - திருப்பி
அனுப்பி விட்டான்;

'விரலிழந்த
வேந்து!' என -
விட்டல தேவன் - அன்று முதல்
விளிக்கப் பட்டான்!

அங்கஹீனனோடு
அன்னம் அருந்துதல் -
சாஸ்திர
சம்மதமில்லை என்று...

வேந்தன் தரும்
விருந்துகளை -
அமண குருக்கள்
அங்கீகரிக்க வில்லை;

வேறு வழியின்றி -
வேந்தன்
தாங்கி நின்றான் - அந்தத்
தவசிகளின் சொல்லை!

இத் தருணத்தில்தான் -
இராமானுஜரைப் பற்றி...

அரசி -
அரசனிடம் கூறினாள்;
அவரை
அரண்மனைக்கு
அழைக்க வேண்டுமென்று - தன்
ஆளனிடம் கோரினாள்!

உடனே -
உடையவரை -
அரண்மனைக்கு
அழைக்காமல்...

சிலநொடிகள்
சஞ்சலித்தான்; பின்பு -
சீயரை அழைக்கச்
சம்மதித்தான்!

உடையவர்
வந்தார்; தன்
ஸ்ரீபாத தீர்த்தத்தை - ஒரு
சீடரிடம் தந்தார்!

அச்சீடர் -
அரசகுமாரி மேல் -
அந்தத் தீர்த்தத்தை -
அங்கையில் அளித்துத் தெளித்தார்;

மறுகணம் -
மன்னன் மகள் - மன
நோய் நீங்கி
நலம் பெற்றது கண்டு...

ராஜனும் - பட்டத்து
ராணியும் மனங்களித்தார்!

சமண
சமயத்தை -
வேந்தன் கை கழுவினான்;
வைணவத்தை தழுவினான்!

விட்டல தேவன் -
'விஷ்ணு வர்த்தனன்' ஆனான்;

ஆசாரியன்
அருளிய

தாஸ்ய நாமத்தைப் பெற்று -
தலையாய தொண்டனாகிப்
போனான்!

(16) தொண்டனூர் நம்பி
இப்படி ஒரு பெயர் காவியத்தில் வருகிறது. இவர் பற்றிய விவரம் அறியக்கூடவில்லை.


இங்ஙனம் இராமாநுஜர் வாழ்வில் நேரிட்ட பல்வேறு சந்தர்ப்பங்களால் அவருக்குப் பலர் சீடர்களாக அமைகின்றனர்.

*** **ஸ்ரீமதே இராமாநுஜாய நம:** ***

குறிப்பு:

1. வெற்றி வேற்கையில் ஒரு பாடலை நினைவு கூர்ந்து எழுதியது
2. இவர் 'சீடர்' என்று வெளிப்படையாகச் சொல்லப் பெறாவிட்டாலும், இவர் தம் செயல்களால் நாம் 'சீடர்' எனவே கொள்ளலாம். அனைவரும் "அங்கு மலேரியா உளது என்று அனைவரும் தயங்க, அனந்தாழ்வான் அங்கு செல்ல முன்வர, உடையவர் உடனே "நீர்தான் 'ஆண்பிள்ளை' " என்று பாராட்ட அவர் 'அனந்தாழ்வான் ஆண்பிள்ளை' என்று வழங்கப் பெற்றார். அவர் பணி செய்த இடத்தில் பல அடியார்கள் தங்கும் விடுதிகள் கட்டப் பெற்றுள்ளன. அவை 'அனந்தாழ்வார்குடியிருப்புகள்' (Ananthalvan Tank Cottages – A.T.C) என்று வழங்கப் பெறுகின்றன.
3. (Tank) வெட்டினார். குளமும் குளத்திற்கு 'இராமாநுஜன் குளம்' எனப் பெயரிட்டார். அங்கு கட்டப் பெற்ற விடுதிகள் A.T.C என வழங்கப் பெறுகின்றன.
4. இவ்விடத்தில் சைவப் பெரியார் அப்பர் பெருமானின் உழவாரப் பணியை நினைவு கூர்கிறோம்.
5. இதன் பெருமையையும் அருமையையும் உணர்ந்த வைணவப் பெருமக்கள் இதனை 24-வது பிரபந்தமாக நாலாயிரதிவ்வியப் பிரபந்தத்தில் சேர்த்துப் போற்றியுள்ளனர்.

****





இராமாநுஜர் 1000

கவிஞர் வாலியின்

இராமாநுஜ காவியம் - ஒரு மதிப்பீடு

இயல் ~ 6

வாலியாரின் வருணனைத் திறன்

ந சுப்பு ரெட்டியார் 100



இயல் – 6

வாலியாரின் வருணனைத் திறன்

கம்பராமாயணம் போன்ற காவியங்களின் மரபுகளில் வருணனையும் ஒன்று. நாட்டுப் படலம், நகரப்படலம் போன்றவை அமைந்திருப்பதே இம்மரபுக்கு அடிப்படையாகும். கம்பன் காவியத்தில் இயற்கை வருணனை, காவியத் தலைவர்களின் வருணனை, பிற காவியத் துணைமாந்தர்களின் வருணனை பெரிதும் இடம் பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம். கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியமும் இந்த மரபுகளைத் தழுவியே அமைந்துள்ளது. இவை அமைந்திருக்கும் சிறப்பினை நோக்குவோம். நம் நோக்கு சில தலைப்புகளில் அமைந்து நூலுக்குப் பெருமை சேர்க்கின்றது.

1. கடவுளர்கள்

இராமாநுஜ காவியத்தில் கடவுளர்களைப் பற்றிய பல குறிப்புகள் வருகின்றன. அவர்களின் வருணனையே ஈண்டு நோக்குவோம்.

(1) பார்த்தசாரதி: பூதத்தாழ்வார் பூசித்து மங்களாசாசனம் செய்த அச்சுதன்; அல்லிக் கேணியான்

‘ஒரு அல்லித் தாமரையாள்
ஒன்றியசீர் மார்வன்,
திரு அல்லிக் கேணியான்’[1]

என்பது பூதத்தாழ்வாரின் திருவாக்கு; இவனே பார்த்தசாரதி.

பார்த்த சாரதியை;
பாஞ்ச சன்னியம் ஊதி
ஆர்த்த சாரதியை;
அர்ச்சுனன் அவலம்;
தீர்த்த சாரதியை:
திருவாயால் கீதைத் தேன் -
வார்த்த சாரதியை:
வளநாட்டை தருமன்கை -
சேர்த்த சாரதியை:
சுயோதனன் செருக்கைப் -
போர்த்த சாரதியை:
புல்லர் கூட்டத்தைத்

தூர்த்த சாரதியை;
திருகி திருகி திருமீசை[2] -
கூர்த்த சாரதியை;
கூடாதார் கண்ணுக்குக் -
கார்த்த சாரதியை;
களத்தில் தேரோட்டி -
வேர்த்த சாரதியை:
வேயிசையால் கறவைகளை -
ஈர்த்த சாரதியை;

<u>(2) அருள்மிகு பேரருளாளன்:</u>

சின்னக் காஞ்சியில்[3] கோயில் கொண்டிருப்பவன்.

பறவை மீது
பறப்பவன்; வெள்ளைப்
பரவை மீது
படுப்பவன்;

இறப்பை; பிறப்பை -
இல்லா தொழிக்கும் - பேரறிவாம்
நறவை பக்தர்க்கு
நாளும் கொடுப்பவன்
....
வாங்கி நிற்கிறான்
வண்ணக் கரங்களில்
வட்டத் திகிரி; சங்கு;

எட்டெழுத் தண்ணலின்
எழிலுக்கு ஏற்றத்திற்கு -
ஏது ஒரு கங்கு?

அவற்றை
ஆரேனும்
கூறுவே னென்று
கூறப் புகுந்தால்...

குன்றின் அளவில் - ஒரு
குன்றிமணி அளவே இருக்கும் -
கூறியவர் கூறிய
கூற்றின் பங்கு!

<u>(3) பெருந்தேவித்தாயார்:</u>

பெருமாள் பக்கலில்
பெருந்தேவித் தாயார்; அந்தத்

தாயார் போல் தண்ணளியை -
பெற்ற
தாயார் கூட ஈயார்!

தாயார்
திருவடியில்
தோய்ந்திருப்போர்
தொல்வினையில் காயார்;

சிந்தாகுலத்தில்
சிக்குண்டு
சிந்தையும் சரீரமும்
சிறுகச் சிறுகத் தேயார்;

நொடித்துப் போய்
நொடித்துப் போய்
நொடிக்கு நொடி
நொடிக்கு நொடி மாயார்;

வேட்கை கொண்டு
வெகுளி கொண்டு
விருப்பு வெறுப்பு ஓலைகால்
வாழ்வுப் பந்தலை வேயார்!

<u>(4) அருள்மிகு அரங்கநாதன்:</u>

(அ) **ஆறு - (=காவிரி)**
இரண்டாகி - சுற்றுகள்
ஏழுக்குள் இருக்கும்
எட்டை...

வலம் வரும்
தலம்; வைகுந்தம் -
நிலம் இறங்கிய
நிலம்!

இராவணன்
இளவல் ஆளும்...
தீவு பார்த்துத்
தேவு படுத்திருக்கும் -
தீவு!

'அரவுமேல் படுத்திருக்கும் -
இரவு!' எனப் பேசும்படி -
பெரிய பெருமாள் -
கரிய பெருமாள்;

ஆயினும் -
அருள் வெளிச்சத்தை - அவ்
இரவுதான் பிளிற்றி - எல்லோர்
இரவையும் வாடிய வைக்கிறது

(ஆ) **- பையுடைய**
இருநா மீது...
ஒருக்களித்துக் கிடக்கும்
ஓரெட் டெழுத்தானை; இராக்கதன்
செருக்கழித்துக் கோதி - இலங்கை
சின்னவனுக் கீந்தானை;

தெற்கிலும் வடக்கிலும் -
தெண்ணீர்ப் பொன்னி...

தரங்கம் எழும்பித்
தரையலம்பும் - திரு
அரங்கம் எனும் ஊரானை;
அரங்கநாதன் எனும் பேரானை;

காணக்
கண்ணிரண்டும் போதா; அவை -
உள்ள வனப்பை -
உள்ளபடி நமக்கு ஓதா!

சிரசு முதல்
சேவடிவரை - சீரங்கத்து
அரசு அழகை

சேவித்து நிற்கும் -
சேவார்த்திகளின் விழிகள் -

விழுங்கு விழுங்கென்று
விழுங்கும்; அங்ஙனம்
விழுந்து விழுந்து
விழுங்கிய பின்னும் - முழுதும்
விழுங்கவொணா வேதனையை -
உள்ளே
விழுங்கிக் கொண்டு புழுங்கும் !

(இ) **அவன் -** (= அரங்கனை)
அடங்க மாட்டான் -
மொழிந்து மொழிந்து நின்றாலும்
மொழிக்குள்;

ஆனால்
அவன் விரும்பினால் -

அவனாக வந்து
அடங்குவான்...

மூவரான
முதலாழ்வார்களோடு - திருக்
கோவிலூர் - இசை
கழிக்குள்

(ஈ) நித்ய விபூதியில் உள்ள
நாராயணனை -
ஈரத்தின் மேலிருக்கும்
ஈரம் எனலாம்;

லீலா விபூதியில் உள்ள
லோகநாதனை -
ஈரத்தின் இடையிலிருக்கும்
ஈரம் எனலாம்!

ஆம்
அரங்கநாதன்...

ஈராறு நடுவிருக்கும்
ஈர ஆறு! அவனது -
எளிவந்த தன்மைக்கு
ஏது ஓர் ஈறு?

(உ) - திரும்ப
ஜனனம் செய்யும்
ஜீவன்களை யெல்லாம் -
....
'வைகுந்தம் நோக்கி -
வையத்தார் வராவிடில் என்ன?
வையத்தாரை நோக்கி -
வைகுந்தம் வரும்; வாழ்வு தரும்!'

என
எம்பிரான் எண்ணினான்;

திரிசடையின்
தந்தை -
வீடணனின்
வழி -

தரையிறங்கி -
திருவரங்கத்தை -
தனக்குரிய

திருத்தலமாய்ப் பண்ணினான்!
....
கடல் நடுவே படுத்தவன் -
காவிரி நடுவே படுத்தானெனில்...

சேயின்
சேமம் கருதி - நோன்பிருக்கும்
தாயின்
தண்ணளியல்லவா அது;

(ஊ) 'ரங்க ராஜா! - எங்கள்
ரங்க ராஜா!'

என்று
ஏழையோ பாழையோ
எவராயினும் சரி - அவன்
எதிர் நின்று விளிக்க ...

'உங்க ராஜா! - நான்
உங்க ராஜா!'

என —
எழுந்தோடி வந்து...

உறுகண் போக்குகின்றான் - அவர்
உள்ளங்கள் களிக்க;
கண்ணோரத்தில் - ஆனந்தக்
கண்ணீர் துளிக்க!

<u>(5) அருள்மிகு அரங்கநாயகி</u>

ரங்கநாயகி எப்படி?

தாயார் -
தானிருக்கும்...

வீட்டு
வாசல் தாண்டி -
வெளியே
வைத்ததில்லை ஒரு தப்படி!

படி தாண்டாமலே
பார்க் கெல்லாம் -
படியளக்கும்
பத்தினி;

பிராட்டி
பார்வை பட்டாலே -
படிமிசை நில்லாது
பஞ்சம் பட்டினி!

நம்பினார்க்கு
நலஞ்சேர்ப்பதில் -
நாயகனை மிஞ்சியவள்
நாயகி;

நீல -
நயனங்களின் வழி...
பிரவாகமாய்ப் -
பெருங்கயையைப் -
பீச்சி நின்றிருக்கும்
நாச்சி!

வினை
வெப்பத்தில் -
வெந்து
வதங்கி -

தன் -
திருவோலகத்திற்கு...

வருகை புரிவார்
விழிநீர் துடைக்கும் - அவளது
இருகை!

பிரகாரம் சுற்றிப்
பிரதட்சிணம் வந்து -
பிரார்த்தித்தால்
போதும் -

தொலையும்
தொலைதூரத்திற்கு...

புந்தியில் -
போகாது நெடுநாள்
குந்தியிருக்கும் - எவ்வகைக்
கோதும்!

மஞ்சள் காப்பு
மண மணக்க;
பட்டுப் பாவாடை
பள பளக்க;

மாணிக்கம் -
மரகதம் -
வைரம் -
வைடூரியம் -
ஆகியவற்றால்
ஆன...

பிழைகள் - நெல்
பொரியளவும் இல்லாத
இழைகள் -

அழகழகாய்
அழகழகாய் -
அங்கம் முச்சூடும்
அனல் பொறியாய் மினுமினுக்க;

மூலத்தானத்தில் - காஞ்சன
முளரிபோல் காட்சி தரும்...

தாயார்
திருமேனியை - வருணிக்கும்
வாயார்
வரகவிகளிலும் இல்லை;
எங்கு போய்த் தேடுவார் -
ஏற்றதொரு சொல்லை?

அயிராணியின்
அரசுபோல்
அம்சங்கள் - ஆயினும்
அமைந்திருப்பினும்...

ரங்கநாச்சியாரின் -
ரமணீயமான தோற்றத்தை;
ஏற்றத்திற்கெல்லாம் - மேலான
ஏற்றமாயுள்ள ஏற்றத்தை;

கடுகிலும்
கடுகு கூட -
கண்டுகொள்ளல்
கடினம்;

பெரிய-
பிராட்டியார்...
பார்வைக்குள்
பிடிபடாத -
பிரமாண்டமான
படிமம்!

(6) அருள்மிகு சிவன்

வாரணாசியில்
உள்ளவரை -
....
சந்தி செய்த பின்
சாயரட்சையில்...

அனைவரும்
ஆலயம் சென்று -
அனல் மெழுகாய்
அகம் கரைய நின்று -

அரவை; அரைக்கால்
அம்புலியை; ஆகாயகங்கையின் -
வரவை; விரிசடையில்
விரும்பி ஏற்ற விமலனை...

ஆலத்தை வாங்கி
அமுதென அருந்தி -
தொண்டையில்
நீலத்தை வாங்கி
நின்றிருக்கும் நிமலனை...

ஏகத்தில் பெண் ஆண்
இருக்க வேண்டி - பிங்கலைக்கு
தேகத்தில் பாதியைத்
தத்தம் செய்த பரமனை...

புல்லியர் நகரங்களைப்
பொசுக்கி நீறாக்கிடவே - இமய
வில்லியாயப் பிறங்கிய
வியத்தகு பராந்தகனை...

தொழுதனர்;
தொல்வினை தொலைய வேண்டி -
அழுதனர்!

2. இயற்கை

வாலியர் காவியத்தில் அமைந்துள்ள இயற்கை வள சிறப்புகளை நோக்குவோம்.

(அ) இயல்பானவை

1. திருவேங்கடம்

வேய்களில்
வாய்வைக்கும்
வேழங்கள் மேயும்
வேங்கட மலை அடிவயிற்றில் -

கோந்து தடவாது
குட்டிகள் ஒட்டிய
குரங்குகள் பாயும்
கோவிந்தன் குன்றம்!

புல்லும்
பனித்துளியும் -
புல்லும்
புலரி;
காலும் - வாய்க்
காலும்
ஆலும்
அதி காலை

கோவிந்தன் குன்றமும் அங்கு ஓர் அதிகாலையும் வருணிக்கப் பெறுகின்றன.

2. <u>தஞ்சமாம்பாள் தந்தையின் பிதிரார்ஜிதம்</u>

தஞ்சமாம்பாள்
தகப்பனாருக்கு...

பிதிரார்ஜிதம்
பெரிசு; அவரது
பூர்வஜன்ம
பூஜா பலனாக - அது
பகவான் தந்த
பரிசு!

நிறைய
நிலம் நீச்சு - அதை
நினைத்துப் பார்த்து ஊரே விடும்
நீண்ட மூச்சு!

மா;
புளி;
என்று -
எல்லாமே...

மூப்பு எய்தாத
தோப்பு; அதில் -
ஏய்ப்பு இல்லாத

காய்ப்பு!

நாஞ்சிலுக்கும்
நடவுக்கும்...

வருஷம் பூராவும்
வேலை கொடுக்கும் வயல் - அதன்
பச்சைக்குப்
பழுது வராதபடி
பருவம் தவறாது
பெய்து கொண்டிருக்கும் புயல்

தாழி தாழியாய்த்
தானியம்
குதிர் குதிராய்க்
குறுவை!

3. <u>திருப்புக் குழியில் - ஒருநாள் காலை</u>

வெளிச்ச
வெள்ளத்தோடு
கைகறை வந்து - மையிருட்டாம்
வையக் கறையை அலம்ப;

மண் விழித்த
மறுகணமே - துயில் நீங்கிக்
கண் விழித்த
கரிச்சான்கள்...
சில்லென்றிருந்த - ஈரச்
சிறகுலர்த்திச் சிலம்ப;
புலரியைக் கண்ட
பூரிப்பில்...

கால் இல்லாத
கால்வாய் ஓட; கால்வாய் மேல் -
கால் இல்லாத
கால் வந்து ஆட;

தினகரன்
திருமுகம் பார்த்து...
தண்டுக்கால் கொண்டு
தாமரை கூத்துப் புரிய;
வண்டுக்கால் ஆறும் - அதன்
வண்ணமடலில் ஆழப் பதிய;

அந்த
அழகிய காலைப் பொழுதில்...

வடபத்திரங்களை
விலக்கிக் கொண்டு -
வானி லிருந்து
வையம் இழிந்த வெய்யில் -

வேத வித்து யாதவரை
வணங்கி நின்றது;

4.(அ) <u>விந்தியமலைச்சாரல்</u>

இராமாநுஜன் - தன்
இரண்டு விழிவாயால் உண்டான்;

இருடீகேசனை எண்ணி -
இருக்கை இடையறாது ஓதும்
இருடிகளின்...
இருக்கை என்றிருக்கும் -
இயற்கை எழிலுக்குப் பின்
இறைக்கை இருக்கக் கண்டான்!

அரூபம் என்றிருக்கும்
ஆண்டவனின் - திவ்விய
சொரூபம் என்னவென்று...

சுட்டியது - அந்தச்
சூழல்; அளப்பரிய
ஆனந்தம் விளைப்பது - அதில்
ஆழல்!

நதி;
நிலம்;
மலை;
மானம்;

என -
எல்லாவற்றிலும்
நாரணன் தெரிந்தான்; யாவுமாய் -
நாரணனே விரிந்தான்!

(i) குன்று ஏந்திய
கோண்டல் காட்டியது -
குன்று ஏந்திய
கோவலன் வண்ணம்;

(ii) தண்டு ஏந்திய
தாமரை காட்டியது -

தண்டு ஏந்திய
தாமோதரன் வதனம்;

(iii) வேணு ஏந்திய
வேழம் காட்டியது -
வேணு ஏந்திய
வாசுவின் நடையை;

(iv) பீலி ஏந்திய
பிணிமுகம் காட்டியது -
பீலி ஏந்திய
பீதாம்பரன் நேர்த்தியை!

வாயிதழ்
வடிக்குந் தேனை

(v) வெளவல் புரியவரும்
வண்டோடு புல்லுகின்ற -
மெளவல் மலர்களெல்லாம்
மாயவன் முறுவல் காட்டும்;

வான்தடவும் -
வட மரத்தின்...

பத்திரம் ஒவ்வொன்றும்
பாரெலாம் உண்ட பெம்மான் - ஒரு
சித்திரம் போலே தன்மேல்
சயனிக்கும் பொலிவு காட்டும்;
எங்கணும் -
எம்பிக் குதிக்கும்...

(vi) புல்வாய் இனமெலாம் - பொய்ப்
புல்வாயை இராகவன் - தனது
வில்வாய் நாராசத்தால்
விருத்திய நாளைக் காட்டும்;

நீரினில் -
நீந்திக் கிடக்கும்...

(vii) நால்வாய் இனமெலாம் - முனம்
நால்வாயை இடங்கரின் - நீண்ட
தோல்வாய் இறுகப் பற்ற -
அதைத்
துண்டித்த இறையைக் காட்டும்;
ஒற்றை வேழத்தை -

உகிரால் வகிர...

(viii) கோளரி எழும்புகையில்
கனகனை ஏந்திக் கிழிக்க - ஓர்
ஆளரி எனக் கிளர்ந்த
அச்சுதன் ஏற்றங் காட்டும்;

தருக் கிளைகள் -
தாங்கும் கனிகளை...

(ix) தோடுகள் அகற்றி உண்ணத்
தாவிடும் அணில்கள் எல்லாம் -
கோடுகள் முதுகில் போட்ட
காகுத்தன் மூர்த்தி காட்டும்!

இவ்வாறு -
இதயத்தை ஈர்க்கும்...

வனமும்
வனவிலங்கும்;
வனமாலியின்
வனப்பும் நினைப்பும் -

4.(ஆ) <u>விந்தியமலைச்சாரல்</u>

வெட்ட வெளிப்
பொட்ட லெனும் -
புற்றிலிருந்து
புறப்பட்ட-
வெளிச்சக் கறையான்கள்
வெகு வேகமாக உண்ண உண்ண -

இற்றுவிழுமளவு
இருட்டு மரம் உளுத்தது;
உடன் -
ஊருலகு வெளுத்தது!

விந்திய மலை
விளிம்புகளில் -
சிறுகச் சிறுக
செக்கர் படிந்தாலும்...

ஒற்றையாழித் தேரோ;
ஓரேழு புரவியோ;
கீழ்த் திசையில் -
காணப்பட வில்லை;

கதிர் வருமுன்
கதிரின் கதிர் வந்து -
கபளீகரம் செய்துவிட்டது
காட்டின் அல்லை!

சர்ப்பம் -
சட்டை உரிப்பதுபோல்...

பையப்
பையப்
பூமி -
பனியை உரித்தது;
புலரியைப் -
புதிதாடையாய் தரித்தது!

காற்று -
காலை இளஞ்சூட்டை...

முதுகில் சுமந்தவாறு
முதுவனம் சுற்றியது
சும்மா -
சுற்றிச் சுற்றி வராமல்...

புல்லிவட்டம் அவிழ்ந்த
புதிய பூக்களின் -
வதனங்களில் வீற்றிருந்த
வெட்க வியர்வையை ஒற்றியது!

சிலபல நாழி
சென்ற பின் -
செம்பந்தாய் சூரியன் வந்து
சுடச்சுடப் பிலிற்றிய...

சுவாலையைப் - பூந்
துவாலையைப் போல் கொண்டு -
தருக்கள் - ஈரத்
தலைகளைத் துவட்டிக் கொண்டன;

வாடையில்
விடிய விடிய -
வதைப்பட்டுக்கிடந்த வனமே
விருப்பப் பட்டு -

வெய்யோன் உமிழ்ந்த -
வெப்பத்தை வயிறார உண்டன!

5. விந்தியமலையில் பகல் காட்சிகள்

வெது வெதுப்பான -
வெயில் பட்டு...

மூலை முடுக்கெல்லாம்
முளைத்திருந்த -
மூலிகைச் செடிகள்
மூரி முறித்தன;
மூரி முறிக்கையில் - ஈர
முத்துக்கள் தெறித்தன!

முற்பகலுக்குச் - சற்று
முன்னதாகத்தான்
மொத்தக் காடும் - கண்
முழித்தது;

கன்னா பின்னாவென்று
கரைந்தபடி பறந்த -
செம்போத்துகளின் சத்தம்
செவிப் பறையைக் கிழித்தது;

அடவி முழுதும் - சொல்லில்
அடங்கா அழகு கொழித்தது;
துறக்கம்
துறக்கம் என்று -
புராணங்களில் புகழப்படும்
புரந்தரன் புரியை...

வனம் - தனது
வனப்பால் பழித்தது;
ஆயினும் - ஓர்
அச்சம் பரவி
அச்சூழலின் சௌந்தரியத்தை
அழித்தது!

பிரமாண்டமான அருவியொன்று -
பேரிரைச்சலுடன்...
முகில்களின்
முகாமா யிருக்கும்
முதுமலையின்
முகட்டிலிருந்து -

தலைகுப்புறத்
தலையில் குதித்தது;
யாது காரணமோ?
யார் காரணமோ?

தண்ணீருக்கு அப்படியொரு -
தற்கொலை எண்ணம் உதித்தது!

மத்தவாரணங்களோடு சேராத -
மத்தவாரணம் ஒன்று...

வேழம் விரும்பும்
வேழம் விளையும் -
வனப்பகுதியொன்றில் புகுந்து
வெறித்தனமாய்ப் பிளிறியது;

அதைக் கேட்டு -
ஆற்றோரப் படுகையில்...

மடியில் வாய்வைத்த
மழலைக்குப் - பாலூட்டி நின்ற
பிடியொன்றின் முகம்
பீதிவயப்பட்டு வெளிறியது!

செங்கட்
சீயம் ஒன்று -
முழை நீங்கி - பிடர்
முடி சிலிர்த்து நின்று...

பையப்
பையப் -
பதுங்கிப்
பதுங்கிப்

பின்சென்று
பின் பொக்கென்று...
நாலுகால் பாய்ச்சலில் - ஒரு
நவ்வியைக் கவ்விப் பிடிக்க -
கருணை மனு எழுதிக் -
கலைமான் கண்களில் படிக்க...

காட்டெருமைகளும்;
காட்டாடுகளும்;
காட்டுப் பன்றிகளும்;
கதி கலங்க -

திமு திமுவென்று
திசைக் கொன்றாய் ஓட-

கிளம்பிய தூசி
ககனத்தை மூட -

தூரமாய் - ஓர்
ஓரமாய் நின்று ...

இவற்றைப் பார்த்த
இராமானுஜன் -
'எல்லோர்க்கும் உள்ளவன் -
எனக்கும் உண்டு!' என்று...

ஏழுமலை -
எம்பிரானை எண்ணியபடி -

ஒரு
மரத்தடியில் -
மூர்ச்சித்து விழுந்தான்;

6. <u>விந்திய மலையில் - மாலை இரவுக் காட்சிகள்</u>

மேலைத்திசை
மாலையொன்று -
மாலைச் சூரியனை
மெல்ல மெல்ல மெல்ல;

வாவி
வசனங்கள் - இருள்
வருகிறதோ - என
வாய் கூம்பத் தொடங்குகையில்...

முற்றிலும் மடல்கதவுகள்
மூடப்படுமுன் - மூசியிருந்த
வண்டுகள் உயிர்தப்ப – சிறை
விரித்து வெளிச் செல்ல;

படிப்படியாய்ப்
படிப்படியாய்ப் -
படிமீது
படிந்தது -

அந்திக் கருக்கல் - ஓர்
அசட்டு இருட்டாக;

இருளுமில்லாமல்
பகலுமில்லாமல் - பொழுது

இரண்டுங்கெட்டானாக
இருந்ததால்...

அஞ்சும்
அளவிற்கு -
அடவியே ஏற்கவில்லை
அதையொரு பொருட்டாக!

7. விந்தியமலையில் இரவுக்காட்சிகள்

அவ் -
ஆரணியத்தில் -
அங்கங்கே -
அரவம் நிறை புற்றிருந்தது

அர்த்த ராத்திரிக்கு மேல்
ஆகி விட்டதால் -
அரவம் ஊரும்
அரவம் கூட அற்றிருந்தது;

பகல்
பூராவும் -
காடு சுற்றிய
களைப்பில்...

அக்கடா என்று - மலை
அடிவாரத்தில் -
கால் நீட்டிக் கொண்டு -

காற்று படுத்து விட்டதால்...
சின்னஞ்
சிறிய -

இலையசையும் சப்தமோ; பழக்
குலையசையும் சப்தமோ; புனல்
அலையசையும் சப்தமோ; அங்கு
அணுவளவு கூட -

இரா இரா எனும்படி
இருந்தது அந்த இரா;
அமாவாசைத் திதி
ஆன மூன்றாம் நாள் வந்த இரா!

ஆகாயத்தில்
அறவே பிரகாசமற்ற -

பின்ன நிலா; மிகமிக -
சன்ன நிலா!

மேலைத் திசையில் மட்டும் -
மினுக் மினுக்கென -
சொலித்தபடி -
சப்தரிஷி மண்டலம்!

வனம் முழுக்க
விழுங்கி விட்டதாக -
மார்தட்டிக் கொண்டிருந்த
மையிருட்டின் முகத்தில்...

அவ்வப்போது - கரியை
அப்பிக் கொண்டிருந்தன -

வால் பகுதியில்
விளக்குகள் வைத்தபடி -

செடிக்குச் செடி
செடிக்குச் செடி -
சிறகடித்துப் பறந்த
சின்னச் சின்ன மின்மினிகள்!

பூமியை விழுங்கிய இருட்டால் -
பூச்சியை விழுங்க இயலவில்லை;

ஆக - ஓர்
அற்ப பூச்சி -
அல்லை எதிரித்து - நடத்தியது
மல்லை!

(ஆ)<u>ஊர்பற்றியவை (இயற்கை)</u>

<u>**1.(i)** திருப்புட்புழி</u>

வெளிச்ச
வெள்ளத்தோடு
வைகறை வந்து - மையிருட்டாம்
வையக் கறையை அலம்ப;

மண் விழித்த
மறுகணமே - துயில் நீங்கிக்
கண் - விழித்த
கரிச்சான்கள்...

சில்லென்றிருந்த - ஈரச்
சிறகுலர்த்திச் சிலம்ப;

புலரியைக் கண்ட
பூரிப்பில்...

கால் இல்லாத
கால்வாய் ஆம்; கால்வாய் மேல் -
கால் இல்லாத
கால் வந்து ஆட;

தினகரன்
திருமுகம் பார்த்து...

தண்டுக்கால் கொண்டு
தாமரை கூத்துப் புரிய;
வண்டுக்கால் ஆறும் - அதன்
வண்ணமடலில் ஆழப் பதிய;

அந்த
அழகிய காலைப் பொழுதில்...

வட பத்திரங்களை
விலக்கிக் கொண்டு -
வானி லிருந்து
வையம் இழிந்த வெய்யில் -

திருப்புட்குழியில் காலைப் பொழுதின் வருணனை இது.

1.(ii) திருப்புட்குழி

அழகிய காஞ்சியை
அடுத்து இருந்தது...

'திருப்புட்குழி' எனும்
திருநாமம் கொண்ட - ஒரு
வைணவத் தலம்; அங்கு -
வசித்தாலே வாய்க்கும் நலம்!

உலவும் வான்முகிலை
உராயும் விமானத்தோடு -
ஊர் நடுவே
உயர்ந்து நின்ற கோயிலுள்ளே...

கீழ்த்திசை பார்த்துக்
கொலுவிருந்தான் - காலைக்கதிர்
வாழ்த்திசை வார்த்து
வழுத்தி வணங்குகின்ற -
விஜயராகவன் என்னும்

வள்ளல் பெருமான்;
பெருமானின்
பக்கத்தில் -

மரகதவல்லி நாச்சி - எனும்
மணிப்பெயர் கொண்ட ஒருமான்!

அருள் வலம்
அமைய வேண்டி - பிரகாரத்தில்
உருள் வலம்
வருவோரின்...

வெப்பூழ் போக்கும்
விஜயராகவன் கோயிலின் -
கொப்பூழ் போலே - திருக்
குளம் உண்டு ஒன்று; அதை -
ஜகம் புகழும் -
ஜடாயு தீர்த்தம் என்று!

பட்டாபிராமன்
பத்தினியைப் -
பர்ணசாலையோடு
பெயர்த்தெடுத்துப் போகையில்...

இராவணனோடு பொருதி
இறந்து போன -
கழுகரசனுக்குக்
காகுத்தன் - முனம்
தர்ப்பணம் செய்த
திருக்குளம் இது என்பர் -

பழ நூல்கள்
பயின்று
பிரவசனம் புரியும்
பௌராணிக அன்பர்!

2. பூவிருந்தவல்லி

அந்த ஊர்
அந்தமுள்ள ஊர்; அவ்
அந்தத்திற்கு
அந்தமில்லா ஊர்!
கொடிமரம்;
கைகாட்டி மரம்;
பாய்மரம்;
பெருமாள் கோயில் சாமரம்;

இத்தியாதி மரங்கள் தவிர -
இதர மரங்களெல்லாம்...

புஷ்பவதியாகும் பருவத்தில்
புஷ்பவதியாகி
புஷ்பிக்கும் பருவத்தில்
புஷ்பிக்கும் ஊர்;

பூமரம் ஏந்தும்
பூவும்;
பூமரத்தை ஏந்தும்
பூவும்;
பொலபொலென இல்லாமல்
புஷ்டியாயிருக்கும் ஊர்;

பூக்களென்னும்
பயணியர் விடுதியில்...

இருந்து
இளைப்பாறிப் போகும்
இளங் காலுக்கு
இஷ்டியாயிருக்கும் ஊர்!

வாசத்தேனை
வாங்கிப் போக
வாடிக்கையாய் வரும்
வண்டுகளுக்கு...
சரக்கில்லை என்று
சொல்லாமல்...

பட்டுவாடா பண்ணும் - பூ
மொட்டுவாடா ஊர்!
அப் பேர்பட்ட
அவ்வூர்...

வாவியில் அல்லி; நந்த
வனத்தினில் மல்லி; இன்னும்
பூவினம் சொல்லி - மாளாத
பூவிருந்த வல்லி!

இயற்கையாக அமைந்திருக்கும் 'பூவிருந்தவல்லி'யைப் பற்றிய வருணனை.

<u>(3) திருப்பெரும்புதூர்</u>

பத்து மாதப் -

பிள்ளைத் தாய்ச்சி போல்...
தொந்தி சரிந்த -
தண்ணீர் மேகம் -
அந்திப் பொழுதில் -
அன்ன வயல்களின் -

மீதூர் – திரும்பெரும்
பூதூர் – திருமகளின்
முகவரியாய் முகங்காட்டும் -
மூதூர்!

நதியலை
நாணலை
மோகித்து
மோதூர்;

வண்டுகள்
வனசம் மேல்
உட்கார்ந்து
ஊதூர்;

மாருதம்
மாதரார்
கூந்தலைக்
கோதூர்;

ஆரணம்
அந்தணர்
ஓயாது
ஓதூர்!

ஏதூர் - தனக்கு
எதிர் ஊர்? எனப் -
பூதூர் கேட்பதுண்டாம் கேள்வி;

ஏனெனில்
எண்டிசை அதிர ...

ஆதிகேசவன்
ஆலயத்தில்
அன்றாடம் நடக்கும் வேள்வி!

தேவர்க்குத்
தும்மல் வரும் அளவு -
உயரப் போகும்
ஓமப் புகை; தேவர் -

ஈயும் நலங்களால் - குறையும்
ஈமப் புகை!

ஓவ்வொரு நாளும் -
ஓவ்வொரு நொடியும் -
உற்சவம்;
உற்சாகம்!

மண்வளம் அப்படி;
மனவளம் அப்படி;
தங்கம் விளைந்தது -
தப்படிக்குத் தப்படி!

கவலை; நீர்த்
திவலை;
இரண்டும் ஊர்க்குள் -
இல்லாமல் இல்லை; இருந்தன!

கவலை -
கழனியில்; நீர்த்
திவலை – நீர்சேந்தும்
தவலையில்!

வாய்க்கால்கள்;
ஏர்க்கால்கள்; அவ்வூர்
வயல்களுக்கென -
வாய்த்த கால்கள்!

ஆதலால் -
அவை...
வருடம் பூராவும்
வாடாது நிற்கும்;
ஒரு மூடை நெல் -
ஒன்பது பொன்னுக்கு விற்கும்!

ஆகாயமும் -
அரிச்சந்திரன் மாதிரி;
ஒருநாளும் பொய்ப்பதில்லை; அது
உதவுகின்ற விருஷ்டி!

நன்செய்;
புன்செய்;
நந்தவன மெங்கிலும் -
நவநவமான சிருஷ்டி!

ஊர் மக்களே -
ஊர் மண்ணெடுத்து - ஊருக்குக்

கண்ணேறு படுமெனக்
கழித்தனர் திருஷ்டி!

(4) காஞ்சி நகர்

பவுத்தம்;
சமணம்;
சைவம்;
வைணவம்;

என
எழுந்த...

வெவ்வேறு
வாய்க்கால் வழி -
வைய வயலுக்கு
வாலறிவு வெள்ளத்தைப் -

பாய்ச்சிய
பகவர் -
பலரும் போந்தருளிய
பூமி யென்பதால்...

ஆன்மீகம்
அறியும்
அம்புவி
அறியும்;

தொண்டை மண்டலத்தில்
தொண்டை!

காலம்
கடந்து நிற்கும்
கருத்துக்களைப் பேசிய -
காஞ்சிமா நகரம்...

தொண்டை மண்டலத்தின்
தொண்டை;

காலம்
கடந்து நிற்கும்
கருத்துக்களைப் படைத்த -
காஞ்சிமா நகரம்...

தொண்டை மண்டலத்தின்
மண்டை!

கச்சியென்றும்; அத்தி
கிரி யென்றும்;

திவ்வியத்
திருத் தலங்களின்...

உச்சி யென்றும்; அத்தி
ஊர் என்றும்,

நாமங்கள் பலவாய்க் கொண்ட
நன்னகர்;

பழ நூல்கள்
பகருகின்ற -
பிராசீனமான
பெருமைகளை அருமைகளை...

தொலைக்காமல் வைத்திருக்கும்
தொன்னகர்!

பாலியும் -
பிராகிருதமும் -
ஆரியமும் -
அருந்தமிழும் -

அறிந்த மண்; அறிவு
செறிந்த மண்;

அவ்வப்போது
அமைகின்ற -
அரசுகள்
அமல்படுத்தும்...

பாஷையைப் -
பழக்க வழக்கத்தைப் -
பின்பற்றி விட்டுப் -
பின்னாளில் -

ஏயது எது?
ஏயம் எது?
எனப் பரிசீலித்து...
ஏயதை ஏற்றுத் -
தீயதை எறிந்த மண்!

வடமொழியில் காஞ்சி;
வண்டமிழில் கச்சி;

கின்னரரும்
கிம்புருடரும்
இயக்கரும்
இன்ன பிறரும்...

ககனம் விட்டுக்
கீழிறிங்கி வந்துளர்
கீர்த்திமிகு - இந்தக்
கச்சியை நச்சி!

....

ஸ்ரீகாஞ்சி - என
ஸ்ரீவைஷ்ணவர்கள் சாதிக்கும்...
இசைமிகு
இந்த -
மண்ணகரம் - மற்றொரு
விண்ணகரம்!

(5) திருவரங்கம்

திவ்விய
தேசங்களில்...

திருவரங்கம்
தனி; அது -
நூற்றெட்டின்
நுனி!

ஆறு -
இரண்டாகி – சுற்றுகள்
ஏழுக்குள் இருக்கும்
எட்டை...

வலம் வரும்
தலம்; வைகுந்தம் -
நிலம் இறங்கிய
நிலம்!

இராவணன்
இளவல் ஆளும்...
தீவு பார்த்துத்
தேவு படுத்திருக்கும் -
தீவு!

(6)திருக்கோட்டியூர்

மூவுலகு ஆண்ட - கனகனை

முடிக்க – அமரரெல்லாம்
பூவுலகு போந்து...

கோஷ்டி
கோஷ்டியாகக்
கூடி ஆலோசித்த ஊர் – திருக்
கோட்டியூர்; 'உரக -
மெல்லணையான்!' எனும் - பர
மேட்டியூர்!

வைணவத்தின் -
வழி நிற்கும்...

நூலோரும் மேலோரும்
நூறும் எட்டும் என்று - தொழும்
திருப்பதிகள் நூற்றெட்டில்
திருக் கோட்டியூரும் ஒன்று!

பேய்;
பூதம்;
திருமங்கை;
திருமழிசை;

பாண்டியன் சபையில்
பொற்கிழி அறுத்த -
வில்லிபுத்தூர்
விட்டுணு சித்தர்;

மேற்கண்ட ஐவரும்
மங்களாசாஸனம் -
செய்ய தமிழால்
செய்த ஊர்;
பாசுர மழை -
பெய்த ஊர்!
....
இராமானுஜ முனிகளின்...
திருவுள்ளம் - ஒரு
தாயனையது என்பதை - இந்தத்
திருக்கோட்டியூர்தான்
தெரிய வைத்தது; எதிராஜரை -
'மதப்புரட்சி செய்ய வந்த
மகான்' என்னும் -
மகத்தான உண்மையை - இம்
மண்ணுக்குப் புரிய வைத்தது!

செவ்விய சீயரின் -

திவ்விய சரித்திரத்தில்...

திருக்கோட்டியூர்தான் - புதிய
திருப்பம் தந்தது;
அதன் பிறகே - இவ்
அம்புவி வாழும்...

வருணத்தார் எவர்க்கும்
வருணத்தை ஏற்காத -
வைணவத்தின் பால்
விருப்பம் வந்தது!

<u>(6) திருநகர்:</u>

நம்மாழ்வார் வாழ்ந்த ஊர்... இதன் வருணனை

திருநகரி; ஆழ்வார் -
திருநகரி; அவ்வூரை -
தரிசித்தாலே வரும் - ஆர்க்கும்
தமிழ் லகரி!

புளிநிழல்
போயமர்ந்த -

மாறன் என்னும்
மெய்ஞ்ஞானப்பூ - முனம்
நாளும் - தமிழ்
நறவம் பிலிற்றிதால்...

அவ்
அழகிய ஊரில்...
மண் சுமக்கும் புழுதியிலும்
பண் மணக்கும்;
பா சுமக்கும் பூவினிலும்
பா மணக்கும்;

நிலமெலாம் தமிழ் நாற்று;
நதியெலாம் தமிழ் ஊற்று;
நகரெலாம் தமிழ்க் காற்று;
நாவெலாம் தமிழ்க் கூற்று!

<u>(7) திருமணப்பந்தல் அழகு – திருஷ்டி</u>

வீதியை
வளைத்துப் போட்டு...
விதவித வண்ணப் பூச்சுடைய

விதானத்தோடு
வலக்கோடிக்கு இடக்கோடி
விஸ்தாரமாய் ஒரு பந்தல்;

பந்தலின்
பிரம்மாண்டமான முகப்பில்...

ஜரிகை சுற்றி
ஜோடிக்கப் பெற்ற
அழகிய
அசைந்தாடிகள்;

தார்கள்
தொங்கத் தொங்க
வளர்த்தியான
வாழைமரங்கள்;

மாவிலைகளாலும்
மலர்களாலும்
தொடுத்துக் கட்டிய
தோரணங்கள்;

நடுநாயகமாக
நாலடி உயரத்திற்கு
நெட்டிகளால்
நேர்த்தியாக நெய்யப்பெற்ற..

வட்டத் திகிரி;
வலம்புரி;
வலம் இடம் கொண்ட
வைணவச் சின்னம்!

மணப் பந்தல்
மய்யத்தில்...
மணவினை முடிப்பதற்கான
மணமேடை; அந்த
மணமேடை அணிந்திருந்தது
மலராடை!

பார்த்துப் பார்த்து -
பார்த்துப் பார்த்து...
அந்த மேடையை
அழகு படுத்தியிருந்ததால்;
அழகு மலர்களையே ஆடையாய்
அஃது உடுத்தியிருந்ததால்...

அடடா!

அங்கு -

கிளி கொஞ்சியது; தீபங்களின்
ஒளி கொஞ்சியது; தீபச் சுடரை -

விளக்குக் கொடியில்
விளைந்து விரித்த
வெளிச்சப் பூவாயெண்ணி
வளி கொஞ்சியது; வளிநெஞ்சில்
களி கொஞ்சியது;

ஆரம் -
ஆரமாய்...

தூண்களை ஒட்டித் தொங்கிய
துய்ய மலர்களில் - தேன்
துளி கொஞ்சியது; துளியின் மேல்
அளி கொஞ்சியது!

3. ஆண்மக்கள்

பல்வேறு நிலைகளில் காணப் பெறும் ஆண் மக்களைப் பற்றிய சிறப்புக்களைக் காண்போம்.

(1) கேசவ சோமயாஜி

(அ) வாழ்வாங்கு
வாழ்கின்ற
வாழ்வுக்கு
வியாகரணம்;

வண்மைக்கு
வாய்மைக்கு
விரிவான
வியாக்கியானம்;
வீதியில்
வருசையில்
வீடுகள்
வணங்கும்;

வேதியர்
வேந்தென
விழிகளில்
விளங்கும்!

அநேகருக்கு -

அத்தியாபகரான அவர்...
தாழங்குடை
தாங்கி வரும்
தருக்க சாத்திரம்;

திருமண் காப்பு
சாத்தி வரும்
திவ்வியப் பிரபந்தம்;

பஞ்சகச்சம்
உடுத்தி வரும்
பிரம சூத்திரம்;

பாதரட்சை
அணிந்து வரும்
பிரபத்தி மந்திரம்!

அவரது திருநாமம் -
ஆசூரி கேசவ சோமயாஜி
கனபாடிதான்! ஆனால் -
கனக்காத தலையர்; சங்கோஜி!

(ஆ) வெறும் -
வேதாந்தி மட்டுமல்ல;
கேசவ சோமயாஜி - நல்ல
கிருகஸ்தரும் கூட!

அகமுடையாளுக்கு
அவ்வப்போது –
கைக்காரியத்தில் உதவுவார்
கூடமாட!

தாரம் - ஓராடையில்[5]
தனித்திருக்கும் நாட்களில்...

தானே
தளிகை பண்ணுவார்!

திருமடைப் பள்ளியில்
திருவடி வைத்ததும்...

தமயந்தி புருஷனாகவும்[6]
திரௌபதி புருஷனாகவும்[7]
தன்னை எண்ணுவார்!

சப்புக் கொட்டிச்

சாப்பிடும்படி யிருக்கும் -

கறியமுது;
சாற்றமுது[8]; திருக்
கன்னலமுது![9]

'அடடா!
அவர் -
வத்தக் குழம்பு
வைத்தால் - அந்த
ஒத்தக் குழம்பு முன்
உக்கி போடணும்
மத்தக் குழம்பு!'

என்று
எதிரகத்துப் பெண்டிரிடம்...

பெருங்காய வாசைன
போய்ச் சொல்லும்;
வெட்கம் - அந்த
வஞ்சியரைக் கொல்லும்![10]

பெருமாள் கிருபையில் -
திருமேனி
பாங்காயிருக்கின்ற வரையில்...

யாதென்றிற்கும்
யாதொரு தயவையும்
யாரிடமும் யாசிக்காமல்
யதா சக்தி -

தன் வேலைகளைத்
தானே செய்ய வேண்டும் என்பது...

சோமயாஜியின்
சங்கற்பம்;
அமைவதுண்டு
அவரது
சங்கற்பத்திற்கேற்ப - சில
சந்தர்ப்பம்!
வாடிக்கையாக
வரும் கோனார் - வரமுடியாதபடி
சற்று
சுகவீனம் ஆனார்...

என்றிருந்தால் - அவரே

எடுப்பார் செம்பை;

மாட்டின்
மடியலம்பி -
நெய் தடவி
நீவி நீவி -
காம்பில் கைவைத்துக்
கறப்பார்; கறந்தபின்
கழற்றி விடுவார்
கன்றுக்குட்டியின் தும்பை!
அ:்.தேபோல்
அழுக்குகள் சேர்ந்துபோய்

ஈரெங்கொல்லி[11] "துணியெடுக்க
ஈரிரு வாரம் வராவிடில் - ஒரு
நேரங்கொல்லி போல் - அவர்
நின்றிருக்க மாட்டார்;

நிஜமாகவே
நடந்து...

தானே - மூட்டைத்
துணியையும் துவைத்துக்
கொல்லைப் புறத்துக்
கொடிகளில் காயப் போட்டார்!

எல்லா வேலைகளையும்
இழுத்துப் போட்டுக்கொண்டு
மாய்ந்து மாய்ந்து செய்வார்;
மசமசவென நிற்போரை வைவார்!

சோம்பலுக்கும் -
சோமயாஜிக்கும் சன்மப் பகை;
பரபரப்பில் -
பிள்ளையார் எறும்பு வகை!

யார் -
யக்ஞோபவீதம் கேட்டாலும்...

தானே -
தக்களியில் நூல் நூற்றுத்
திரித்துத் -
தயார் செய்து தருவார்;

ஏவியும் கூவியும்
எப்போதும் பணிகொள்ள -
வேண

வித்தியார்த்திகள் இருந்தும்...

சம்ஸ்காரங்களுக்கான
சமித்து; தர்ப்பை...

தானே -
தீர்த்தக்கரைக்குப் போய்
சிரமப்பட்டு
சேமித்து வருவார்!

பெரும்பூதூர்வாழ் - சகல
பிரஜைகளும் பேசுவர்...

'கேசவசூரி - ஒரு
காருண்யம் மிக்க பரோபகாரி!'
என்று -
ஏனெனில் - அவர்
வைதிகம் லௌகிகம்
ஒன்றாய்ச் சேர்ந்த ஒன்று!

அவர் வகுத்துக் கொண்ட
அர்த்தப்படி...
வாழ்வு எனும்
வார்த்தைக்குப் பொருள் -

வாழும்போதும்
வாழ்வது;
வாழ்ந்து முடிந்த பின்பும்
வாழ்வது!
....
பிரபஞ்சமே - ஒரு
பிரமை என்றும்;
பிரபஞ்ச வாழ்வு
பிரமைக்குள் பிரமை என்றும்;

தாயை;
சேயை; வெறும் -
மாயை;
சாயை;

என்றெல்லாம்
எகனைமொகனையோடு
எள்ளி
எற்றாமல்...

அவர்

ஆத்மார்த்தமாய் -
மனைவியை நேசித்தார்;
மகன் மகளை நேசித்தார்;
மொத்த -
மன்பதையை;
புல்லை; பூண்டை
பேற்றத்தை நேசித்தார்!
புள்ளை; பெற்றத்தை நேசித்தார்!

ஆருயிர்க்கெல்லாம்
அன்பு செய்வதுதான்...

பழமறையின்
பிழிவு -
எனும்
எளிய வலிய தத்துவத்தை -

ராமாயணத்தில் வாசித்தார்
ராமச்சந்திரனை யோசித்தார்!
....
காகுத்தனைக் கற்ற பின்பு
கேசவ சோமயாஜிக்கு...

தேள்கூடக்
கேள்தான்; தருவின் -
கிளைகூடக்
கிளைதான்!

குவலயத்துள்
குடும்பம் கண்டார்;
குடும்பத்துள்
குவலயம் கண்டார்!

இங்கு வாலியார் கேசவசோமயாஜியை வைதிக, லௌகிக ஆகிய இருகோணங்களிலும் காட்டுகின்றார்.

(2) <u>பெரிய திருமலை நம்பி</u>

ஸ்ரீசைல பூரணர் - என
சிறப்பிக்கப்படும்
பெரியவர் -
பெரிய திருமலை நம்பி!

திருவரங்கம் விட்டுத்
திருவேங்கடம் வந்தவர்
திருமலை நம்பி; திருமலைத்

திருமாலை நம்பி!

**அலர்மேல் மங்கையின்
அகமுடையானின்
திருப்பணிக்கே - தன்னை
அர்ப்பணித்தவர்;
அயல் விஷயங்களில்
விருப்பு வைத்த நினைப்புக்கு
நெருப்பு வைத்தவர்!**

**'பகை அணாங்கு ஆழியும்
பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக்
கையின் ஏந்தி...' என...**

**இளங்கோவடிகள்
இயற்றிய -
சிலப்பதிகாரம்
சிறப்பித்துப் பாடும்...**

**செம்மலை ஏறிநிற்கும்
செம்மலை;
ஆகாய கங்கையெனும்
அருவியின்...**

**தண்ணலை காலலம்பும்
அண்ணலை;**

**சதா விழிகளால் -
சாப்பிடுவார் திருமலை நம்பி!**

**'காக்கும்! காக்கும்!
காக்கும்!' எனக்
கரங்குவித்து நின்றிடுவார்
கால்முளைத்த திருமலை நம்பி!**

**அவர் பக்தி -
அலாதியான பக்தி;
ஆழ்வார்கள் அநுசந்தித்த
அநாதியான பக்தி!
ஒரு சமயம்
உலகளந்த பெருமானின்
அரவிந்த அடியினில்
அமரும் தும்பியவார்;**

அவரே -

அபயம் வேண்டி
பிறிதொரு சமயம்
பிளிறிக் கொண்டு
'ஆதி மூலமே!' என்றழைத்து
அலறும் தும்பியாவார்!

ஒரு நாளைக்கு
ஒரு நூறு தரமாவது...
'கோவிந்தா!' என உன்னைக்
கூவாவிடில் என் நாவரிந்து -
'நாவிந்தா' என நான்
நின்முன் நீட்டுவேன் என்பார்!

'கோவிந்தா' என உன்னைக்
கூவாவிடில் என் உயிர்க்கிள்ளி -
'பூவிந்தா' என உனது
பொன்னடி சூட்டுவேன் என்பார்!

படாத பாடு
படுத்தும் அவரது
பக்தி அவஸ்தை -
பார்க்காது விவஸ்தை!

தம் இளைய சகோதரிகளான காந்திமதி, ஸ்ரீதேவி (த்யுமதி என்று வாலியார் குறிப்பார்) என்ற இருவர் திருமணமும் முடிந்த பிறகு தம் கடமையும் முடிந்தது எனப் பெருமூச்சு விட்டு,

பின் -

பெருமாள் கைங்கரியத்தில் -
முப்பொழுதும்
முழுகி விட்டார்!

<u>(3) திருக்கச்சி நம்பி</u>

(அ) வீரராகவ செட்டியின்
வாரிசுகளாக

நன்கு வளர்ந்த
நான்கு பிள்ளைகளை;

....
கடைக்குட்டியாய்க்
கண்மலர்ந்த -
திருமகன்தான்
திருக்கச்சி நம்பி;

இல்லறம் கைத்து - பின்னாளில்
இராமானுஜர் கலங்குகையில்...

சம்சார
சாகரத்திலிருந்து - அவர்
கரையேறக்
காரணமான அம்பி!

இயல்புகளிலோ...
இயக்கங்களிலோ...

தமையன்மாரிடமிருந்து
தனித்துத் தெரிந்தார்
திருக்கச்சி; அவர் -
தனிக்கட்சி!

கடைப்பிள்ளை என்ற
காரணத்தால்...

செல்வர் நால்வருள்
செல்வன் நம்பியை
செல்வத்துள் செல்வமாய்
செல்லத்துள் செல்லமாய்

தழுவினர் -
தாய் தந்தை;

ஆனால் -
அந்த செல்வனோ...

'செல்வம்! செல்வம்!' என்று
செல்வமே சொல்லுவதால் -
செல்லும் செல்வம் மேல்
செல்லாதொழித்தான் சிந்தை!

பொருட்காட்சி
மருட்கட்சி என்று -
அருட்கட்சி அணைந்தார்
திருக்கச்சி!

வீழும் செல்வங்களை
விசிறி வீசினார்;

வளநகர் காஞ்சிவாழ்
வரதராஜன் என்னும்...

வீழாத செல்வத்திற்கு
வாழ்நா ளெல்லாம்
விசிறி[12] யாகி
விசிறி வீசினார்!

வால வட்டத்தில்
வாழ்கிற வயதில் - வஞ்சி விழி
நீல வட்டத்தில்
நெஞ்சு நின்று நினைவழியாமல்;

இவையெல்லாம்
இறுதி வருகின்ற...

காலகட்டத்தில்
கைதராதென்று - கஞ்சிவரதன்
ஆலவட்டத்தில்
ஆசை வைத்து அ∴தைச்
செய்தார்;

கச்சி நம்பி - அந்தக்
கச்சி நம்பி - கைங்கரியத்தில்
உச்சி நம்பி - என்று
ஊர் நவிலுமாறு...

வரதராஜன் திருவடிகளில்
வியர்வையைப் பெய்தார்!

'நெற்றியில்
நாமக் குறி;

உளத்தில் -
வைணவ நெறி;
விழியினில் -
வரதன் வெறி;

என்றிருந்தால்
என்றைக்கும்
புக வேண்டாம்
பிறவிப் பொறி!'

இன்னணம்
இசைத்த வண்ணம் -
திரிந்து கிடந்த
திருக்கச்சி நம்பி!

(ஆ) இராமானுஜனை -
இன்னொருவர் வசீகரித்தார்!

....

'இவர் ஓர் -
இறைமைத் தென்றல்;
இதம் தரும் -
இவரோடு ஏன்றல்!'
என
எண்ணி...

....

அவனது (= இராமாநுஜனின்)
அப்பாவிற்கு
அணுக்கமான ஆப்தரான
அவர்...

அஞ்சை அவிக்கும்
ஆறை அறிந்து - பிறவி
ஏழைத் தவிர்க்க
எட்டைத் துதிப்பவர்;
பகவானுக்கு மேலாக -
பாகவதர்களை மதிப்பவர்!

'மெய்ப்பொருள் யாதெனில்
மெய்ப்பொருள் ஒன்றே
மெய்ப்பொருள்; மற்றப்படி -
கைப் பொருள் என்பதும்
பைப் பொருள் என்பதும்
பொய்ப் பொருள்!'

என ஓர்ந்து -
எல்லாம் இருந்தும்
எதும் இராத ஏதிலனாய் -

விளாங்கனியும் ஓடும்போல்
விளங்கும் வித்தகர்;

கட்செவியோடு கிடந்தவன்
காஞ்சியில் கோயில் கொண்டபின் -

அன்றாடம்
அவனது...
உட்செவியோடு உரையாடிடும்
உரிமையுள உத்தமர்!
தான்
தாதுடைய தார்சூட்டி -
வழிபடும்

வரதராஜப் பெருமாளுக்கு -
வேர்க்கும் வேர்க்கும் என்று -
வேர்க்க வேர்க்க விசிறி வீசி -
வேர்வையில் தனை நனைப்பவர்;

வேர்க்கெலாம் வேராயிருக்கும் -
வேர்க்கும் வேர்க்கும் என்று -
வேர்ப்பு மேலிட நினைப்பவர்!
…………………………..
அன்றமைந்த - அவ்
அருளாளர்தான்…
திருக்கச்சி நம்பிகளெனும்
திருப்பணித் திலகம்; அவரை
வழங்கியதால் - இன்றும்
வாய்வலிக்க நன்றிசொலும்
வைசிய குலத்துக்கு
வைணவ உலகம்!

முமூட்சுவான - அம்
முத்தர்….
முதல் வருணம்
முழந்தாளிட்டு வணங்கிய -
மூன்றாம் வருணம்!

(4).(அ) கோவிந்தன்

தாயாரோடு மட்டும்
தனித்திருந்த -
இராமானுஜனுக்கு
இனிய துணையாய்…

காஞ்சிக்கு வந்து சேர்ந்தான்
கோவிந்தன் என்பான்;
இவன் - தான்
இடையறாது நேசிக்கும்…

அருள்மிகு
அண்ணன் ராமானுஜனின் -
அன்பையே
ஆகாரமாகத் தின்பான்!
……………………..
காந்திமதியம்மையின்
காதல்மிகு -

தங்கை

த்யுதிமதிக்கும் (=ஸ்ரீதேவிக்கும்) **அவளது கணவர்**
கமலநயன பட்டருக்கும்...

பிள்ளையாகப்
பிறந்தவன்தான் - பண்புகளைக்
கொள்ளையாகக்
கொண்டிருக்கும் கோவிந்த நம்பி;
உறவுமுறையில் - ராமானுஜனுக்கு
ஒன்றுவிட்ட தம்பி!

இராமானுஜனை விட
எட்டாண்டுகள் இளையவன்;

இதழ்களில்
இளநகையை - சதா
இழையவிட்டபடி
இருக்கின்ற இனியவன்!

தாய் மாமன் - பெரிய
திருமலை நம்பிதான்...
காந்திமதியின்
கன்றுக்கு -

இராமானுஜன் எனும்
இனிய நாமத்தை இட்டாற்போல் -

த்யுதிமதியின்
தனயனுக்கும் -
கோவிந்தன் எனும்
கோதறு நாமத்தை இட்டார்
....
'பின்னாளில் - இந்தப்
பிள்ளையாண்டான்...

சகல
சாஸ்திரங்களையும் -
பழுதறக் கற்றவனாகவும்;
பவ்வியம் உடையவனாகவும்;

ஆசாரியன்
அனுக்கிரகத்தால் -
ஆன்ம ஞானத்தை
அடைந்தவனாகவும்;

முனை முறியாத - தன்

முயற்சியினால் -
முக்திக் கூடையை
முடைந்தவனாகவும்;

ஒதுகை என்னும்
ஒரு மத்தால் -
கடலனைய வேதத்தைக்
கடைந்தவனாகவும்;

....
இலங்கக் கூடும்; இடர் -
இராமானுஜனுக்கு வரின் - இவன்
கலங்கக் கூடும்;'

<u>(4.)(ஆ) உள்ளங்கை கொணர்ந்த நாயனார்</u>

கோவிந்தனுக்கு யாதவர் சூட்டிய திருநாமம்; காசிப்பயணத்தின் போது -

பிராதக்காலத்தில்
பிரகாசரோடும் -
பிறரோடும்
பாகீரதியின் பிரவாகத்தில் -

கோவிந்தன் -
குடைந்தாடுகையில்...

அவனது
அங்கையில் - ஓர்
அழகிய லிங்கம்
அதுவாக வந்து சேர்ந்தது!

உள்ளங்கை வந்து
உட்கார்ந்த லிங்கத்தை -
கோவிந்தன் - தனது
குருவசம் காட்ட...
அத்துவைதியாகிய
ஆசாரியர் ஆனந்தித்து -

உடனே கோவிந்தனுக்கு -
'உள்ளங்கை கொணர்ந்த
நாயனார்!' என்றொரு -
நாமத்தைச் சூட்ட...
'ஹர ஹர சங்கர!
ஜய ஜய சங்கர!
என -
ஏனையோர் கோஷிக்க...

யாதவப் பிரகாசர் - தனது
யாக்கையோடு யாக்கையாய் -
கோவிந்தனைக்
கூட்டினார்; அதன் பின் -
அத்துவைத அமுதத்தை
அவனுக்கு ஊட்டினார்!

“கோவிந்தா! நீ
கொடுத்து வைத்தவன்;
தொல்வினைகளை
நல்வினைகளின் -
தோரணமாய்த்
தொடுத்து வைத்தவன்!

கங்கை அமர்ந்த
கற்றைச் சடையோன் - உனது
அங்கை அமர்ந்த
அற்புதம் என்னென்பேன்?
அடியேனுக்கு
அமைந்த
அனைத்துச் சீடர்களிலும் - நீ
ஆடகப் பொன்னென்பேன்!

அம்பலம் ஏறி -
ஆடும் தெய்வம் -
அருள் கூர்ந்து - உன்னை
ஆக்கியது
சைவம்!”

கோவிந்தன் - அக்
கணத்திலிருந்து - ஒரு
வீரசைவன் ஆனான்;
வைணவம் விலகிப் போனான்!

எட்டெழுத்தை
ஏந்திய நாக்கு -
அஞ்செழுத்தை
அமர்த்திக் கொண்டது;

துளசி மணிமாலை
தோங்கக் கண்ட கழுத்து -
உருத்திராட்சம்
ஊஞ்சலாடக் கண்டது!

திருமண்ணைத்
தாங்கிய நுதல் -
திருநீற்றைத்

தாங்கியது;

புராரி நினைவு
புத்தியில் புகுந்ததால் -
முராரி நினைவு
முற்றும் நீங்கியது!

காசியை விட்டுக் -
காஞ்சிக்குத் திரும்புகையில்...

ஓரிரவில் -
ஓரிடத்தில் -
பயணிகள் - சிரம
பரிகாரம் செய்திருக்கையில்...

கோவிந்தன் கனவில்
கொன்றை வேந்தன் வந்து -
கோல முகத்தில் - குளிர்நகை
கொஞ்சக் கொஞ்சக் காட்சி
தந்து...

தன்னைத்
திருக்காளத்தியில் -
பிரதிஷ்டை பண்ணப்
பணித்தான்;

முக்கண்ணன் ஆணையை
முடிமேல் ஏற்று...

ஆசாரியரின்
அநுமதியோடு...
கோவிந்தன் - திருக்
காளத்தில் குடியேறி -
காஞ்சியின் தொடர்பைக்
கட்டோடு துணித்தான்!

(5) <u>யாதவப் பிரகாசர்</u>

(அ) அவரை -
அறவே -
பிடிக்காதவன் கூட - அவரைப்
படிக்காதவன் என்று பேசான்;

தொண்டை மண்டலம் பூராவும் -
துவசம் கட்டிக் கொண்டு...

சல்லடை போட்டுச்
சலித்துப் பார்த்தாலும் கூட -

சலித்துச் சலித்துச்
சலித்துப் போமே தவிர -

அகப்பட வாய்ப்பில்லை -
அவ்வளவு விழுக்காடு -
ஆரணங்களில் -
ஆழங்காற்பட்ட ஓர் ஆசான்!

யாரும் அறிவர் -
யாதவப் பிரகாசரை...
ஒரு
வேத வித்தாக;
வேத விருட்சமாக;
வேத வேழமாக;
வேத வேந்தாக!

அறிவிருக்கும் -
ஆகாசம் போல் அகண்டு; அவர் -
துவாரடை புனைந்து
திருநீறு பூசி -
தாளிரண்டு கொண்டு
தரை நடக்கும் ஆரிய நிகண்டு!

ஓர் உயரிய பிறவி;
ஒற்றைக் கோல் தாங்கும் துறவி!

அனேக சதசுகளில் - அவர்
அக்கிராசனம் வகித்தவர்;
அத்துவைதத்தை விட்டு
அன்னியபரனாய்
ஆரிருப்பினும் - அவரை
அக்கினி மாதிரி தகித்தவர்!

சாத்திரம்;
சூத்திரம்;
சருவமும் கற்றவர்; கூடவே
கருவமும் கற்றவர்!
தயிர்கடைந்த நவநீதமாய் -
திரண்ட ஞானம்; அதற்கு
திருஷ்டி பரிகாரமாய்
தருக்கு எனும் ஊனம்!
முயலுக்கு
மூன்றே கால் என்றால்
மூன்றே கால்தான்; கூட -

ஒரு காலும் உண்டென்றால் -
அதை
ஒருகாலும் ஒப்பார்;

வாதத்திலும் - பிடி
வாதத்திலும் எப்படியோ -
வேதத்திலும் அப்படி; எந்த
வேதியும் அவருக்கு ஒப்பார்!

விசேஷமானது -
வியாச சூத்திரத்திற்கு...

யாதவப் பிரகாசர்
யாத்த உரை;
யாண்டும் பேசப்பெறும் - அதில்
யாரும் காணவொண்ணார் புரை

(ஆ) திருப்புட்குழியில் - ஒரு
திருமாளிகை; அந்தத்
திருமாளிகையின் -
திருவாசலில்...

அகவை
அதிகமாகி
அதனால் ஏற்பட்ட
அசக்தி காரணமாக -

வேர்களால் நிற்காமல்
விழுதுகளால் நிற்கின்ற - ஒரு
வட விருட்சம்; அந்த
வட விருட்சத்தின் - நிழலில்
வியாக்கியானத்தின் மீதொரு -
வேத விருட்சம்!

யாக்கை எடுத்து - வந்த
யஜுர்;
சன்னியாயம் ஏற்றுக்கொண்ட
சாமம்; துவர் -
ஆடை தரித்திருக்கும்
அதர்வனம்;
ஏகதண்டம் ஏந்தி நிற்கும்
இருக்கு;

என்றெல்லாம்
எண்டிசைப் பண்டிதரால்
ஏற்றப் பெறுபவர்; சொல்மாலை -

சாத்தப் பெறுபவர்;

சேய்போ லிருக்கும்
சீடர்க்கு - ஞானப் பாலூட்டும்
யாய்போ லிருக்கும்
யாதவப் பிரகாசர்தான்...

அங்ஙனம்
ஆலமரத்தின் கீழ்
வீற்றிருந்தார்; ஒற்றைக்கோல் -
ஏற்றிருந்தார்!

(6) விந்திய மலைச்சாரலில் தனியாகப் பிரிந்த நிலையில் இராமாநுஜன் கண்ட வேடர் தம்பதியில்.

வேடன்

ஓங்கி
உலகளந்தான் போல் -
வேடுவன்
வேண உயரமாயினும் -

உயரத்திற்கேற்ற
உடல் வாகு;

தோளில் இருந்து
தொங்கும் இரு கரம் - முழந்
தாளில் இறங்கி - அதனைத்
தடவி இருக்கும் எனும்படி...

அவன் ஓர்
ஆஜானு பாகு!

இடமும் வலமும்
இரண்டு -
முசுக்கட்டைகளை
முகத்தில் ஒட்டினாற்போல்...

புசுபுசுவென்று -
புருவங்கள்;
கனகணவென்று
கனன்று கொண்டிருக்கும் - இரு
தணல்
துண்டுகள் போல்...

வெம்மை உமிழும்

செம்மை விழிகள்;

செய்ய முகத்தை
செம்பாதியாகப் பிரிக்கும் -
நேரிய
நாசி;

நாசியின்
நிழலில்...
செம்பருந்து ஒன்று
சிறை விரித்தாற்போல் -
சற்றே
செம்பட்டை ஏறி...

விறைத்த முனைகளோடு
வீற்றிருக்கும் வீசை;

விம்மி நிறை
விரிமார்பில்
வியாக்கிர நகங்களால் ஆன
வடம்;

இடுப்பில்
இறுக்கமாகக் கட்டிய -
உடும்புத்தோல் பட்டை அதில்
உறையோடு ஒரு பிச்சுவா;
....
முடிச்சாத்தின் - ஒரு
முனையில் செந்நாரையின் இறகு!

அம்புப் புட்டில்
அகன்ற முதுகில் தொங்க...

கைவில்லின்
கீழ்முனையை
நிலத்தில் குத்தியவாறு
நின்றிருந்தான் வேடுவன்;

(7) காஞ்சியை ஆண்ட சிற்றரசன்

சிங்காதனம் ஏறி
செங்கோல் ஏந்திய - அச்
சிற்றரசன் - ஒரு
வெற்றரசன் அல்ல;

ஊர்மக்களுக்கு - மிக மிக
உற்றரசன்; ஓலக்கம்

வரலாம் யாரும் - தமது
வருத்தங்கள் சொல்ல!

மனுக்கள் கொடுக்கும்
மக்களுக்கு - மற்றொரு
மனு வாவான் ;
நல்ல தீர்ப்பை -
நாளும் நல்க...

சாதிவழி போகாமல்
ஆதிவழி என்றிருக்கும்
நீதிவழி போவான்!

திருமாளிகையில்
திருநா ளென்றால் ;
வருடம் ஒருமுறை - விசேஷமாக
வருநா ளென்றால் ;

பேதங்கள் -
பேணாது...
பலதரப்பட்டவர்க்கும்
பந்தி பேஜனம்;
பட்ச பாதமற்ற
பரிபாலனம் !

ரத கஜ -
துரக பதாதியிருந்தும்...

கூடிய மட்டும்
குருதி கொட்டும் -
போரைத் தவிர்ப்பவன்; கெட்ட
பேரைத் தவிர்ப்பவன்!

ஆசு!
மதுரம்;
சித்திரம்;
வித்தாரம்
எனும் -
ஈரிரண்டையும்...

நாதரித்து நின்ற புரவரை -
ஆதரித்து நின்ற புரவலன்;
அவனது
ஆட்சியில் -
எழுத்தெண்ணிப் படித்தோரில் -
எவரும் இல்லை இரவலன்!

மாசனத்தின்
மனத்திலும் அமர்ந்தான் - சிம்
மாசனத்தின்
மேலமர்ந்த அரசன்; காஞ்சி
மண்ணை -
மணம் புரிந்த புருசன்!

அறவழி அலாது -
பிறவழி செலாது…

வாழ்ந்திருந்த - அவ்
வேந்து -
……………………..

முடியை
முடியில் ஏற்ற -
முதல் நாள்
முதல்…

முறை தவறாத
முதல்வன்;

8. பெண்மக்கள்

பல்வேறு நிலைகளில் காணப் பெறும் பெண்மக்களைப் பற்றிய சிறப்புக்களைச் சிந்திப்போம்.

(1) காந்திமதி
கேசவ சோமயாஜி -
கைத்தலம் பற்றிய…

மாதுஸ்ரீ காந்திமதி - முயல்
மறுஇல்லாத மதி;
முப்பது நாளும் காந்தி வீசும் -
மதி; அந்த -
மதிக்கில்லை அமாவாசையெனும் -
திதி!

எவ்வளவு சௌந்தரியம்?
அவ்வளவு சௌலப்பியம்!
அவளுக்கு ஆரோடும் -
அப்படியொரு சௌஜன்னியம்!

அவள் -
வாழ்க்கைப்பட்ட இடம்போல் -

வசதிகள் பிறர்க்கு இராது;

ஆயினும் -
எளிவந்த தன்மை - அவள்போல்
எவர்க்கும் பூதூரில் வராது!

மரியாதைக்குரிய – அந்த
மாதரசி...

மார்க்கச்சில் -
மண்ணில் நிற்கும் பொறை;

மடிசாரில் -
மடியோடிருக்கும் நிறை;
கோயில் விட்டுக் -
குடும்பம் வந்த இறை;

'குறை சொல்லக்
குறையில்லை!' எனும் -
குறையொன்றுதான் -
குறை!

நிஜமாய் பிறந்து - ஒரு
நாயகனின் -
நிழலாகிப் போனவள்;
அவளுக்கென் நிருந்த அவளை
அவள் விடுத்து -
அவள் அவனுக்கென ஆனவள்!

லயம் சேர்ந்த
சதியாகி - தன்
சுயம் தீர்ந்தாள்; அங்ஙனம் -
சுயம் தீர்வதே -
சுமங்கலிக் கழலெனும் - நன்
நயம் தேர்ந்தாள் ;

நிலத்தில் இறங்கிய
நிமிடம் முதல் -
நிலம் பார்த்து நடப்பவள்;

'கிட'என்று -
கேள்வன் சொன்னால் -
கல் முள் மீதும் கிடப்பவள்!

அகமுடையானின்

அன்றாட -
ஆசார
அனுஷ்டானங்களில்...

மடிசஞ்சியாய்;
மான் தோலாய்;
செம்புச் செம்பாய்;
சிக்குப் பலகையாய்;
பஞ்ச பாத்திரமாய்;
பத்தாறு வேஷ்டியாய்;
உத்தரணியாய்;
உத்தரீயமாய்;

பவித்திரமாய்;
பலா மணையாய்;
பனை விசிறியாய்;
பாக்குப் பாயாய்;

திருமண் பெட்டியாய்;
தாம்பூலப் பெட்டியாய்;
சாலிக்கராமப்[13] பெட்டியாய்;
சாதிக்காய்ப் பெட்டியாய்;

இன்னும் -
எல்லாமுமாய்...
கரைந்து போனாள் -
காந்திமதி
கேசவருக்குக் கிட்டிய -
குபேர நிதி!

(2) கமலை:

பூவிருந்தவல்லி வீரராகவச் செட்டியின் துணைவி; திருக்கச்சி நம்பியின் அன்னை...

அம்மையாரை
அவ்வூர் தொழுதது;
அதற்குக் காரணம்
அவர் இன்னோர் அமலை!

ஆம்!
அந்தப் பெருமாட்டிக்கு...

உட்கார -
ஒரு தாமரைப்பூ;

நீட்டி மடக்க -
நான்கு கரங்கள்;

இவை -
இல்லையே தவிர -
மற்றபடி - அவர்
மகாலட்சுமிதான்!

அம்மையார் -
அகழ்வாரைத் தாங்கும் நிலம்;

(3) **தஞ்சமாம்பாள்:** (உடையவரின் துணைவி)

அம்பாளிடம் - தஞ்சம்
அடைந்திருந்த அழகெலாம் -
அப் பெண்ணிடத்தும் - தஞ்சம்
அடைந்திருந்ததாலோ - என்னவோ...

தஞ்சமாம்பாள் - எனும்
திருநாமத்தைத் - அவள்
தாங்கி நின்றாள்; துழாய்போல் -
தூய்மையை வாங்கி நின்றாள்;
....
தஞ்சமாம்பாள் -
தரணியில் சனித்தது...

ஒரு
சராசரி மனிதனுக்கு
சகதர்மிணி ஆகவா?
....
தஞ்சமாம்பாள் -
தரணிக்கு வந்தது...

ஒரு
வரலாற்றுக்கு
வாழ்க்கைப்பட;
....
நீள் விசும்பு
நீங்கி -
நாடகத்தரம்பையர்
நால்வரும் -

நிலம் வந்து -
நேர் நின்றாலும்...

அவர்தம்

அழகை -

நவ்வியனைய - நீள்விழிச்
செவ்வியினால் - நொடியில்
நிக்கிரகம் செயும் - ஐம்பொன்
விக்கிரகம் போலே...
……………………..
தஞ்சமாம்பாள் - எனும்
தரை வந்த அம்பாள்!

விந்தியமலைச் சாரலில் தனியாகப் பிரிந்த நிலையில் இராமாநுஜன் கண்ட வேடர் தம்பதியில்

(4) <u>வேடுவச்சி</u>

;அவன் (=வேடன்)

நீண்டதோளை - உரசியவாறு
நின்றிருந்தாள் வேடுவச்சி!

ஆராதிக்கத்தக்க
அழகியாய்த் தோன்றிய - அவ்
வேடுவச்சி - இள
வேயனைய தோளி;

வெளிச்ச
விழியிரண்டும் -
வெண்கதிர் செங்கதிர்
வந்தாடும் தூளி;
மாம்பழக் கதுப்புகள் போல் -
மொழு மொழு கன்னங்கள்;

வரிசையாய்
வைத்திருக்கும் -
முல்லை
கொக்குகள் போல்

பால்வண்ணப்
பற்கள்;
முறுவல் உட்கார்ந்திருக்கும் -
முளரி மடலொத்த உதடுகள்;

ஆடிபோல்
ஆனனம்;

அந்தகாரத்தை
அவமானப்படுத்தும் -
ஆண்டாள் கொண்டையைக்
கொண்ட
அளகம்;

வேடசேரி வாழ்
வஞ்சியர்க்கே உரிய -
ஆடைகள்;
அணிகள்!

நெருப்பில் நீராட்டினாற்போல்
நாயகன்;
நெருப்பாகவே
நாயகி;

அருகருகே -
அமாவாசையும் அம்புலியும்!

(5) அரசிளங்குமரி: (=ஒரு காஞ்சி குறுநில மன்னனின் குமாரி)

(அ) காஞ்சி
முதல்வனுக் கேற்ற
முதல்வி! அத்தகு -
முதல்வனுக்கும்
முதல்விக்கும்
முகிழ்த்தாள் - மோகனத்தில்
முதல் தரமான ஒரு புதல்வி!

அந்த -
அரசிளங்குமரி...
குழல் வளர்க்கும்
குளிர் நிலா;
குரல் திதிக்கும்
குறும் பலா;
மலர் சுமக்கும்
மணிப் புறா;
நிலம் நடக்கும்
நறு நறா!

ரகம் -
ரகமாய்...

தொடி அணியும் - தூதுவளைக்
கொடி;
தோடு அணியும் - தேவப்புள்

பேடு;
வாரை அணியும் - ஆதிரைத்
தாரை;
கூறை அணியும் - கோமலச்
சூறை!

ருதுவான
ரூபவதி;
லலிதமா யுலவு -
லாவண்ய நதி;
பிறிதொரு ரதி; ரதியின் -
பிரதி!

என்ன சொல்லி -
என்ன?

வார்த்தைக்குள் வராத
வனப்பு; அதற்குக் -
கண்ணெச்சில்
கழிக்கவே - செய்ய
கன்னத்தில் தென்படும்
கடுகளவு ஒரு சினப்பு!
மன்னன்
மகள்...

அழகில் மட்டுமல்ல;
அறிவிலும்...

மேதாவிலாசம்
மேம்பட நின்றாள்;
அழகும் -
அறிவும் -
அவ்வளவாக
அனுசரித்துப் போகாது - எனும்
வறட்டு
வேதாந்தத்தை -
வேரோடு
வீழ்த்தி வென்றாள்!

யாப்பமைதியோடு -
யாப்பாள் கவி!

புட்பரசம்

புகுந்தாற்போல் -
புளக மெடுத்துப்
புடைத்து நிற்கும்...

யாழெடுத்தால் -
யார்க்கும் செவி!

சித்திரம் தீட்டுவாள்; அதில்
சித்துகள் காட்டுவாள்;
ஆடற்கலைக்கு
அற்புதமான -
அடவுகளால்
அழகினை ஊட்டுவாள்!

உயிர்த்தோழியரோடு -
உப்பரிகையில்...

அம்மானை;
ஆடு புலி;
பல்லாங்குழி;
பரமபதம்;

அனைத்து ஆடுவாள்;
அவளே வாகை சூடுவாள்;

பண்டிதன்
பாமரன்;
பணக்காரன்
பராரி;

ஆராயிருப்பினும்
அன்பு செய்வாள்;
சமநோக்கோடு
சிநேகமழை பெய்வாள்!

அழகு;
அறிவு;
அன்பு;
பண்பு;
பொன்று;
நிறை;
பணிவு;
பரிவு;

அனைத்தும் ஒருசேரப் பெற்ற -
அரசிளங்குமரி!

(ஆ) தகுந்த வரன் -
திகைய வேண்டுமே என்று -
தார்வேந்தனும் - அவனது
தர்மபத்தினியும் -

சகல
சிற்றரசுகளையும் -
சல்லடை போட்டுச்
சலித்துக் கொண்டிருக்கையில்...

அந்த
அரசகுடும்பத்தின் -
ஆணிவேர்!
ஆட்டம் கண்டது;
உறுத்தும் -
ஊழால்...

பாரதியாய் இலங்கும்
பட்டத்து இளவரசியை -
'பிரம்ம ராட்ஷஸ்' ஒன்று -
பிடித்துக் கொண்டது!

ஐயோ!
ஐயகோ!

ஐம்பொறியோடு பிறந்த
ஐஸ்வரியத்தை;

ஐம்பாலாய்க் குழல்புனையும்
ஐம்பொன்னை;

ஐந்தவித்த
ஐயரெலாம் -'இவளந்த
ஐந்தவித்தான்!' எனச் சொன்ன -
ஐதிகத்தை;

வதுவை காணும்
வயது கனிந்த -
வதுவை; வசந்த
ருதுவை;

அரண்மனையின்
ஆனந்தத்தை;
அரசுக்கும் அரசிக்கும்
அமலன் தந்த அருட்சொத்தை;
அரை நொடியில் - ஓர்
அலகை வந்து அபகரித்தது;
எவரும் தன்னை
எதுவும் செய்ய -
ஏலா தென்னும்
ஏமாப்புடன் சஞ்சரித்தது!

உலகை வெல்ல வல்ல
உயர் குணம் வாய்ந்தவள் -
அலகை வயப்பட்டு
அருவருப்பாய்த் தோன்றினாள்;
ஈயத்தை உருக்கி -
ஈன்றோர் கண்ணில் ஊற்றினாள்!

உறக்கத்தில் - சிறிது
உடுக்கை விலகினாலும்
'விருட்'டென
விழித்துக் கொள்பவள்...

பிறந்த மேனியாய்த் - தன்னைப்
பச்சைத் தண்ணீர் கூடப்
பார்க்கக் கூடாதென்று – பழம்
புடவையோடு குளிப்பவள்...

அத்தன் முன் -
அன்னை முன் -
சம்மணமாக அமரவும்
சங்கோஜமுறும் அரசகுமாரி -
அம்மணமாக அமர்ந்து
ஆபாசமாகப் பேசினாள்;
நா உதிர்க்கும்
நாணமற்ற வார்த்தைகளை -
நரகல்
நாற்றத்தோடு வீசினாள்!

அழகிய
அழியாக் கோலம் -
என

இருந்த -
ஏரார்
இளவரசி...
ஆனால்
அலங்கோலம்!

'திபுதிபு' வென ஓடுவாள்;
துலை விரித்து ஆடுவாள்;
பல்லைக் கடித்துக்கொண்டு
பிலாக்கணம் பாடுவாள்;
சங்கிலியால் பிணைக்க
சமீபத்தில் வரும் -
சேவகர்களை
சகட்டு மேனிக்குச் சாடுவாள்!

அரண்மனையே
அதிர்ந்து;
விளைந்த
வெருவலில் -
விட்டத்துக் காரை
உதிர்ந்தது!

மகராஜனும் -
மகாராணியும் -

நூறு சுக்காக
நொறுங்கிப் போயினர்;
செக்குலக்கை போல்
சிந்தாகுலம் - தினம்
நொக்கு நொக்கென
நொக்கவும் நொய்யாய் ஆயினர்!

<u>(6) பொதுமைகள்</u>

(1) <u>கர்ப்பவதி அழகு</u>

காந்திமதி உண்டாயிருப்பது
....
ஒருவர் -
உவகை யாகாது -
ஊரவர் -
உவகை யானது!

பித்தவடி வந்த
பாதம் போல் -
பாளம் பாளமாய்
பிளந்திருந்த பூமி...

முழுகா திருக்கும்
முகில் ஒன்று - தன்
மண்டைக்கு மேல்
மேயக் கண்டு -

எங்ஙனம்
ஏகத்துக்கு சந்தோஷிக்குமோ -
அங்ஙனம்
அவ்வூர்சனம் சந்தோஷித்தது;
சந்தோஷத்தில் -
சளசள வென சம்பாஷித்தது!

பூதூர் வாழ் -
பிரஜைகள் மட்டுமின்றி -

புல் பூண்டு;
புழு பூச்சி;
மரம் மட்டை;
குளம் குட்டை;
கறவைகள்;
பறவைகள்;
அசையா வஸ்துகள்;
அசையும் வஸ்துகள்;

என -
எல்லாமே...

அந்தணர் மனைவி
அம்மாவாகப் போவதைக் கேட்டு -

அது அது -
அதனதன் பாஷையில்
அதனதனோடு அளாவி...
பரஸ்பரம்
பெரு மகிழ்ச்சியைப்
பதிவு செய்தன;

காந்தியம்மை
கூந்தலில் செருக -
காற்றும் கரிச்சானும்
காட்டுப்பூ கொய்தன!

மசக்கைக்காக
மாங்காய் பறிக்க
மூக்குச்சிவந்த கிளி
மூலைக்கு மூலை பறந்தது;

வாயும் வயிறுமாக
வாழ்கின்ற பெண்ணுக்கு
நோயும் நொடியும்
நெருங்காம லிருக்க...
மனைப்பசு - ஒரு
மரக்கால் கூடக் கறந்தது!

(2) <u>குழந்தை இராமாநுஜன் அழகு</u>

‘குழந்தை
கொள்ளை அழகு!

மெதுமெது வென்றிருக்கும்
மென்மையில்...

மயில் இறகு - என்
மருமானின் மேனிக்குப் பிறகு!

இது இப்படி;
அது அப்படி;
என்று -
எவ்வளவோ சொல்லலாம்;
என்ன சொன்னாலும் -
எஞ்சி நிற்கும் சொல்லெலாம்!

எதைவிட?
எதைத் தொட?
எல்லாம் உசத்தி; குழந்தை -
ஏறக்கட்டும் -
எல்லாரையும் அசத்தி!

தேக்குக் கடைசல் மாதிரி -
மூக்கு முழி!

சிறுகுளத்தில்
கல்லெறிந்தால் விழுமே -
சின்னக் குழி - அதுபோல்
கன்னக்குழி

அந்தக் கன்னத்தில் -
ஆசை ஆசையாய் நாம்...

வைக்கும்
வாய் முத்தத்தில் -
கைக்கும்
கரும்புக் கழி!

திவ்வியமா யிருக்கிறது -
தலைச் சுழி!

ராத்திரிக்கு -
ராத்திரி...

ஒண்கலை நிலா காட்டி - தன்
ஒக்கலை நிலாவுக்கு -
அம்மா -
அம்மம் ஊட்டுகையில்...[14]

அதைக் கண்டு -
அன்றாடம் -
அழுக்காய் வரும் நிலாவுக்கு
அழுக்காறு வரும்;

ஒண்கலை நிலாவை விட -
ஒக்கலை நிலா -
ஒளியைத் துப்புவதில் - கூடவே
ஒருசில விழுக்காடு பெறும்!

(3) <u>இளைஞன் இராமாநுஜனின் வனப்பு</u>

இளைய ஏறனைய -
இராமாநுஜனின்...

சாமுத்திரிகா லட்சணங்கள்
சொல்லி மாளாது;
அவன்மேல் போய்
அமர்ந்த நம் கண்கள் -
அவையாய் மீண்டாலன்றி -
அழைத்து மீளாது!

அஞ்சு புலன்களையும்
அந்த அந்த இடத்தில்
ஆடாது
அசங்காது இருக்க...

ஆணி அடித்து வைத்த
மாணி; அவன்முன்
நிற்பான் விசுவாமித்திரனும்
நாணி!

பிடரியில் - கைப்
பிடியளவு -
கோதி முடிந்த

குஞ்சி;

சேவிமடல்களின் -
சிவப்புக்கல் கடுக்கண்;

புருவ மத்தியில் -
பளிச்சென்று புண்டரீகம்;

ஒரு
ஸ்தபதியே
ஸ்தம்பிக்கும் அளவு - மிகச்
செவ்வியதாய்ச்
செதுக்கிய நாசி;

வெண்கதிர் செங்கதிர் -
வீற்றிருக்கும் விழிகள்;

மெல்லிய
முறுவலை -
அவ்வப்போது பிலிற்றும்
அதர பல்லவம்;

தவமும்
தண்ணளியும் -
அப்பிக் கிடக்கும்
ஆனனம்;

பணையொத்த - தோள்
பட்டைகளில்...

தழற்பொறி ஒற்றிய
தழும்பை வாங்கிய -
சங்கம்;
சக்கரம்;
மார்பை அளந்தபடி
மான்தோலும் மஞ்சளும் -
முடிந்து வைத்த
மூன்றுவட உபவீதம்;

மொழுமொழுவென்று
முழந்தாள்கள் வரை -
வழிந்து கிடக்கும்
வலக்கை; இடக்கை;

ஆடுசதைகள்
ஆட ஆட -
கடுகி நடக்கும்

கமலப்பூங் கால்கள்;

இடுப்பைச் சுற்றி
ஈரிரு முழத்தில் -
வெள்ளை வெளேரென -
ஒரு சோமன்;

பாலசூரியனை வழித்துப்
பூசினாற்போல் செக்கர்மேனி!

தாழங் குடைதாங்கி
தடக்கை வீசி வருகையில் - இள
வேழம் குடைதாங்கி
வருகிறதோ என்றிருக்கும்;

ராமானுஜன் எனும்
ராஜகுமாரனின் தரிசனத்தை...

விருந்து விருந்து - என
வியந்து வியந்து -
விழுந்து விழுந்து - ஊர்
விழியெலாம் தின்றிருக்கும்!

(4) <u>எட்டெழுத்தின் அழகு</u>

அஞ்சு வயது ராமானுஜனின் -
பிஞ்சு விரல்கள் -
எட்டெழுத்தை
எழுதின - ஒரு
வட்டிலில் நிறை
விரவியிருந்த நெல்லில்;[15]

அந்த -
அட்டாட்சரம் தானே
அறிவு வெளிச்சம் கொளுத்தி
ஆன்மாவிற்கு வழிகாட்டும்...

அல்லல் மிகுந்த -
அறியாமை என்னும் அல்லில்!
....

உயிரில் தொடங்கும்!
மெய்யில் அடங்கும்![16]

எனினும் -
எல்லா எழுத்துமே...

உயிரெழுத்தாகி -
மெய்யெழுத்தாகி -

உலகின் கண்
உள்ள...

உயிர்க்கும் மெய்க்கும் -
உய்வகைகளை உபகரிக்கும்;

உள்ளுரை உள்ளுவார் தம் -
உள்ளங்களை அபகரிக்கும்;

வாழ்வாங்கு வாழ்வதற்கு -
வித்தாரமாய் விவகரிக்கும்;

வாசித்து முடித்த பின்பு
வாய்க்கு வெல்லம் கரிக்கும்!

இத்துணை
இசை வாய்ந்த...

அய்யன்[17]
அருளிய -
தமிழ் வேதம்
செப்புகின்றது;

'பிறப்பு ஒக்கும் -
எல்லா உயிர்க்கும்!'
திராவிட வேதம்
தெரிவித்த கருத்தை -
ஆரிய வேதமும்
அப்படியே ஒப்புகின்றது!

இவ்வாறு வாலியாரின் பல்வேறு வகையாக, பல்வேறு நிலைகளில் வருணனைத் திறனைக் கண்டு மகிழலாம். அவர் கருவியாகக் கொண்ட புதுக் கவிதை மிகக் கூர்மையான போக்கில் அவ்வருணனைகளை நம் மனத்தில் படியச் செய்து நம்மை மகிழ்விக்கின்றது.

*** ஸ்ரீமதே இராமாநுஜாய நம: ***

<u>குறிப்பு:</u>

1. முன்.திருவம்.16
2. யாதவகுலத்தவர் மீசை வைத்துள்ளார். இவரைப் பூசிக்கும் மீசை வைக்க விரும்பாத பார்ப்பன குலத்தைச் சார்ந்த இளைஞர் பலர் மீசை வைத்துக்

கொள்ள ஆசைப்பட்டு மீசையுடன் திகழ்கின்றனர். மீசையின் நடுவில் ஒரு சிறிய நீண்ட முடி காணப்படும். இவர்களில் சிலர் அர்ச்சகராக இருக்கின்றனர்.

3. ஜின காஞ்சி – ஒரு காலத்தில் ஜயினர்கள் (சமணர்கள்) இருந்ததால் பேரளவில் தங்களது ஊரை ஜினகாஞ்சி என வழங்கினர். ஜயினர்களின் (ஜின) என்பது சின்ன என்று மருவி வழங்குகிறது.
4. <u>கோவலூர்</u> - சரி; கோயில் சுவரிலும், உள் முகப்பிலும், பேருந்துகளிலும் 'கோவிலூர்' என்று எழுதப் பெற்றிருப்பது பிழை!
5. மாதவிலக்கைக் குறிப்பது
6. நளன் - 'நளபாகம்' பெயர் போனது (ருதுபரணனுக்கு)
7. பீமன் - 'பீமபாகம்' பெயர் போனது (அஞ்ஞாதவாசத்தில்)
8. சாற்றமுது - ரசம்
9. திருக்கன்னலமுது – வைணவ பரிபாஷைகள்
10. வாலியாருக்கு அட்டில் தொழில் தெரியும். அட்டில் தொழில் தெரியாத அய்யங்கார்களே இரார் என்பது என் யூகம்.
11. ஈரங்கொல்லி – வண்ணான் (வைணவ பரிபாஷை)
12. Fanatics என்ற ஆங்கிலச் சொல் Fans என்று சுருங்கி வழங்கியது; அதை 'விசிறி' என்று தமிழில் மொழி பெயர்த்தனர் 'வெறியர்' என மொழி பெயர்த்திருந்தால் அது சரியான மொழி பெயர்ப்பு என்று கருதலாம்.
13. வைணவர்கள் 'சாலிக்கிராமம்' (ஒரு கல்) செம்பில் வைத்துத் திருமாலாய் வணங்குதல்; வெளியூர்க்குச் செல்லும் போது பக்கத்து அகத்தில் தந்துவிட்டுப் போதல்; தனியாகக் கிடக்க விடுவதில்லை.
14. பெரியாழ்வார் பாசுரங்களை நினைக்கச் செய்கிறது - இத்தொடர். அம்மம் ஊட்டுதல் - பாலூட்டுதல்.
15. 1921-இல் பிரகம்பி என்னும் சிற்றூரில் (என் தாயார் பிறந்த ஊர்) கோமுட்டி செட்டியார் மரபில் வந்த லிங்க செட்டியார் என்ற ஒரு திண்ணைப்பள்ளி ஆசிரியர் அடியேனுக்கு வட்டிலில் நிறைந்திருந்த நெல்லில் அவர் கைபிடித்த என் கைவிரலைக் கொண்டு 'அரி நமோத்து சிந்தம்' என்ற வாசகத்தை எழுதியது நினைவு கூறமுடிகிறது (பிறப்பு 1916 – ஐந்து வயதில் வித்தியாப்பியாசம்).
16. தமிழ் 'அ' வில் தொடங்கி (அகரமுதல்) 'ன்' இல் முடிகிறது (முயங்கப் பெறின்) என்பதை நினைவு கூர்க.
17. அய்யன் - திருவள்ளுவர்; (கலைஞர் வள்ளுவர் பெருமானுக்கு சூட்டிய பெயர் - வாலியார் அதை இங்கு வழிமொழிகிறார். பெரும்பான்மையான தமிழறிஞர்கள் இதை ஒப்புக்கொள்வதில்லை.)

****



இராமாநுஜர் 1000

கவிஞர் **வாலி**யின்

இராமாநுஜ காவியம் - ஒரு மதிப்பீடு

இயல் ~ 7

காவியத்தில் காணும் தத்துவக்குறிப்புகள்



ந சுப்பு ரெட்டியார் 100

இயல் – 7

காவியத்தில் காணும் தத்துவக் குறிப்புகள்

இராமாநுஜ காவியத்தை ஊன்றிப் படித்து ஆழ்ந்து கற்கும் போது சில இடங்களில் ‘மின் வெட்டுப்போல்’ சிலபல தத்துவக் குறிப்புகள் பளிச்சிடும். அவற்றை ஈண்டுப் பதிவு செய்வோம்.

(1) ராம காதை போல்
ராமானுஜன் காதையும் -
ஈர்க்க வல்லது
எவரது காதையும்!

இதில் ‘காதை’ என்ற சொல் இருபொருளுடன் விளையாடுவதைக் காணலாம்.

(2) முக்கா டிடுகின்ற -
முகமதியப் பெண்ணுக்கு -
நிக்கா முடித்தான் -
நாராயண னோடு;

அரங்கன்பால் -
அவளுக் கிருந்த...
அலுக்க வொண்ணாத
அன்பைக் கண்டு - அவளைத்
துலுக்க நாச்சியாய்த்
துதிக்கிறது நாடு!

இன்றும் அதிகாலையில் ரொட்டி முதலியவை வைத்து நைவேத்தியம் செய்யப் பெறுகின்றது. இன்றைய ‘சாதித் தத்துவம்’ காற்றில் விடப் பெற்றதைக் காண முடிக்கின்றது.

(3) ஆழ்வார் பெருமக்களோ -
அருந் தமிழால்...

தித்திக்கத் தித்திக்கத்
தெய்வத்தை அழைத்தனர்;
……………………………..
விருத்தத்திலும்
வெண்பாவிலும்
அகவலிலும்
அந்தாதியிலும்...

நாயகன் மேன்மையை
நகைபோல் இழைத்தனர்;
தத்துவச் சூரணத்தைத்
தமிழ்த்தேனில் குழைத்தனர்!

இங்கு ஆழ்வார் அருந்தமிழ்த் தத்துவச் சூரணம் தலைகாட்டுகின்றது.

(4) <u>திருகச்சியின் தத்துவம்</u>

அஞ்சை அவிக்கும்
ஆறை அறிந்து - பிறவி
ஏழைத் தவிர்க்க
எட்டைத் துதிப்பவர்;
பகவானுக்கு மேலாக -
பாகவதர்களை மதிப்பவர்!

'மெய்ப்பொருள் யாதெனில்
மெய்ப்பொருள் ஒன்றே
மெய்ப்பொருள்; மற்றபடி -
கைப் பொருள் என்பதும்
பைப் பொருள் என்பதும்
பொய்ப் பொருள்!"

என ஓர்ந்து -
எல்லாம் இருந்தும்
எதுவும் இராத ஏதிலானாய் -

விளாங்கனியும் ஓடும்போல்
விளங்கும் வித்தகர்!

(5) பார்ப்பனப் பெண் பிரசவித்தாள்; செயல் நடந்த பத்தாவது நிமிடம் பரலோகம் பிரவேசித்தாள். தற்கொலை செய்து கொள்ள முயன்ற தந்தையை கேசவ சோமாயாஜி தடுத்து நிறுத்தும்போது,

'படிமிசை
பிறப்பெய்தும் எவ்வுயிரும் -
பிறகு 'சவம்' ஆகத்தான்
பிரசவம் ஆகிறது.

பிரசவம் எனும்
பதத்திற்குள்ளேயே -
'சவம்' எனும்
சொல்லும் இருப்பதை...
மனுஷ புத்தி -

மறந்து போகிறது!

இங்கு கவிஞர் வாலியின் கூரிய அறிவைக் காணமுடிகிறது.

**(6) 'ஸத்யம் ஞானம்
அனந்தம் ப்ரம்மம்'**

இது தைத்ரீய உபநிடத வாக்கியம்

<u>யாதவர் விளக்கம்:</u>
**'மூளியான கொம்புடனோ;
முழுக் கொம்புடனோ;
முற்றும் - கொம்பே
முளைக்காமலோ;**

**பார்வைக்குத் தென்படினும்
பசுமாடு ஒன்றேதான் -
என்று
என்னணம் ஏற்கப்படுமோ...**

**அன்னணம் -
அனந்தம் சத்யம் ஞானம்
ஆகிய -
அடைமொழிகள் மூன்றும் -**

**பிரம்மம் ஒன்றையே
பூரணமாய்ச் சுட்டும்; வேறு
மாறுபாடுகள் எதற்கும்
முடிவினைக் கட்டும்!
ஸ்த்யமும் ப்ரம்மம்;
அனந்தமும் ப்ரம்மம்;
ஞானமும் பிரம்மம்!'**

என்பது.

<u>இராமானுஜனின் விளக்கம்</u>

**அனந்தம்; ஸத்யம்; ஞானம்
ஆகியவை...**

**பிரம்மதத்தின்
பண்புகள் ஆகும்; அந்தப் -
பண்புகளே எப்படி
பிரம்மமாகிப் போகும்?**

**மற்ற யாவற்றிலிருந்தும்
மாறுபட்டு...**

நித்யமாயும் தனித்தும்
நிற்பது எது?
பிரம்மம் எனப்
பிறங்குவது அது!'

என்பது.

(7) சாந்தோக்ய உபநிஷத்தில் சொல்லப்பட்ட ஒரு சொற்றொடருக்கு: ('கப்யாஸம் புண்டரீகம்' என்பது தொடர்)

<u>யாதவர் விளக்கம்:</u>

'சூரிய மண்டலத்தில்
சுடர்விட்டு நிற்கும் -
புருஷோத்தமனின்
புண்டரீகம் அனை விழிகள்...

குரங்கின்
குதம் போல் -
சிவந்து
சொல்லிருந்தன!'

என்பது.

<u>இராமானுஜன் விளக்கம்</u>

'கப்யாஸம் புண்டரீகம்' எனில்
கதிரவனால் புன்னகைக்கும்
கவின் மிகுந்த - செங்
கமலம் எனப் பொருள்படும்;

அத்தகு -
அரக்குநிறக் -

கமலம் அனையது
கரியமால் அழகுவிழி - என
உவகை பொங்க
உபநிஷதம் உவமித்திடும்!
....
'கம்' என்றால் -
குளிர்நீர்;

'பிபதீ ' என்றால் -
பருகுதல்!

குளிர்நீரைக்
குடிப்பதால் -
‘கபி’ என்று
கதிரவனைக் கூறிடப் போகும்;

‘ஆஸம்’எனில்’
அ..து -
அரும்பொன்று
அலர்ந்து சிரித்தல் ஆகும்!

பொன்னிறமாய்ப்
பொலியும் - சூரியநாராயணின்
செந்நிறமாகிய
செய்ய கண்களுக்கு...

உவமையாக வந்தது புண்டரீகம்.

(8) இராமாநுஜனும் யாதவப் பிரகாசரும் பிரிந்தனர் - கருத்து வேறு பாட்டால் (இது பெருமாள் பணி).

இங்கு மூன்று தத்துவக் குறிப்புகள் வருகின்றன.

(அ) எண்ணெய் உள்ளவரை
எரிகிறது பந்தம்; அதே போல்
இட்டவிதி உள்ளவரை
இருக்கிறது பந்தம்!

இங்கு ‘பந்தம்’ என்ற சொல் இரு பொருள் வழங்கி வருகிறது.

(ஆ)‘நதிவழி நாவாய் - போலே
விதிவழி போவாய்!’
என்று -
ஏற்கனவேயே...

உண்டு
ஒரு வசனம்; இதை
உணர்ந்தார்க்கு
உண்டோ விசனமே?

இங்கு ‘வசனம்’, ‘விசனம்’ என்ற சொற்கள் கும்மியடித்து விளையாடுகின்றன.

(இ)உங்களுக்குத் தெரியாதா -

உலக இயல்?
நம்மோடு பிறந்து -
நம்மோடு பிறங்கும் -
நம் அவயங்களே -
நமக்கு அயல்!

<u>இதன் விளக்கம்:</u>

நடப்பது -
நம் கால்;

ஆனால் -
அது -
நடப்பது - அவன்
நிர்ணயித்த வழியில்;

நோக்குவது -
நம் கண்;
ஆனால் -
அது...
நோக்குவது - அவன்
நிச்சயித்த காட்சியை;

தொடுவது –
நம் கை;

ஆனால் -
அது...

தொடுவது - அவன்
தீர்மானித்த பொருளை

தின்பது –
நம் வாய்;

ஆனால் -
அது...

தின்பது - அவன்
திட்டமிட்ட உணவை;

விரும்புவது -
நம் உளம்;

ஆனால் -
அது...

விரும்புவது - அவன்
வகுத்துவைத்த உறவை;

வாழ்வது -
நம் உயிர்;

ஆனால் -
அது...

வாழ்வது - அவன்
வரையறுத்த நாள்வரை!

இப்படி - நம்மொடு
இணைந்து இருக்கின்ற...

அனைத்தும்
அவன்வசம்;
இதில் -
என்ன வேண்டிக் கிடக்கிறது -
பாசம்; நேசம்;
பரவசம்?

இப்படி உலகியலையொட்டி மக்கள் வாயில் அடிபட்டு வழங்குகின்ற தத்துவங்கள் காவியத்தில் இடம் பெறுவது காவிய மரபு!

(9) இராமாநுஜன் காசியாத்திரையை மேற்கொள்ள இருந்த போது - தருமாம்பாள் தரும் நியாயங்கள்:

வலக்கை பற்றி - தான்
வாழ்க்கைப் பட்டவன்முன் -

விரித்தாள் மனையாள்;
வைதேகி அனையாள்!

"ஒருவன்
வெளிச்சத்தில் நடக்கையில்...
அவனது நிழல் - அவன்
அடியொற்று வரும்;

அவனே
அந்தகாரத்தில் நடக்கையில்...

அவனது நிழல் - அவனை
அறவே பிரிந்து விடும்!

மனைவி -
மட்டுந்தான்...

(i) மையிருட்டிலும்
மணவாளனைத் தொடர்ந்து வரும் -
அவனது நிழல்; ஏனெனில்
அவளுக்கு அவன்தான் நிழல்!

(ii) நதி - தான்
நடந்து போகும் இடமெல்லாம்
கூடவே - கரையைக்
கூட்டிச் செல்கிறது;

(iii) காற்று - தான்
கடந்துபோகும் இடமெல்லாம்
கூடவே - கந்தத்தைக்
கூட்டிச் செல்கிறது;

(iv) மழை - தான்
மிதந்து போகும் இடமெல்லாம்
கூடவே - தண்ணீரைக்
கூட்டிச் செல்கிறது.

(v) வினை - தான்
விரைந்து போகும் இடமெல்லாம்
கூடவே விளைவைக்
கூட்டிச் செல்கிறது;

அவ்வளவு ஏன்? உங்கள்
அண்ணன் - அவர் மனைவியை (=இராமன்)
அடவி சென்றபோதும் - உடன்
அழைத்துப் போகவில்லையா?

ஆதனால்
அவள் உயிர் -
பரிதவிக்காமல்
பிழைத்துப் போகவில்லையா?

காசிக்குப் போனாலும் - வாழ்வின்
கடைசிக்குப் போனாலும் -
கூடவருவேன் நான்; நானும் -
கிரௌஞ்சம் பட்சி தான்"!

....
இதமான வார்த்தைகள் சொல்லி -
இராமாநுஜன் தேற்றினான்;

அண்ணனைக் காணாத கோவிந்தன் கதறிய போது ஆசாரியன் அவனுக்குரைத்த நீண்டதோர் தத்துவ உரையில் தெறித்தவை[1] சில:

மாணாக்கர் எல்லாருமே
முத்தினம்; எனினும் -
இராமானுஜனோ – விலையில்லா
ரத்தினம்!
....
அவனோடு - எனக்கு
அடிக்கடி யிருந்தது -
யுத்த சம்பந்தம்; உனக்கோ -
ரத்த சம்பந்தம்!

ஆகுமா
அம்புவியில் -
ரத்த சம்பந்தம் போல் -
மத்த சம்பந்தம்;

நானறிவேன்;
நீ...
அடங்கி ஒடுங்கி நிற்பாய்
அவன் முன்;
அதற்குக் காரணம் - உனக்கு
அவன் முன்!

அவன் உன்னை
அன்பு கொண்டு -
ஆண்ட மன்!
ஆயினும் என்?

மன்னுக்கு ஒருமாதிரியும்
மன்பதைக்கு ஒருமாதிரியுமா -
மரணம் வருகிறது?
அது -
ஆராயிருப்பினும்...
முன் கூட்டியே -
முடிவான தேதிக்கு -
முக்கியத்துவம் தருகிறது!

பல்வேறு நிலைகளின் எடை பார்த்து எமன் பாசத்தை எறிவதில்லை.

மேடை ஏறிய பாத்திரங்கள்
கூத்து முடிந்தபின்
கலைக்க வேண்டாமா வேசத்தை?

இராமானுஜனுக்கு
இவ்வளவுதான் எனும்படி
சின்னப் பாத்திரம்; எனவே -
சீக்கிரம் முடிந்தது கூத்து;
…………………………..
கூத்துக்
கட்டியபின்…
நெறிமுறை தவறாது
நடித்து முடிப்பானாயின் -
நல்ல பெயரோடு
நிச்சயம் போய்ச் சேரலாம் வீடு;
நான் சொல்வது - முனம்
நாயன்மார் எழுதிவைத்த ஏடு!
………………………………..
ஆதிசங்கரர் -
அருளிய…

பக்திப்
பனுவல்
பஜகோவிந்தம்; அது -
நிலம் இறங்கிய
நீலகண்டன் காவல் பூத்த
நிஜ கோவிந்தம்!
…………………
பிறவிதோறும் -
பிறவிதோறும் -

ஒருவனுக்கு
ஒன்றா இரண்டா -
உறவுகளும்; அவ்
உறவுகளின் இறவுகளும்?
………………………….
அந்த அந்த உறவுகள் -
அந்த அந்த இறவுகள் -
அந்த அந்தப் பிறவியோடு சரி;
…………………………………
பெண்டாட்டியாய் இப்
பிறப்பில் இருப்பவள் -
பெற்ற தாயாய்ப் - போன
பிறப்பில் இருந்தவள்…

எனத் தெரியவந்தால் -
என்னாவான் ஒருவன்?
உடனே பள்ளியறைவிட்டு -
வெளியே வருவன்!

புருஷனாய் - இப்
பிறப்பில் இருப்பவன் -
பிதாவாய் - போன
பிறப்பில் இருந்தவன்...

எனத் தெரியவந்தால் -
என்னாவாள் ஒருத்தி?
வாழ்நாள் முழுவதும் -
விலகி நிற்பாள் தனை வருத்தி!
....
சுருக்கமாகச் -
சொல்லுகிறேன்...

இந்த -
இராமாநுஜன் - உன்
அண்ணன் என்று அறிந்ததால்
அவன் மறைவுக்கு அழுகிறாய்;

இதே-
இராமாநுஜன் -

போன பிறப்பில் - உன்னுயிரைப்
போர்வாளால் போக்கிய - ஒரு
மன்னன் என்று அறியவரின்
மறைவுக்கு அழுவாயா? மாட்டாய்!

ஆக-
அன்புச் சீடனே!
உன்னை அழவைப்பது
உறவு; அதைத்
தூர்க்க ஒரே வழி
துறவு!

மழித்தல் நீட்டல் இன்றியே
மனத்தளவு கொள்; ஞான
முதிர்ச்சியெனும் வாளெடுத்து
மும்மலத்தைக் கொல்!

இறப்பு பிறப்பு
இரண்டுமே பிணி;
இறப்பு பிறப்பு

இல்லா தொழிய
இறப்பு பிறப்பு
இல்லானைப் பணி!

இந்த அறவுரைகளுக்குப் பின் கோவிந்தனை வாரணாசிக்கு இட்டுச் செல்லுகின்றார் யாதவப் பிரகாசர்.

(10) திருக்கச்சி நம்பி இளையாழ்வானுக்கு அருளிய ஆறு வாசகங்கள்:

1. **பரத்வம் நாமே!**
2. **பேதமே அரிசனம்!**
3. **உபாயமும் பிரப்த்தியே!**
4. **ஆந்திஸ்மிருதியும் வேண்டா!**
5. **சரீர அவஸானத்திலே மோட்சம்!**
6. **பெரிய நம்பிதிருவடி பேணல்!"**

இறைவன் வாக்காக வந்த இவற்றின் அர்த்தங்கள் இவை:

1. **அனைத்திற்கும் நாராயணனே - ஆணிவேர்!**
2. **ஜீவாத்மாவும் பரமாத்மாவும் - ஒன்றல்ல! வேறு!**
3. **ஆண்டவனை அடைய ஒரேவழி - அடைக்கலம் புகுவதே!**
4. **நாராயணனை - நாளும்**
   நம்பி வாழ்பவன் -
   உயிர் பிரியும்போது - அவன்
   பேரை
   உச்சரிக்க வேண்டியதில்லை!
5. **அத்தகு அடியாரக்கு -**
   ஆவி நீத்ததும் வீடு நிச்சயம்
6. **பெரிய நம்பிகளைப்**
   பேராசனாகப் பேணி - அவர்
   திருவடிகளைத்
   தொழுக!

என்பவையாகும்.

(11) துவ்ய உபதேசம்:

திருவரங்கத்தைவிட்டு பெரிய நம்பிகளும் அவர்தம் துணைவி வித்யாம்பாளும் இராமாநுஜனை இட்டுவர காஞ்சிக்கு வருகின்றனர். அதே நேரத்தில் பெரிய நம்பிகளை ஆசானாக ஏற்பதற்கு காஞ்சியை விட்டுத் திருவரங்கத்திற்கு வருகின்றான். வழியிலுள்ள மதுராந்தகத்தில் மகிழ மரங்கள் நிரம்பிய இடத்தில் இருவர் சந்திப்பும் நேரிடுகின்றது. இராமாநுஜனின் வேண்டுகோளுக்கு இரங்கி ஒரு மகிழமரத்தடியில் பஞ்ச

சம்ஸ்காரங்களை ஆற்றி மந்திரரத்தினம் எனப்படும் 'துவ்ய மந்திரம்' உபதேசிக்கப் பெறுகின்றது.

"இராமாநுஜரே! நீர் -
இப்போது உபதேசம் பெற்றது...
அடியேனிடம்
அல்ல;

அடியேன் இப்பணியை
ஆற்றினேன் - என்
அகத்துள் இருந்து
ஆளவந்தார் சுவாமி சொல்ல!"

ஆக - இளைய
ஆழ்வானைத் - தன்
சீடனாக ஏற்று - அவன்
செல்லக் காட்டினார்...

உய்ய -
உதவுகின்ற ஒரு செவ்வாறு!

(12) திருமந்திர உபதேசம்:

திருக்கோட்டியூர் திருக்கோயிலில் இராமாநுஜரின் ஒருமாத உண்ணா நோன்பு நிறைவுற்றது:

"உடையவரை -
உபதேசம் பெற வரச் சொல் -
தனியாக -
தண்டு பவித்திரத்தோடு!"

என்று -
எதிர் நின்ற சீடனிடம் -
கோஷ்டி நம்பி
கூறினார்;

கூரேசர்; முதலியாண்டான்
கூடவர -
உடையவர் – தமக்கு
உபதேசிக்குமாறு...

நம்பியை வணங்கி
நயந்து கோரினார்!
"தண்டு பவித்திரமொடு - உன்னைத்

தனியாக வரச் சொன்னேனே!"

கொதித்தார் -
கோட்டியூர் நம்பி;
கோபத்தைத் தனித்தார் -
கோதண்டன் தம்பி![2]

"இந்த முதலியாண்டான் -
எனக்குத் தண்டு;
இந்தக் கூரேசன்!
எனக்குப் பவித்திரம்!"

இன்னணம் - ஸ்ரீ
இராமானுஜர் விளக்கியதும்...

கோட்டியூர் நம்பி -
குளிர்ந்தார்; அவர்முன் -
உடையவர் பசும்பொன்னாய் -
ஒளிர்ந்தார்!

பிறகு - வலப்
பக்கத்தில் -
உடையவரை
உட்கார்த்தி வைத்துக் கொண்டு...

"உமக்கு நான்
உபதேசிப்பதை - நீர்
பிறர்க்குச் சொன்னால்
பாழ்நரகம் போவீர்!"

என்று -
எச்சரித்து...

செவியில் திருமந்திரத்தைச்[3]
செப்பினார்; குருவாக்கை -
உடையவரும் காக்க
ஒப்பினார்!

(13) ஊரவர் உய்ய உபதேசம்

அனை அனைய எதிராஜர் -
கொடுத்த வாக்கை மீறினார்;
கோயில் கோபுரம் ஏறினார்!
....

ஒரு
திருவிழாவை முன்னிட்டுத்
திரள் திரளாக - மக்கள்
கோயிலில்
குழுமிக் கிடந்தனர்;
…………………………..
தாயையும் விஞ்சும்
தண்ணளி மிக்க…
உடையவர்
உள்ளம் -
உய்யவழி தேடும்
ஊரவரைக் கண்டு -

வெயிலில் வைத்த
வெண்ணெயாய் உருகியது;
ஏரார்ந்த
எதிராஜரின் -
தடங்கண் வழியே
தண்ணீர் பெருகியது!

“அடடா!
ஆதிப் பிரானை அடையும் வழி…

இவ்வளவு சுலபமாய்
இருக்க; இதனை -
எடுத்தோதுவார்
எவருமின்றி
மன்பதை வாடுகிறதே - வாழ்வை
முன்வினை கருக்க!

ஓதுவாரை நன்னெறிக்குய்க்கும்
ஒரு மந்திரத்தை;
…………………………
‘ஓம் நமோ நாராயணாய’ எனும்
ஓரெட்டெழுத்துள் - பழமறைப்
பிழிவாய்க் கிடந்து - அருள்
பாலிக்கும் திருமந்திரத்தை;

நடந்து
நடந்து -
நீரின்றிச்
சோறின்றிக் -
கிடந்து
கிடந்து -

அடியேன் பெற்றது போல் -
அனைவரும் பெறல் ஆகுமோ?

……………………………………
எதிராஜர் இவ்வாறு
எண்ணினார்
உடனே - கோபுர
உச்சியில ஏறிநின்று
ஊர்வரைக் கூட்டி
உபதேசம் பண்ணினார்!

“பகவான்
பரம காருண்யம் மிக்கவன்;
எளி வந்த தன்மைக்கு
எடுத்துக் காட்டு -
அவன்தான்!
அவனேதான் எனத்தக்கவன்!

சாதி;
சமயம்;
சாத்திரம்;
சடங்கு;

எதையும் அவன்
எதிர்பார்ப்ப தில்லை;
உங்கள் நாவில்
உட்கார்த்துங்கள் -
ஏற்றமிகு அவனது
எட்டெழுத்துச் சொல்லை!

அந்தத் திருமந்திரத்தை
அன்றாடம் சொல்லுங்கள்;
ஓம் நமோ நாராயணாய - எனும்

ஒப்பரிய மந்திரத்தை - தினம்
ஓதி ஓதி ஓதி ஓதி -
ஓயா வினைகளை வெல்லுங்கள்

சரண் புகுந்தார்க்கு - அவன்
அரண்;
வேறு சடங்குகள்
வேண்டா; அவற்றில்
முன்னுக்குப் பின் இருக்கும்
முரண்!

நாராயணா என்னாத

நாவென்ன நாவே?[4]
நாராயணா என்பீரேல்
நமைக் காக்க நேர்வரும் தேவே!

கூவிக்
கூப்பிடுகையில்...
தும்பிக்கு வந்தவன்;
துருவனுக்கு வந்தவன்;
நம்பிக் கூவுங்கள் -
நமக்கும் வருவான்!"

என்று - எதிராஜர்
எல்லா இனத்தார்க்கும் -
பொதுமை ஆக்கினார்
புண்ணிய நாமத்தை; திருக் -
கோட்டியூர் மாந்தர்க்குக்
கூட்டினார் சேமத்தை!

14. குரு – சீடரான அதிசயம்

யாதவரை -
யதிராஜர் சீடனாக ஏற்றார்;
....
வேர் -
விழுதானது;
விழுது –
வேரானது!

காலம் - இத்தகு
காரியங்களை ஆற்றும்;
கண்மூடித தனமாய் - எதையும்
கீழ்மேலாய் மாற்றும்!

காலம் செய்யும்
காரியங்களுக்குக்
காரணங்கள் - நம்மால்
கற்பிக்க ஏலாது; நம்மால் -
கற்பிக்க ஏலாதெனினும்
காரணம் இன்றிக் -
காரியம் எதையும்
காலம் செய்யக் கோலாது!

யாயொத்த கருணையொடு
யாதவப் பிரகாசருக்கு -
யதிராஜர் -

யக்ஞோபவீதம் அணிவித்து -

பஞ்ச சம்ஸ்காரங்கள்
பண்ணிவைத்து - பின்பு
ஓரெட்டெழுத்தை -
உட்செவியில் அறிவித்து -

'கோவிந்தஜீயர்' எனக்
குவலயம் கூப்பிடுமாறு - ஒரு
தாஸ்ய நாமமும்
தந்தார்!

தந்து - அவரது
திருத்தோளில் சாத்தினார் -
துளவுகளால் தொடுத்த -
தண்தார்!

ஆசாரியர் இராமானுஜரின் -
ஆக்ஞைப்படி...

கோவிந்த ஜீயராகி – முக்
கோல் தாங்கி நின்ற யாதவர்

வைணவக் கொள்கைகளை
விவரித்து – ஒரு நூலை

'யதிதர்ம சமுச்சயம்' என
யாத்தார்;
அகவை எண்பதில்
அம்புவி வாழ்வை நீத்தார்!

இங்கு ஒரு அத்வை, ஒரு விசிட்டாத் வைதி ஆனது கூட வியப்பில்லை. சத்துவகுணக்குன்று முன்னால் ஆணவம் அடங்கியது தான் வியப்பு!

15. 'திருப்பாவை ஜீயர்' - இந்துமத களிற்றன்' (திருப்.18)

திருவரங்கத்தில் உடையவர் வாழ்ந்த காலத்தில் அரங்கநகர் மக்கள் அவருக்கு வழங்கிய பெயர் 'திருப்பாவை ஜீயர்' என்பது.

மகான் ராமநுஜர் - ஒரு
மடாதிபதியாக இருந்தும்...

பிரதி தினமும்

பிட்சை எடுத்துப்
புசிப்பவ ராதலால் -
திருப்பாவை பாடித்
தெருவழியே வர - அதைச்
செந்தமிழ்த் தேனென ஊரார்
செவிமடுத்து வந்தனர்!

உடையவர் ஒருநாள் -
'உந்து மதகளிற்றன்' எனத் -
தொடங்கும்
திருப்பாவையை ஓதியவாறு -

பிட்சை
பெற - பெரிய
நம்பியின் திருமாளிகைமுன்
நின்றார்;
பாசுரத்தின்
பிற்பகுதியான -

'பந்தார் விரலி! உன் -
மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக் கையால்
சீரார் வளையொளிப்ப -
வந்து திறவாய்!' எனும்...

தீந்தமிழ் வரிகளைத்
தன்வச மிழந்து -
பாடிப்பாடி - 'ஆஹா!
பால் சோறு! பால் சோறு!'
என்றார்;
கோதைப் பாட்டை - வயிறு
கொள்ளளவும் தின்றார்!

பெரிய நம்பியின்
பெண் -
சின்னஞ்
சிறுமி -
'அத்துழாய்' என்பவள்
அந்நேரம் - தன்
அகத்துள் - பந்து
ஆடிக் கொண்டிருந்தவள்...

பாட்டுச் சத்தம் கேட்டுப்
பந்தும் கையுமாகப்

பரபரப்போடு வந்து - தாள்
போட்டிருந்த கதவைத் -

திறந்து
தெருவை நோக்க - அவளை
உடையவர் கண்டார்
விழிகளில் வியப் பூக்க!

பாசுரத்தின்
பயனாய் -
உன்மத்தம்
உச்சிக்கேறிய உடையவர்...

அழகிய பெண் -
அத்துழாய் முன்...

நெடிய திருமேனி
நிலந் தோய -
திடீரென்று
தண்டனிட்டார்;
………………..
அத்துழாய் -
அலமந்து நின்றாள்;
அடித்தொண்டை கமற -
'அப்பா! அப்பா!' என்றாள்!
……………………..
அத்துழாய்
அழைக்க -

வெளியே வந்த நம்பிக்கு -
விவரம் புரிந்து விட்டது;

பந்தும் கையுமாகத் - தன்
பெண்ணைப் பார்த்தும்...

'பந்தார் விரலி' – எனப்
பாசுரம் சொல்லும் - அந்த
நப்பின்னைப் பிராட்டிதான்
நேர் நிற்கின்றா ளென்று -

எம்பெருமானார்
எண்ணி -
நிலந்தோய சேவித்தது - அவர்
நெஞ்சைத் தொட்டது!

உடையவருக்கு
உணர் வூட்டி...

தேகம்
தொட்டு எழுப்பி - தன்
தோள் துண்டால் - அவரது
திருமேனி தூசிதட்டி...

“வாரும் திருப்பாவை ஜீயரே!
உம்மைப்போல் -

ஆண்டாள் வார்த்தைகளை
அநுபவித்து வசமிழக்க -
ஆராலும்
ஆகாது;
அருந்தமிழ் - அதில்
ஆழ்ந்துபோன உம்மைத் தவிர -
ஆர்நெஞ்சையும் - இப்படி
அள்ளிக் கொண்டு போகாது!”

என்று சொல்லி -
எம்பெருமானாரின்
பாசுர பக்தியைப் -
பெரிதும் போற்றினார்;

அது கண்டு -
அத்துழாய் - ஸ்ரீ
இராமாநுஜரின்
இணையடிகளில் விழுந்து...

“அண்ணா! உங்கள்
அன்புத் தங்கையின்
அறியாமையை - மன்னித்து
அருள வேண்டும்!’ எனப் -

பிரார்த்திக்க - எம்
பெருமானார் புன்னகைத்து -
அவள்
சிரசை மெல்ல நீவி - உடலில்
சிலிர்ப்பை ஏற்றினார்!

முன்னையே வரலாற்றில் கண்டது: அத்துழாய் கீழே வணங்கி விழுந்ததைக் கண்டதும் உள்ளே ஓடி தந்தையிடம் ஜீயர் வெயில் தாங்காமல் மயங்கி விழுந்து விட்டார் என்று சொன்னாள். அதைக்

கேட்ட நம்பிகள் "உந்து மதக் களிற்றன் அது சந்தானம் ஆயிற்றுப் போலும்"! என்று சொல்லி வாளா இருந்தது சீடரின் அநுபவம் குருவுக்குத் தெரிந்து விட்டது!

16. திருக்கோயில் சீர்திருத்தம்: உடையவர்

அரங்கன் கோயில்
அதிகாரிகள் விஷயத்தில் -
நிர்த்தாட்சண்யமாய்
நடப்பேன் எனச் சாற்றினார்!

இராமானுஜர்
இன்னணம் -
உறுதியாக
வற்புறுத்திய ஒழுக்கம் -
பெருமாள் கோயில் -
பெருச்சாளிகளாய்...

ஏற்கனவே
அகப்பட்டதைச் சுருட்டி -
ஏப்பம் விட்ட சிலருக்கு
ஏற்படுத்தியது புழுக்கம்!

பொதுவாகவே மகான்களுக்குப்
பகை முளைக்கும்;
அது
ஆனமட்டும் -
அவர்களுக்கு
ஆபத்தை விளைவிக்கும்!

நன்னெறி
நடமாடுவதை
புன்னெறி ஏற்காது;
புன்னெறி
பொருதும்; பொருதினாலும்
நன்னெறி தோற்காது!

எவ்வெப்போது தேவையோ
அவ்வப்போது...
காலம் கொடுத்த
கொடையாக -
உலகு துயரற - சில
உத்தமர் தோன்றுவர்; அவர் -

மன்பதையின்

மனத்தை
ஈர நிலமாக்கி - நலம்
ஈயும் அறவிதையை - ஊன்றுவர்!

அடுத்தவர்களுக்காக
அழுவர்;தன்மீது - வசை
தொடுத்தவர்க்காகத்
தொழுவர்;

வேண்டாதவர்க்கும் சேர்த்து
வேண்டிக் கொண்டு -
வல்லான் திருவடிகளில்
விழுவர்;

ஆண்டாண்டு காலம்
அருந்திக் கிடக்கும் -
எளியோர் - அம்மகான்களால்
எழுவர்!

மகா -
மகான் என்போர்...

வகுப்பு பாராது – ஞான
வகுப்பு நடத்துவர்; அவர் -
காட்சிக்கு எளியராகிக்
கலந்துரையாடி - எஞ்ஞான்றும்
மீட்சிக்கு வழியற்றோரையும்
மோட்சம் கடத்துவர்!

இராமானுஜர் - மண்
இறங்கிவந்த பெருங்கருணை;
பெருங்கருணையின் -
பார்வையில்...
வகுப்பு வாதமும்
வர்க்க வேதமும் -
விதியென்பதாய்
விதிக்கும் நூல் வெறும் கருணை!

17. வைணவ ஒழுக்கம்

கொங்கு நாட்டில் உள்ள -
'கொள்ளைக் களம்'

மறையோர் குலத்தைச் சார்ந்த பெண்மணியொருத்தி உடையவரை வினவுகின்றாள்:

"பிரதி தினமும் - தெருவில்
பிட்சை ஏற்று வாழும்...

ஒரு
துறவியின்
தரிசனத்திற்காக -
சமரச உணர்வோடு - ஒரு
சபையில் உட்கார்ந்திருப்பது...

எனக்கு அதிசயமாக
இருக்கிறது! அவர்களை -

எது அங்ஙனம்
இருக்கிறது?"

அம்மையார் இப்படிக் கேட்க -
அதற்கு -

ஒரே வார்த்தையில்
"ஒழுக்கம்" என்று -

உடையவர்
உரைத்தார் பதில்; விளக்கம்
அனைத்தும்
அடங்கி விட்டது அதில்!

ஆயினும் - அவ்
அம்மையார் அறிய வேண்டி -
அவர் விரிவாய்ப் பேசினார்;
அறிவு வெளிச்சம் வீசினார்!

"ஒழுக்கம் என்னும் -
ஒரு தாயிடத்திலிருந்துதான்...

அறிவு;
அன்பு;
அறம்;
அருள்;

ஆகிய நான்கு சேய்கள்
அவதரிக்கின்றன;"

....
"அவா;
அழுக்காறு;
அச்சம்;
ஆத்திரம்;

ஆகிய நான்கு அழுக்குகளை
அவை எரிக்கின்றன!

அவன்;
அது;
இவன்;
இது;

ஆகிய நான்கு பேதங்களை
அவை கரிக்கின்றன!

எனவே
எங்கு
ஒழுக்கம் - கோல்
ஓச்சுகிறதோ...

அங்கு - ஓர்
ஆன்மானுபூதி
உண்டாகி - பேரொளியை
உமிழ்கிறது; அந்தப்
பேரொளி பிலிற்றும் - சத்தியப்
பெரு வெளிச்சத்தில்
அனைத்து உயிரும் - ஒன்றாய்
அமிழ்கிறது!

மடமா யிருந்தாலென்ன? மனித -
மனமா யிருந்தாலென்ன?
ஒழுக்கம் -
ஒளிவிடு மாயின்...

வையமே -
வணங்க வரும்;
நால்வகை பேதமும் - அங்கு
நுணங்கி விடும்!"

என்பது இராமானுஜரின் விளக்கமாக அமைகின்றது.

18. வைணவத்தின் வேர்க்கொள்கை

கோவிந்தனிடம் கண்ட 'இரு புதிர்ச் செயல்கள்' இக் கொள்கையைப் புலப்படுத்துகின்றன.

ஒன்று

கொடிய பாம்பு ஒன்றை -
கோவிந்தன்...
இடக்கையில்
இறுகப் பற்றிக் கொண்டு - தன்
வலக்கையை - அதன்
வாயில் நுழைத்துக்கொண்டு...

'அது-
அவனைப் பற்றியதா? அல்லது -
அவன் -
அதனைப் பற்றினானா?' என்று -
விளங்காவண்ணம் - பரஸ்பரம்
விடாப்பிடியா யிருப்பதை -
எதிராஜர்
எட்டி நின்று பார்த்துத்தான்...
வியந்தார்;
பயந்தார்!

பாம்பின்
பிரதியாக -
பூமிவந்த – எம்
பெருமானாரே...
பாம்பைக் கண்டு
பயந்தார் என்றால்...

அதுதான் -
அவதார தருமம்!
எடுத்த அவதாரத்திற்கு -
ஏற்ப இயற்றிடுங் கருமம்!

"கோவிந்தா!"' என்று -
கூச்ச லிட்டார்;
சில நிமிடங்கள் சென்றபின்
சர்ப்பத்தைக் -
கீழே விட்டுவிட்டு வந்த
கோவிந்தனிடம்...

“என்ன சாகசம் இது?”
என்று வேகப்பட்டார்!

அண்ணனாக இருந்து -
ஆசாரியன் ஆகிவிட்டதால்...
உடையவரை - கோவிந்தன்
விளித்தான் ‘சுவாமி’ யென்று;
விந்தைச் செயலை -
விநயமாய் விலகி நின்று!

“சுவாமி! அந்த -
சர்ப்பம்...

மிகுந்த வேதனையோடு
மண்ணில் புரள்வதைக் கண்டு -
மனம் ஆற்றாது - அதை
மெல்லக் கையில் எடுத்தேன்;

நாகத்தின் -
நாக்கில் முள் இருக்க...

அதை நான்
அறவே நீக்கி; அவ்
அரவத்தின்
அவலம் போக்கி;

மீண்டும் - அதை
மண்ணில் தவழ விடுத்தேன்!”

கோவிந்தன் - இப்படிக்
கூறியதும்...

‘பிற உயிர்; தன்னுயிர் எனும் -
பேதம் பேணாத -
கோவிந்தன்போல்
அற உயிர் தரைமிசை ஆருளர்?’
என
எதிராசர் எண்ணினார்;
உடனே - அவனைப் பற்றி
ஒரு முடிவு பண்ணினார்!

<u>இரண்டு:</u>

இன்னொரு நாள்

இதைப் போல ஒரு நிகழ்வு;
அதைக் கண்டும் -
அருள்மிகு -
உடையவர் -
உள்ளத்தில் ஒரு நெகிழ்வு!

பெரிய திருமலை நம்பி -
படுக்கும் மெத்தையை...
கோவிந்தன்தான் - தூக்கிக்
கொண்டுபோய்த் தூசு தட்டிக் -
கூடத்தில் விரிப்பான்;
விரித்ததும் - முதல்
வேலையாக - அதில்
அவன்
அப்படி இப்படி -
படுத்து உருண்டு
பார்த்து விட்டு...

மெல்ல - தன்
முகம் மலரச் சிரிப்பான்!
அந்த
அபசாரத்தை -
ஒருநாள் பார்க்க நேர்ந்த
உடையவர்...

திருமலை நம்பிக்குத்
தெரியப்படுத்த - நம்பி
கோவிந்தனைக்
கூப்பிட்டுக் கேட்க -

“ஆமாம்! தினம் -
அப்படித்தான் செய்கிறேன்!”
என்றான் அவன் - பதிலில் ஓர்
எதார்த்தம் பூக்க!

மேலும் சொன்னான்; தொண்டில்
மாருதி அன்னான்
“ஆசிரியப்பிரான் - கண்
அயர்கின்ற படுக்கையில்...

பூச்சிப் பொட்டு இருந்தால் - அவரை
பாதிக்கும்; இதை எனது -
உள்மனம்
உணர்த்துவதால் - என்

உடம்பு தான்புரண்டு – பூச்சி
உளதா எனச் சோதிக்கும்!

இப்பணியை -
இயற்றுவதால்...

நரகம் வரினும் -
நான் ஏற்பேன்;
தொடர்ந்து இப்பணியைத்
தொய்வின்றி நோற்பேன்!"

கோவிந்தன் -
கூற்றில்...

இராமானுஜ முனியின்
இதயம் களித்தது;
இரு விழிகளின்
இமைகளில் நீர் துளித்தது!

வைணவத்தின் -
வேர்க் கொள்கை...

ஜீவன்கள்பால் காட்டும் -
ஜீவகாருண்யம்; வாய்க்கும் -
ஜீவகாருண்யம் கொண்டார்க்கே -
தேவகாருண்யம்!

பாம்பு பற்றிய நிகழ்சியும் படுக்கைப் பற்றிய நிகழ்ச்சியும் கோவிந்தன் கடைப்பிடிக்கும் கருணையை உடையவர்க்குக் காட்டின.

கண்டார் - அவனது
கடலனைய பெருவுளம்;
கொண்டார் - அத்தகு
கிருபானந்த வாரியைக்
கூடவே - அரங்கன் ஊர்
கூட்டிச் செல்லத் திருவுளம்!

19. இராமாநுஜ சமயம்

'திடப்பொருள்;
திரவப்பொருள்;
ஜடப்பொருள்;
ஜீவனுள்ள பொருள்;

என
எப்பொருளாயினும் -
மெய்ப்பொருள் - அப்பொருள்
மேவி நிற்கும்!' எனும் -
கொள்கையைத்தான் - வைணவம்
கூவி நிற்கும்!

ஆன்மா; பரமான்மா - ஒன்றென
அறிவிக்கும் அதிவைதம்;
ஆன்மா; பரமான்மா - வேறென
அறிவிக்கும் த்வைதம்;

இவ்
இரு தத்துவங்களையும்...
ஒருசேரக் கட்டி -
உயிர்; உடல்; இறை - எனும்
மூன்றையும் ஒன்றென
முழங்கும் நெறிதான்...

'விசிஷ்டஸ்ய அத்வைதம்' என -
விரியும் விசிஷ்டாத்வைதம்!

'சித்து அசித்தொரு ஈசன் - என்று
செப்புகின்ற -
மூவகைத் தத்துவத்தின் -
முடிவு கண்ட -
சதுமறைப் புரோகிதன்!' என...

நம்மாழ்வாரை
நாளும் -
சிலாகித்துப் போற்றும்
ஸ்ரீவைணவ உலகம்;

உயிருள்ளதையும் -
உயிரற்றதையும் -
பேதமறப் பார்க்கும்
பார்வை விளைவிக்கும்மோ கலகம்?

இதுதான் -
இராமாநுஜ சமயம்;

20. பிறப்பு இறப்பு தத்துவம்:

காவியத்தில் இரண்டு இடங்களில் இதனைக் காண்கிறோம்.

(1) இராமாநுஜனின் மறைவு குறித்துப் புலம்பிய கோவிந்தனுக்கு யாதவர் அருளியது.

மன்னுக்கு ஒருமாதிரியும் -
மன்பதைக்கு ஒரு மாதிரியுமா -
மரணம் வருகிறது?
அது -
ஆராயிருப்பினும்...
முன்கூட்டியே -
முடிவான தேதிக்கு -
முக்கியத்துவம் தருகிறது!

எமன் இருக்கிறானே -
எமன் ...
அந்த விஷயத்தில்
அவன் அந்தகன்;
ஆதலால் தான் - பெயராலும்
அவன் அந்தகன்!

தருமி;
கருமி;

யோகி
போகி;

பண்டிதன்;
பாமரன்;
தனவந்தன்;
தரித்திரன்;

ராமன்;
ராவணன்;
கண்ணன்;
கம்சன்;

என்றெல்லாம்
எடை பார்த்தா
எமன்
எறிகிறான் பாசத்தை?
மேற்சொன்ன பெயர்களில்
மேடையேறிய பாத்திரங்கள்
கூத்து முடிந்தபின்
கலைக்க வேண்டாமா வேசத்தை?

இராமானுஜனுக்கு

இவ்வளவுதான் எனும்படி
சின்னப் பாத்திரம்; எனவே -
சீக்கிரம் முடிந்தது கூத்து;

காரணத்தோடு நடந்த
காரியத்தின் பொருட்டு -
நீயேன் கலங்குகிறாய் -
நீள்விழியில் கண்ணீர் பூத்து?

அவதார புருஷர்களாகி
அவனிக்கு வந்தவர்களே -
அரிதார புருஷர்களாகி
ஆடவேண்டியபடி ஆடிவிட்டு...

ஏறியிருக்கின்றனர் வானம்;
எம்மாத்திரம் நீயும் நானும்?

அது சிறியதோ;
அது பெரியதோ -
பாத்திரத்தை
அவனவன் -

கூத்துக்
கட்டியபின்...
நெறிமுறை தவறாது
நடித்து முடிப்பானாயின் -
நல்ல பெயரோடு
நிச்சயம் போய்ச் சேரலாம். வீடு;
நான் சொல்வது - முனம்
நாயன்மார் எழுதி வைத்த ஏடு!

கூத்தனைத் தொழும்
கூட்டத்தார்க்குத் தெரியாதா
கூத்தைப் பற்றி;
ஆய்ந்து பார்
அவர்கள் -
கூறிப்போன
கூற்றைப் பற்றி!
....
பிறந்த எவனும் - புதியாப்
பிறந்தவனல்ல; அஃதேபோல்
இறந்த எவனும் - புதியாய்
இறந்தவனல்ல!
பலமுறை பிறந்திருக்கிறான்;
பலமுறை இறந்திருக்கிறான்;
உலகாயதத்தில்

ஊறிப்போய்
உள்ளொளி அற்றதனால் - அந்த
உண்மையை மறந்திருக்கிறான்!

பிறவிதோறும் -
பிறவிதோறும் -

ஒருவனுக்கு
ஒன்றா இரண்டா -
உறவுகளும்; அவ்
உறவுகளின் இறவுகளும்?

இன்னணம் -
இருக்கையில்...

நிலையென்று ஆரத்தழுவி
நேசிப்பதும் - நிலை
இலையென்று ஆனபிற்பாடு
இரங்கற்பா வாசிப்பதும்...

சராசரிகளின்
செய்கை; அத்தகையோர்
உறுவதெங்ஙனம்
உய்கை?

அந்த அந்த உறவுகள் -
அந்த அந்த இறவுகள் -
அந்த அந்தப் பிறவியோடு சரி;

தொட்டகுறை -
விட்டகுறை -
என்றெல்லாம்
எழுதலாம் கவி;
எது -
எப்படியிருப்பினும்...

பூர்வஜன்ம உறவும் -
பூர்வஜன்ம இறவும் -
புரியாதவரை ஷேமமெனச் சிரி!

ஆண்டவன் மட்டும் -
'அய்யோ! பாவம்!' என்று...

அவற்றை
அறிவிப்பானாயின் -

அனர்த்தம் நேரும்;
ஆடிப்போரும் குடும்ப வேரும்!

பெண்டாட்டியாய் - இப்
பிறப்பில் இருப்பவள் -
பெற்ற தாயாய்ப் - போன
பிறப்பில் இருந்தவள்...
எனத் தெரிய வந்தால் -
என்னாவான் ஒருவன்?
உடனே பள்ளியறைவிட்டு -
வெளியே வருவன்!

புருஷனாய் - இப்
பிறப்பில் இருப்பவன் -
பிதாவாய் - போன
பிறப்பில் இருந்தவன்...

எனத் தெரியவந்தால் -
என்னாவாள் ஒருத்தி?
வாழ்நாள் முழுவதும் -
விலகிநிற்பான் தனை வருத்தி!

மயக்கத்தையும் -
மறதியையும் -
வைத்தானே மனிதனுக்கு -
அவனை
வாழ்த்து; அவன்
திருமுன்பாக - உனது தலையைத்
தாழ்த்து!

சுருக்கமாகச் -
சொல்லுகிறேன்...

இந்த -
இராமானுஜன் - உன்
அண்ணன் என்று அறிந்ததால்
அவன் மறைவுக்கு அழுகிறாய்;

இதே -
இராமானுஜன் -

போன பிறப்பில் - உன்னுயிரைப்
போர்வாளால் போக்கிய - ஒரு
மன்னன் என்று அறியவரின்
மறைவுக்கு அழுவாயா? மாட்டாய்!

ஆக -
அன்புச் சீடனே!
உன்னை அழவைப்பது
உறவு; அதைத்
தூர்க்க ஒரே வழி
துறவு!

மழித்தல் நீட்டல் இன்றியே
மனத்தளவு கொள்; ஞான
முதிர்ச்சியெனும் வாளெடுத்து
மும்மலத்தைக் கொல்!

இறப்பு பிறப்பு
இரண்டுமே பிணி;
இறப்பு பிறப்பு
இல்லா தொழிய -
இறப்பு பிறப்பு
இல்லானைப் பணி!

(2) தஞ்சமாம்மாள் தன்னைச் சிறிதும் கருதாது திருக்கச்சி நம்பிகளைச் சுற்றித் திரிவதைக் குறை கூறினபோது:

ஒவ்வோர் உயிரும்...
ஒவ்வோர் உயிரும்...

யாரோ
யாய் -
யோனியில் விளைந்து -
யாண்டுமொரு
மேனியில் வெளிப்போந்து...
நூறு வகை இன்பம் -
நூறு வகை இன்பம் -

நுகர்வன
நுகர்ந்து;

பந்துக்க ளோடும் -
பரிசனத் தோடும் -

பகர்வன்
பகர்ந்து;

நாட்பட நாட்பட -
நரை திரை நோக்கியே -

நகர்வன

நகர்ந்து;

தாதொடு தசைநாரும் -
தண்டு வடமதும் -

தகர்வன
தகர்ந்து;

கடைசியில்
காடு புகுந்து;
கூட்டிய ஊழ்ப்படி - மீட்டொரு
கூடு புகுந்து;

மறுபடி -
மேற்சொன்னபடி...

நுகர்வன் -
நுகர்ந்து;
பகர்வன -
பகர்ந்து;
நகர்வன -
நகர்ந்து;
தகவர்வன -
தகர்ந்து;

உலாப்பிலாச் சுழற்சியில்
உழல்கிறது!

எந்நாள் -
என்னணம் - இக்
கரும வளையங்களினின்றும்
சுழ்கிறது?

என - மன்பதை
ஏங்கிக் கிடக்கையில்...

'விஜயா!
வழுத்து என் கழல்; வழுத்தி -
வினை
வளையங்கிலிருந்து கழல்!'

என்று -
ஏர்மிகு திருவாய் மலர்ந்து...

கண்ணன் வழங்கினான்

கீதையை; உய்யவழியாய்ப் -
பார்த்தனுக்கு மட்டுமல்ல;
பல்லுயிர்க்குமான பாதையை!
....
ஆதலால்
அர்ச்சுனன்தான் -
அச்சுதனைவிட
அதிகமாக...

நமது -
நன்றிக்கு உரியவன்!

தனஞ்செயன் போலவே -
தஞ்சமாம்பாளும்...

நாளும்
நமது -
நெஞ்சார்ந்த
நன்றிக்கு உரிய நல்லாள்!
....
திருக்கச்சி நம்பியைத்
தேர்ந்தேன் குருவாக ; எனை
அழற்றும் -
அறுபகை வெப்பம் ஆற - குளிர்
நிழற்றும் -
நிகரிலா ஞானத் தருவாக!
....
பாதரட்சைபோல் - அவர்
போகுமிடமெல்லாம் போகிறேன்;

அவர் மீதுள்ள
அவாப் பெருக்கால்...

நான் எனும்
நான் அழிந்து -
அனேக நேரங்களில்
அவராகவே ஆகிறேன்!

இனிய என்
இல்லத்தரசியே!
இத்துணையும் - நான்
இயற்றுவது...

என் பொருட்டு மட்டுமா?
உன் பொருட்டும் தான்;

என்னுயிரோடு
என்னுயிரைப் பின்னிய -
உன்னுயிரும்
உய்ய எண்ணுவோன் நான்!

ஓர்
உயிர் -
பிறப்பு எய்துவதே - எய்திய
பிறப்பைக் கொண்டு -
இன்னொரு
பிறப்பு எய்திடாதிருக்கப்
பண்ணிடத்தான்; அஃதைப்
பண்ண உதவும் - ஒரு குருவை
நண்ணிடத்தான்; நண்ணி -
எஞ்ஞான்றும் அவர் திருவடி
எண்ணிடத்தான்; எண்ணி
ஒருமையொடு உளம் - அவர்பால்
ஒண்ணிடத்தான்!

இதனை விடுத்து -
இப் பிறப்பை...
ஊழ் எனும்
கூழ் எழுப்ப -
உதவும்
வயலாக்கலாமா?

ஆன்ம விடுதலைக்கு
ஆறாக இருக்கும் -
அறங்களை நமக்கு
அயலாக்கலாமா?

மனத்தை
மலிவான -
மகிழ்வுகளின் பால்
மயலாக்கலாமா?

நிந்தைக்குரிய
நீசத் தனங்களை
சிந்தை அவாவினால் - அவற்றைச்
செயலாக்கலாமா?

இளமை பாயில்;
முதுமை நோயில்;
இறுதி தீயில்;
இதற்கா தோன்றினோம் தாயில்?

வாழும் நாள்களில் விழலாமா -
வேட்கைகளின் வாயில்? வீழின் -
நம்பொருட்டுத் திறவாதா
நரகங்களின் வாயில்?

நரகு சேராது
நமைத் தடுக்கும் -
விரகு இதுவென
விளக்கித் தானே...

கருணைமிக்க பெரியவர்கள் -
கட்டி வைத்தனர் கோயில்?
மண்ணகரத்தைத் தாண்டி -
மற்றொரு வாழ்வு - தமக்கு
விண்ணகரத்தில் உளதென்று
விவேகிகள் உணர்வர்;
உணர்ந்து - அதற்கு
உதவும் குருவைப் புணர்வர்!

ஆசாரியர் -
அறிவுறுத்துகின்ற...

திருப்பாதையில் சென்று
திருநாடு சேர்ந்தால் - பிறகு
கருப்பாதையில் ஒருவர்
கால்வைக்க நேராது;

இல்லறத்தில்
இருந்தாலும் -
இருக்கலாமோ நானும் நீயும்
இதனை ஓராது?
வனத்தில் -
வாழ்ந்த...

மகிரிஷிகளும் - தமது
மனையாள்களோடு வாழ்ந்தவாறே -
விட்டும் பட்டும்
விளங்கு விளாங்கனி போல -

சீவன் முத்தாய்ச்
சிறந்து நின்றனர்; அவர்களை -
சீதையும் சீதாராமனுமே
சேவிக்கச் சென்றனர்

21. அரங்கம் ‘பெருச்சாளிகளை’ அடக்கத் திட்டம் வகுக்கும்போது:

பொதுவாகவே மகான்களுக்குப்
பகை முளைக்கும்;
அது
ஆனமட்டும் -
அவர்களுக்கு
ஆபத்தை விளைக்கும்!

நன்னெறி
நடமாடுவதை
புன்னெறி ஏற்காது;
புன்னெறி
பொருதும்; பொருதினாலும்
நன்னெறி தோற்காது!

எவ்வெப்போது தேவையோ -
அவ்வப்போது...
காலம் கொடுத்த
கொடையாக -
உலகு துயரற - சில
உத்தமர் தோன்றுவர்; அவர் -

மன்பதையின்
மனத்தை
ஈர நிலமாக்கி - நலம்
ஈயும் அறவிதையை ஊன்றுவர்!

அடுத்தவர்க்காக
அழுவர்; தம்மீது - வசை
தொடுத்தவர்க்காகத்
தொழுவர்;

வேண்டாதவர்க்கும் சேர்த்து
வேண்டிக் கொண்டு -
வல்லான் திருவடிகளில்
விழுவர்;

ஆண்டாண்டு காலம்
அழுக்கிக் கிடக்கும் -
எளியோர் – அம்மகான்களால்
எழுவர்!

மகா -
மகான் என்போர்...

வகுப்பு பாராது - ஞான
வகுப்பு நடத்துவர்; அவர் -
காட்சிக்கு எளியராகிக்
கலந்துரையாடி - எஞ்ஞான்றும்
மீட்சிக்கு வழியற்றோரையும்
மோட்சம் கடத்துவர்!

இராமாநுஜர் - மண்
இறங்கி வந்த பெருங்கருணை;
…………………………..
ஆதலால்தான் - அந்த
அருளாளர்…

வேதியரோடும்
வேடுவரோடும்
பேதமின்றி நெஞ்சு கலந்தார்;

22. கொங்குப் பிராட்டி:

இவர் கொங்கு நாட்டில் உள்ள 'கொள்ளைக்களம்' (இன்றும் 'கொள்ளே காலம்' என வழங்குவது) என்ற ஊரைச் சேர்ந்தவர்; மறையோதுகின்ற மறையோர் குலத்தவர். பஞ்சம் வந்து பயிர் பச்சை பாழ்பட்டதால் தம் நாயகருடன் அரங்கத்தில் வாழ்ந்து வந்தவர். ஒருநாள் உடையவரை வணங்கி விடுத்த வினாக்கள்.

(1) **திருவீதி வழியே - தாங்கள்**
தினமும்…
பிட்சை ஏற்கப் போவதைப்
பார்க்கிறேன்;

எனக்கு நானே -
'ஏனிப்படி?' எனக் கேட்கிறேன்!

எனக்கு இதுபற்றி
எழுந்த சந்தேகத்தை…

தாங்கள்
தீர்க்க வேண்டும்;
தக்க பதிலை -
தயைசெய்து வார்க்க வேண்டும்!"

(2)"அய்யனே!

அகளங்க சோழன் அனைய -

மன்னரும்; சம் பன்னரும்;
மகா வேதவிற் பன்னரும்!
சகல -
சாதியினமும்;
அம்பு வில் ஏந்தும் -
ஆதியினமும்;

பிரதி தினமும் - தெருவில்
பிட்சை ஏற்று வாழும்...

ஒரு
துறவியின்
தரிசனத்திற்காக -
சமரச உணர்வோடு - ஒரு
சபையில் உட்கார்ந்திருப்பது...

எனக்கு அதிசயமாக
இருக்கிறது! அவர்களை -

எது அங்ஙனம்
இருக்கிறது?"

இவற்றிற்கு உடையவர் இரத்தினச் சுருக்கமாக,

ஒரே வார்த்தையில்
"ஒழுக்கம்!" என்று -

உரைத்தார் பதில்; விளக்கம்
அனைத்தும்
அடங்கிவிட்டது அதில்!

உடையவர் தந்த விளக்கம்

ஆயினும் - அவ்
அம்மையார் அறியவேண்டி -
அவர் விரிவாய்ப் பேசினார்;
அறிவு வெளிச்சம் வீசினார்!

"ஒழுக்கம்" என்னும் -
ஒரு தாயிடத்திலிருந்துதான்...

(i)அறிவு;

அன்பு;
அறம்;
அருள்;

ஆகிய நான்கு சேய்கள்
அவதரிக்கின்றன;

(ii)அடக்கம்;
அமைதி;
ஆன்மீகம்;
ஆனந்தம்;

ஆகிய நான்கு அணிகளை
அவை தரிக்கின்றன.

(iii)அவா;
அழுக்காறு;
அச்சம்;
ஆத்திரம்;

ஆகிய நான்கு அழுக்குகளை
அவை எரிக்கின்றன!

(iv)அவன்;
அது;
இவன்;
இது;

ஆகிய நான்கு பேதங்களை
அவை கரிக்கின்றன!

எனவே
எங்கு
ஒழுக்கம் - கோல்
ஓச்சுகிறதோ...

அங்கு - ஓர்
ஆன்மானுபூதி
உண்டாகி - பேரொளியை
உமிழ்கிறது; அந்தப்
பேரொளி பிளிற்றும் - சத்தியப்
பெரு வெள்ளத்தில்
அனைத்து உயிரும் - ஒன்றாய்
அமிழ்கிறது!

மடமா யிருந்தாலென்ன? மனித -

மனமா யிருந்தலென்ன?
ஒழுக்கம் -
ஒளிவிடுமாயின்...

வையமே -
வணங்க வரும்;
நால்வகை பேதமும் - அங்கு
நுணங்கி விடும்!"

என்பது.

*** **ஸ்ரீமதே இராமாநுஜாய நம:** ***

குறிப்பு:

1. இவை தன் வழிக்குத் திருப்பும் பாதையாய் இருந்தன.

2. கோதண்டன் - இராமன்; தம்பி - இலக்குவன். இச்சொல் இராமாநுஜனைக் குறிக்கிறது. இராமன் + அநுஜன் - இராமனுடன் கூடப் பிறந்தவன் - இளையாழ்வார் - இராமாநுஜன்.

3. திருமந்திரம் - 'ஓம் நமோ நாராயணாய' என்பது. இதனை எட்டெடுத்து மந்திரம் என இயம்புவதும் உண்டு. திருமூலர் அருளிய 'திருமந்திரம்' என்ற சொல் ஒன்று உண்டு. இரண்டையும் கண்டு ஒருசிலர் இன்றும் குழம்புகின்றனர்.

4. சிலப்பதிகாரத்தில் வரும் தொடர்.

5. உலகில் ஒரே ஒரு ஆன்மாதான் உண்டு; ஏனையவை அதனின்றும் தெறித்த பொறிகள் (விளக்கம்).

****



இராமாநுஜர் 1000

கவிஞர் **வாலி**யின்

இராமாநுஜ காவியம் - ஒரு மதிப்பீடு

இயல் ~ 8

பல்வேறுவகை



ந சுப்பு ரெட்டியார் 100

இயல் – 8

பல்வேறுவகை

கவிஞர் வாலியாரின் காவியத்தில் ஒன்றினோடு பொருந்தமாட்டாத பல்வேறு வகையான செய்திகள் உள்ளன. அவற்றினை வகைப்படுத்தி, தொகுத்து இந்த இயலில் இயம்புவேன்.

1. **ஆசாரியனின் பெருமை**

எல்லாச் சமயத்தார்களும் ஆசாரியன் பெருமையைப் பேசி மகிழ்வர். மணிவாசகப் பெருமானை ஆண்டவனே குருவாக ஆட்கொண்ட வரலாற்றை நாம் அறிவோம். ஆயினும் வைணவப் பெருமக்கள் ஆசாரியன் மீது வைத்திருப்பது தனிச்சிறப்புடையது. யாராவது ஒருவர் பரமபதித்தால் அவர் "ஆசாரியன் திருவடியை அடைந்தார்" என்று சொல்லும் மரபு வைணவர்களிடையேதான் பெருவழக்காய்த் திகழ்கின்றது.

(1) பெரிய நம்பியும் இளையபெருமாளும் காஞ்சியிலிருந்து அரங்கத்தை நோக்கி வரும்போது, தம்மை அரங்கத்திற்கு அழைத்த காரணத்தை வினவும் போது நம்பிகள் சொன்னது:

"ராமாநுஜரே!
ராஜாவாயிருந்து ரிஷியானவர் -
ஆளவந்தார் ஸ்வாமி; இதனை -
அறியும் ஆழிசூழ் பூமி;

அவர்பால் இல்லை -
அழகிய சங்கம்; நேமி;
ஆயினும் - எங்களுக்கு
அவரே அந்தர்யாமி!

உய்வது அறியாது
உவப்பிலா அந்தகாரத்தில்
செய்வது அறியாது
சித்தம் கலங்கும் நமக்கு...

குருநாதன்தான்
கைவிளக்கு; அந்தக் -

கைவிளக்கு காட்டுவதுதான்
மெய்விளக்கு!

மெய்விளக்கைக் காட்டும்
கைவிளக்கையே - நாம்
முதல்
மரியாதைக் குரியதாய்க்
கருதி - நமது
கிருதக்ஞையைக் காட்டுகிறோம்;
ஆச்சரியானால்தானே - நாம்
ஆன்மாநுபூதியை ஈட்டுகிறோம்;
ஆதலால்
அவரையே -

அந்தர்யாமியாய் - நம்
அகத்துள் வைத்து -

அவரது -
அரவிந்த
அடிமலரை நம் சிரசுக்கு -
அணியென்று நாம் சூட்டுகிறோம்;

ஆசாரியன்
அனுக்கிரகத்தால் - நாம்
அஞ்சையும்
அவக்க அனல் மூட்டுகிறோம்!
....
பெரிய நம்பிகளின் -
பேச்சைக் கேட்டு...

இராமானுஜனுக்கு
இன்னது எனது -
இனங்காண
இயலாதபடி -

ஓர்
உணர்வு உண்டானது;
அவன் மனம்
அக்கணமே -
ஆளவந்தார் அடிமலரில்
அமரும் வண்டானது!

(2) வாரணாசிப் பயணத்தை மேற்கொண்ட பொழுது ஓரிரவில் இருள் சூழ்ந்த நிலையில் புறஇருளைப் புறந்தள்ளி - (இராமாநுசன்) -

.... ஆசாரியனின் -
அக இருளை
அறத்தில் உள்ளினான்!

‘வீடெல்லாம் - விளக்கு
வெளிச்சம் இறைக்கும்;
ஆனால் -
அவ் -
விளக்கடியில் - இருட்டு
விலகாது இருக்கும்!

அப்படித்தானோ -
அறிவு வெளிச்சம்
அருளும் - ஒருசில
ஆசாரியர் வருக்கம்?

ஓர்
உபாத்தியாயன்...

வித்தியார்த்தியின் - மனஇருள்
விலக்கம் விளக்கு; அவனறிவு -
விகசிக்க வேண்டி -
மறைபொருள்
விளக்கும் விளக்கு!

அவன் -
வான விளக்கு நிகர்த்த
ஞான விளக்கு;
அறிவு மயமாய் -
ஆன விளக்கு!

இருக்குமா அதனடியில்
இருட்டு? இருந்தால் அது -
மெய்விளக்கல்ல;
பொய் விளக்கு - என
பூமி பேசும் - அதன்
பொருட்டு!

யான் -
யாண்டும் தொழும் -
யாதவர் சான்றவர்! அந்த
ஆதவர் போன்றவர்!

ஆக - என்
ஆசிரியப் பிரான் - ஓர்
அகல் விளக்கு அல்ல;
பகல் விளக்கு!

(3) காசியாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பிய பிறகு இராமாநுஜனைச் சந்தித்த யாதவர் அவனிடம் பொய்களை அடுக்கி மீண்டும் தம்மிடம் வருமாறு அறிவுரைகூற - தர்மசங்கடத்தை திருக்கச்சி நம்பி போக்கினார்.

கச்சி நம்பி - தன்
கருத்தை விரித்தார்!

அழைப்பு விடுத்த
ஆசாரியரோடு -
ராமானுஜன்
ராசியாகி...
திரும்பவும்
திருப்புட்குழி சென்று - அங்கு
வித்தியார்த்தியாய்ச் சேர்ந்து
வாசிப்பதை அவர் வரித்தார்!

“தொண்டை மண்டலத்தில்
தொன்மறைகளைப் போதிக்க
தற்போதைக்கு - சகல
தகுதியும் வாய்ந்த சற்குரு...

யாதவப் பிரகாசரை விட்டால் -
யாரும் இல்லை;
வித்தியாகர்வம்
வாயத்தவ ராயினும் - அவரது
வாலறிவுக்கு - ஆராலும்
வகுக்க வொணாது ஓர் எல்லை!

நல்ல ஆசான் - ஒரு
நச்சரவு -
என்றிருப்பினும்
ஏனிந்த
நச்சரவு கூட - நாளும்
சச்சரவு?

நாகமா
நமக்கு முக்கியம்? அது -
கக்கும் - மாணிக்கக்
கல்தான் முக்கியம்!

பரவலாய்க் - கரும்
புள்ளிகளோ டிருக்கும்
பூனையா நமக்கு முக்கியம்?
புனுகுதான் முக்கியம்!

நீரும் பாலும் -
நிரவி யிருப்பினும்...
நீரை
நீக்கி -
பாலைப்
பருகும் -

அன்னமாய் இரு; அதற்கு -
ஆசாரியனோடு செரு?

விளக்குச் சுடரில்
விரல் வைத்தால் சுடும்;
விரல் வைக்காமல் - அதன்
வெளிச்சத்தில்
வித்தை பயின்றால் - அது
வாழ்வுக்குப் பயன்படும்!

திருவிளக்கு எப்படி?
குருவிளக்கும் அப்படி!

விரல்
வைத்தால் -
சுடர்
சுடுகிறதே என்று...

விளக்கைவிட்டு
விலகிப் போனால்
கங்குல் - நம்மேல்
கவிந்து விடும்; நாம் -

அறிவொளி கொண்டு
ஆற்ற வேண்டிய -
அத்துணை காரியங்களும்
அறவே கெடும்!

பிரகாசர் - ஒரு
பிரகாசமான விளக்கு;
அதைக் கொண்டு - ஒருசில
அருமறைகள் விஷயமாய் - உன்
அறிவைச் சூழ்ந்து நிற்கும்
அந்தகாரத்தை விலக்கு!"

இன்னணம்
இராமானுஜனுக்கு
இதம் எதுவோ - அதை
இயம்பினார் திருக்கச்சி;

திருக்கச்சியின்
திருவுள்ளமே -
தனது உள்ளம் என்று
தாயும் சேர்ந்தாள் கச்சிக்கட்சி!

எதிர்மாறாய் -
எதுவும் பேசாது...

இருவர் சுட்டிய வழியையே
இராமானுஜனும் தேர்ந்தான்!
பழையபடி - திருப்புட்குழி
பாடசாலையில் சேர்ந்தான்!

(4) தாயார் கருத்துப்படி திருக்கச்சி நம்பியை ஆசாரியராக அமைய நச்சினான் - ஆனால் நம்பி இராமாநுஜனை ஒரு சீடனின் இடத்தில் வைத்துப் பார்க்க விருப்பப்படவில்லை. அதனால் இளைத்த இராமாநுஜன் சிந்தனையில் ஆசாரியனின் அருமையைப்பற்றி:

உயிர் ஒன்றை
உய்விப்பது...

திருவருள்; அந்தத்
திருவளைக் கூட்டிவைப்பது
குருவருள்!

கதிர் கண்டுதான் -
கமலம் மலரும்;

ஆயினும் -
அ.்.தைத் -

தாங்கிப் பிடிக்கத்
தண்ணீர் இல்லையேல்
தண்டு மெலிந்து - அந்தத்
தாமரை உலரும்!

கதிர் -
கடவுள் உரு;
தாமரை சீடன்;
தண்ணீர் குரு!

மழைநீர் - ஒரு
மடைவழி வந்தால்தான் -

பிழைக்கும் வயல்; இல்லையேல்
பயிர் அழுகும்;

ஆன்மானுபூதி - ஓர்
ஆசாரியன் வழி வந்தால்தான் -
உய்யும் வழியென - அதைப் பற்றி
உயிர் ஒழுகும்!

ஆசிரியப் பிரானின்
அருள் நோக்கால் மட்டுமே...
ஆருக்கும்
அகலும் -
ஆசாபாசங்களால் விளையும்
அவலம்; பித்து;

ஆதலால்தான் -
ஆன்மலாபம் -
அடைய விரும்பும்
ஆரும் நிற்பர்...

ஆசாரியனின் அடிமலர்களை
அவலம்பித்து!

(5) தன்னை உதாசீனம் செய்து கச்சி நம்பியே கதி எனக் கிடக்கும் இராமாநுஜனிடம் ஒருநாள் தஞ்சமாம்பாள் புலம்பும் போது இராமாநுஜன் வாக்கில் எழுந்தவை:

யதி -
யாதவரிடம்...

நான் -
கற்ற கல்வி
முற்றுப் பெறவில்லை;
அங்ஙனம்
அரைக்கிணறு தாண்டிய
அவலம் - என்
அகம் விட்டு அகலவில்லை!

திருக்கச்சி நம்பியைத்
தேர்ந்தேன் குருவாக; எனை
அழற்றும் -
அறுபகை வெப்பம் ஆன - குளிர்
நிழற்றும் -
நிகரிலா ஞானத் தருவாக!

என்ன காரணமோ?

எனக்கு ஆசாரியனாயிருக்க...
பரம -
பாகவதோத்தமரான -
திருக்கச்சி நம்பிகள்
தயக்கம் காட்டுகிறார்.
நல்ல பதில் சொல்லாமல்
நாள்களை ஓட்டுகிறார்;
ஆயினும்
அவர்தான் - என்
ஆன்ம வீணையில்
அஷ்டாட்சரம் மீட்டுகிறார்!
....
விடாது
வேண்டுகிறேன்;
பெரும்பொழுதை - அவரோடு
போக்கிப் போக்கி - அந்தத்
தூயவர் திருவுளம் இளகத்
தூண்டுகிறேன்!

பாதரட்சை போல் - அவர்
போகுமிடமெல்லாம் போகிறேன்;
....
நான் எனும்
நான் அழிந்து -
அநேக நேரங்களில்
அவராகவே ஆகிறேன்!
....
இத்துணையும் - நான்
இயற்றுவது...

என் பொருட்டு மட்டுமா?
உன் பொருட்டும் தான்;
என்னுயிரோடு
என்னுயிரைப் பின்னிய -
உன்னுயிரும்
உய்ய எண்ணுவோன் நான்!

ஓர்
உயிர் -
பிறப்பு எய்துவதே - எய்திய
பிறப்பைக் கொண்டு -
இன்னொரு
பிறப்பு எய்திடாதிருக்கப்
பண்ணிடத்தான்; அ∴தைப்
பண்ண உதவும் - ஒரு குருவை
நண்ணிடத்தான்; நண்ணி -

எஞ்ஞான்றும் அவர் திருவடி
எண்ணிடத்தான்; எண்ணி
ஒருமையோடு உளம் - அவர்பல
ஒண்ணிடத்தான்!

இதனை விடுத்து –
இப்பிறப்பை...
ஊழ் எனும்
கூழ் எழுப்ப -
உதவும்
வயலாக்கலாமா?
....
நரகு சேராது
நமைத் தடுக்கும் -
விரகு இதுவென
விளக்கித் தானே...

கருணைமிக்க பெரியவர்கள் -
கட்டிவைத்தனர் கோயில்?
மண்ணகரத்தைத் தாண்டி -
மற்றொரு வாழ்வு - தமக்கு
விண்ணகரத்தில் உளதென்று
விவேகிகள் உணர்வர்;
உணர்ந்து - அதற்கு
உதவும் குருவைப் புணர்வர்!

ஆசாரியர் -
அறிவுறுத்துகின்ற...

திருப்பாதையில் சென்று
திருநாடு சேர்ந்தால் - பிறகு
கருப்பாதையில் ஒருவர்
கால்வைக்க நேராது;

இல்லறத்தில்
இருந்தாலும் -
இருக்கலாமோ நானும் நீயும்
இதனை ஓராது?
வனத்தில் -
வாழ்ந்த...

மகரிஷிகளும் - தமது
மனையாள்களோடு வாழ்ந்தவாறே -
விட்டும் பட்டும்
விளங்கு விளாங்கனி போல் -

சீவன் முத்தராய்ச்
சிறந்து நின்றனர்; அவர்களை -
சீதையும் சீதாராமனுமே
சேவிக்கச் சென்றனர்!

2. <u>சிவனா? திருமாலா?</u>

இப்படி ஒரு வாதம் - திருமலைத் திருக்கோயிலில் கொலுவிருக்கும் மூர்த்தி பற்றி - சைவ வைணவர்களிடையே நடைபெற்று வந்தது.

சிவன் என்று -
சைவர்களும்;
விஷ்ணு என்று -
வைணவர்களும்;

விடாப்பிடியாய்
வாதாடி நின்றனர்;

அவரவர்
அடுத்தவரை -
ஆவேசமாக விமர்சிக்கும்
அளவுக்குச் சென்றனர்!

சிவபக்தர்கள் - தமக்குச்
சாதகமாக -
பேயாழ்வார்
பாடியிருக்கும் -

"தாழ்சடையும் நீள்முடியும்
ஒண் மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன் நாணும்
தோன்றுமால் - சூழும்
திரண்டருவி பாயும்
திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய்
இசைந்து"[1]

எனும் பாசுரத்தை -
எடுத்துக்காட்டிப் பேசினர்;
வைணவர் - இந்த
வாதத்தைக் கேட்டுக் கூசினர்!

முன்னம் - ஒரு
மன்னன் இருந்தான் -
'தொண்டைமான்' எனும் -
திருநாமம் தாங்கி நின்று;

விஷ்ணு பக்தனாகிய - அவ்
வேந்தன்...

பகைவர்களோடு -
போரிடப் போகையில் - சீனிவாசப்
பெருமாள் அவனுக்கு - தன்
பால்வெண் சங்கை; சக்கரத்தை;

'கொண்டுபோ!' எனக்
கொடுத்திருந்தார் அன்று!

எனவே -
ஏழுமலையான்...

சங்கு சக்கர மின்றியே
சந்நிதியில் நின்றதால் -
சைவத்தைச்
சார்ந்தோ ரெல்லாம் -
அவன்
அரன்தான் என்று -
உறுதியாய்க் கருதினர்;
வைணவரோடு பொருதினர்!

இவ்வழக்கில்-
இராமானுஜர்...

நடுவரா யிருந்து
நல்கினார் ஒரு யோசனை; அது -
'திருமாலா? சிவனா?' எனத்
தீர்மானித்தது சீனிவாசனை!

....
இரு சாராரையும் -
இராமானுஜர் அழைத்து...

"நாம் - இன்று
நடை சாத்தும் போது -

சிவச்
சின்னங்களான -
மழு; உடுக்கை;
முதலியவற்றையும்...

சீதரன்
சின்னங்களான -
ஆழி; சங்கம்;
ஆகியவற்றையும்...

தெய்வத்தின்
திருமுன் வைத்து -
கர்ப்பக் கிரகத்தின்
கதவைப் பூட்டுவோம்;

காலையில் - நாம்
கதவு திறந்து பார்க்கையில்...
எதை - தெய்வம்
ஏற்று நிற்கிறதோ -
அதைக் கொண்டு
அரியா? அரனா? என்பதை -
நாம் -
நிலை நாட்டுவோம்!"

என்று செப்பினார்;
எல்லோரும் ஒப்பினார்!

'வினாவிற்கு - தெய்வமே
வழங்கும் விடையை' -
என -
எண்ணி -
அவ்வாறே வைத்து -
அடைத்தனர் நடையை!

காலையில் - கோயில்
கதவு திறந்து பார்க்கையில்...

சிவச்
சின்னங்கள் -
இருந்த
இடத்திலேயே இருக்க -

சங்கு
சக்கரம் -
ஏந்திக்கொண்டு
ஏழுமலையான் காட்சி கொடுக்க -

'கோவிந்தா! கோவிந்தா!' எனக் -
கூவினர் யாவரும்;
தூமலர் வாரியெடுத்துத்
தூவினர் வானத்து தேவரும்!

'அப்பனுக்குச் சங்காழி -
அளித்த அண்ணல்! என்று -
உடையவரை
ஊர் மெச்சியது;

அளப்பரும்
அருளாளர் என்று
அது
அவர் திருவடியை நச்சியது!

இங்குள்ள செய்தி ஒரு கட்டுக்கதை போல் தோன்றுகிறது. கோவிலில் உள்ள சிலை 'தொண்டைமானுக்கு' தன் கையிலிருந்த சங்கு சக்கரத்தை வழங்குமா? இராமாநுஜர் நடுவராக இருந்து செயற்பட்டாரா? எல்லாமே புளுகு மூட்டைகள்! பேருந்து நிலையங்களிலும் இருப்பூர்தி நிலையங்களிலும் அறியாமக்களின் வாயில் தாண்டவமாடும் செய்திகள்! இவண் கூறப் பெற்ற எதுவும் நடைபெறவில்லை என்று கொள்வதுதான அறிவுடைமை.

இராமாநுஜர் காலத்தில் (12-ஆம் நூற்றாண்டு) நடைபெற்றவனாக இன்று (21-ஆம் நூற்றாண்டு) மக்களால் பேசப் பெறுபவை. அவை எப்படியோ ஏடுகளிலும் ஏறி நம்மைக் குழப்பத்தில் தள்ளுகின்றன.

சிலப்பதிகாரக் காலத்தில் (மூன்றாம் நூற்றாண்டு) திருவரங்கத்தில் மூர்த்தம் இருந்த நிலையை, மாமறையாளன் வாக்கில் வைத்து,

'நீல் மேகம் நெடும்பொற் குன்றத்துப்
பால் விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறன்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன் பெருந்துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்'[2]

என்றும்,

அங்ஙனமே திருவேங்கடமுடையான் நிலையை,

வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுத் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலை தானத்து

மின்னும்கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நுன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையில் ஏந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்[3]

என்றும் இளங்கோ அடிகள் பேசுவதை நோக்கும்போது மேற்குறிப்பிட்ட செய்திகள் யாவும் புனைந்த பொய்யுரை என்பது தெளிவாகும்.

3. திருக்குறள் ஆட்சி

வள்ளுவர் தந்த வான்மறை ஒரு பொதுமறை. எல்லா நாட்டார்க்கும், எல்லாச் சமயத்தார்க்கும் சாதி குல நிற வேறுபாடின்றி ஒப்ப ஏற்றுக் கொள்ளக் கூடியது. இதனால்தான் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கு ஈந்து, வான்புகழ் கொண்டது தமிழ்நாடு' என்றார் மாபெருங்கவி பாரதியார். இதனால்தான் சிலப்பதிகாரம் தொடங்கி வழி வழியாக தேசிக கவிநாயகம் பிள்ளைவரை திருக்குறள் கருத்துகள் நூல்களில் ஆளப்பெற்று வருகின்றன. இம்மரபினைப் பின்பற்றி கவிஞர் வாலியும் இயன்ற இடங்களில் பொருத்தமான சந்தர்ப்பங்களில் திருக்குறளையும், அதன் கருத்துகளையும் தம் காவியத்தில் ஆண்டு காவியத்திற்குப் புது மெருகூட்டுகின்றார். இதனை ஈண்டுக் காண்போம்.

(1) திருக்கச்சி நம்பியின் அன்னையாரைக் குறிப்பிடும் போது,

அம்மையார் –
அகழ்வாரைத் தாங்கும் நிலம்;

என்கின்றார் வாலி. 'அகழ்வாரைத் தாங்கும்' என்ற தொடர் வள்ளுவரின்

அகழ்வாரைத் தாங்கும்
நிலம் போலத் தம்மை
இகழ்வார் பொறுத்தல்
தலை (151)

என்ற குறளில் கண்டது.

(2) இராமாநுஜனின் பிள்ளைப் பருவத்தைக் குறிப்பிடும் போது

வாழ்வாங்கு வாழ்வதற்கு -
வித்தாரமாய் விவரிக்கும்;

வாசித்து முடித்த பின்பு -
வாய்க்கு வெல்லம் கரிக்கும்!

இத்துணை
இசைவாய்ந்த...

அய்யன்
அருளிய -
செந்தமிழ் வேதம்

செப்புகிறது:

‘பிறப்பு ஒக்கும் -
எல்லா உயிர்க்கும்!’
திராவிட வேதம் (=திருக்குறள்)
தெரிவித்த கருத்தை -
ஆரிய வேதமும் -
அப்படியே ஒப்புகிறது

இங்கு வள்ளுவர் பெருமானின்,

‘பிறப்புபொக்கும் எல்லா
உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை
யான் (972)

என்ற குறளின் முதற்பகுதி அப்படியே எழுத்தாளப் பெற்றிருப்பதைக் காணலாம்.

(3) கேசவ சோமயாஜி திடீரென்று திருநாடு அலங்கரித்தார். அவரது திருமேனி பற்றிக் குறிப்பிடும்போது,

தலைமாட்டில் - ஒற்றைத்
திருவிளக்கு எரிய...

கால்...
கட்டைவிரல்களை - ஒரு
சிறுதுணி
சேர்த்துக் கட்டியிருக்க...

வாசல் ரேழியில் -
வெற்றுத் தரையில்...

தெருவை நோக்கித் -
திருவடிகளை நீட்டி...
கண்மூடிப் படுத்திருந்தது -
கேசவ சோமயாஜியின் திருமேனி;

‘உறங்குவது போலும்
சாக்காடு!’ எனும்
வள்ளுவத்தை

ஊர்க்கும் உறவுக்கும் -
உணர்த்திய அந்த ஒருமேனி!

இங்கு,

உறங்குவது போலும்
சாக்காடு உறங்கி
விழிப்பது போலும்
பிறப்பு (339)

என்ற குறளின் முற்பகுதி எடுத்தாளப் பெற்றிருப்பதைக் காணலாம்.

(4) காசியாத்திரைக்குப் பிறகு ‘குரு யாதவப் பிரசாகசர் நடத்திய கூத்தைப்’ குறிப்பிடும்போது:

மறைகளை
மெத்தப் பயின்ற - ஒரு
மகான் - தன்னிடம்
மன்னிப்புக் கோரியதை எண்ணி...

வெருவிய தேசம் -
வேர்த்து விட்டது!

ஆசாரியன் திருவடிகளில்
அக்கணமே -
தடாலென விழுந்தான்;
தண்டனிட்டு எழுந்தான்!

“ஸ்வாமி! என் -
ஸ்வபாவம்...
எப்பொருள்
எவர்வாய்க் கேட்பினும்
அப்பொருளை மெய்ப்பொருளா -
என
ஆராய்ந்து ஏற்பது ஆகும்;

அத்தகு
ஆய்வு
ஆய்வு -
மூத்தோர்க்கும் எனக்கும் -
முகமுறிவில் முடிந்து போகும்!

இப் பகுதியில்,

எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது
அறிவு (423)

என்ற குறள் 'ஏதோ ஒருவாறு' ஆளப் பெற்றிருப்பதைக் காணலாம்.

(5) காசியாத்திரையின் போது இராமாநுஜன் காணாமற் போனதைக் குறித்து தம்பி கோவிந்தன் 'குமுறி - அய்யோ! அய்யோ!' என்று அழும்போது ஆசாரியர் யாதவர் அவனைத் தேற்றி வழங்கிய ஒரு பகுதியில் வருவது:

அன்புச் சீடனே!
உன்னை அழவைப்பது
உறவு; அதைத்
தூர்க்க ஒரே வழி
துறவு!

மழித்தல் நீட்டல் இன்றியே
மனத்தளவு கொள்; ஞான
முதிர்ச்சியெனும் வாளெடுத்து
மும்மலத்தைக் கொல்!

இங்கு வள்ளுவர் பெருமான் துறவிக்கு வேண்டாதவற்றைக் கூறும்போது 'கூடா ஒழுக்கம்' என்பது ஒன்று. அதில் உள்ள

மழித்தலும் நீட்டலும்
வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து
விடின் (280)

என்ற குறளின் முதலடியின் முதல் இரண்டு சீர்கள் அமைந்து கிடப்பதைக் காணலாம்.

(6) இராமாநுஜனை திருவரங்கத்திற்கு அழைத்துவர பெரிய நம்பிகள் துணைவியுடன் காஞ்சியை நோக்கி வரும்போது; பெரிய நம்பிகளைப் பேராசானாய் ஏற்க விரும்பி காஞ்சியிலிருந்து திருவரங்கத்தை நோக்கி வரும்போது - இருவரும் மகிழ மரங்கள் மலிந்த மதுராந்தகத்தில்,

எதிர் பாராமல்
எதிர் எதிர் சந்தித்ததும்...
'எண்ணியது எண்ணியவாறு - என்
எதிர் வந்து - எனைப் புனிதம்
பண்ணிதே!' என்று -
இராமானுஜன் -
இறும்பு தெய்தி...

குருவடிகளில்; பெரிய நம்பி -
திருவடிகளில்
தனது ஆகம்
தரை தோயத்
தண்டனிட்டான்; ஆனந்தத் -
தீர்த்தம் விழிவிழி விட்டான்!

இப்பகுதியில்,

எண்ணிய எண்ணியாங்கு
எய்துப எண்ணியார்
திண்ணியராகப்
பெறின் (666)

என்ற குறளின் சாயை படித்திருப்பதைத் தெளிவாக அறிய முடிகின்றது.

(7) இருவரும் சந்தித்த அன்று அப்பொழுதே,

இங்கேயே
இப்பொழுதே - தனக்கு
இதோபதேசம் செய்ய வேண்டி -
இராமானுஜன்...

நம்பிகளிடம் கேட்டான் -
நயந்து;

அதற்கு நம்பிகள் அந்திகிரி அருளாளன் சந்நிதியில் உபதேசம் செய்வதாகக் கூற, இராமாநுஜன்,

என்னுயிர் -
எனதோ? எமனுடையதோ?
இஃதை -
அறுதியிட்டுக் கூற -
ஆளுளதோ அம்புவி மீது?
……………………..
…………………………
நெருநல்; இன்று;
நாளை;
என்றெல்லாம் பார்த்தா - மறலி
ஏந்துகிறான் வாளை?

என்ற பகுதியில் வள்ளுவர் பெருமானின்,

நெடுநல் உளன் ஒருவன்
இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்
உலகு (336)

என்ற வாக்கிலுள்ள “நெருநல்’, ‘இன்று’ என்ற சொற்கள் அப்படியே விழுந்து கிடக்கின்றன; வாலியார் எழுதும் போது இக்குறள் அவர் நெஞ்சில் நின்று இச்சொற்களைச் சிந்தியிருக்கவேண்டும்.

(8) இராமாநுஜன் துறவியான செய்தி திருவரங்கத்தை எட்டியதும் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் எப்பாடுபட்டாவது அத்துறவியை அரங்கத்திற்குக் கொணர வேண்டும் மென்று பெரிய நம்பிகளை நச்சரித்தனர்!

‘எதனை -
எவன் முடிப்பனோ -
அதனை -
அவன்கண் விடுக!’ எனத் -

தமிழ்மறை
தெரிவித்தபடி

அழைத்து வரும் பொறுப்பை ஊர் அரையரிடம் ஒப்படைத்தது; என்ற பகுதியில்,

இதனை இதனால்
இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண்
விடல் (517)

என்ற குறளின் கருத்து தெளிவாக அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம்.

<u>4.சாதி, சமய சிறுக்குகள் பற்றி</u>

சாதி சமயம் பற்றி கிறுக்குகள் பன்னெடுங்காலமாகவே இந்திய நாட்டில் நிலவிவருகின்றன. வாலியாரின் காவியத்தில் இவை பற்றிய குறிப்புகள் காணக் கிடக்கின்றன.

(1) வேத உபநிடதங்கள் செல்வாக்கு பெற்று கோலோச்சும் காலத்தைக் குறிப்பிடும் போது:

அந்நாளைய
அந்தண வைதிகளுக்கு;
அவர்களை
ஆட்டிவைத்தது...
சாதிக் கிறுக்கு -
சமயக் கிறுக்கு;
சனாதானக் கிறுக்கு
....

என்று வருகின்றது.

(2) எல்லா உயிர்கட்கும் பிறப்பு ஒன்றே

ஒரு
பிராமணத் தந்தைக்கும்;
ஒரு
பிராமணத் தாய்க்கும்;
பிள்ளையாய்ப்
பிறப்பதால் மட்டுமே - ஒருவன்
பிராமணன் அல்ல; அவனது
சனனம் - ஒரு
சான்றிதழ் ஆகாது - அந்தணச்
சாதியான் என்று சொல்ல!

ஒருவனை -
வேதியனாக்குவது...
அவன் ஏந்திய
கருப்பை அல்ல;
தருப்பை!

(3) திருக்கச்சி நம்பிக்கு விருந்து

"நம் வீட்டு
நடுக்கூடத்தில் உட்கார்ந்து -
திருக்கச்சிநம்பிக்குத்
தளிகை பண்ணி போடுவதா?

சூத்திரர் ஒருவருக்குச்
சோறு போட்ட பாவத்தைக் கழுவ -
காசிக்கும்
கங்கைக்கும் ஓடுவதா?"

தஞ்சமாம்பாளுக்கு
தகித்தது நெஞ்சு;
நெஞ்சு நிறைய
நிரம்பி வழிந்தது -
சாதி உணர்வெனும்
சர்ப்பம் துப்பிய நஞ்சு!
....
எதிர்பார்க்காததால்
எதிர் நின்ற நம்பியை -

வியப்பும்
வெறுப்பும் -

விழிகளில்
வழிய -

ஒப்புக்கு -
வரவேற்று...
....
"என் -
வீட்டுக்காரர்
வரும்வரை...

இந்தத் திண்ணையில் - சற்று
இளைப்பாறினால் -
வேர்க்க
விறுவிறுக்க
வந்திருக்கும் - உங்கள்
வேர்வையை...

காலை நேரத்துக் -
காற்று மெல்ல மெல்லத் தின்னும்!"

என்று - முகத்தில்
எவ்வுணர்வும் இன்றி...

பட்டும் படாமலும் -
பேசினாள் தஞ்சம்;
கீழ்சாதிக்காரரான
கச்சி நம்பியோடு -
உரையாடுவதைக்கூட -
ஒப்பவில்லை அவள் நெஞ்சம்!
....
என்று சொல்லி - திண்ணையில்
எழுந்தருள...

'அம்மாடி!
ஆசாரம் பிழைத்தது!'என்று -

தஞ்சமாம்பாள் -
திருக்கச்சி நம்பிக்குத்
திண்ணையிலேயே இலை போட்டுத் -
தளிகையைப் பரிமாற...

அவசர
அவசரமாக - நான்குவாய்
அன்னத்தை
அள்ளிப் போட்டுக் கொண்டு...

திருக்கச்சி நம்பி
தஞ்சமாம்பாளிடம் -
விடைபெற்றுக் கொண்டு
வீதி வழிப் போனார்;

....
(கணவரிடம் சொன்னது)

"நம்பிவந்தார்;
நாழியாகிறது என்று...

இதோ -
இந்தத் திண்ணையில் -
இலையைப் போடச் சொல்லி
இரண்டே வாய் -

சாப்பிட்டேன் என்கிற மாதிரி
சாப்பிட்டுவிட்டு...
ஓட்டமும் நடையுமாய் -
ஓடிப் போனார்;

அந்தணர் வீட்டு
ஆசாரத்திற்குத் - தன்னால்
ஆபக்கியாதி வருமோ என்று
ஆடிப் போனார்!

சாதி கருதி - அவர்
சாப்பிட்ட இலையைக்[4] -
கோலால் எடுத்துக்
குப்பைத்தொட்டியில் எறிந்து...

சாப்பிட்ட இடத்தை -
சாணம் போட்டு மெழுகினேன்;
தீட்டுத்
தொலைய -
நானும்
நாலு செம்பு விட்டு முழுகினேன்!'

(4) தந்தை பெரியார் பகுத்தறிவு ஒளி வீசியதற்கு முன்னிருந்த தமிழர்கள் தம் தாழ்வு மனப்பான்மையின் (Inferiority Complex) காரணமாக தம்மைத் தாழ்வாகவே மதித்து வந்தனர். ஆனல் நாலும் தெரிந்த கச்சி நம்பியும் இதற்கு விதிவலக்கு ஆகவில்லை.

அவரையே - தன் (=கச்சிநம்பி)
ஆழ்மனத்தில் -
ஆசிரியப் பிரானாகவரித்து -
அவரது...

சேவடிகளில்
சாஷ்டாங்கமாக சேவித்து -

"சிறியேனுக்கு - தேவரீர்தான்
சற்குருவாக இருந்து - நான்
சேமமுற - சாத்திரங்களை
சாதிக்க வேண்டும்!"[5]

என்று -
இறைஞ்ச...

திருக்கச்சிநம்பி
தீமிதித்தார் போல் நகர்ந்தார்;
பின் -
பகர்ந்தார்!

"அப்பனே இராமாநுஜா! இது -
அடாத செயல்;

முதல் வருணத்திற்கு - (=பார்ப்பனர்)
மூன்றாம் வருணத்தின்மேல் - (=வைசியர்)
முகிழ்க்கலாமா - இன்னணம்
முறைகேடான ஒருமயல்?

ஆருக்கு ஆர் -
ஆசான்?
வருணாசிரம தருமத்தை
வஞ்சித்து விட்டு - உனக்கு நான்
வாத்தியாரானால் - தினம் பேசும்
வரதராசன் என்னோடு பேசான்!

நீ வேதியன்
நான் வைசியன்;
நானும் -
நீயும் -

சாதிவழி நிற்பதுதான்
நீதிவழி; சனாதனமாய் -
அனுசரிக்கப்படும் - இதுவே
ஆதி வழி!

காக்க வேண்டும் - நாம்
குலம் கோத்திரம்; நம்மால்
மலினப்படுத்தப்படலாமா -
மனுதர்ம சாத்திரம்?

உரிய காலத்தில்
உரிய ஆசானை -
உனக்குப் பெருமாளே
உணர்த்துவார்;

சீடன் என்ன
சாதியோ?
அதே சாதியில் - ஓர்
ஆசானைத் தேர்ந்து...

அவரே –
அவனோடு புணர்த்துவார்!"

5. தமிழ் எதிர்ப்புக்கு எதிர்ப்பு இல்லாத அவலநிலை

ஆதித் திராவிடர்களைப் போல் -
ஆழ்வார்களின் தமிழுக்கும் -
ஆகாதென மறுக்கப்பட்டது -
ஆலயப் பிரவேசம்;

ஆதிநாட்களில் -
அந்தளவு இருந்தது -
வைதிகர் களின் -
வடமொழி விசுவாசம்!

வேதங்களும்
உபநிஷதங்களும்
வடமொழியிலேயே
வார்க்கப்பட் டிருந்ததால்...

அவை தமிழர்க்கு
அடைத்த கதவென ஆயன;
தொன்மரபு வாய்ந்த
தென்திசை மாந்தர்க்கு -
வீடுபேறு பெறும்
வாய்ப்புகள் அற்றுப் போயின!

வேள்வி -
வேட்டல்;
வேதாந்த

விசாரம்;

இவை -
இரண்டு மட்டுமே -

மறையோர் கொண்ட
மதமாக இருந்தது; அது
மண்டையில் ஏறிய
மதமாகவும் இருந்தது!
....
பரம பதத்திற்கான
பயணச் சீட்டு – எனப்
பகர்ந்தது –
பன்னிருவர் பாசுரம்!

இவையெலாம்
ஏயதா யில்லை...

அந்நாளைய
அந்தண வைதிகர்க்கு;
அவர்களை
ஆட்டி வைத்தது...
சாதிக் கிறுக்கு;
சமயக் கிறுக்கு;
சனாதனக் கிறுக்கு;
சமஸ்கிருதக் கிறுக்கு!
சாதி பலவற்றைச்
சேர்ந்த ஆழ்வார்களை -
சில ரூபத்தில் வைத்து
சேவிப்பதையும்; அவர்கள் -

பலாச்சுளைத் தமிழில்
பாடிய பிரபந்தங்களை -
பழமறைக்கு நிகராக -
பாவிப்பதையும்;

வயதான வைதிகம்
வழிமொழிய வில்லை;
விசாலமாக - அதன்
விழி விரியவில்லை!

பழமை விரும்பிகள் -
பிரபந்தங்களை...

'சதுர்மறைப் பொருளைச்
சொல்லும் பாட்டல்ல;

குலாசாரத்தைக்
கொல்லும் பாட்டு!' என...

தூஷித்து - அவற்றிற்குத்
தீ வைக்கத் தலைப்பட்டனர்;

அந்த
அறியாமையை என் சொல்ல?

கன்னித் தமிழ் -
கண்டு; அதைக்
காஞ்சிரமாய்க் -
கண்டு...

உண்மைக்கு
ஒருகாத தூரம் நின்று -
வெண்மைக்கு விலைப்பட்டனர்!

'ஆழ்வார்கள் அருளிய தமிழ் -
அமிழ்து! அமிழ்து! என இமிழ்;
அவ் வமுதில் யாண்டும் அமிழ்;

தமிழ் எதிர்ப்பெல்லாம் -
தண்ணீர்க் குமிழ்;
ஆரெதிர்த் தாலும்
அஞ்சாமல் -

அவர் முகத்தில்
அன்போடு உமிழ்!'

என -
எவரும்...

அந்நாளில்
ஆர்த்து எழவில்லை!
தமிழர் எழாததால் -
தமிழும் எழவில்லை!

நாலாயிரம்
நந்தனார் ஆனது;
வைதிக நந்தி
வழிமறித்து நின்றது!

6.கணவன் மனைவி இலக்கிய ரசனை

இராமாநுஜன் வாழ்க்கையில் - திருமணம் ஆன

புதிதில் - பெரும்புதூர் பெரிய வீட்டில் நடைபெற்ற நிகழ்ச்சி இது. தஞ்சமாம்பாள் -

கொல்லைப் புறத்தில்...

வடகத்தை -
வெய்யிலில் உலர்த்தியவாறே -

முதல்
மூவரில் -
மூன்றாம் ஆழ்வார்[6] அருளிய
மூன்றாம் திருவந்தாதியை...

தமிழ்த்தேன் ஒழுக ஒழுக
தஞ்சமாம்பாள் - தனது
இனிய குரலில்
இசைத்துக் கொண்டிருக்க...

அவளுக்குத் தெரியாமல்
அவள் பின்னால் நின்று
இராமானுஜன் -அதைத்தன்
இரு செவியால் உண்டிருக்க...

'தாழ்சடையும் நீள் முடியும்
ஒண்மழுவும் சக்கரமும் -
சூழ் அரவும் பொன்நாணும்
தோன்றுமால் - சூழும்
திரண்டருவி பாயும்
திருமலைமேல் எந்தைக்கு -
இரண்டுருவும் ஒன்றாய்
இசைந்து!'[7] என்று...

பெண்பாவை -
பாடி முடித்தாள்
வெண்பாவை!

இராமானுநுஜன்
இருகை கொட்டிவிட்டு -

‘தஞ்சம்! உனக்குத்
தமிழ்ப் பாசுரத்தை -
உச்சரிப்பு சுத்தமாக
ஓத வருகிறதே!’ என்று -
மெச்சிப் பேசினான்; ஒரு -
மென்னகையை வீசினான்!

தஞ்சமாம்பாள்
திருமுகத்தில் - ஒரு
பொய்க் கோபம்
பூத்துவர...

‘நான் -
பசுந்தமிழில்
பாண்டித்தியம் பெற்ற -
பெருமகனார் ஒருவர்
பெற்றெடுத்த பெண்;
முத்தமிழ் - எனக்கு
மூன்றாம் கண்!

வண்டமிழில் - எனக்கு
வார்த்தை விளையாட்டு வரும்.
அருந்தமிழில் - என்
ஆளுமை -
உங்களுக்கே
வியப்பைத் தரும்!

அதோ பாருங்கள்!
அந்தப் பட்டியில்...

இளைப்பாறுகிறது -
இரண்டாம் உயிரெழுத்து;
அதன்மேல்
அங்குமிங்கும்
நடந்து கொண்டிருக்கிறது -
நான்காம் உயிரெழுத்து!

புரிந்திருக்குமே - நான்
போட்ட புதிர்? இதற்கு நான் -
வைத்திருக்கும் பெயர்...
வார்த்தைச் சதிர்!’

என்று -
இராமானுஜனை - ஒரு
கர்வம்பொங்கப் பார்த்தாள்;
கள்ளச் சிரிப்பை வார்த்தாள்!

ராமானுஜன் - தமிழ்
ரசம் ஒழுகும்...

பாரியாளின்
பேச்சை ரசித்தான்;
அறிவார்ந்த
அந்தப் பெண்மையைப்
பார்வையால் புசித்தான்!

'தஞ்சம்!
தெரியாதா எனக்கு -
உன் புதிரும்
வார்த்தைச் சதிரும்?

படுத்திருக்கும்
பசுமாட்டின் மேல் - (=ஆ)
ஏறி நடக்கிறது
ஈ! இதைத்தான்
நீட்டி முழக்கிப் பேசுகிறாய் -
நீ!'

இப்படி -
இராமானுஜன் சொன்னதும்...

'ஒன்று கண்டு கொண்டேன்;
உங்களுக்கு...

தண்ணீர் பட்டபாடு -
தமிழ்; நான்
குரை கடலோடு போட்டி போட்ட -
குமிழ்!'
என்று
ஏக பவ்வியமாக -
தஞ்சம் பேசினாள்; திருமேனி
கொஞ்சம் கூசினாள்!

இராமன் தான் ஒரு கடவுள் அவதாரம் என்பதை அறியாதவன்; இராமாநுஜனும் தான் ஆதிசேடனின் அவதாரம் என்பதை அறியாதவன். இருவர் கதைகளையும் அருளாளர்கள் நாம் படித்து உய்வதற்கு எழுதி வைத்துப் போயுள்ளதை நாம் அறிய வேண்டும்; சிந்திக்க வேண்டும்.

7. கணவன் -மனைவி நல்லுறவுகள்

ஒவ்வொருவரும் தம் இல்லற வாழ்வில் கணவன் - மனைவி நல்லுறவு நகமும் சதையும் போல் இணைந்து பிணைந்து அமைந்தால் வாழ்க்கை இனிதாக இருக்கும் என்பதை அறிவார்கள். இதனை வாலியார் காவியத்தில் காந்திமதி-சோமாயாஜி, தஞ்சமாம்பாள்-இராமாநுஜன் வாழ்க்கையில் அமைந்திருப்பதை வாலியார் வாக்கிலேயே காட்டுவேன்.

காந்திமதி –சோமாயாஜி வாழ்வியல்:

வெறும் -
வேதாந்தி மட்டுமல்ல;
கேசவ சோமயாஜி - நல்ல
கிருகத்தரும் கூட!

அகமுடையாளுக்கு
அவ்வப்போது -
கைக்காரியத்தில் உதவுவார்
கூடமாட!

தாரம் - ஓராடையில்
தனித்திருக்கும் நாள்களில்...

தானே
தளிகை பண்ணுவார்!

திருமடைப் பள்ளியில்
திருவடி வைத்ததும்...

தமயந்தி புருஷனாகவும்
திரௌபதி புருஷனாகவும்
தன்னை எண்ணுவார்!

சப்புக் கொட்டிச்
சாப்பிடும்படி யிருக்கும் -

கறியமுது
சாற்றமுது; திருக் (=ரசம்)
கன்னலமுது! - (=பாயசம்)
....
பெரும்பூதூர்வாழ் - சகல
பிரஜைகளும் பேசுவார்...

‘கேசவசூரி - ஒரு

காருண்யம் மிக்க பரோபகாரி!'
என்று;
ஏனெனில் - அவர்
வைதிகம் லௌகிகம்
ஒன்றாய்ச் சேர்ந்த ஒன்று!

அவர் வகுத்துக் கொண்ட
அர்த்தப்படி...
வாழ்வு எனும்
வார்த்தைக்குப் பொருள் -

வாழும்போதும்
வாழ்வது;
வாழ்ந்து முடிந்த பின்பும்
வாழ்வது!
....
அவர்
ஆத்மார்த்தமாய் -
மனைவியை நேசித்தார்;
மகன் மகளை நேசித்தார்;
மொத்த -
மன்பதையை;
புல்லை; பூண்டை;
புள்ளை; பெற்றத்தை நேசித்தார்!
....
ராமாநுஜனுக்குப் பிறகு -
....
பிறந்த பெண்பிள்ளைகள்
பூமி மீதும் கமலா மீதும் -
கேசவருக்குக்
கொள்ளைப் பிரியம்;

'அசாத்திய விஷயம்!' என்று
அந்தச் சிறுமியரை...

காந்திமதி
கண்டித்தால்கூட -
அவர் மனம்
அவர்களுக்காகப் பரியும்!
....
ஊரார் பெண்ணையும் - தன்
ஊதிரத் துதித்த பெண்ணாய்
உகக்கும் உளமுடைய
உன்னத வாத்சல்ய வாரி!

தஞ்சமாம்பாள் - இராமானுஜன் வாழ்வில்

மாமியார் அறிவுரைப் படி மறு பேச்சு பேசாமல்,

அவளே -
அல்லும் பகலும்
அலுக்காது சலிக்காது...

குடும்பத் தேரைக்
குடைசாயாது ஓட்டினாள்;
குறைவைக்காது – கொழுநன்
குதூகலத்தைக் கூட்டினாள்!

வைகலும் -
வைகறையில்...

வாரணம்
விழிக்குமுன் விழித்து -
வாளியில் நீர் சேந்தி
வாசல் தெளித்து -

எறும்புகள் சாப்பிட -
ஏதுவாக -
அரிசிமாவில்
அழகழகாகக் கோலம் போட்டு -
பிறகு -
புழைக்கடை வாவியில்...

புருஷனின்
பத்தாறையும் கௌபீனத்தையும் -
அழுக்குப் போக
அடித்துத் துவைத்து -

ஒட்டப் பிழிந்து - உலர
ஓணான் ஓடும் வேலிமேல் போட்டு -

தான்
தலைக் குளித்து - தலை
துவட்டிய - பூந்
துவாலையைக் கூந்தலில் சுற்றி -

குழந்தை நிலா நெற்றியில்
குங்குமம் வைத்து - கூடவே
சின்ன ஈர்க்கால்

ஸ்ரீ சூர்ணம் எழுதி -

சாளக்கிராமம் இருக்கும்
சந்நதிக்கு முன்னால் -
நெய்விளக் கேற்றி
நாலு தடவை சேவித்து -

ஓர்
ஒத்தரணி -
துளசித் தீர்த்தத்தைத்
தனக்குத் தானே -

அங்கையில் ஊற்றி
அருந்தி விட்டு -

சிக்குப் பலகையை
சுத்தி செய்து - அதை
இழை கோலத்தின்மேல்
இருத்தி விட்டு -

அதன்பின்
அஷ்டாட்சரம் சொல்லியவாறே -
அடுப்பு மூட்டி
அரிசி களைந்து போட்டு -

ஓலைத் தடுக்கில்
உட்கார்ந்தபடி -

காய்கறி நறுக்கி
கீரை ஆய்ந்து -
தண்ணீரில் வேகவைத்து
தாளித்துக் கொட்டி -

மளமளவென்று -
மணக்க மணக்க ...

தளிகையை முடித்து
தலைவாழை இலை போட்டு -

கொழுநனுக்கும்
கொழுந்தன் கோவிந்தனுக்கும்...

பரிமாறிப்
பசியாற்றிப் -
பாடசாலைக்குப்

பணிவன்போடு அனுப்பிவிட்டு...

தஞ்சமாம்பாள்
தனது புடவைத் தலைப்பால் -
ஒழுகுகின்ற நெற்றி வேர்வையை
ஒற்றி ஒற்றி எடுத்தவாறு -

காந்திமதியை
கவனிக்கப் போவாள்;

....
அனேகமாக -
அன்றாடம்...

ராச்சாப்பட்டுக்குப் பிறகு -
ராமானுஜனும் தஞ்சமாம்பாளும் -

மொட்டை மாடியிலோ; நடு -
முற்றத்திலோ; நிலாக்
கீற்றுகள் - தென்னங்
கீற்றுகள் வழியே
கீழிறங்கி விளையாடும்
கிணற் றோரத்திலோ;

ஒருவர் பக்கம்
ஒருவர் அமர்ந்து -
பிரியமாகப்
பேசுவது உண்டு;

இருவரும்
இளவயதினர் என்பதாலும்...
இல்லறம் புகுந்து - திங்கள்
இருபதே ஆயின என்பதாலும்...

அவர்களது
அளவளாவலில் -
வாஞ்சைத் தென்றல்
வீசுவது உண்டு!

....
காஞ்சிபுரத்திற்குக் -
குடிபெயர்ந்த பிற்பாடுதான்...

கணவன் மனைவிக்குக்
கிடைத்தது -
கொஞ்ச நேரம்; அதுவும் -
கொஞ்ச நேரம்!

சின்னச் சின்ன
சந்தோஷங்களாக...

தஞ்சமாம்பாள்
திருநீற்றமுதை -
தளிர் வெற்றிலையில்
தடவிக் கொடுக்க -
இளையாழ்வான்
இராமானுஜனின்...

தாம்பூலம் தரித்த
திருவாய் - சிவப்பில்
தாமரைப் பூவைத்
தலைகுனிய வைக்க
அந்த
அரக்குச் சிவப்பு...

அகமுடையாள்மேல்
அகமுடையானுக் கிருக்கும் -
அதீதமான அன்பை
அப்பட்டமாய் அறிவிக்க -
....
திருக்கச்சியிலிருந்து
திருப்புட்குழிக்கும் -
திருப்புட்குழியிலிருந்து
திருக்கச்சிக்கும் -
நாள்தோறும்
நடக்கும்...

தலைவனின்
திருவடிகளைத் -
தஞ்மாம்பாள்
தயிலம் தடவி நீவிவிட -

தலைவியின்
திருப்பணியில்
தலைவனின்
திருவுள்ளம் நெகிழ்ந்துவிட -

இனி நடக்க
இருப்பதை...

உற்றுப் பார்த்தால் - அவ்வளவு
உசிதமல்ல என்று - அதற்கொரு
முற்றுப்புள்ளி வைத்து - நிலா
முகில் திரைக்குள் (சென்றது)

8. காசியாத்திரை

பிள்ளைப்பேறு வேண்டுவோர் இராமேசுவரத்திற்கும் பரகதியை வேண்டுவோர் வாரணாசி (காசி)க்கும் யாத்திரையாகச் செல்லும் பரம்பரை வழக்கமே இன்றவும் நடைபெற்று வருகிறது. இருப்பூர்தியில் பயணம் செய்வோர் இராமேசுரத்தை நோக்கி வழியும் வடநாட்டார் கூட்டத்தைக் காணலாம். அந்த அளவுக்கு தென் நாட்டார் காசியை நோக்கி வழிவதில்லை.[8] காசியாத்திரை பற்றிய குறிப்பை மிக நயமாகவும் விநயமாகவும் குறிப்பிடுகிறார் வாலியார் தம் காவியத்தில்.

கல்யாணத்தின் போது - ஒரு
காசியாத்திரை...

குடை;
குறடு;
....

குறுந்தடி சகிதமாக!
கல்யாணமான பின்பு - ஒரு
காசியாத்திரை...

குரு;
கோவிந்தன்;
கூடப்படிப்போர் சகிதமாக!

இந்த -
இரண்டு காசியாத்திரைகளில்...

போவது போல் -
போய்த் திரும்புவது முன்னது;
போவது போல் அல்ல; நிஜமாகவே -
போய்த் திரும்புவது பின்னது!

முன்னது நாடகபாணியில் அமைந்திருப்பது; பின்னது உண்மையாக நடைபெறுவது; உடையவரின் உயிருக்கே உலை வைக்கும் திட்டமாக ஏற்படுத்தப் பெறுவது.

9. உவமை உருவகம் பற்றி

இயற்கை எங்கும் ஆண்டவன் அந்தர்யாமியாய் இருந்து கொண்டு தம் படைப்பின் விசித்திர விநோதங்களால் காட்சி தருதல் போல, கவிஞர் வாலியின் காவியத்தில் தடுக்கி விழுந்தால் இரத்தினங்கள் கிடைப்பது போல் உவமையும் உருவகமும் பரந்துபட்டுக் காணப் பெறுகின்றன.

பால்திரண்டு பாலாடையாவது போல் உவமை உறைந்து உருவகமாகின்றது. இதனால் உருவகத்தை Condensed Simile என்று வழங்குவர் ஆய்கிலத்திறனாய்வாளர். வாலியாரின் காவியத்திலுள்ள உவமை உருவகங்களைப் பற்றி எழுதப் புகுந்தால் அது மற்றொரு காவியமாக விரியும். ஒரு சிலவற்றை மட்டிலும் காட்டினால் அவற்றின் சிறப்பு தெளிவாகும்.

இராமாநுஜனின் தங்கையார் பூமியும் கமலாவும்.

பூமி போல்
பொறை மிக்கவள் -
பூமி!

கமலம் போல்
கவின் மிக்கவள் -
கமலம்!

தமையனுக்குத் திருமணம் என்ற செய்தி கேட்டு இருவரும் பூரித்துப் போயினர்.

உற்சாக சாட்டை
உதறிவிட்ட சொடுக்கில்
அம்பரம் அணிகளோடு - ஆகும்
பம்பரம் ஆயினர்

இந்தப் பகுதியில் உவமைகளும் உருவகங்களும் தனித்தனியாக நடனமாடி கை குலுக்குவதைக் கண்டு மகிழலாம்.

இராமாநுஜனின் தாய் காந்திமதி, தாய் தனக்கு இருமகள் இருக்க இன்னும் ஒருமகள் வீட்டு மருமகளாக விளங்கப் போகின்றாள் என்ற ஏமாப்பு அவளுக்கு ஏற்படுகின்றது.

காந்திமதியின் கண்ணெல்லாம்
கம்பி மத்தாப்பு;

அவ்
அன்னையின்...

உள்ளத்தின்
உள்ளிருக்கும் உவகை - உள்ளே
'விர்'ரென - ஒரு
விஷ்ணு சக்கரம் விடுவதை -

கண்ணாடிபோல்
காட்டியது -

முகத்தில் முளைத்த
முறுவலிப்பு!

இங்கும் உருவகமும் சறுக்கி விளையாடுவதைக் கண்டு மகிழலாம்.

யாதவப் பிரகாசரைப் பற்றிக் கோவிந்தன் ஓரிடத்தில் குறிப்பிடும் போது,

மற்றபடி - அந்த
மகான்...
தான்
தழுவி நிற்கும் -
அத்வைதத்தை
அடிப்படையாகக் கொண்டு...

வியாக்கியானங்களை
விரிவாகச் செய்கிறார்; தன்
அறிவுத் தறியில் -
அதற்கான...

உண்மைகளையும்
உவமைகளையும்...
ஊடும் பாவமாகக் கொண்டு -
உத்தாரண உடையை நெய்கிறார்!

இங்கும் உருவகமும் உவமையும் கைகோத்து விளையாடுகின்றன.

ஓரிடத்தில் கோவிந்தன் யாதவரைப் பற்றிக் கூறியதை இராமாநுஜன் சிந்திக்கும்போது:

ஒருவேளை –
உலக இயலை ஒட்டி...

பூவிருக்கும் இடத்தில்
பூநாகம் இருப்பது போல்; தேங் -
காயிருக்கும் இடத்தில்
கருந்தேள் இருப்பது போல்;

படித்தவன்
புத்தியில்
புலமையம் புன்மையும்
பக்கம் பக்கம் இருக்குமோ?

புலமையின்
புகழ் நீளத்தை –புந்திக்குள்
புகுந்திருக்கும்
புன்மை சுருக்குமோ?

இங்கு உவமைகள் மட்டிலும் உற்சாகமாக விளையாடுகின்றன.

காந்திமதி குழந்தை இராமாநுஜனை வளர்க்கும் முறையைக் கூறும் கவிஞர் வாலி:

பொந்தோ சந்தோ -
போகுமிட மெல்லாம்...

குட்டியைக்
கவ்விக் கொண்டே போகும்
மார்ச்சாலம் (=பூனை)
மாதிரி...

அடுப்பங்கரையோ
ஆற்றங்கரையோ
இடுப்புக் குழந்தையை
இறக்கி விடாது -
காரிய மாற்றுவது
காந்திமதிக்கு
விடமுடியாத
வழக்கமாகி விட்டது;

இங்கு ஒரே ஒரு தனி உவமை நொண்டியடித்து விளையாடுகிறது.

திருக்கச்சி நம்பியைக் குறிப்பிடும் வாலி - ஓரிடத்தில்:

அவனது (=இராமானுஜன்)
அப்பாவிற்கு
அணுக்கமான ஆப்தரான
அவர்...

அஞ்சை அவிக்கும்
ஆறை அறிந்து - பிறவி
ஏழைத் தவிர்க்க
எட்டைத் துதிப்பவர்;

என்று வருவது. இங்கு நான்கு உருவகங்கள் கொஞ்சி விளையாடுகின்றன.

ஆளவந்தாரின் மூன்று பேரவாக்களையும் நிறைவேற்றுவதாக உறுதிகூறி விட்டு, அவர் உடனிருந்து உபதேசம் பெற வொண்ணாது நிகழ்ந்து விட்டதே என்று மனத்துள் கவன்ற நிலையில் அருகில் நிற்கும் பெரிய நம்பிகளிடம் தன் கவலைகளைக் கூறும் நிலையில்:

"பெரிய நம்பி ஸ்வாமிகளே!
பொறுத்தருள வேண்டும்;
வடம் பிடித்து
வலித்தாலும் - நிலைக்கு வராது

அடம் பிடித்து
ஆணியடித்தாற்போல் நிற்கும்...
தேர்போல்
தமியேனின் மனம் -
விரக்தி சேற்றிலேயே
விழ்ந்து கிடக்கிறது -

முனைந்து நான் எழுப்பியும்
முரண்டு பிடித்தபடி -
மீண்டும்
மீண்டும்!
....

மனம் அற்புதமான உவமையால் விளக்கப் பெறுகின்றது. கவிஞர் வாலிக்கே உரிய உவமை இது!

தஞ்சமாம்பாள், தன்னிடம் சொல்லாமல் தன் கணவர் அயலூர் பயணம் மேற்கொண்டதைப் பொறுக்க மாட்டாமல் சினந்து கூறும் நிலையை விவரிக்கும் கவிஞர் வாலி:

வாணலில் -
உளுந்தும் கடுகும்...
தாளிப்பதுபோல் இருந்தது
தஞ்சமாம்பாளின் பேச்சு;
உலைக்களம் போல்
உள்நாசி கன்றிச் சிவக்க -
உக்கிரத்தை
உமிழ்ந்தது அவள் மூச்சு!

கூறுவது. இதில் இரண்டு உவமைகள் இணைகோத்து ஒரு பெண்ணின் உச்சநிலைகோப உணர்ச்சியை உணர்த்துகின்றன.

..........; அவளது
தலையை - அன்பு பொங்கத்
தன் அங்கையால் வருடி...

ஆனமட்டும்
அவளது ஆத்திரத்தை -
அண்ணல் ராமாநுஜன்
அவிக்க முயன்றும் -

மீண்டும்
மீண்டும் - முருங்கை
விருட்சம் ஏறிய
வேதாளம் போல்...
எரிவு காட்டினாள் - தஞ்சம்
எட்டிப் போய் நின்று;

அவளை -
அப்பொழுதே - ராமானுஜன்
அறிந்து கொண்டான் -
அருஞ்சுணங்கன் வால் என்று!

இப்பகுதியில் தாயும் மகளும் கொஞ்சுவது போல் உவமையும் உருவகமும் இணைந்து கொஞ்சுகின்றன. இரண்டுமே மக்களின் அன்றாடப் பேச்சில் அடிக்கடி அடிபடுவன.

இவற்றுடன் நிறுத்துவேன்.

10. உடையவர் மீது ஈடுபாடு

இராமாநுஜர் மீது அளவற்ற ஈடுபாடும் பக்தியும் கொண்டவர் வாலி. இதனை அவரைப் பல்வேறு இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிடும் சொற்றொடர்கள் பறை சாற்றும்.

ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே...
மதப்புரட்சி செய்த
மகான்;
இவர் கைக்குள்
இருந்தது -
சண்டித்தனம் செய்த
சனாதனக் குதிரையின் லகான்!

இருபதாம் நூற்றாண்டின் - இரு
இணையற்ற சிந்தனையாளரோடு...

உவமித்து ராமானுஜனை -
உரைக்கப் போயின்...

பூணூல்
போட்டிருந்த -
பெரியார் எனலாம்; திருமண் -
ஆறிரண்டு -
அணிந்திருந்த -
அம்பேத்கர் எனலாம்!’[9]

இக்கருத்துகளுக்கு மகுடம் வைத்தாற்போல் அப்பெருமகனாரை நூலெங்கும் சுட்டும் குறிப்புகளினால் தெளியலாம். அவர்தம் பிறப்பு பற்றி:

(1) ஆசூரிகேசவ சோமாயாஜியின் அகமுடையாள் மணி வயிற்றில்

மகனாய் -
முளைத்திருப்பது...

'நாரணன் பூங்குடை;
நாரணன் பாதுகை;
நாரணன் இருக்கை;
நாரணன் படுக்கை!

என -
ஆழ்வார்
அற்புதமாய்ப் பாடிய -
அரவரசன்;
ஆதிசேஷன்!

(2) குழந்தை இராமாநுஜனின் அழகு பற்றி:

இளைய ஏறனைப் -
இராமானுஜனின்...

சாமுத்திரிகா லட்சணங்கள்
சொல்லி மாளாது;
அவன்மேல் போய்
அமர்ந்தநம் கண்கள் -
அவையாய் மீண்டாலன்றி - நாம்
அழைத்து மீளாது!

வனப்பில் -
வாலறிவில் - ஒரு
வடு இல்லா -
வடு!

(3) தஞ்சமாம்பாள் வாழ்க்கைப்பட இருப்பதைக் கூறும்போது -

ஒரு
வரலாற்றுக்கு
வாழ்க்கைப் பட;
....
ஆம்!
அவளுக்கு...

வாய்த்த கணவன் - ஒரு

வரலாறு தான்;
பிரபத்தியையே
பிரதானமாகக் கொண்டு -

இன்றளவும்
எந்த -

விசிஷ்டாத்வைதம்
வழி நடக்கிறதோ...

அது
அந்த -
வரலாறு
வகுத்த ஆறுதான்!
....
அதுகாறும்
அழுத்தப்பட்டோர்
அனுபவத்தறியா...
அருங்கருணை!

(4) மாங்கல்யம் சூட்டும் நிலையில்

தந்தை மடியிருந்த
தஞ்சமாம்பாளின்
திருக்கழுத்தில்
திருமாங்கல்யம் பூட்டினான்...
காந்திமதியம்மையின்
கன்று;

இராமானுஜன் என
இசைக்கப் பெறும்
குற்றங் குறையில்லாக்
குணக் குன்று!

இது திருமண நிலையில் சுட்டப்பெறும் இராமாநுஜன்.

(5) புதுமனை வாங்கிக் குடி புகுந்த போது

திருக்கச்சி நம்பியின்
துணை கொண்டு -

கிரயம் பேசி - புது
கிரகம்[11] ஒன்று வாங்கி -
கிழமை திதி பார்த்துக்
கிருகப்பிரவேசம் செய்து -

தனது
தாயோடும்
தாரத்தோடும்
தங்கைகளோடும்...

குடி புகுந்தான் - வைணவ
குலம் தழைக்க வந்த -
இராமானுஜ முனி; வைணவர்கள் -
இதயக்கனி!

(6) <u>இராமாநுஜனின் 'காசியாத்திரையை' தஞ்சமாம்பாளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை</u>

தன்னை - அந்த அவலம்
தின்பது தான்!

பக்கம் வந்து நின்றான்
பார்த்தா; நாளை -

வலிவும் பொலிவும் மிக்க
விசிஷ்டாத்வைதம் எனும் -
வைணவத் தத்துவத்தை
வடிவமைக்கப் போகும் கர்த்தா!

(7) <u>காசியாத்திரைக்கு முன்பாக...</u>

தாரத்திடம்;
தாயிடம்;
திருவாலவட்டத் தொண்டர் -
திருக்கச்சி நம்பியிடம்;

விடைபெற்று -
வாரணாசி புறப்பட்டான் -
யாதவர் பின்னோடு - வைணவம்
யாண்டும் வாசிக்கும் ஞான ஏடு!

(8) <u>இராமாஜன் வாரணாசி புறப்பட்டபோது -</u>

"வழித்துணைக்கு
வரதராசன் உண்டு;

இடையில் ஏதேனும்
இடர் வரின் - அதைச்
சுக்கு நூறாக்குவான்
சுடராழி கொண்டு!"
தாரத்திடம்;

தாயிடம்;
திருவால வட்டத் தொண்டர் -
திருக்கச்சி நம்பியிடம்;

விடைபெற்று -
வாரணாசி புறப்பட்டான் -
யாதவர் பின்னோடு - வைணவம்
யாண்டும் வாசிக்கும் ஞானஏடு![12]

(9) <u>காசியாத்திரையில் நடுவில் சில சொல்லிவிட்டு கோவிந்தன் மறைந்து சென்றபோது -</u>

தவித்துத் தவித்துத் - தேகம்
தளர்ந்து போய்ச் சோர்ந்தான்!

தொடங்கவோ
தொடரவோ -
திக்குத்திசை தெரியாது
'திக்பிரமை' பிடித்தவன் போல்...

இருந்தவாறு
இருந்த இடத்திலேயே -
இருந்தான்
இராமானுஜப் பெருந்தகை;
இன்றளவு - தன்
இதய வங்கியில் -
வைப்பு நிதியாய் - வைணவம்
வைத்திருக்கும் பெருந்தகை!

(10) <u>காஞ்சிப் பயணத்தை முடித்துத் திரும்பிய யாதவர்</u>

கால் வைத்தார்
காஞ்சியில்; உடனே -
மூஞ்சியது ஓர் அதிர்ச்சி
மூஞ்சியில்!

சாலைக் கிணற்றில் - நீர்
சேந்திக் கொண்டிருந்தான் -
சாவின் விளிம்புவரை
சந்தித்து மீண்ட...

இராமானுஜன் எனும்
இனியன்;
தகவில் -
தணிவில் -

தனக்கோர் உவமையில்லாத்
தனியன்!

(11) <u>பிரம்மராக்ஷஸை நீக்கியது</u> - 'நித்திய சூரி'என்ற இராமாநுஜன்'

(பிரம்மராட்ஷஸ்) -
"யாதவனே!
யாது கொடுத்தாலும் -
யார் கூறினாலும்
யான் செல்வது அரிது;

உன் சீடருள் -
ஒரு...

நித்ய சூரி இருக்கிறது; அவர் -
'நீங்குக!' என்றால் - உடனே
நீங்குவேன்; எனக்கு அவர் சொல்
நான் மறையிலும் பெரிது!'

பிரம்ம ராட்ஷஸ் - இப்படிப்
பிரகடனப் படுத்தியதும்...

'ஆர் அது' என்று
ஆர்வமொடு வினவினார் -
ஆசாரியர்;
....
அரசிளங்குமரி
அடக்க ஒடுக்கமாக -
இராமானுஜன்
இருக்குமிடம் சென்று -
....
நவின்றாள் "நான் சொன்ன
நித்ய சூரி இவர்தான்!" என்று!
....
இளையாழ்வான் - ஆசாரியன்
இணையடியைச் சிந்தித்துவிட்டு...

பிரம்ம ராட்ஷஸைப் பார்த்து -
"போய்விடு!" என்று கூற...

"இராமானுஜனே!
எனது -
தலைமீது - உன்
திருவடியை வை;

வைத்து - என்னை
உத்தாரணம் செய்!”

என்று பிரம்ம ராட்ஷஸ்...
இராமாநுஜனைக் கோர...

அப்படியே செய்தான்
அருந்தகை;
“அகல்கின்றேன்!” என்றது
அலகை!

“அகல்வதற்கு - ஓர்
அடையாளம் காட்டிப் போ!” என்று -
ராமானுஜன் சொன்னான்;
ராமாயண -
ராமானுஜன் அன்னான்! (= இலக்குவன்)

(12) இளையாழ்வான் திருவரங்கத்திற்கு ஏகினபோது -

ஆளவந்தாரை தரிசிக்க - திரு
அரங்கத்திற்கு நகரத்திற்கு...

அடியேனை -
அழைத்துச் செலும் நம்பிக்கும்;
அன்பொழுக -
அனுப்பி வைக்கும் நம்பிக்கும்;

‘தலையலால் வேறு - கைம்மாறு
இலை!’

என்று
ஏகமாய் உணர்ச்சி வசமாகி

நேர் நிற்கும்
நம்பிகள் இருவரையும் - மேனி
நிலந்தோய - சாஷ்டாங்கமாய்
நமஸ்கரித்தான் -

‘பின்னாளில்
பெரும்புகழ் சூழ்வான்!’ என -
இந்நாளிலேயே கோடிகாட்டும்
இளைய ஆழ்வான்!

(13) <u>ஆளவந்தாரின் இறுதிச் சடங்குகள் முடிவுற்ற பிறகு அவர்தம் மூன்று அபிலாஷைகளையும் அசைபோட்ட வண்ணம் -</u>

அடைந்தான் காஞ்சியை...
இராமானுஜன் என்னும் - வைணவ
இளவரசு;
விசிஷ்டாத்வைதம் - என
விளிக்கப் பெறும்
தன்னேரில்லாத - உயரிய
தரிசனத்தின் சிரசு!

(14) <u>'திருமந்திர உபதேசம்' பெற திருக்கோட்டியூர் வந்த இராமாநுசரை திருக்கோட்டியூர் நம்பி,</u>

"இன்னொரு சமயம் பார்ப்போம்;
இன்னொரு சமயம் பார்ப்போம்!"

இப்படியே சொல்லி - ஸ்ரீ
இராமானுஜ முனியை -
திரும்பத்
திரும்பத்
திருவரங்கம்
திரும்பச் செய்தார்...
....
ஒருமுறை யல்ல;
இருமுறை யல்ல;
பங்கயப்
பாதம் நோகப் -
பதினெட்டு முறை
போய்ப் போய்த் திரும்பினார்...

உடையவர்! பொறையில் -
உயர்ந்தவர்! உயர் தவர்!
உடையாது - வைணவ வீடு
உறுதியாய் நிற்க உதவு சுவர்!

'உடையவர்' என்ற சொல்லோடு 'தவர்', 'சுவர்' என்ற சொற்கள் கைகோத்து நின்று கும்மியடிக்கின்றன.

(15) <u>'காமப்புரை'யேறிய வணிகன் 'பெருமாள் தீர்த்தத்தில் 'புரை' நீங்கிய பிறகு - நடந்தவை</u>

வரதாழ்வானோடு சென்று – அவ்
வணிகர் பெருமகன்...

சேவித்தான்
சீயரை;
மன்பகை என்னும்
மந்தையை -
ஆற்றுப்படுத்தும்
ஆயரை!
……………………..
திருமலை நம்பியிடம்
தருணம் பார்த்து -
கோவிந்தனைக் -
கேட்டுப் பெறுவதென்று…

முடிவெடுத்தார் - எதிராஜ
முனி;
நுவலரிய ஞானத்தின்
நுனி!

கோவிந்தன் துவராடை தாங்கி துறவியானான் - 'எம்பார்' என்ற திருநாமத்துடன்:

உடையவர் இவ்வாறு
உரைக்கையில்…
ஓடோடி வந்து - அவரது
வாரிச அடிகளில் விழுந்து -
கோவிந்தன் மனைவியும் -
கோரினாள் காவியாடை;
அதனைத் தந்து - 'சிறிய
ஆண்டாள்!' என்கின்ற -

தாஸ்ய நாமமும் - அவளுக்குத்
தந்து, ரட்சித்தார்…
எதிராஜர் -
என்னும் காருண்ய ஓடை![13]

*** **ஸ்ரீமதே இராமாநுஜாய நம:** ***

<u>**குறிப்பு:**</u>

1. மூன்.திருவந் - 63
2. சிலப். மதுரைக் காடுகாண் - 35-40
3. மேலது-மேலது - 41-51

4. அவரே இலையை எடுத்திருக்கலாம் - அவ்வளவு மடையர்; ஏனோ எடுக்கவில்லை.

5. ஒரு பார்ப்பனச் சிறுவன் சாதி சமய இழிநிலைகளைக் கடந்து வந்து தன்னை வேண்டுகிறானே என்று அறிந்து தெரிந்த நம்பி தன் நிலையை மாற்றிக் கொள்ளவில்லையே என்பதுதான் நம் வருத்தம்; வியாகூலம்.

6. பேயாழ்வார்

7. மூன். திருவந். - 63

8. இரண்டு அநுபவங்களும் அடியேனுக்கு உண்டு. 1948-இல் இராமேசுவர யாத்திரை முதல்முறை மேற்கொண்டேன்; 1966-இல் காசியாத்திரை முதற்முறையாக மேற்கொண்டேன். முன்னதை மேற்கொள்ள பலமுறை வாய்ப்புகள் வந்தன; பின்னதையும் மேற்கொள்ள சில முறை வாய்ப்புகள் நேரிட்டன.

9. இராமாநுஜ காவியம் - பக்.4


10. குறிப்புகளின் அடைப்புக் குறிப்புகளின் பிறைக்கோடுகளின் இடையிலுள்ள எண்கள் நூலிள்ள பக்க எண்கள்.

11 கிரகம் - தவறு; கிருகம் என்றிருக்க வேண்டும்.

12. பூதனையைக் கண்டுபிடித்த கோவிந்தன்தான் இந்தக் கோவிந்தனா? என்று உடையவர் ஐயுற்றது சரி. (பக்.126) பின்னர் தம்பி கோவிந்தன் ‘தமையனைக் காணாமல் ‘கோ’வென்று கூவினான். (பக்.128)

13. ‘காரேய் கருணை இராமனுச! இக் கடலிடத்தில், ஆர் அறிபவர் நின் அருளின் தன்மை?’ (25) என்ற அமுதனார் வாக்கை நினைவு கூறச் செய்கின்றது – ‘காருண்ய ஓடை’ என்ற தொடர்.

****



இராமாநுஜர் 1000

கவிஞர் வாலியின்

இராமாநுஜ காவியம் - ஒரு மதிப்பீடு

இயல் ~ 9

கவிஞர் வாலியின் இறை ஈடுபாட்டின்பம்



ந சுப்பு ரெட்டியார் 100

இயல் – 9

கவிஞர் வாலியின் இறை ஈடுபாட்டினப்பம்

இளமையில் சித்திரத்தில் ஈடுபாடுகொண்டிருந்த கவிஞர் வாலியின் வாழ்க்கை விசித்திரமாக மாறியது. அரங்கநகர் அப்பனின் திருவருள்; திசை மாறியது அவரது ஆரருள். மரபு வழியாக அமைந்த வைணவ குடும்பத்தில், திருவரங்கத்தில் பிறந்தவராதலால் அரங்கனது திருவருள் அளவற்ற முறையில் அவர்மீது சுரந்தது. முறையான தமிழ்க்கல்வி இல்லாத போதிலும், கவிஞர் கண்ணதாசனைப் போல் திரைப்பாடல்களின் ஆசிரியராகத் தொடங்கி திரையிலும் நடிகராகி[1], பின்னர் சிறந்த புதுக்கவிஞராக திகழ்வது என்பது முயற்சியால் அமைந்தது மட்டுமல்ல; அந்த முயற்சி ஏற்படவும் அம்முயற்சி நன் முயற்சியாகச் செயற்படவும் ஆண்டவன் அருள் அவசியம் வேண்டும். ஆகூழ் செயற்படவும் ஆண்டவன் அருள் வேண்டும் என்பது வள்ளுவர் பெருமானின் வான்மறை.

எல்லா அவதாரங்களிலும் சிறந்தது கிருஷ்ணாவதாரம். கல்விச் செருக்கு தலை தூக்கியிருக்கும் பார்ப்பன் குலத்திலும் புயல் வலியால் பூரிப்புடன் திகழும் சத்திரிய குலத்திலும், செல்வச் செருக்கால் செப்பரிய முறையில் விளங்கும் வணிககுலத்திலும் பிறக்க விரும்பாமல் ‘வலக்கை, இடக்கை இது என அறியாத’ இடையர்குலத்தில் பிறந்தவன் கண்ணன். பிறந்தநாள் முதல் தான் கடவுள் என்ற நினைவுடன் திகழ்ந்தவன். பொய்யையே பிறவிப் பேறாகக் கொண்டவன். அவன் வாயிலிருந்து உண்மை ஒருநாளும் வெளிப்பட்டது இல்லை. அவன் கூறிய பொய்களைனைத்தும் மானிடத்தின் நன்மைக்காகவே மேற்கொண்டவையாக இருக்கும். இது கருதியே,

‘இராமனது மெய்யும்
கிருஷ்ணனது பொய்யும்
நமக்குத் தஞ்சம்’

என்ற வைணவ வாக்கும் எழுந்தது.

மகப்பேரின்றி சோமியாஜி தம் துணைவி காந்திமதி அல்லிக்கேணி அச்சுதனனை - பார்த்தசாரதியை வழிபட வந்த பொழுது அப்பெருமானைக் குறிப்பிடுமிடத்து,

பார்த்த சாரதியை;

பாஞ்ச சன்னியம் ஊதி -
ஆர்த்த சாரதியை;
அர்ச்சுனன் அவலம் -
தீர்த்த சாரதியை;
திருவாயால் கீதைத் தேன் -
வார்த்த சாரதியை;
வளநாட்டை தருமன்கை -
சேர்த்த சாரதியை;
சுயோதனன் செருக்கைப் -
பேர்த்த சாரதியை;
பாஞ்சாலியை சேலையினால் -
போர்த்த சாரதியை;
புல்லர் கூட்டத்தைத் -
தூர்த்த சாரதியை;
திருகி திருகி திருமீசை -
கூர்த்த சாரதியை;
கூடாதார் கண்ணுக்குக் -
கார்த்த சாரதியை
களத்தினில் தேரோட்டி -
வேர்த்த சாரதியை;
வேயிசையால் கறவைகளை -
ஈர்த்த சாரதியை

என்று கண்ணனின் ஒவ்வொரு செயலையும் நினைந்து நினைந்து, உள்ளம் உருகி உருகி தம்மை மறந்த நிலையை எய்துகின்றார் கவிஞர் வாலி.

காஞ்சிநகரைப் பற்றிக் கூறவந்த கவிஞர் பேரருளான வரதராசரைப் பற்றிப் பேசி தம்மை மறந்த நிலையை எய்துகின்றார்.

பறவை மீது
பறப்பவன்; வெள்ளைப் (=பாற்கடல்)
பரவை மீது
படுப்பவன்;

இறவை; பிறப்பை -
இல்லா தொழிக்கும் - பேரறிவாம்
நறவை பக்தர்க்கு
நாறும் கொடுப்பவன்;

கொண்டிருக்கிறான்
கோலாகலமாய் -திருக்
கோயில் இங்கு;

வாங்கி நிற்கிறான்
வண்ணக் கரங்களில்

வட்டத் திகிரி; சங்கு;

எட்டெழுத்து தண்ணலின்
எழிலுக்கு ஏற்றத்திற்கு -
....
'வரதா! வரதா!' என்று
விளித்தாலே -
'வரந்தா! வரந்தா!' என்று
வேண்டுவதாய் எண்ணிக்
கொண்டு...

வரந்தரும்
வரதன் அவன்; அங்ஙனம்
வரந்தருவதையே
விரதமாகக் கொண்டு -
விளங்குகின்ற
விரதன் அவன்!
....
பேரருளாளன் - எனப்
பிறங்குகின்ற...
பெருமாள் பக்கலில்
பெருந்தேவித் தாயார்; அந்தத்
தாயார் போல தண்ணலியை -
பெற்ற
தாயார் கூட ஈயார்!

தாயார்
திருவடியில்
தோய்ந்திருப்போர்
தொல்வினையில் காயார்;

சிந்தாகுலத்தில்
சிக்குண்டு
சிந்தையும் சரீரமும்
சிறுகச் சிறுகத் தேயார்;

நொடித்துப் போய்
நொடித்துப் போய்
நொடிக்கு நொடி
நொடிக்கு நொடி மாயார்;

வேட்கை கொண்டு
வெகுளி கொண்டு
விருப்பு வெறுப்பு ஓலைகளால்
வாழ்வுப் பந்தலை வேயார்!
....

திருக் கோயிலில் -
திருவோலகத்தில் -
சேவை
சாதித்துக் கொண்டிருக்கும்...
தேவியும்
தேராஜரும் - எத்தகு
பாவியும்
பிரபத்தி செய்தால் - (=சரணாகதி)
அற்றம் நீக்கி - அவன்
குற்றம் நீக்கி - அவனைப்
பெருவீடு சேர்ப்பர் - என்பது
பிரசித்தம்; சரண்
அடைந்தால் - எப்பேர்ப்பட்ட
அழுக்கு மனங்களையும் -
பெருமாளும் தாயாரும்
பண்ணுவர் பரிசுத்தம்!

'பூலோக வைகுண்டம்' என்று பேசப்பெறும் திரு அரங்கத்தில் அரவுப்பாயலில் அறிதுயில் கோயில் கொண்டுள்ள அரங்கனைப் பற்றிப் பேசும்போதும் தம்மை மறந்த நிலைதான்.

மதுரகவியின் -
ஒருநா தவிர - மற்ற
ஓராறும் ஐம்பதும் பாட - பையுடைய
இருநா மீது...
ஒருக்களித்துக் கிடக்கும்
ஓரெட் டெழுத்தானை; இராக்கதன்
செருக்கழித்துக் கோறி - இலங்கை
சின்னவனுக் கீந்தானை;

தெற்கிலும் வடக்கிலும் -
தெண்ணீர்ப் பொன்னி...

தரங்கம் எழுப்பித்
தரையலம்பும் - திரு
அரங்கம் எனும் ஊரானை;
அரங்கநாதன் எனும் பேரானை;

காணக்
கண்ணிரண்டும் போதா; அவை -
உள்ள வனப்பை –
உள்ளபடி நமக்கு ஓதா!

சிரசுமுதல்
சேவடிவரை – சீரங்கத்து

அரசு அழகை...

சேவித்து நிற்கும் -
சேவார்த்திகளின் விழிகள் -

விழுங்கு விழுங்கென்று
விழுங்கும்; ...
....
அவன்
அடங்க மாட்டான் -
விழித்து விழித்து நின்றாலும்
விழிக்குள்;
அவன்
அடங்க மாட்டான் -
மொழந்து மொழிந்து நின்றாலும்
மொழிக்குள்;

அர்ச்சையில் உள்ள அரங்கனைக் கூறும் போவிபாவதார நிகழ்ச்சிகளான சுயோதனன், விதுரன், சிசுபாலன், அர்ச்சுனன், இவர்களின் வரலாறுகளை நினைத்து அவற்றை அர்ச்சையின் மேலேற்றி மகிழ்கின்றார் வாலி.

அவன் அறிவான் எப்பொருளும்;
அவனை அறியா எப்பொருளும்!

ஆற்றுவான்
அநேக மாயம்;
ஆரே கற்பிக்க வல்லார்
அவற்றிற்கு நியாயம்?
....
அவனுளம்...

பெற்ற தாயினும்
பெருவுளம்
தண்ணளி மிக்கது; கேட்டதைத் -
திருவுளம்;
....
அரங்கநாதன்...

ஈராறு நடுவிருக்கும்
ஈர ஆறு! அவனது -
எளிவந்த தன்மைக்கு
ஏது ஓர் ஈறு?

இறைவனை நோக்கி அடியார்கள் செல்லாவிடினும் அவர்களை நோக்கி அவன் வருவான். இத்தத்துவத்தை நிலைநாட்டவே,

திரிசடையின்
தந்தை -
வீடனின்
வழி -

தரையிறங்கி -
திருவரங்கத்தை -
தனக்குரிய
திருத்தலமாய்ப் பண்ணினான்!
....
உறங்குதேபோல
உறங்குகின்றான்!

கடல் நடுவே படுத்தவன் -
காவிரி நடுவே படுத்தானெனில்...

சேயின்
சேமங் கருதி - நோன்பிருக்கும்
தாயின்
தண்ணளியல்லவா அது;
....
'ரங்கராஜா! - எங்கள்
ரங்கராஜா!'

என்று
ஏழையோ பாழையோ
எவராயினும் சரி - அவன்
எதிர்நின்று விளிக்க...

'உங்க ராஜா! – நான்
உங்க ராஜா!'

என -
எழுந்தோடிவந்து...

உறுகண் போக்குகிறான் - அவர்
உள்ளங்கள் களிக்க;
கண்ணோரத்தில் - ஆனந்தக்
கண்ணீர் துளிக்க!

அடுத்து அரங்கநாயகியைப் பற்றி பேசத் தொடங்குகின்றார்.

ரங்கராஜன் இப்படி!
ரங்கநாயகி எப்படி?

தாயார் -
தானிருக்கும்...

வீட்டு
வாசல் தாண்டி -
வெளியே
வைத்ததில்லை ஒரு தப்படி!

படி தாண்டாமலே
பார்க் கெல்லாம் -
படியளக்கும்
பத்தினி;

பிராட்டி
பார்வை பட்டாலே -
படிமிசை நில்லாது
பஞ்சம் பட்டினி!

நம்பினார்க்கு
நலஞ்சேர்ப்பதில் -
நாயகனை மிஞ்சியவள்
நாயகி;

நீல —
நயனங்கள் வழி...
பிரவாகமாய்ப்
பெருந்தயையைப் -
பீச்சி நின்றிருக்கும்
நாச்சி!

வினை
வெப்பத்தில் -
வெந்து
வதங்கி -

தன் -
திருவோலக்கத்திற்கு...

வருகை புரிவார்
விழிநீர் துடைக்கும் - அவளது
இருகை!

பிரகாரம் சுற்றிப்
பிரதட்சிணம் வந்து
பிரார்த்தித்தால்
போதும் -

தொலையும்
தொலை தூரத்திற்கு...

பந்தியில் -
போகாது நெடுநாள்
குந்தியிருக்கும் - எவ்வகைக்
கோதும்!

யாமுனரின் 'ஸ்தோத்ர ரத்ன' எனும் எட்டுச் சுலோகங்களையும், பெரியநம்பி சேவித்துக் கொண்டிருந்ததைச் செவிமடுத்தநிலையில் பேசுகிறார்:

பரமேட்டியின்
பரம காருண்யம் பேசின;

பிரபத்தி செய்து
பிறப்பறுக்காதார் தமது -
பேதைமையை - அவை
பெரிதும் ஏசின;

ஓரளவுக்கு மேல் - அந்த
ஒருவனின் பிரபாவத்தை

ஓத வார்த்தை இல்லையே என்று -
ஓர்ந்து அக்கவிகள் கூசின!

பிரளய பாலத்தில் - வட
பத்திரம்மேல் படுப்பவனை;
பொய்த் துயில் -
போக்கிப் பின்...

உண்ட
உலகங்களை -
உதரத்திலிருந்து மீண்டும்
உமிழ்ந்து வெளி எடுப்பவனை!

அட்டாட்சரம் அறிவாரின்
ஆயுள் துணையாய் அடுப்பவனை;

முண்டகப் பதங்கள்
மூசிக்கிடப்பார் தமது -
முன்னைப் பழவினைகள்
முற்றுங் களைந் தெடுப்பவனை;

வரிக்கு வரி

வரிக்கு வரி -
வாழ்த்தி
வந்தித்து...

எழுதப் பெற்ற
எழுத்துகள் அவை;

எதைப் பேசினாலும், எப்படிப் பேசினாலும், அது இறைவனைப் பற்றி இருப்பின் அப்பொழுது வாலியார் தம்மையே மறந்து விடுகின்றார்; அவர்தம் பேனாவும் அவர்தம் பக்தியை அழகிய சொற்களால் எழுதிச் செல்கின்றன. அத்தகைய பெருமைகளை என்றும் வாழ்த்திக் கொண்டே இருக்கும் வைணவ உலகம்; வைணவ சீலர்கள் <u>அவர் நெடுநாள் வாழ்ந்து</u>✱ வைணவப் பணியை தொடர்ந்து நிறைவேற்ற வேண்டுமென்று ஆசி கூறிக் கொண்டே இருப்பார்கள்.

ஸ்ரீமதே இராமானுஜாய நம:

<u>குறிப்பு:</u>


1. பல ஆண்டுகட்கு முன் தாடியில்லா நிலையில் ஒரு படத்தில் நடித்ததும், அதில் Action, Action என்று சொன்னது இன்னும் என் மனத்தில் பசுமையாய் உள்ளது.

....

✱ இம்மதிப்பீடு, பேராசிரியரால் 2005-ல் எழுதப்பெற்றது; கவிஞர் வாலியின் மறைவு: 18 சூலை 2013.

****


Templesonnet.com



இராமானுஜர் 1000

கவிஞர் **வாலி**யின்

இராமானுஜ காவியம் - ஒரு மதிப்பீடு

இயல் ~ 10

முடிப்புரை



ந சுப்பு ரெட்டியார் 100



இயல் – 10

முடிப்புரை

தமிழ் இலக்கிய உலகிற்குப் புதுக்கவிதை ஒரு புதுவாழ்வு. அதனைப் பல்கலைப் பேராசிரியர்கள் இன்னும் உணரவில்லை. பல்லாண்டுகட்கு முன்னரே ***'புதுக்கவிதை - போக்கும் நோக்கும்'*** (1983) என்ற ஒரு நூல் எழுதி தமிழுலகில் உலவ விட்டுள்ளேன். மாணாக்கர்கள் புதுக்கவிதைகளை விரும்புகின்றனர். நாள், வார, திங்கள் முதலிய பருவ இதழ்களில் அடிக்கடி புதுக்கவிதைகள் மின்வெட்டு போல் தலைகாட்டத்தான் செய்கின்றன. கவிஞர் வாலி, கவிப்பேரரசு வைரமுத்து போன்றவர்கள் புதுக்கவிதைகளைப் படைப்பதில் நிலையான பணியைப் புரிந்து வருகின்றனர்.

இந்த நூலை ஆழந்து கற்ற பிறகு நம் மனத்தில் முதலில் தோன்றுவது அதன் சொல்வளம். மரபுக்கவிதையில்தான் சொல்வளம் நிரம்பக் காணப் பெறும் என்ற ஒரு கருத்து புலவர்களிடையே உண்டு. வல்லவனாக இருப்பின் புதுக் கவிஞர்களிடையேயும் சொல்வளம் இருப்பதைக் காணலாம்.

(1) வாலியார் அய்யங்கார் மரபைச் சார்ந்தவராதலால் அம்மரபினரிடையே நிலவும் சொற்களும், சொற்றொடர்களும் அவர் அறியாமலேயே இடம் பெற்று விடுகின்றன. 'ஏகத்துக்கு', 'சகட்டு மேனிக்கு', 'மருமான் பிள்ளை', 'உசத்தி', 'திவ்வியமாக', 'கடுக்கண்' (எல்லா வைணவர்கள் காதில் திகழ்வது), 'சோமன்', 'வித்தாரம்', 'பிள்ளையாண்டான்' 'சேவிந்து' 'நாட்டுப் பெண்', 'மாட்டுப் பெண்', முட்டை (கரண்டி), முதலியன.

(2) பேச்சு வழக்கில் அடிபடும் சொற்களும் இடம் பெறுகின்றன. 'மூச்சுடும்' 'அக்கடா' 'கண்ணா மூச்சி', 'பச்சாதாபம்', 'தேசந்தாரிகள்'', 'நித்தியப்படி', 'அப்பட்டமாய்', 'தென்படுதல்', 'அனாவசியம்', 'பிற்பாடு', 'குக்கிராயம்,' 'கொஞ்ச நஞ்சம்', 'கூச்சம்', 'தகவல்', அனுசரணை' 'நொடித்துப் போய்' , 'தூக்கிவாரிப் போட்டு', 'பேச்சு மூச்சு', 'அதிகபட்சம்', 'குறைந்தபட்சம்', 'மூக்குமுழி', 'விசிராந்தியாய்', 'கண்மணி', 'அலாக்காக' முதலியனவையாகும். இவை அனாயாசமாக விழுபவை.

(3) **இலக்கியச் சொற்கள்:** ‘ஆனனம்’, ‘செக்கர் மேனி’, ‘தடக்கை’, ‘பழமறை’, ‘பலாச்சுளைத் தமிழ்’, ‘கன்னித்தமிழ்’,’ வெண்மை’ (புல்லரிவான்மை பொருளில்), ‘தமிழ்த்தேன்’, ‘திருவோலக்கம், ‘ஏகாலி’, ‘ஈரங்கொல்லி முதலியவை. இவை கவிஞரின் சிந்தனையிலிருந்து விழுபவை.

(4) **சமயம், தத்துவம் பற்றியவை:** ‘வேதவித்து’, ‘நம்பிகள்’, ‘சரண் புகுதல்’, ‘பிரபத்தி’ ‘நெடுஞ்சாண்’, ‘கிடையாய்’, ‘இணையடி’, ‘பஞ்ச சம்ஸ்காரம்’, ‘அடியேன்’, ‘துவாதச புண்டரம்’ ‘தண்டனிட்டு’, ‘அன்னசேஷம்’ முதலியவை. இவையும் சிந்தனையிலிருந்து நழுவியவை.

இந்தத் திறனாய்வு நூலில் **முதல்** இயலில் காவியங்கள் பொதுவாகத் தொடங்கப் பெறும். மரபினையொட்டிக் கவிஞர் வாலி தம் காவியத்தைத் தொடங்கியுள்ளார் என்பது காட்டப் பெற்றுள்ளது. காவியங்களும், புராணங்களும், இறைவன், மனிதன், யாகம் போன்ற கற்பனைத் தொடர்புடன் தொடங்கும் மரபு சுட்டப் பெற்றுள்ளது. இராமாநுஜர் ஓர் அவதார புருஷனாகக் காட்டப் பெற்றுள்ளார்.

இயல் **இரண்டில்** இராமாநுஜரும் அவர்தம் துணைவியார் தஞ்சமாம்பாளும் தலைமைக் காவியமாந்தர்களாகச் சுட்டிக் காட்டி ஆராயப் பெற்றுள்ளனர். இராமாநுஜருக்கு நல்ல துணைவி வாய்க்கவில்லை. “இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை… இல்லாள் சரியாக அமையாவிடில் கூறாமல் சந்நியாசம் கொள்’ என்பது ஓர் உண்மையாக அமைகின்றது. இதனால் வைணவம் இன்றளவும் அழியா வாழ்வு பெற்றுத் திகழ்கினறது.

இயல் **மூன்றில்** நாதமுனிகள், திருக்கச்சி நம்பிகள், யாதவப் பிரகாசர், மணக்கால நம்பிகள் துணைக் காவிய மாந்தர்களாக அமைகின்றனர் என்பது விளக்கப் பெற்றுள்ளது.

இயல் **நான்கில்** திருக்கச்சி நம்பிகள், பெரிய நம்பி, திருக் கோட்டியூர் நம்பி, யமுனைத் துறைவர், திருமாலையாண்டான், திருமலை நம்பி ஆகிய அறுவர் உடையவருக்கு ஆசாரியர்களாக அமைந்த முறை எடுத்துக்காட்டப்பெற்று விளக்கப் பெற்றுள்ளது.

இயல் **ஐந்தில்** முதலியாண்டான், கூரேசன், யாதவப் பிரகாசர், உறங்காவில்லி – பொனாட்சி, வில்லியின் மருமக்கள் இருவர், அரசன் அகளங்கன், கொங்குப் பிராட்டி, அனந்தாழ்வான், வரதாழ்வான், கோவிந்தன் - அவன் மனைவி, காஷ்மீரத்து அரசன், நல்லான்

சக்கரவர்த்தி விஷ்ணுவர்த்தனன், தொண்டனூர் நம்பி ஆகியோர் எதிராஜரின் சீடர்களாக அமைந்த சந்தர்ப்பங்களும் முறையும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளன.

இயல் **<u>ஆறில்</u>** கடவுள்கள், இயற்கை, (இயல்பானவை, ஊர் பற்றியவை), ஆண்மக்கள் (பலர்), பெண்மக்கள் (பலர்), பொதுமைகள் என்ற தலைப்புகளில் கவிஞர் வாலியாரின் வருணனைத்திறன் மிகமிக விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. இதற்குப் புதுக்கவிதை வளைந்து வளைந்து அற்புதமாக இடங்கொடுத்திருப்பதை வாசகர்கள் உச்சிமேல் கைவைத்து வாலியாரின் அற்புதத் திறனை மெச்ச வேண்டும். இந்த இயல் பன்முறை படித்து அநுபவிக்க வேண்டியது.

இயல் **<u>ஏழில்</u>** காவியத்தில் ஆங்காங்கு மின்வெட்டு போல் ஒளிரும் பல்வேறு தத்துவக் குறிப்புகள் பாங்குடன் திகழ்வது சுட்டி விளக்கப்பெற்றுள்ளது.

இயல் **<u>எட்டில்</u>** பலவகையாகத் தென்படும் ஆசாரியனின் பெருமை, சிவனா-திருமாலா, திருக்குறள் ஆட்சி, சாதி சமயக் கிறுக்குகள், தமிழ் எதிர்ப்புக்கு எதிர்ப்பு இல்லாத அவலநிலை, கணவன் - மனைவி, இலக்கிய ரசனை, கணவன்-மனைவி நல்லுறவுகள், காசியாத்திரை, உவமை-உருவகம் பற்றி, உடையவர் மீது வாலியாரின் ஈடுபாடு (15 இடங்கள்) ஆகியவை விரிவாக எடுத்துக்காட்டப்பெற்று விளக்கப் பெற்றுள்ளன.

இயல் **<u>ஒன்பதில்</u>** கவிஞர் வாலியாரின் இறை ஈடுபாட்டின்பம் விரிவாக விளக்கப் பெற்றுள்ளமையும் வைணவ உலகம் அப்பெருமைகளை வாழ்த்திக் கொண்டிருப்பதையும் காணலாம்.

சிறு வயது முதற்கொண்டே தந்தை பெரியார், இராமாநுஜர் ஆகிய இருவர் மீதும் மிக்க ஈடுபாடும், மரியாதையும், பக்தியும் அடியேன் பால் உண்டு. அந்த அடிப்படையில் (இ)ராமாநுஜ காவியத்தை உள்ளம் உருகி, கண்ணீர் பெருக்குடன் அநுபவித்தேன். அந்த அரிய அநுபவமே இந்நூல் தோற்றமாக அமைந்தது.

****


Ramanujar '1000



இராமானுஜர் 1000

கவிஞர் **வாலி**யின்

இராமானுஜ காவியம் - ஒரு மதிப்பீடு

பின்னிணைப்புகள்

I பயன்பட்ட நூல்கள்

II கவிஞர் வாலியின் இராமானுஜ காவியத்தின்
உள்ளடக்கம்

III திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த
இராமானுஜ நூற்றந்தாதி



ந சுப்பு ரெட்டியார் 100



பின்னிணைப்பு – I

பயன்பட்ட நூல்கள்

வ.எண்	நூல்களின் பெயர்கள்
01	ஆழ்வார்கள் *நாலாயிர திவ்வியப் பிரபந்தம்*
02	கம்பர் *கம்பராமாயணம்* (வை.மு.கோ.பதிப்பு)
03	சுப்பு ரெட்டியார், ந *பாட்டுத்திறன்* *பாவேந்தர் பாட்டுத்திறன்* *பாண்டியன் பரிசு - ஒரு மதிப்பீடு* *கவிஞர் வாலியின் அவதார புருஷன் - ஒரு மதிப்பீடு* *கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி - ஒரு மதிப்பீடு*
04	தண்டியார் *தண்டியலங்காரம்*
05	தாயுமானவ அடிகள் *தாயுமானவர் பாடல்கள்*
06	திரு.வி.க. *முருகன் அல்லது அழகு*
07	பவணந்தியார் *நன்னூல் - காண்டிகை* (ஆறுமுக நாவலர் பதிப்பு)
	பாரதியார் *பாரதியார் பாடல்கள்*
09	பாரதிதாசன் *பாரதிதாசன் கவிதைகள்* *அழகின் சிரிப்பு* *எதிர்பாரா முத்தம்*
10	பிள்ளை உலக ஆசிரியர் *மூமுட்சுப்படி* (பி.ப.அண்ணாசாமி பதிப்பு)
11	கவிஞர் வாலி *ராமானுஜ காவியம்*
12	வில்லிபுத்தூராழ்வார் *வில்லிபாரதம்*
13	வேதாந்த தேசிகர் *தேசிகப் பிரபந்தம்*
14	The Practical Criticism
15	Principles of Literary Criticism

பின்னிணைப்பு ~ II

கவிஞர் **வாலி**யின் **இராமாநுஜ காவிய**த்தின்

உள்ளடக்கம்

பின்னிணைப்பு ~ III



திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த

இராமாநுஜ நூற்றந்தாதி

1 பூ மன்னு மாது பொருந்திய மார்பன் புகழ் மலிந்த
பா மன்னு மாறன் அடி பணிந்து உய்ந்தவன் பல்கலையோர்
தாம் மன்ன வந்த இராமானுசன் சரணாரவிந்தம்
நாம் மன்னி வாழ நெஞ்சே! சொல்லுவோம் அவன் நாமங்களே.

2. கள்ளார் பொழில் தென் அரங்கன் கமலப் பதங்கள் நெஞ்சில்
கொள்ளா மனிசரை நீங்கிக் குறையல் பிரான் அடிக்கீழ்
விள்ளாத அன்பன் இராமானுசன் மிக்க சீலம் அல்லால்
உள்ளாது என் நெஞ்சு ஒன்றறியேன் எனக்கு உற்ற பேரியல்வே.

3. பேரியல் நெஞ்சே அடி பணிந்தேன் உன்னைப் பேய்ப்பிறவி
பூரியரோடுள்ள சுற்றம் புலர்த்திப் பொருவரும் சீர்
ஆரியன் செம்மை இராமானுச முனிக்கு அன்பு செய்யும்
சீரிய பேறு உடையார் அடிக்கீழ் என்னைச் சேர்த்ததற்கே.

4. என்னைப் புவியில் ஒரு பொருளாக்கி மருள் சுரந்த
முன்னைப் பழைவினை வேரறுத்து ஊழி முதல்வனையே
பன்னப் பணித்த இராமானுசன் பரன் பாதமும் என்
சென்னித் தரிக்க வைத்தான் எனக்கு ஏதும் சிதைவு இல்லையே.

5. எனக்குற்ற செல்வம் இராமானுசன் என்று இசையகில்லா
மனக்குற்ற மாந்தர் பழிக்கில் புகழ் அவன் மன்னிய சீர்
தனக்குற்ற அன்பர் அவன் திருநாமங்கள் சாற்றும் என்பா
இனக்குற்றம் காண்கில்லார் பத்தியேய்ந்த இயல்விதென்றே.

6. இயலும் பொருளும் இசையத் தொடுத்து ஈன்கவிகள் அன்பால்
மயல் கொண்டு வாழ்த்தும் இராமானுசனை மதி இன்மையால்
பயிலும் கவிகளில் பத்தி இல்லாத என் பாவி நெஞ்சால்
முயல்கின்றனன் அவன் தன் பெரும் கீர்த்தி மொழிந்திடவே.

7. மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சம் முக்குறும்பாம்
குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடியபின்
பழியைக் கடத்தும் இராமானுசன் புகழ்பாடி அல்லா
வழியைக் கடத்தல் எனக்கு இனியாது வருத்தமன்றே.

8. வருத்தும் புறவிருள் மாற்ற எம்பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத்
திரித்து அன்று எரித்த திருவிளக்கைத் தன் திருவுள்ளத்தே
இருத்தும் பரமன் இராமானுசன் எம் இறையவனே.

9. இறைவனைக் காணும் இதயத்து இருள்கெட ஞானம் என்னும்
நிறைவிளக்கு ஏற்றிய பூதத்திருவடித்தாள்கள் நெஞ்சத்து
உறைய வைத்தாளும் இராமானுசன் புகழ் ஓதும் நல்லோர்
மறையினைக் காத்து இந்த மண்ணகத்தே மன்ன வைப்பவரே.

10.மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலுள் மாமலராள்
தன்னொடும் ஆயனைக் கண்டமை காட்டும் தமிழ்த் தலைவன்
பொன்னடி போற்றும் இராமானுசற்கு அன்பு பூண்டவர் தாள்
சென்னியில் சூடும் திருவுடையார் என்றும் சீரியரே.

11.சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழால் அளித்த
பார் இயலும் புகழ்ப் பாண்பெருமாள் சரணாம் பதுமத்தார்
இயல் சென்னி இராமானுசன் தன்னைச் சார்ந்தவர்தம்
காரிய வண்மை என்னால் சொல்லொணாது இக்கடலிடத்தே.

12.இடம் கொண்ட கீர்த்தி மழிசைக்கு இறைவன் இணை அடிப்போது
அடங்கும் இதயத்து இராமானுசன் அம்பொற்பாதம் என்றும்
கடம் கொண்டு இறைஞ்சும் திருமுனிவர்க்கன்றி காதல் செய்யாத்
திடம் கொண்ட ஞானியர்க்கே அடியேன் அன்பு செய்வதுவே.

13.செய்யும் பசும்துளவத் தொழில் மாலையும் செந்தமிழில்
பெய்யும் மறைத் தமிழ் மாலையும் பேராத சீர் அரங்கத்து
ஐயன் கழற்கணியும் பரன் தாளன்றி ஆதரியா
மெய்யன் இராமானுசன் சரணே கதி வேறெனக்கே.

14.கதிக்குப் பதறி வெங்கானமும் கல்லும் கடலும் எல்லாம்
கொதிக்கத் தவம் செய்யும் கொள்கையற்றேன் கொல்லிகாவலன் சொல்
பதிக்கும் கலைக் கவிபாடும் பெரியவர் பாதங்களே
துதிக்கும் பரமன் இராமானுசன் என்னைச் சோர்விலனே.

15.சோராத காதல் பெருஞ்சுழிப்பால் தொல்லை மாலை ஒன்றும்
பாராது அவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன் தாள்
பேராத உள்ளத்து இராமானுசன் தன் பிறங்கிய சீர்
சாரா மனிசரைச் சேரேன் எனக்கு என்ன தாழ்வினியே.

16.தாழ்வு ஒன்றில்லா மறை தாழ்ந்து தலமுழுதும் கலியே
ஆள்கின்ற நாள் வந்து அளித்தவன் காண்மின் அரங்கர் மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்ற வள்ளல் இராமானுசன் என்றும் மாமுனியே.

17.முனியார் துயரங்கள் முந்திலும் இன்பங்கள் மொய்த்திடினும்
கனியார் மனம் கண்ணமங்கை நின்றானை கலை பரவும்
தனி ஆனையைத் தண் தமிழ் செய்த நீலன் தனக்கு உலகில்

இனியானை எங்கள் இராமானுசனை வந்து எய்தினரே.

18.எய்தற்கரிய மறைகளை ஆயிரம்இன் தமிழால்
செய்தற்கு உலகில் வரும் சடகோபனை சிந்தனையுள்ளே
பெய்தற்கு இசையும் பெரியவர் சீரை உயிர்கள் எல்லாம்
உய்தற்கு உதவும் இராமானுசன் எம் உறுதுணையே.

19.உறு பெறும் செல்வமும் தந்தையும் தாயும் உயர் குருவும்
வெறிதரு பூமகள் நாதனும் மாறன் விளங்கிய சீர்
நெறி தரும் செந்தமிழ் ஆரணமே என்று இந்நீணிலத்தோர்
அறி தர நின்ற இராமானுசன் எனக்கு ஆரமுதே.

20.ஆரப்பொழில் தென்குருகைப் பிரான் அமுதத் திருவாய்
ஈரத் தமிழின் இசை உணர்ந்தோர்கட்கு இனியவர்தம்
சீரைப் பயின்று உய்யும் சீலம் கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப் பருகும் இராமானுசன் எந்தன் மாநிதியே.

21.நிதியைப் பொழியும் முகில் என்று நீசர்தம் வாசல் பற்றித்
துதிகற்று உலகில் துவள்கின்றிலேன் இனி தூய்நெறி சேர்
எதிகட்கு இறைவன் யமுனைத்துறைவன் இணை அடியாம்
கதி பெற்றுடைய இராமானுசன் என்னைக் காத்தனனே.

22.கார்த்திகையானும் கரிமுகத்தானும் கனலும் முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு மூவுலகும்
பூத்தவனே! என்று போற்றிட வாணன் பிழை பொறுத்த
தீர்த்தனை ஏத்தும் இராமானுசன் எந்தன் சேமவைப்பே.

23.வைப்பாய வான் பொருளென்று நல்லன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்கும் இராமானுசனை இருநிலத்தில்
ஒப்பாரில்லாத உறுவினையேன் வஞ்ச நெஞ்சில் வைத்து
முப்போதும் வாழ்த்துவன் என்னாம் இது அவன் மொய்புகழ்க்கே?

24.மொய்த்த வெந்தீவினையால் பல்லுடல் தொறும் மூத்து அதனால்
எய்த்தொழிந்தேன் முனநாள்கள் எல்லாம் இன்று கண்டு உயர்ந்தேன்
பொய்த்தவம் போற்றும் புலைச் சமயங்களில் நிலத்தவியக்
கைத்த மெய்ஞ்ஞானத்து இராமானுசன் என்னும் கார் தன்னையே.

25.காரேய் கருணை இராமானுச இக் கடலிடத்தில்
ஆர் அறிபவர் நின் அருளின் தன்மை? அல்லலுக்கு
நேரே உறைவிடம் நான் வந்து நீ என்னை உய்த்தபின் உன்
சீரே உயிர்க்கு உயிராய் அடியேற்கு இன்று தித்திக்குமே.

26.திக்குற்ற கீர்த்தி இராமானுசனை என் செய்வினையாம்
மெய்குற்றம் நீக்கி விளங்கிய மேகத்தை மேவு நல்லோர்
எக்குற்றவாளர் எது பிறப்பு ஏதியல்வாக நின்றோர்
அக்குற்றம் அப்பிறப்பு அவ்வியல்வே நம்மை ஆட்கொள்ளுமே.

27.கொள்ளக் குறைவு அற்று இலங்கி கொழுந்துவிட்டு ஓங்கிய உன்
வள்ளல் தனத்தினால் வல்வினையேன் மனம்நீ புகுந்தாய்
வெள்ளைச் சுடர்விடும் உன் பெருமேன்மைக்கு இழுக்கு இதென்று
தள்ளுற்று இரங்கும் இராமானுச என் தனி நெஞ்சமே.

28.நெஞ்சில் கறைகொண்ட கஞ்சனைக் காய்ந்த நிமலன் நங்கள்

பஞ்சி திருவடிப் பின்னைதன் காதலன் பாதம் நண்ணா
வஞ்சகர்க்கு அரிய இராமானுசன் புகழ் அன்றி என்வாய்
கொஞ்சிப் பரவகில்லாது என்ன வாழ்வு இன்று கூடியதே.

29.கூட்டும் விதி என்று கூடுங்கொலோ? தென்குருகைப்பிரான்
பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ் தன்னை தன் பத்தி என்னும்
வீட்டின் கண்வைத்த இராமானுசன் புகழ் மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள் தன்னை என் நாட்டங்கள் கண்டு இன்பம் எய்திடவே.

30.இன்பம்தரு பெருவீடு வந்தெய்திலென்? எண்ணிறந்த
துன்பம்தரு நிரயம்பல சூழிலென்? தொல் உலகில்
மன் பல் உயிர்கட்கு இறைவன் மாயன் என மொழிந்த
அன்பன் அனகன் இராமானுசன் என்னை ஆண்டனனே.

31.ஆண்டுகள் நாள் திங்களாய் நிகழ் காலம் எல்லாம் மனமே!
ஈண்டு பல்யோனிகள் தோறு உழல்வோம் இன்று ஓர் எண்ணின்றியே
காண்தகு தோள் அண்ணல் தென் அத்தியூரர் கழலிணைக்கீழ்
பூண்ட அன்பாளன் இராமானுசனைப் பொருந்தினமே.

32.பொருந்திய தேசும் பொறையும் திரலும் புகழும் நல்ல
திருந்திய ஞானமும், செல்வமும் சேரும் செறு கலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்து எடுத்து அளித்த
அருந்தவன் எங்கள் இராமானுசனை அடைபவர்க்கே.

33.அடை ஆர் கமலத்து அலர்மகள் கேள்வன் கை ஆழி என்னும்
படையோடு நாந்தகமும் படர் தண்டும் ஒண் சார்ங்கவில்லும்
புடை ஆர் புரிசங்கமும் இந்தப் பூதலப் காப்பதற்கு என்று
இடையே இராமானுச முன் ஆயின இந்நிலத்தே.

34.நிலத்தைச் செறுத்து உண்ணும் நீசக்கலியை நினைப்பரிய
பலத்தைச் செறுத்தும் பிறங்கியதில்லை என் பெய் வினை தென்
புலத்தில் பொறித்த அப்புத்தகச் சும்மை பொறுக்கியபின்
நலத்தைப் பொறுத்தது இராமானுசன் தன் நயப்புகழே.

35.நயவேன் ஒருதெய்வம் நானிலத்தே சில மானிடத்தைப்
புயலே எனக் கவிபோற்றி செய்யேன் பொன் அரங்கமென்னில்
மயலே பெருகும் இராமானுசன் மன்னு மா மலர்த்தாள்
அயரேன் அருவினை என்னை எவ்வாறு இன்று அடர்ப்பதுவே?

36.அடல்கொண்ட நேமியன் ஆருயிர் நாதன் அன்று ஆரணச்சொல்
கடல் கொண்ட ஒண்பொருள் கண்டளிப்ப பின்னும் காசினியோர்
இடரின்கண் வீழ்ந்திடத்தானும் அவ்வொண்பொருள் கொண்டு அவர்பின்
படரும் குணன் எம் இராமானுசன்தன் படி இதுவே.

37.படி கொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பத்தி வெள்ளம்
குடி கொண்ட கோயில் இராமானுசன் குணம் கூறும் அன்பர்
கடி கொண்ட மாமலர்த்தாள் கலந்து உள்ளம் கனியும் நல்லோர்
அடி கண்டு கொண்டு உகந்து என்னையும் ஆளவர்க்கு ஆக்கினரே.

38.ஆக்கி அடிமைநிலைப் பித்தனை என்னை இன்று அவமே
போக்கிப் புறத்திட்டது என்பொருளா முன்பு புண்ணியர்தம்
வாக்கில் பிரியா இராமானுச நின் அருளின் வண்ணம்
நோக்கில் தெரிவரிதால் உரையாய் இந்த நுண்பொருளே.

39.பொருளும் புதல்வரும் பூமியும் பூங்குழலாரும் என்றே
மருள் கொண்டு இளைக்கும் நமக்கு நெஞ்சே மற்றுளார் தரமோ?
இருள் கொண்ட வெந்துயர் மாற்றித் தன்னீறில் பெரும் புகழே
தெருளும் தெருள் தந்து இராமானுசன் செய்யும் சேமங்களே.

40.சேமநல் வீடும் பொருளும் தருமமும் சீரியநற்
காமமும் என்றிவை நான்கு என்பர் நான்கினும் கண்ணனுக்கே
ஆமது காமம் அறம் பொருள் வீடு இதற்கென்று உரைத்தான்
வாமனன் சீலன் இராமானுசன் இந்த மண் மிசையே.

41.மண்மிசை யோனிகள்தோறும் பிறந்து எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும் காணகில்லா உலகோர்கள் எல்லாம்
அண்ணல் இராமானுசன் வந்து தோன்றிய அப்பொழுதே
நண்ணருஞானம் தலைக் கொண்டு நாரணற்கு ஆயினரே.

42.ஆயிழையார் கொங்கை தங்கும் அக்காதல் அளது அழுந்தி
மாயும் என்னாவியை வந்து எடுத்தான் இன்று மாமலராள்
நாயகன் எல்லா உயிர்கட்கும் நாதன் அரங்கன் என்னும்
தூயவன் தீது இல் இராமானுசன் தொல் அருள் சுரந்தே.

43.சுரக்கும் திருவும் உணர்வும் சொல்லப்புகில் வாயமுதம்
பரக்கும் இருவினை பற்றறவோடும் படியில் உள்ளீர்
உரைக்கின்றனன் உமக்கு யான் அறம் சீறும் உறுகலியைத்
துரக்கும் பெருமை இராமானுசன் என்று சொல்லுமினே.

44.சொல்லால் தமிழ் ஒரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லை
இல்லா அறநெறி யாவும் தெரிந்தவன் எண்ணரும் சீர்
நல்லார் பரவும் இராமானுசன் திருநாமம் நம்பிக்
கல்லார் அகல் இடத்தோர் எது பேறு என்று காமிப்பரே.

45.பேறு ஒன்றும் மற்றில்லை நின் சரண் அன்றி அப்பேறு அளித்தற்கு
ஆறு ஒன்றும் இல்லை மற்றச் சரணன்றி என்று இப்பொருளைத்
தேறும் அவர்க்கும் எனக்கும் உனைத்தந்த செம்மை சொல்லால்
கூறும் பரம் அன்று இராமானுசா மெய்ம்மை கூறிடிலே.

46.கூறும் சமயங்கள் ஆறும் குலைய குவலயத்தே
மாறன் பணித்த மறை உணர்ந்தோனை மதியிலியேன்
தேறும்படி என் மனம் புகுந்தானைத் திசை அனைத்தும்
ஏறும் குணனை இராமானுசனை இறைஞ்சினமே.

47.இறைஞ்சப்படும் பரன் ஈசன் அரங்கன் என்று இவ்வுலகத்து
அறஞ்செப்பும் அண்ணல் இராமானுசன் என் அருவினையின்
திறஞ்செற்று இரவும் பகலும் விடாது என்தன் சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தான் எனக்கு ஆறும் நிகரில்லையே.

48.நிகரின்றி நின்ற என் நீசதைக்கு நின் அருளின் கணன்றிப்
புகல் ஒன்றும் இல்லை அருட்கும் அஃதே புகல் புன்மையிலோர்
பகரும் பெருமை இராமானுச இனி நாம் பழுதே
அகலும் பொருளேன் பயன் இருவோமுக்கும் ஆன பின்னே.

49.ஆனது செம்மை அறநெறி பொய்ம்மை அறுசமயம்
போனது பொன்றி இறந்தது வெங்கலி பூங்கமலத்
தேனதிபாய் வயல் தென் அரங்கன் கழல் சென்னி வைத்துத்

தானதில் மன்னும் இராமானுசன் இத்தலத்து உதித்தே.

50.உதிப்பன உத்தமர் சிந்தையுள் ஒன்னலர் நெஞ்சம் அஞ்சிக்
கொதித்திட மாறி நடப்பன கொள்ளைவன் குற்றம் எல்லாம்
பதித்த என் புன்கவிப் பாவினம் பூண்டன பாவு தொல்சீர்
எதித்தலை நாதன் இராமானுசன் தன் இணை அடியே.

51.அடியைத் தொடர்ந்து எழும் ஐவர்கட்காய் அன்று பாரதப்போர்
முடியப் பரிநெடும் தேர்விடும் கோனை முழுது உணர்ந்த
அடியர்க்கமுதம் இராமானுசன் என்னை ஆள வந்து இப்
படியில் பிறந்தது மற்றில்லை காரணம் பார்த்திடிலே.

52.பார்த்தான் அறுசமயங்கள் பதைப்ப இப்பார் முழுதும்
போர்த்தான் புகழ் கொண்டு புன்மையினேன் இடைத்தான் புகுந்து
தீர்த்தான் இருவினை தீர்த்து அரங்கன் செய்ய தாள் இணையோடு
ஆர்த்தான் இவைஎம் இராமானுசன் செய்யும் அற்புதமே.

53.அற்புதம் செம்மை இராமானுசன் என்னை ஆளவந்த
கற்பகம் கற்றவர் காமுறு சீலன் கருதரிய
பற்பல்லுயிர்களும் பல்லுலகு யாவும் பரனதென்னும்
நற்பொருள் தன்னை இந்நானிலத்தே வந்து நாட்டினனே.

54.நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது தென்குருகை வள்ளல்
வாட்டம் இலா வண்தமிழ் மறை வாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டிய சீலத்து இராமானுசன் தன் இயல்வு கண்டே.

55.கண்டவர் சிந்தை கவரும் கடிபொழில் தென்னரங்கன்
தொண்டர் குலாவும் இராமானுசனை தொகையிறந்த
பண்தரு வேதங்கள் பார் மேல் நிலவிடப் பார்த்தருளும்
கொண்டலை மேவித் தொழும் குடியாம் எங்கள் கோக்குலமே.

56.கோக்குல மன்னரை மூவெழுகால் ஒரு கூர்மழுவால்
போக்கிய தேவனைப் போற்றும் புனிதன் புவனம் எங்கும்
ஆக்கிய கீர்த்தி இராமானுசனை அடைந்தபின் என்
வாக்கு உரையாது என் மனம் நினையாது இனி மற்றொன்றையே.

57.மற்றொரு பேருமதியாது அரங்கன் மலரடிக்கு ஆள்
உற்றவரே தனக்கு உற்றவராக் கொள்ளும் உத்தமனை
நல்தவர் போற்றும் இராமானுசனை இந்நானிலத்தே
பெற்றனன் பெற்றபின் மற்றறியேன் ஒரு பேதைமையே.

58.பேதையர் வேதப்பொருள் இதென்று உன்னி பிரமம் நன்றென்று
ஓதி மற்றெல்லா உயிரும் அஃது என்று உயிர்கள் மெய்விட்டு
ஆதிப்பரனோடு ஒன்றாம் என்று சொல்லும் அவ்வல்லல் எல்லாம்
வாதில் வென்றான் எம் இராமானுசன் மெய்ம்மதிக் கடலே.

59.கடல் அளவாய திசை எட்டின் உள்ளும் கலி இருளே
மிடை தரு காலந்து இராமானுசன் மிக்க நான்மறையின்
சுடர் ஒளியால் அவ்விருளைத் துரந்திலனேல் உயிரை
உடையவன் நாரணன் என்று அறிவாரில்லை உணர்ந்தே.

60.உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும் திருவாய்மொழியின்

மணம் தரும் இன்னிசை மன்னும் இடந்தொறும் மாமலராள்
புணர்ந்த பொன்மார்வன் பொருந்தும் பதிதொறும் புக்கு நிற்கும்
குணம் திகழ் கொண்டல் இராமானுசன் எங்குலக் கொழுந்தே.

61.கொழுந்து விட்டுப் ஓடிப் படரும் வெங்கோள் வினையால் நிரயத்து
அழுந்தி இட்டேனை வந்து ஆட்கொண்ட பின்னும் அருமுனிவர்
தொழும் தவத்தோன் எம் இராமானுசன் தொல்புகழ் சுடர்மிக்கு
எழுந்தது அத்தால் நல் அதிசயங்கண்டது இருநிலமே.

62.இருந்தேன் இருவினைப் பாசம் கழற்றி இன்று யான் இறையும்
வருந்தேன் இனி எம் இராமானுசன் மன்னு மாமலர்த்தாள்
பொருந்தா நிலையுடைப் புன்மையினோர்க்கு ஒன்றும் நன்மை செய்யாப்
பெருந்தேவரைப் பரவும் பெரியோர் தங்கழல் பிடித்தே.

63.பிடியைத் தொடரும் களிறன்ன யான் உன் பிறங்கிய சீர்
அடியைத் தொடரும்படி நல்கவேண்டும் அறுசமயச்
செடியைத் தொடரும் மருள் செறிந்தோர் சிதைந்தோட வந்து இப்
படியைத் தொடரும் இராமானுச! மிக்க பண்டிதனே.

64.பண்தரு மாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய்
விண்டிட எங்கள் இராமானுசமுனி வேழம் மெய்ம்மை
கொண்ட நல்வேதக் கொழுந்தண்டம் ஏந்திக் குவலயத்தே
மண்டி வந்து ஏன்றது வாதியர்காள் உங்கள் வாழ்வு அற்றதே.

65.வாழ்வற்றது தொல்லை வாதியர்க்கு என்றும் மறையவர்தம்
தாழ்வற்றது தவம் தாரணி பெற்றது தத்துவ நூல்
கூழற்றது குற்றம் எல்லாம் பதித்த குணத்தினர்க்கு அந்
நாழற்றது நம் இராமானுசன் தந்த ஞானத்திலே.

66.ஞானம் கனிந்த நலம் கொண்டு நாள்தொறும் நைபவர்க்கு
வானம் கொடுப்பது மாதவன் வல்வினையேன் மனத்தில்
ஈனம் கடிந்த இராமானுசன் தன்னை எய்தினர்க்கு அத்
தானம் கொடுப்பது தன் தகவு என்னும் சரண் கொடுத்தே.

67.சரணம் அடைந்த தருமனுக்கா பண்டு நூற்றுவரை
மரணம் அடைவித்த மாயவன் தன்னை வணங்க வைத்த
கரணம் இவை உமக்கு அன்று என்று இராமானுசன் உயிர்கட்கு
அரண் அங்கு அமைத்திலனேல் அரணார் மற்று இவ்வாருயிர்க்கே.

68.ஆரனெக்கின்று நிகர் சொல்லில் மாயன் அன்று ஐவர் தெய்வத்
தேரினில் செப்பிய கீதையின் செம்மை பொருள் தெரியப்
பார்னில் சொன்ன இராமானுசனைக் பணியும் நல்லோர்
சீரினில் சென்று பணிந்தது என் ஆவியும் சிந்தையுமே.

69.சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து முன் நாள்
அந்தமுற்று ஆழ்ந்தது கண்டு அவை என்றனக்கு அன்று அருளால்
தந்த அரங்கனும் தன் சரண் தந்திலன் தானது தந்து
எந்தை இராமானுசன் வந்து எடுத்தனன் இன்று என்னையே.

70.என்னையும் பார்த்து என் இயல்வையும் பார்த்து எண்ணில் பல்குணத்த
உன்னையும் பார்க்கில் அருள் செய்வதே நலம் அன்றி என்பால்
பின்னையும் பார்க்கில் நலம்முளதே உன் பெரும் கருணை
தன்னை என் பார்ப்பர் இராமானுச உன்னைச் சார்ந்தவரே.

71.சார்ந்தது என் சிந்தை உன் தாளிணைக்கீழ் அன்புதான் மிகவும்
கூர்ந்தது அத்தாமரைத்தாள்களுக்கு உன் தன் குணங்களுக்கே
தீர்ந்தது என் செய்கை முன் செய்வினைநீ செய்வினையதனால்
போர்ந்தது வண்மை இராமானுச! எம்பெருந்தகையே!

72.கைத்தனன் தீயசமயக்கலகரை காசினிக்கே
உயர்த்தனன் தூயமறை நெறி தன்னை என்று உன்னி உள்ளம்
நெய்த்தவன் போடிருந்தேத்தும் நிறைபுகழோருடனே
வைத்தனன் என்னை இராமானுசன் மிக்க வண்மை செய்தே.

73.வண்மையினாலும் தன் மாதகவாலும் மதிபுரையும்
தண்மையினாலும் இத்தாரணியோர்கட்கு தான்சரணாய்
உண்மை நல்ஞானமுரைத்த இராமானுசனையுன்னும்
திண்மையல்லால் எனக்கில்லை மற்றோர் நிலை தேர்ந்திடிலே.

74.தேரார்மறையின் திறமென்று மாயவன் தீயவரைக்
கூராழிகொண்டு குறைப்பது கொண்டலனையவண்மை
ஏரார்குணத் தெம்மிராமானுசன் அவ்வெழில்மறையில்
சேராதவரைச் சிதைப்பது அப்போது ஒரு சிந்தை செய்தே.

75.செய்த்தலைச்சங்கம் செழுமுத்தமீனும் திருவரங்கர்
கைத்தலத்தாழியும் சங்கமும் ஏந்தி நங்கண்முகப்பே
மொய்த்தலைத்து உன்னை விடேனென்றிருக்கிலும் நின்புகழே
மொய்த்தலைக்கும் வந்து இராமானுச! என்னை முற்றும் நின்றே.

76.நின்றவண் கீர்த்தியும் நீள் புனலும் நிறைவேங்கடப் பொற்
குன்றமும் வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும்
உந்தனுக்கு எத்தனையின்பந்தரும் உன் இணைமலர்த்தாள்
எந்தனுக்கும் அது இராமானுச! இவையீந்தருளே.

77.ஈந்தனன் ஈயாத இன்னருள் எண்ணில் மறைக்குறும்பைப்
பாய்ந்தனன் அம்மறைப் பல்பொருளால் இப்படியனைத்தும்
ஏய்ந்தனன் கீர்த்தியினால் என் வினைகளை வேர்பறியக்
காய்ந்தனன் வண்மை இராமானுசற்கு என் கருத்தினியே?

78.கருத்தில் புகுந்து உள்ளில் கள்ளம் கழற்றி கருதரிய
வருத்தத்தினால் மிக வஞ்சித்து நீ இந்த மண்ணகத்தே
திருத்தித் திருமகள் கேள்வனுக்காக்கியபின் என் நெஞ்சில்
பொருத்தப்படாது எம் இராமானுச! மற்றோர் பொய்ப்பொருளே.

79.பொய்யைச்சுரக்கும் பொருளைத் துரந்து இந்தப் பூதலத்தே
மெய்யைப்புரைக்கும் இராமானுசன் நிற்க வேறு நம்மை
உய்யக்கொள்ளவல்ல தெய்வம் இங்கு யாதென்று உலர்ந்து அவமே
ஐயப்படாநிற்பர் வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே.

80.நல்லார்பரவும் இராமானுசன் திருநாமம்நம்ப
வல்லார்திறத்தை மறவாதவர்கள் எவர் அவர்க்கே
எல்லாவிடத்திலும் என்றும் எப்போதிலும் எத்தொழும்பும்
சொல்லால் மனத்தால் கருமத்தினால் செய்வேன் சோர்வின்றியே.

81.சோர்வின்றி உன்தன் துணையடிக்கீழ் தொண்டுபட்டவர்பால்
சார்வின்றி நின்றஎனக்கு அரங்கன் செய்யதாளிணைகள்
பேர்வின்றி இன்று பெறுத்தும் இராமானுச! இனி உன்

சீரொன்றிய கருணைக்கு இல்லைமாறு தெரிவுறிலே.

82.தெரிவுற்றஞானம் செறியப்பெறாது வெந்தீவினையால்
உருவற்ற ஞானத்து உழல்கின்ற என்னை ஒரு பொழுதில்
பொருவற்ற கேள்வியனாக்கி நின்றான் என்ன புண்ணியனோ?
தெரிவுற்ற கீர்த்தி இராமானுசனென்னும் சீர்முகிலே.

83.சீர்கொண்டு பேரறம் செய்து நல்வீடு செறிதுமென்னும்
பார்கொண்ட மேன்மையர் கூட்டனல்லேன் உன்பதயுகமாம்
ஏர்கொண்ட வீட்டை எளிதினில் எய்துவன் உன்னுடைய
கார்கொண்டவண்மை இராமானுச! இது கண்டுகொள்ளே.

84.கண்டுகொண்டேன் என் இராமானுசன் தன்னை காண்டலுமே
தொண்டு கொண்டேன் அவன் தொண்டர் பொற்றாளில் என் தொல்லை வெந்நோய்
விண்டுகொண்டேன் அவன்சீர் வெள்ளவாரியை வாய்மடுத்து இன்று
உண்டு கொண்டேன் இன்னம் உற்றனவோதில் உலப்பில்லையே.

85.ஓதிய வேதத்தின் உட்பொருளாய் அதனுச்சிமிக்க
சோதியை நாதனென அறியாது உழல்கின்ற தொண்டர்
பேதைமை தீர்த்த இராமானுசனைத் தொழும் பெரியோர்
பாதமல்லாமல் எந்தனாருயிர்க்கு யாதொன்றும் பற்றில்லையே.

86.பற்றா மனிசரைப் பற்றி அப்பற்றுவிடாதவரே
உற்றாரெனவுழன்று ஓடிநையேன் இனி ஒள்ளியநூல்
கற்றார்பரவும் இராமானுசனைக் கருதுமுள்ளம்
பெற்றார்யவர் அவர் எம்மை நின்றாளும் பெரியவரே.

87.பெரியவர் பேசிலும் பேதையர் பேசிலும் தன் குணங்கட்கு
உரியசொல் என்றுமுடையவனென்றென்று உணர்வின் மிக்கோர்
தெரியும் வண்கீர்த்தி இராமானுசன் மறைதேர்ந்து உலகில்
புரியும் நல்ஞானம் பொருந்தாதவரைப் பொரும்கலியே.

88.கலிமிக்கசெந்நெல் கழனிக்குறையல் கலைப்பெருமான்
ஓலிமிக்கபாடலை உண்டுதன்னுள்ளம் தடித்து அதனால்
வலிமிக்கசீயம் இராமானுசன் மறைவாதியராம்
புலிமிக்கதென்று இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே.

89.போற்றரும் சீலத்து இராமானுச நின்புகழ்தெரிந்து
சாற்றுவனேல் அது தாழ்வு அதுதீரில் உன் சீர் தனக்கு ஓர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலும் என்மனம் ஏத்தியின்றி
ஆற்றகில்லாது இதற்கு என்னினைவாயென்றிட்டு அஞ்சுவனே.

90.நினைவார்பிறவியை நீக்கும் பிரானை இந்நீள்நிலத்தே
எனையாள வந்த இராமானுசனை இருங்கவிகள்
புனையார், புனையும் பெரியவர்தாள்களில் பூந்தொடையல்
வனையார் பிறப்பில் வருந்துவர் மாந்தர் மருள்சுரந்தே.

91.மருள் சுரந்து ஆகமவாதியார் கூறும் அகப்பொருளாம்
இருள் சுரந்தெய்த்த உலகிருள் நீங்க தன்னீண்டியசீர்
அருள் சுரந்து எல்லாவுயிர்கட்டும் நாதன் அரங்கனென்னும்
பொருள் சுரந்தான் எம் இராமானுசன் மிக்கபுண்ணியனே்

92.புண்ணிய நோன்பு புரிந்துமிலேன் அடிபோற்றிசெய்யும்

நுண்ணருங்கேள்வி நுவன்றுமிலேன் செம்மைநூற்புலவர்க்கு
எண்ணருங்கீர்த்தி இராமானுச! இன்று நீ புகுந்து என்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்ற இக்காரணம் கட்டுரையே.

93.கட்டப்பொருளை மறைப்பொருளென்று கயவர்சொல்லும்
பெட்டைக்கெடுக்கும் பிரானல்லனே? என்பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடு தன்னருளென்று மொள்வாளுருவி
வெட்டிக்களைந்த இராமானுசனென்னும் மெய்த்தவனே.

94.தவம் தரும் செல்வம் தகவும் தரும் சலியாப்பிறவிப்
பவம் தரும் தீவினை பாற்றித்தரும் பரந்தாமனென்னும்
திவம் தரும் தீதிலிராமானுசன் தன்னைச் சார்ந்தவர்கட்கு
உவந்தருந்தேன் அவன் சீரன்றியான் ஒன்றும் உள்மகிழ்ந்தே.

95.உண்ணின்று உயிர்களுக்கு உற்றனவே செய்து அவர்க்கு உயவெ
பண்ணும் பரனும் பரிவிலனாம்படி பல்லுயிர்க்கும்
விண்ணிந் தலைநின்று வீடளிப்பான் எம் இராமானுசன்
மண்ணின் தலத்து உதித்து மறைநாலும் வளர்த்தனனே.

96.வளரும் பிணி கொண்ட வல்வினையால் மிக்க நல்வினையில்
கிளரும் துணிவு கிடைத்தறியாது முடைத்தலையூன்
தளருமளவும் தரித்தும் விழுந்தும் தனி திரிவேற்கு
உள்ளம் எம் இறைவர் இராமானுசன் தன்னையுற்றவரே.

97.தன்னையுற்றாட்செய்யும் தன்மையினோர் மன்னுதாமரைத்தாள்
தன்னையுற்றாட்செய்ய என்னையுற்றான் இன்று தன்தகவால்
தன்னையுற்றாரன்றித் தன்மையுற்றாரில்லையென்றறிந்து
தன்னையுற்றாரை இராமானுசன் குணம் சாற்றிடுமே.

98.இடுமே இனிய சுவர்க்கத்தில்? இன்னும் நரகிலிட்டுச்
சுடுமே? அவற்றைத் தொடர்தருதொல்லை சுழல்பிறப்பில்
நடுமே? இனி நம் இராமானுசன் நம்மை நம் வசத்தே
விடுமே? சரணமென்றால் மனமே! நையல் மேவுதற்கே.

99.தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூன்யவாதரும் நான்மறையும்
நிற்கக் குறும்பு செய்நீசரும் மாண்டனர் நீள்நிலத்தே
பொற்கற்பம் எம் இராமானுசன் முனிபோந்த பின்னே.

100.போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு உனதடிப்போதில் ஒண்சீ
ராந்தெளிதேனுண்டு அமர்ந்திடவேண்டி நின்பாலதுவே
ஈந்திடவேண்டும் இராமானுச! இதுவன்றி ஒன்றும்
மாந்தகில்லாது இனி மற்றொன்று காட்டி மயக்கிடலே.

101.மயக்கும் இருவினை வல்லியில் பூண்டு மதிமயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றிய என்னை துயரகற்றி
உயக்கொண்டு நல்கும் இராமானுச! என்றது உன்னையுன்னி
நயக்குமவர்க்கு இது இழுக்கென்பர் நல்லவரென்று நைந்தே.

102.நையும் மனம் உன்குணங்களையுண்ணி என்நாஇருந்து எம்
ஐயனிராமானுசனென்றழைக்கும் அருவினையேன்
கையும் தொழும் கண் கருதிடும் கானக்கடல் புடைசூழ்
வையமிதனில் உன் வண்மை என்பால் என் வளர்ந்ததுவே.

103.வளர்ந்த வெங்கோபமடங்கலொன்றாய் அன்றுவாளவுணன்
கிளர்ந்த பொன்னாகம் கிழித்தவன் கீர்த்திப்பயிரெழுந்து
விளைந்திடும் சிந்தை இராமானுசன் என் தன் மெய்வினை நோய்
களைந்து நன்ஞானமளித்தனன் கையில் கனியென்னவே.

104.கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரிலும் உந்தன்
மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான் நிரயத்
தொய்வில் கிடக்கிலும் சோதிவிண் சேரிலும் இவ்வருள் நீ
செய்யில் தரிப்பன் இராமானுச! என்செழுங்கொண்டலே.


105.செழுந்திரைப்பாற்கடல் கண்துயில் மாயன் திருவடிக்கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில் மேவுநன்ஞானி நல்வேதியர்கள்
தொழும் திருப்பாதனிராமானுசனைத் தொழும் பெரியோர்
எழுந்திரைத்தாடும் இடம் அடியேனுக்கு இருப்பிடமே.


106.இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர் அவை தம்மொடும் வந்து
இருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து இன்று அவன் வந்து
இருப்பிடம் என் தனிதயத்துள்ளே தனக்கின்புறவே.

107.இன்புற்ற சீலத்து இராமானுசன் என்னும் எவ்விடத்தும்
என்புற்ற நோயுடல்தோறும் பிறந்து இறந்து எண்ணரிய
துன்புற்றுவீயனும் சொல்லுவதொன்றுண்டு உன் தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி என்னையாக்கி அங்காட்படுத்தே.

108.அங்கயல் பாய் வயல் தென்னரங்கன் அணியாகமன்னும்
பங்கய மாமலர்ப்பாவையைப் போற்றுதும் பத்தியொல்லாம்
தங்கியதென்னத்தழைத்து நெஞ்சே! நம் தலைமிசையே
பொங்கியகீர்த்தி இராமானுசனடிப் பூமன்னவே.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்!





கவிஞர் ***வாலி****யின்*

பாண்டவர் பூமி

ஒரு மதிப்பீடு

ஆண்டு: 2002

வெளியீடு:

திருவரசு புத்தக நிலையம்

தி நகர், சென்னை

"ஒரு படைப்பு வந்ததும் அதனை உடனே திறனாய்வு செய்து நூல் வெளியிடும் நல்ல மரபை தமிழுக்கு தோற்றுவித்திருப்பது மிகவும் பாராட்டிற்குரியது."




"*கவிஞர் வாலியின் புதுக்கவிதையில் அமைந்த 'பாண்டவர் பூமி' பொது மக்களின் சொத்தாக அமைந்துவிட்டது. புலவர்கட்கும் எட்டும் போக்கிலும் அமைந்துள்ளது. இதனை இவ்வுலகுக்கு வழங்கிய உபகரித்த கவிஞர் வாலி 'தமிழ் வியாசர்' என்று கருதும் அளவுக்கு உயர்ந்து விடுகிறார். தமிழர் நெஞ்சங்களில் நிலையான இடத்தைப் பெற்று திகழ்பவருமாகின்றார்*" என்பது பேராசிரியர் ந சுப்பு ரெட்டியார் அவர்கள் கண்ட முடிபு, கொண்ட துணிபு."


— **முனைவர் வி. ஜெயதேவன்**
தலைவர் , தமிழ் மொழியியல்த்துறை
சென்னை பல்கலைக் கழகம்
(நூலுக்கு வழங்கிய **அணிந்துரை**யில்)

கவிஞர் வாலியின் இராமானுஜ காவியத்தின்

உள்ளடக்கம்






ISBN: 978-81-936450-5-5

